# இலங்கையில் தகவல் அறியும் உரிமை :

## கொள்கை அமுலாக்கச் சிக்கல்களும் சவால்களும்

***தகவல் அறியும் உரிமைச்சட்டத்தின் அண்மைக்காலப் பயன்பாட்டை அடிப்படையாகக் கொண்டு ஊடகவியலாளர்கள் வெளியிட்ட ஆய்வுகள்***


மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்

டிசம்பர் 2021

# இலங்கையில் தகவல் அறியும் உரிமை :

## கொள்கை அமுலாக்கச் சிக்கல்களும் சவால்களும்

*தகவல் அறியும் உரிமைச்சட்டத்தின் அண்மைக்கால பயன்பாட்டை அடிப்படையாகக் கொண்டு ஊடகவியலாளர்கள் வெளியிட்ட ஆய்வுகள்*

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்
டிசம்பர் 2021

**இலங்கையில் தகவல் அறியும் உரிமை: கொள்கை அமுலாக்கச் சிக்கல்களும் சவால்களும்**

முதற் பதிப்பு : டிசம்பர் 2021

ISBN : 978-624-5914-18-0

பக்க வடிவமைப்பு : வாக்யா ரூ

வெளியீடு : மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்

பல்வேறு புலமையாளர்கள், ஊடகவியலாளர்கள், சமூக செயற்பாட்டாளர்கள் உட்பட மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தோடு இணைந்து செயற்பட்ட முன்னாள், இந்நாள் பணிக்குழுவினரை முதன்மையாகக் கொண்ட பல்வேறு எழுத்தாளர்கள் முன்வைத்த தமது சொந்தக் கருத்துக்களையும், கருத்தியல்களையும் உள்ளடக்கிய கட்டுரைகள் இவ் வெளியீட்டில் பிரசுரமாகியுள்ளன. மேற்படி கட்டுரைகள் மூலம் அந்தந்த எழுத்தாளர்களின் தனிப்பட்ட கருத்துக்களே முன்வைக்கப்பட்டுள்ளன. அவற்றின் மூலம் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் உத்தியோகபூர்வ கருத்துக்கள் பிரதிபலிக்கப்படவில்லை.

FRIEDRICH NAUMANN FOUNDATION For Freedom.
Sri Lanka

ஃபெட்ரிக் நியூமான் மன்றத்துடன் (FNF) இணைந்து இப்பிரசுரம் வெளியிடப்படுகின்றது. சுதந்திரம் பொறுப்புடைமை என்பவற்றின் விழுமிய மதிப்பீட்டுடன் இம் மன்றத்தின் நடவடிக்கைகள் குவிமையப்படுத்தப்பட்டுள்ளன. புதிய கருத்திட்டங்களின் ஊடாக ஃபெட்ரிக் நியூமான் மன்றம் (FNF) அனைத்து மக்களின் சுதந்திரம், மானுட மாண்பு என்பவற்றுடன் சமாதானமாக வாழக்கூடிய உலகை சிருஷ்டிப்பதற்கு பங்களிப்புச் செய்கின்றது.

CPA
Centre for Policy Alternatives
විකල්ප ප්‍රතිපත්ති කේන්ද්‍රය
மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்

25 YEARS 1996 - 2021
CENTRE FOR POLICY ALTERNATIVES

மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம் என்பது சுயாதீன, அரசியல் கட்சி பேதமற்ற அமைப்பாகும். அது பிரதானமாக ஆட்சி முரண்பாடுகளைத் தீர்த்தல் மற்றும் அதனுடன் இணைந்த பிரச்சினைகள் மீது அவதானம் செலுத்தும். பொது மக்களின் கொள்கை தொடர்பான சம்பாஷனைக்கு சிவில் சமூகத்தின் நேரடி ஒத்துழைப்பு தேவைப்படுவதாலும், அதைப் பலப்படுத்த வேண்டும் என்பது தொடர்பாக மிகுந்த நம்பிக்கை காரணமாகவும், 1996 இல் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் அமைக்கப்பட்டது. பொது மக்கள் மீதான கொள்கைகள் விமர்சன ரீதியாகத் திறனாய்வு செய்யப்படல், மாற்று வழிகளை இனங்காணல், அதை விரிவாக்கல் தொடர்பான ஆய்வு, அழுத்தம் கொடுக்கும் நிகழ்ச்சித்திட்டங்கள் என்பவற்றிற்கு மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் தன்னை அர்ப்பணித்துள்ளது.

முகவரி : 6/5, லெயாட்ஸ் வீதி, கொழும்பு-05, இலங்கை

தொலைபேசி : +9411 2081384, +94112081385, +94112081386

ஃபக்ஸ் : +9411 2081388

இணையதளம் : www.cpalanka.org

மின்னஞ்சல் : info@cpalanka.org

ஃபேஸ் புக் : www.facebook.com/cpasl

Twitter : @cpasl

# உள்ளடக்கம்

முன்னுரை - தகவல் அறியும் உரிமை :
கொள்கைகள் மற்றும் திட்டங்களை மதிப்பிடுவதற்கான ஒரு கருவியாக 5

அறிமுகம் 9

அடிப்படை உரிமையாக தகவல் அறிவதற்கான உரிமை 13

அறிக்கையின் கட்டமைப்பு 15

**அத்தியாயம் 01**

தகவல் அறிவதற்கான உரிமைச் சட்டத்தினை நடைமுறைப்படுத்துதல் 19

இலங்கையில் ஒழுங்குபடுத்தப்படாத நுண்நிதிச் சேவைகள் மற்றும்
அதனால் மக்களது வாழ்க்கையில் ஏற்படுகின்ற தீங்கான பிரதிபலன்கள் 19

தகவல் தொடர்பான இரகசியத்தைப் பேணும் கலாச்சாரம், ஊழல் ஏற்படுவதற்கான
சந்தர்ப்பங்கள் மற்றும் பகிரங்க அதிகார சபைகள் தகவல் அறிந்து கொள்ளும்
உரிமை தொடர்பான சட்டத்தின் பொறுப்புகளுக்கு ஏற்புடையதாக இருக்காமை 23

முறைமைப்படுத்தப்படாத தேர்தல் பிரச்சார நிதிப் பாவனை, இலஞ்சம்,
தேர்தல் சட்டங்கள் மீறப்படுதல் மற்றும் தேர்தல் பிரச்சார செலவை
முறைமைப்படுத்தல் தொடர்பான தெளிவான சட்டம் வகுக்கப்படுதலின் தேவைப்பாடு. 33

சிறுவர் பாதுகாப்புக்காக தற்போதுள்ள சட்ட ரீதியான ஏற்பாடுகள்
தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையால் உயர்ந்த பட்சமாக பாவிக்கப்படாமை 39

1975 ஆண்டின் 50 இலக்க சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை
வெளிப்படுத்தும் சட்டத்தின் யதார்த்தமடையாத குறிக்கோள் 44

இலங்கையில் கழிவு முகாமைத்துவம் தொடர்பான தேசிய கொள்கை மற்றும் அது
தொடர்பான உள்ளூராட்சி நிறுவனத்தின் சட்டங்கள் வினைத்திறனாக அமுல்படுத்தப்படாமை 47

சித்திரவதையை ஒழிப்பதற்குரிய சட்டங்கள் வினைத்திறனாக அமுல்படுத்தப் படாமை,
'சித்திரவதையிலிருந்து விடுபடுவதற்காக' அரசியலமைப்பில் உறுதி செய்யப்பட்டுள்ள
அடிப்படை உரிமைகள் மழுங்கடிக்கப்படுதல் மற்றும் அது தொடர்பான
சர்வதேச கடப்பாடுகளை உதாசீனப்படுத்துதல் 51

சட்ட விரோத மீன்பிடித்தல் முறைகளை முறைமைப்படுத்துவதற்காக முறையான
கொள்கைச் சட்டகம் இன்மை மற்றும் அதன் பெறுபேறாக சிறிய அளவான மீனவர்களின்
வாழ்வாதாரம் மற்றும் நீரியல் வளம் தொடர்பாக ஏற்படும் விளைவுகள் 56

ஊடகவியலாளர்களின் கட்டுரைகள் தொடர்பான அட்டவணை : தகவல் அறியும்
உரிமை ஊடாக வெளிப்படுத்தப்பட்ட பிரதான பிரச்சினைகளின் சாராம்சம் 60

**அத்தியாயம் 02**

ஊடகவியலாளர்களின் கட்டுரைத் தொகுதி ஊழலைப் புறக்கணிப்பதற்கும் வகைப்பொறுப்பை மேம்படுத்துவதற்கும் ஊடக மற்றும் தகவல் அறியும் உரிமையை பயனுறுதி வாய்ந்த ஆதரித்து வாதாடும் கருவியாகப் பயன்படுத்துதல்


நுண் நிதிக் கதைகளின் ஓட்டைகளை ஆராய்ந்த தகவல் அறிதல் சட்டம் - லசந்த டி சில்வா 65

சுங்கத் திணைக்களமும் வழுக்கி வீழ்ந்த ஃபாம் ஒயில் அதிகாரம் - லசந்த டி சில்வா 71

தகவல் உரிமையினூடாக வெற்றிபெற்ற வரலாற்றுச் சிறப்பு மிக்க வழக்கு - லசந்த டி சில்வா 75

இரண்டு தசாப்தங்களாக மூடிமறைக்கப்பட்ட சிறுவர் பாதுகாப்பு சட்டத்திற்கு தகவலுக்கான உரிமை விண்ணப்பத்தினூடாக உயிரோட்டம் - பிங்குன் மேனக கமகே 80

தகவலறியும் சட்டத்திற்கு முன்னால் வெள்ளைப்பூடு மோசடி செய்யும் லக் சதொச - பிங்குன் மேனக கமகே 84

இலங்கையில் தகவல் அறிதல் சட்டம் சரியான வகையில் அமுல்படுத்தப்படுகின்றதா? - ராஹூல் சமந்த ஹெட்டியாராச்சி 92

ஹொரொவப்பொத்தானவில் பத்து யானைகள் பட்டினியால் உயிரிழந்துள்ளன - ராஹூல் சமந்த ஹெட்டியாராச்சி 102

சொத்துக்கள் பொறுப்புக்கள் சட்டத்தில் எதிர்பார்க்கப்படும் நோக்கங்கள் நிறைவேற்றப்படுமா ? - சாமர சம்பத் 110

நாடு பூராகவுமுள்ள 200 குப்பை மேடுகள் - சாமர சம்பத் 115

மூநிலை மின்சாரத்திற்கு பணம் செலுத்தி குப்பி விளக்கொளியில் வாழ்தல் - சாந்தினி திசாநாயக்க 119

சுன்னாகம் தபால் நிலையம் - திலீப் அமுதன் 128

சுருக்கு வலையால் அடைக்கப்பட்ட சிறுகடல் மீன்பிடித் தொழிலாளர்கள் - லக்மால் கே. பதுகே 137

சுனிலின் மரணம் தொடர்பில் உண்மையைத் தேடித் தந்த தகவல் சட்டம் - அசேல குருலுவன்ச 144

மலையகப் பெருந்தோட்ட வீடமைப்புக் கருத்திட்டங்கள் பல கைவிடப்பட்டுள்ளன -கே. பிரசன்னா 149

சித்திரவதைக்கு எதிரான சட்டம் பெயரளவில் மாத்திரமா ? – சமந்தி உபேக்ஷா வீரசேகர 154

சுற்றாடல் செயல்வாதத்தின்போது தகவல் அறியும் உரிமையின் அண்மைக்காலப் பதிவு - ரிசித்ரா மெண்டிஸ் 160


**அத்தியாயம் 03**


வானொலி அலைவரிசை நிகழ்ச்சித் தொடர் - தகவல் அறிவதற்கான உரிமையை அடைந்து கொள்ளும் முகமாக வசதியளிக்கும் குறிக்கோளுடன் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தினால் அவசர அழைப்பு அலகொன்று தாபிக்கப்பட்டு அவ்வலகினூடாக மக்களை தெளிவுபடுத்தல் - 2021 170

தகவல் அறிவதற்கான உரிமையை அடிப்படை உரிமையாக மேம்படுத்துவது தொடர்பில் நடாத்தப்பட்ட வானொலி அலைவரிசை நிகழ்ச்சித்திட்டத்தின் சாராம்சம் 170

தகவல் அறிவதற்கான உரிமையை வெற்றிகொள்ளும் பொருட்டு வசதியளிப்பினை வழங்கும் குறிக்கோளுடன் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தினால் தாபிக்கப்பட்ட அவசர அழைப்பு அலகின் 2021 ஆம் ஆண்டில் விடயங்களை விசாரணை செய்தல் தொடர்பான நிலைமை 175

# முன்னுரை

## தகவல் அறியும் உரிமை : கொள்கைகள் மற்றும் திட்டங்களை மதிப்பிடுவதற்கான ஒரு கருவியாக

இலங்கையில் கொள்கைகளை வகுப்பதில் சிக்கல் நிறைந்த நிலைமையே காணப்படுகின்றது. சுதந்திரம் அடைந்ததிலிருந்து பல தசாப்த காலமாக இந்த நிலைமை தொடர்ச்சியாக நீடித்து வருகின்றது. ஒரு நாடென்ற வகையில் தற்போது நாம் தேசிய மட்டத்திலான பல நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்துள்ளோம். இயற்கை (சேதன) விவசாயம் தொடர்பில் உருவாகியுள்ள நெருக்கடியானது இந்த நிலைமையை புரிந்து கொள்ளக்கூடிய ஒரு சிறந்த உதாரணமாகும். விரிவான கருப்பொருள் ஆராய்ச்சிகளோ, அத்தீர்மானங்களால் பாதிக்கப்படுகின்ற சமூகத்துடனோ அல்லது நிபுணர்களுடனோ போதுமானளவு கலந்துரையாடல்கள் நடாத்தப்படாமலே இது தொடர்பான கொள்கை ரீதியான நிலைப்பாடுகள் எட்டப்பட்டுள்ளன. நாட்டின் பல்வேறு பகுதிகளில் நிலவுகின்ற சுற்றுப்புறச்சூழல் நிலைமைகள், அந்தந்த தட்பவெப்ப மற்றும் காலநிலைகளுக்கு அவை எவ்வாறு பொருந்துகின்றன என்பது தொடர்பிலும் மண்ணின் கலவைகள் எவ்வாறானவை என்பது உட்பட பல தீர்மானமிக்க காரணிகள் பற்றிய சரியான புரிதல் இல்லாமல் இவ்வாறான கொள்கை நிலைப்பாடுகளை நடைமுறைப்படுத்த எடுத்த முயற்சியின் விளைவாக இன்று பல நெருக்கடிகள் எழுந்துள்ளன.

கொள்கைரீதியாக கலந்துரையாடுவதற்கு, விவாதங்களை நடாத்துவதற்கு மற்றும் அது தொடர்பிலான தீர்மானங்களை எட்டுவதற்கும் எமது நாட்டின் ஒட்டுமொத்த ஆட்சிக் கட்டமைப்பில் மூன்று நிலைகள் காணப்படுகின்றன. அதாவது, உள்ளூராட்சி மன்றங்கள் (மாநகர சபைகள், நகர சபைகள் மற்றும் பிரதேச சபைகள்), மாகாண சபைகள் மற்றும் பாராளுமன்றம் என்பனவே அவையாகும். மேலே குறிப்பிட்டதன் படி, பிரதேச, மாகாண அல்லது தேசிய மட்டத்தில் கொள்கைரீதியான நிலைப்பாடுகளை எட்டுவதற்கு அவசியமான விடயங்கள் தொடர்பில் செயற்படுவதற்கென குழுக்கள் முறைமையொன்று காணப்படுகின்றது. அவ்வாறாயினும், பொதுமக்களின் வாழ்க்கை மற்றும் வாழ்வாதாரம் உட்பட அதனுடன் தொடர்புடைய உரிமைகள் தொடர்பில் எவரேனும் ஆய்வாளரோ அல்லது ஊடகவியலாளரோ அல்லது அந்தந்த விடயங்கள் தொடர்பில் விசேட நிபுணத்துவத்தையுடைய நபரோ அல்லது அவ்வாறான நபர்களை உள்ளடக்கிய குழுவோ அல்லது அமைப்பொன்றினூடாகவோ கேள்விகள், கருத்துக்கள், எண்ணங்கள் அல்லது விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்ற வேளையில் அவை தொடர்பில் ஆராய்ந்து பார்ப்பதற்கான முறைமையொன்று எமது நாட்டில் தற்போது நிலவுகின்ற அரச நிர்வாக நிலைகளுக்குரியதான கட்டமைப்புக்களினூடாக வெளிப்படுத்தப்படுவதில்லை. அவ்வாறானதொரு முறைமையின் தேவைப்பாடு தொடர்பிலான சிறந்த கையாளுகைகளை இந்நாட்டில் நாம் காணமுடியாதுள்ள அதேவேளை, சட்டங்கள் மற்றும் கொள்கை ரீதியான

விடயங்கள் அதற்குரியதான விரிவான கலந்துரையாடல் சார்ந்த செயற்பாடுகள் எதுவும் இன்றியே தயாரிக்கப்படுகின்றன.

எடுத்துக்காட்டாக, வரி எவ்வாறு அறவிடப்படுகிறது? அதற்குரியதான ஒழுங்குமுறைகள் யாவை, அது எந்தளவு சரளமானதாக அமைய வேண்டும் மற்றும் அது தொடர்பிலான தீர்மானங்களின் போது ஒட்டுமொத்த நாட்டு மக்களும் முகம் கொடுக்க வேண்டிய பின்விளைவுகள் யாவை என சகல விடயங்கள் தொடர்பிலும் தீர்மானிக்கும் செயற்பாடுகள் நிதி அமைச்சின் அதிகாரிகள் மட்டத்தில் மாத்திரம் இடம்பெறுமெனில், அது கண்டிப்பாக நெருக்கடி மிக்க நிலைமையினையே தோற்றுவிக்கும். எனவே, அவ்வாறான கொள்கை ரீதியான தீர்மானங்களை மேற்கொள்கின்ற போது ஆராய்ச்சி மற்றும் அறிவியல் சார்ந்த விடயங்களின் அடிப்படையிலும் வெளிப்படையான முறையிலும் முறையான மற்றும் ஏற்றுக்கொள்ளக்கூடிய செயல்முறையின் மூலமும் அத்தகைய கொள்கை ரீதியான முடிவுகள் எட்டப்படுவதனை தற்போது எம்மால் காணமுடியாதுள்ளது.

மேலும் மாகாண சபைகள் தொடர்பிலான நிலைமையை ஆராய்கின்ற போது, அவற்றின் குழுக்கள் கட்டமைப்புகளுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டவையாக காணப்படுவதுடன், அவற்றுள் சமூகத்தில் நிலவும் பிரச்சினைகள் குறித்து அந்தந்த பிரதேசங்களில் புத்திஜீவிக் குழுக்கள், ஆராய்ச்சியாளர்கள் மற்றும் நிபுணர்களை உள்ளடங்கிய குழுக்களுடன் முறையான விவாதங்களை நடாத்தி அவற்றுக்குரியதான கொள்கைகளை உருவாக்கும் வேலைத்திட்டத்தினை தற்போது எம்மால் காணமுடியாதுள்ளது. இதற்கு மேலதிகமாக, பாராளுமன்றத்திலும் கூட, அந்தந்த விடயத்துறைகளுக்காக தாபிக்கப்பட்டுள்ள குழுக்களின் உறுப்பினர்களுக்கு அந்தந்த விடயத்துறைகள் தொடர்பில் காணப்படும் கணிசமான அறிவு மற்றும் ஆராய்ச்சிகளின் அடிப்படையில் பெற்றுக்கொள்கின்ற அறிவு, அந்தந்த விடயத்துறைகள் தொடர்பில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலான புத்திஜீவிக் கருத்துக்கள் ஆகியவற்றினைக் கருத்திற் கொண்டு செயற்பாடுகளை மேற்கொள்ளும் நடைமுறைகளை உருவாக்குவது அத்தியாவசியமான ஓர் விடயமாகும். அதன்படி, நாட்டில் உருவாக்கப்படுகின்ற சட்டங்கள் மற்றும் கொள்கைகள் பிரஜைகளின் செயற்றிறன்மிக்க பங்கேற்புடன் ஜனநாயகக் கோட்பாடுகளுக்கு இசைவாக இடம்பெற வேண்டுமென்ற தேவைப்பாடு என்பது இனிமேலும் வெறும் கோட்பாட்டு எதிர்பார்ப்பாக அமையாமல் யதார்த்தபூர்வமானதாக அமைதல் வேண்டும்.

நாம் இந்த அறிக்கையை அடிப்படையாகக் கொண்ட செயற்பாட்டினூடாக எதிர்பார்ப்பது, இந்நாட்டில் தகவல் அறியும் அடிப்படை உரிமையை நடைமுறைச் சாத்தியமாக்கி பயன்படுத்தியதன் அடிப்படையில் இந்நாட்டின் ஊடகவியலாளர்களால் எழுதப்பட்ட 16 கட்டுரைகளின் வாயிலாக கலந்துரையாட எதிர்பார்க்கின்ற பல சமூகப் பிரச்சினைகள் தொடர்பில் நிலவும் நடைமுறை யதார்த்தங்கள், சட்ட மற்றும் கொள்கை ரீதியான பின்னணி மற்றும் முன்மொழிவு, மறுசீரமைப்பு தொடர்பிலான சிறு விளக்கத்தினை பெற்றுக் கொடுப்பதேயாகும். அதன்போது ஆய்வு ரீதியான விடயங்களை ஆராய்வது மற்றும் பகுப்பாய்வு செய்வது எந்தளவிற்கு கொள்கை ரீதியான தீர்மானங்களை எட்டுகின்ற போது முக்கியத்துவம் வாய்ந்தவையாக அமைகின்றது என்பது தொடர்பிலான விடயங்கள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. இந்த ஊடகவியலாளர்கள் அந்தந்த சமூகப' பிரச்சினைகள் தொடர்பிலான தமது சுய எண்ணங்களையும் பகுப்பாய்வுகளையும் முன்வைக்கின்ற அதேவேளை அவற்றுள் சில பிரச்சினைகள் வெறுமனே ஒரு பிரதேசத்திற்கோ அல்லது ஒரு இனக் குழுமத்திற்கோ மாத்திரம் தாக்கம் செலுத்துகின்ற விடயங்களாக அமையலாம். எனினும் நாம் இங்கு சுட்டிக்காட்ட முனைவது, பிரதான தளங்களிலோ

அல்லது புதிய ஊடகங்களிலோ அல்லது பல்வேறான ஊடகத் தளங்கள் வாயிலாகவோ வெளிப்படுத்தப்பட்ட இந்த கட்டுரைத் தொகுப்பின் வாயிலாக விவாதத்திற்கு ஏதுவாக அமையும் தகவல்கள் தொடர்பில் அணுகுவதற்கான கருவியாக 2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க தகவல் அறிவதற்கான உரிமைச்சட்டம் பயன்படுத்தப்பட்டது என்பதையும் அக்கட்டுரைகளை அடிப்படையாகக் கொண்டே அந்தந்த பிரச்சினைகள் தொடர்பில் கொள்கை ரீதியான மறுசீரமைப்புக்கள் இடம்பெற வேண்டிய துறைகள் பற்றியதான ஓர் ஆராய்தலாகும்.

எனவே, ஒரு ஜனநாயக ஆட்சிமுறையில், மேலே குறிப்பிட்ட உள்ளூராட்சி, மாகாண சபைகள் மற்றும் மத்திய அரசு ஆகிய மூன்று ஆட்சி மட்டங்களினூடாக இதற்கு முன்னர் விவரிக்கப்பட்ட குழு முறைமையை மிகவும் திறம்பட செயற்படுத்துவதற்கான தேவைகள் குறித்தும், அவ்வாறு செய்வதற்கு அவசியமான சகல சாத்தியப்பாட்டு இயலுமைகள் தொடர்பிலும், விசேட கவனம் செலுத்தி அது தொடர்பில் கற்றாராய்தல் வேண்டும். ஒரு தனிமனிதனின் அல்லது ஒரு குழுவின் கருத்துகளுக்கு மாத்திரம் வரையறுக்கப்பட்டு தீர்மானங்களை நடைமுறைப்படுத்தும் சம்பிரதாயம் தற்போதைய உலகளாவிய ஜனநாயக முறைமையில் காண்பதற்கில்லை. கூட்டுச்சேர்வு, பன்மைத்துவம், கலந்துரையாடல், விமர்சனம் மற்றும் ஏற்றுக்கொள்ளல் போன்ற காரணிகளை அடிப்படையாகக் கொண்டு தீர்மானம் மேற்கொள்ளும் செயல்முறையே இன்று ஏற்றுக்கொள்ளப்பட்ட மற்றும் மிகவும் பயனுள்ள வழிமுறையாக மாறியுள்ளது. இதற்கானதொரு ஆரம்பமாக இந்த ஊடகவியலாளர்களின் ஆய்வு முயற்சியின் வாயிலாக வெளிக்கொணரப்படும் யதார்த்தங்கள் மூலமாக ஜனநாயகத்தின் எல்லைகளை விரிவாக்கும் தேவையையும் எதிர்பார்ப்பையும் சமூகத்தில் முன்வைப்பதற்கான ஒரு சந்தர்ப்பமாக இந்த வெளியீடு அமையும் என்று நம்புகிறேன்.

இந்த வெளியீட்டிற்கு அடிப்படையாக அமைந்த ஊடகவியலாளர்களினால் எழுதப்பட்ட கட்டுரைகள் வேறு ஊடகங்கள் வாயிலாக பிரசுரிக்கப்படுவதற்கு முன்னதாக எமக்கு அவற்றைப் பெற்றுத் தந்து தகவல் அறியும் உரிமை மற்றும் அதனூடாக ஏனைய பல துறைகளில் நிலவுகின்ற உண்மைகளை வெளிக்கொணர்வதற்காக வழங்கிய ஒத்துழைப்பிற்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அத்துடன், மேற்படி ஊடகவியலாளர்களின் கட்டுரைகளை அடிப்படையாகக் கொண்டு அந்தந்த துறைகள் தொடர்பில் நிலவுகின்ற சட்ட ரீதியான மற்றும் கொள்கை ரீதியான பிரச்சினைகள் தொடர்பில் சுருக்கமான கண்ணோட்டத்தினை சமர்ப்பித்த சட்டத்தரணி துசித சிறிவர்தன அவர்களால் இந்த வெளியீட்டிற்கு வழங்கிய பங்களிப்பு தொடர்பிலும் நன்றியைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

**லயனல் குருகே**
சிரேஷ்ட ஆய்வாளர்
மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்

# அறிமுகம்

சர்வதேச மனித உரிமைகள் பிரகடனத்தின் வாயிலாக, ஏனைய ஏற்பாடுகளின் கீழ் தகவல் அறிவதற்கான உரிமையை உலகளாவிய மனித உரிமையாக உறுதிப்படுத்தியுள்ள அதேவேளை, அதனைப் பாதுகாப்பதற்கு அனைத்து உறுப்பு நாடுகளும் முன்மாதிரியான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென தெரிவிக்கப்பட்டுள்ளது. மனித உரிமைகள் பற்றிய சர்வதேச பிரகடனத்தின் 19வது பிரிவில், "கருத்துச் சுதந்திரத்துக்கும் பேச்சுச் சுதந்திரத்துக்கும் எவருக்கும் உரிமையுண்டு. இவ்வுரிமையானது தலையீடின்றிக் கருத்துக்களைக் கொண்டிருப்பதற்கும் எவ்வழிவகைகள் மூலமும் எல்லைகளைப் பொருட்படுத்தாமலும் தகவலையும் கருத்துக்களையும் நாடுவதற்கும், பெறுவதற்கும், பரப்புவதற்குமான சுதந்திரத்தையும் உள்ளடக்கும்"[1] எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் அரசியலமைப்பின்[2] மூலமாக பிரஜைகளின் பல அடிப்படை உரிமைகள் உறுதிப்படுத்தப்பட்டுள்ள அதேவேளை, பல்வேறு மனித உரிமை ஆர்வலர்களால் மேற்கொள்ளப்பட்ட நீண்டகால போராட்டங்கள் மற்றும் அழுத்தங்கள் காரணமாக பத்தொன்பதாவது அரசியலமைப்பு திருத்தம்[3] மூலமாக அடிப்படை உரிமை அத்தியாயத்தில் கட்டாய ஓர் அங்கமாக தகவல் அறிவதற்கான உரிமையை (RTI) அறிமுகம் செய்வதற்கு விசேட தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது. அதனைத் தொடர்ந்து 2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க தகவல் அறியும் உரிமைச் சட்டம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டதுடன், அச்சட்டத்தின் 41 (2) ஆவது உறுப்புரையின் கீழ் அமைச்சரினால் வெளியிடப்பட்ட கட்டளைகளின் பிரகாரம் மேற்படி சட்டமானது 2017.02.03 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வந்தது.[4]

1 ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகளுக்கான உலகளாவிய பிரகடனம் (UDHR), 1948, 19 ஆவது பிரிவு https;//www/ohchr.org/en/udhr/documents/udhr_translations/eng.pdf

2 இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பு (2020 ஒக்டோபர் 29 ஆந் திகதி வரையிலான திருத்தங்களுடன்), http;//www.parliament.lk/files/pdf/constitution-si-pdf

3 14அ. ஒவ்வொரு பிரசையும் — அரசினால், அமைச்சினால் அல்லது ஏதேனும் அரசாங்கத் திணைக்கள த்தினால் அல்லது ஏதேனும் சட்டத்தினால் அல்லது சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட அல்லது உருவாக்கப்பட்ட ஏதேனும் நியதிச் சட்டக்குழு; (ஆ) மாகாணமொன்றின் அமைச்சர்கள் சபையின் அமைச்சர் ஒருவரது ஏதேனும் அமைச்சு அல்லது ஏதேனும் திணைக்களம் அல்லது மாகாண சபையொன்றின் நியதிச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட அல்லது உருவாக்கப்பட்ட ஏதேனும் நியதிச் சட்டக் குழு; (இ) ஏதேனும் உள்ளூராதிகார சபை; அத்துடன் இப்பந்தியின் (அ), (ஆ) அல்லது (இ) என்னும் உட்பந்தியில் குறிப்பீடு செய்யப்படும் நிறுவனமொன்று தொடர்பில் அத்தகைய ஏதேனும் தகவலை உடைமையில் வைத்திருக்கின்ற வேறு எவரேனும் ஆள்; அத்துடன் பிரசையொருவரின் உரிமைகளைப் பிரயோகிப்பதற்கு அல்லது பாதுகாப்பதற்கு தேவைப்படுத்தப்படுவதுமான ஏதேனும் தகவலை, சட்டத்தி னால் ஏற்பாடு செய்யப்பட்டவாறாக பெற அணுகுவதற்கான உரியைக் கொண்டிருத்தல் வேண்டும்.

4 2017 பெப்ரவரி 03 ஆம் திகதிய 2004/66 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை அறிவித்தல். https;//documents.gov.lk/files/egz/2017/2/2004-66-S.pdf

அரச அதிகாரிகளின் நடவடிக்கைகளில் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக் கூறலை கேள்விக்குட்படுத்துவதற்கான போதுமான சந்தர்ப்பத்தினை உருவாக்கி எந்தவொரு சமூகத்திலும் நல்லாட்சியினை வலுப்படுத்துவதற்கான ஒரு கருவியாக தகவல் அறிவதற்கான உரிமை முக்கியமான பணியினை ஆற்றுகின்றது. எனவே, தகவல் அறியும் உரிமையை பிரஜைகளின் அடிப்படை உரிமைகளின் ஒரு அங்கமாக மாற்றுவதற்காக மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தினை ஒரு கோணத்தில் பார்க்கின்ற போது அது பிரஜைகளை வலுவூட்டும் மிக முக்கியமான விடயமாக அமைவதோடு, அதனூடாக அவர்களை ஆட்சி செயற்பாட்டில் செயற்பாடற்ற தரப்பினராக உள்ள நிலையிலிருந்து செயற்பாடு மிக்க தரப்பினராக மாற்றி மேற்படி செயற்பாடுகளுக்கு பங்களிப்பதற்கான சந்தர்ப்பத்தினை ஏற்படுத்துகிறது.

2017ஆம் ஆண்டு முதல் அமுலுக்கு வந்ததன் பின்னர் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தல்[5] மூலமாக முழுமையான செயற்பாட்டு நிலைக்கு கொண்டுவரப்பட்ட தகவல்களைப் பெற அணுகுவதற்கான அடிப்படை உரிமையானது அரசியலமைப்பு ரீதியாக உறுதிப்படுத்தப்பட்டுள்ள போதிலும், சட்டத்தின் உண்மையான செயற்பாட்டு நிலைமையினை எதிர்பார்த்த அளவிற்கு அனுபவிக்க முடியாது போயுள்ளது. இலங்கையின் ஆட்சி முறையில் பகிரங்க அதிகார சபைகளின் அதிகாரிகளால் தகவல் வழங்க மறுக்கும் மனப்பாங்கின் வேரூன்றிய கலாசாரம் இதற்கான பிரதான காரணமாக இருக்கலாம். தகவல் அறியும் சட்டத்தின் ஏற்பாடுகள் தொடர்பில் அரச அதிகாரிகளுக்கு போதிய அறிவு மற்றும் புரிதல் இல்லாமை மற்றும் மக்களது வாழ்க்கையிலும் வாழ்வாதாரத்திலும் தாக்கத்தினை ஏற்படுத்தும் தகவல்களை மறைக்கும் அவர்களின் பிடிவாத மனப்பாங்கு தகவல் அறியும் உரிமையை நடைமுறைப்படுத்த இலகுபடுத்துவதில் தயக்கம் காட்டுவதனை மேலும் தீவிரப்படுத்தியுள்ளது.

தகவலை அணுகுவதற்கான உரிமை என்பது செயற்பாட்டு பிரஜைகள் மூலம் வெளிப்படுத்தப்பட வேண்டிய ஓர் இயல்பான குணாம்சமாகும். அதே நேரத்தில் தகவலின் உண்மைத்தன்மையை உறுதிப்படுத்துவதற்கும், தெளிவுபடுத்துவதற்கும் மற்றும் அவர்களின் ஆட்சியாளர்கள் மற்றும் நிர்வாகிகளை பொறுப்புக்கூற வைப்பதற்கும் அவசியமான சட்டபூர்வ பொறிமுறைகள் பிரஜைகளுக்கென இருப்பதை உறுதிசெய்ய வேண்டியது அவசியமாகும்.

எவ்வாறாயினும், தகவல் அறியும் உரிமைச் சட்டம் அர்த்தமுள்ள வகையில் செயற்படுத்தப்படுவதனை உறுதிசெய்யும் ஒரு ஆட்சிமுறை நிலவுகின்றது என்பது, தகவல் அறியும் உரிமை தொடர்பான ஏற்பாடுகள் மீறப்பட்டுள்ளதென உறுதிப்படுத்தப்படுகின்ற சந்தர்ப்பங்களில் அதற்குரியதான தண்டனை வழங்குதல் உட்பட குறித்த ஏற்பாடுகள் செயற்றிறன்மிக்க வகையில் செயற்படுத்தப்படுவதன் மூலம் மட்டுமே சாத்தியமாகும். தகவல் அறியும் உரிமையினூடாக இலங்கையில் பிரஜைகளின் உரிமைகள் விடயத்தில் ஏற்பட்டுள்ள முற்போக்கான மாற்றத்தின் யதார்த்தமான இருப்பை உறுதி செய்வதற்காக சட்டத்தின் தேவைகளை நிறைவேற்றுவது தொடர்பாக "பகிரங்க அதிகார சபைகளின்"[6]

5 மேற்படி சட்டம்

6 2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க தகவலறிவதற்கான உரிமைச் சட்டத்தின் 43 ஆவது பிரிவு. http://www.rticommission.lk/web/images/pdf/act/rti-act-si-13122018.pdf

அதிகாரிகள் சட்டத்தில் குறிப்பிடப்படும் அர்த்தத்துடன், விசேடமாக தகவல் அறியும் உரிமை தொடர்பான ஆணைக்குழுவின்[7] தீர்மானங்களுக்கு இசைவாகிச் செயற்படுவது உட்பட, எந்தளவிற்கு அதனை நிறைவேற்றும் விருப்பத்துடன் இருக்கின்றனர் என்பது மிக முக்கியமானதாகும். மேலும், பெரும்பாலான தகவல் அறிவதற்கான உரிமை விண்ணப்பங்கள் கிடைக்கப்பெறுகின்ற தரப்பினராகிய "பகிரங்க அதிகார சபைகளின் அதிகாரிகளுக்கு" அவ்வாறான தகவல் கோரல்களுக்கு பதிலளிக்கின்ற போது அவசியமாகும் மனித வளங்கள், பௌதீக வளங்கள், பயிற்சிகள் வாயிலாக அறிவினை அதிகரித்துக் கொள்ளல் உட்பட ஆற்றல் விருத்தி போன்ற அத்தியாவசிய தேவைப்பாடுகள் எந்தளவிற்கு பூர்த்தி செய்யப்பட்டுள்ளது என்ற விடயம் கேள்விக்குறியாகும்.

இச் சூழ்நிலையில் தகவல்களை அணுகுவதற்கான உரிமையைப் பயன்படுத்துவது தொடர்பில் சிவில் சமூகம் மற்றும் பிரஜைகள் மத்தியில் குறிப்பிடத்தக்க அளவிலான பரந்த ஆர்வத்தையும் தேவைப்பாட்டினையும் காணக்கூடியதாகவுள்ள போதிலும், தகவல் பெறுவதனை உரிமையாக அணுகும் போது இப்போதும் பல சவால்களுக்கு முகம் கொடுக்கும் நிலைமைகள் காணப்படுகின்றன. அதன்படி, பொது மக்களின் வரிப்பணத்தில் பராமரிக்கப்படுகின்ற பல அரச நிறுவனங்களின் அதிகாரிகளிடம் கேள்விகளை கேட்பதற்கு தகவல் அறிவதற்கான சட்டத்தின் மூலம் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரம் ஒருபுறம் வெளிப்படைத்தன்மை பற்றிய கலாச்சாரத்தை உருவாக்குவதற்கான தனித்துவமான சந்தர்ப்பமாகவுள்ள அதேவேளை, மறுபுறம் அது சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு எதிராக செயற்படும் நபர்களை பொறுப்புக்கூற வைப்பதற்காக செயற்றிறன்மிக்க வகையில் பயன்டுத்தப்படக்கூடிய சகல இயலுமைகளையும் உடையதாக காணப்படுகின்றது.[8]

சட்டம் மற்றும் ஜனநாயகத்திற்கான நிலையத்தினால் உலகளாவிய வகையில் தகவல் அறியும் உரிமைச் சட்டங்கள் தரவரிசைப்படுத்தப்படுகின்றன.[9] அந்த வகையில் தகவல் அறியும் உரிமைச் சட்டங்கள் உலகளாவிய ரீதியில் தரவரிசைப்படுத்தப்படுவதனூடாக தகவல்களை அணுகும் உரிமைக்கான சட்டக் கட்டமைப்பின் இயலுமை அளவீடு செய்யப்படுகிறது. இந்த உலகளாவிய தரவரிசைப்படுத்தலில் இலங்கையானது நான்காவது இடத்தினைத் தக்கவைத்து உலகின் மிகச் சிறந்த பத்து நாடுகளின் தரவரிசைப் பட்டியலில் உள்ளடங்கியுள்ளது. இந்த நிலைமையானது மிகவும் சாதகமான சூழ்நிலையையே குறிக்கிறது.[10]

---

7 11 ஆவது பிரிவு. மேற்படி சட்டம்.

8 39 ஆவது பிரிவு. மேற்படி சட்டம்.

9 சட்டம் மற்றும் ஜனநாயகத்திற்கான மையம். https://www.law-democracy.org/live/rti-rating/

10 தகவலறிவதற்கான உரிமைகள் பற்றிய உலகளாவிய தரப்படுத்தல். https://www.rti-rating.org/

| தகவல் அறியும் உரிமைச் சட்டங்கள் தொடர்பிலான தரவரிசைப்படுத்தல் முறைமை – சட்டம் மற்றும் ஜனநாயகத்திற்கான நிலையம், 2020 செப்டெம்பர் | | |
|---|---|---|
| பிரிவு | வழங்கப்படும் ஆகக் கூடிய புள்ளிகளின் அளவு | இலங்கை |
| 1. அணுகுவதற்கான உரிமை | 6 | 5 |
| 2. விடயப் பரப்பு | 30 | 28 |
| 3. தகவல் கோரல் நடவடிக்கை முறைமை | 30 | 26 |
| 4. விதிவிலக்கு மற்றும் தகவல் மறுப்பு | 30 | 23 |
| 5. மேன்முறையீடு | 30 | 29 |
| 6. தண்டனை மற்றும் பாதுகாப்பு | 8 | 4 |
| 7. முன்னேற்ற மேம்பாட்டு படிமுறைகள் | 16 | 16 |
| **மொத்தப் புள்ளிகளின் அளவு** | **150** | **131** |

இருப்பினும், தகவல் அறியும் உரிமைச் சட்டம் பற்றிய எந்தவொரு மதிப்பீடோ அல்லது தரவரிசைப்படுத்தலின் வாயிலாக சுட்டிக்காட்டப்படுவது அத்தகைய சட்டக் கட்டமைப்பின் அமுலாக்கம் மற்றும் அமலாக்கம் செய்யப்படும் விதத்தின் அடிப்படையிலாகும். எனவே, சமூக-அரசியல் சூழ்நிலையில் தகவல் அறியும் உரிமை பற்றிய நிலைமையானது முழுமையாக தங்கியிருக்கிறது. தகவல்களை வெளியிடுவது தொடர்பில் ஆளும் அரசாங்கத்தின் அரச கொள்கையின் நிலைப்பாட்டின் அடிப்படையிலேயே மேலும், தகவல் அறிவதற்கான உரிமைச் சட்டத்தினை நடைமுறைச்சாத்தியமாக்கி தகவல் அறிவதற்கான உரிமை தொடர்பான சட்டத்தின் குறிக்கோள்களுக்கு எதிராக தகவல் வெளிப்படுத்தல்கள் பற்றிய பல்வேறு வரையறைகள் தொடர்பிலான ஏற்பாடுகளை இயற்றும் வேறு பல சட்டங்களின் அடிப்படையில் பார்க்கப்பட வேண்டிய அதேவேளை, அதன்போது இவ்விடயம் தொடர்பிலான இறுதிப் பொருள்கோடல் வழங்குதல் இலங்கையின் தகவல் அறிவதற்கான உரிமைகள் ஆணைக்குழுவிற்கும் நீதிமன்றத்திற்கும் உரித்தான ஒரு விடயமாக அமைந்துள்ளது.

# அடிப்படை உரிமையாக தகவல் அறிவதற்கான உரிமை

அரசியலமைப்பின் பத்தொன்பதாவது திருத்தம் அறிமுகப்படுத்தப்பட்டதன் மூலம், அரசியலமைப்பின் III வது அத்தியாயத்தின் கீழ் தகவல்களை அணுகுவதற்கான உரிமை அடிப்படை உரிமைகளின் அத்தியாவசிய ஓர் அங்கமாக மாற்றப்பட்டுள்ளது.[1] சட்டத்தின் ஏற்பாடுகளை மீறி பகிரங்க நிறுவனங்களின் அதிகாரிகள் செயற்படுகின்ற போது அடிப்படை உரிமையாக தகவல்களைப் பெறுவதற்கும், சட்டரீதியான தீர்வுகளைப் பெறுவதற்கும் இதன் மூலம் பிரஜைகளுக்கு சந்தர்ப்பம் கிடைக்கின்றது. தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் முன்னுரையில்,

''அரசியலமைப்பு அதன் 14(அ) என்னும் உறுப்புரையில் தகவலைப்பெற அணுகுதலுக்கான உரிமையை உத்தரவாதம் செய்வதுடன், தகவலைப்பெற அணுகுதலுக்கான உரிமையை வலுவாக்கம் செய்வதன் மூலம் பகிரங்க அதிகார சபைகளின் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறும் பண்பாட்டைப் பேணிவளர்த்து, அதன் மூலம் இலங்கை மக்கள் ஊழலை எதிர்த்து நிற்றல் மற்றும் பொறுப்புக்கூறும் தன்மை மற்றும் நல்லாட்சியை மேம்படுத்துதல் ஊடாக முழுமையாகப் பங்கேற்கக் கூடியதும் நாட்டின் பொது வாழ்வில் தீவிரமாகப் பங்கேற்கக் கூடியதுமாகவிருக்கும் ஒரு தேவைப்பாடு உளதாதலால்'' என குறிப்பிடப்பட்டுள்ளது.[2]

அந்த வகையில் பார்க்கின்ற போது, தகவல்களை அணுகுவதற்கான உரிமையானது ''வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறல் கலாச்சாரத்தை வளர்ப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது என்பதுடன், அதன் மூலமாக இலங்கை மக்கள் நல்லாட்சியில் கூடுதல் பங்கேற்கக் கூடியவாறு மற்றும் நாட்டின் பொது வாழ்வில் தீவிரமாகப் பங்கேற்கக் கூடியதுமாகவிருக்கும் ஒரு தேவைப்பாடு உள்ளதொரு'' நிலைமையை ஏற்படுத்துவதே தகவல் அறிவதற்கான அணுகுதல் உரிமையின் நோக்கம் என்பது மிகத் தெளிவாகிறது.

தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் 24 ஆவது பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள வகையில் தகவலைப் பெறுவதற்கான நடைமுறையானது பிரஜையின் தகவல் அணுகலுக்கான வடிவத்தின் தன்மை மற்றும் மொழியின் தன்மை[3] என்பவற்றினை அடையாளம் காண்பதற்காக ஈடுபடும் அதேவேளை, அதனூடாக பிரஜையின் மொழி உரிமை உறுதிப்படுத்தப்படவேண்டிய தேவைப்பாடு மறைமுகமாக சுட்டிக்காட்டப்படுகிறது.

---

1 பத்தொன்பதாவது அரசியலமைப்பு சீர்திருத்தத்தின் 2 ஆவது உறுப்புரை. 2015 மார்ச் 15 ஆம் திகதி

2 2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க தகவலறிவதற்கான உரிமைச் சட்டத்தின் முன்னுரை

3 2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க தகவலறிவதற்கான உரிமைச் சட்டத்தின் 24((5)(அ) பிரிவு.

பிரஜைகளுக்கு தகவல்கள் அணுகல் தொடர்பில் தாம் விரும்பிய மொழி தொடர்பில் குறிப்பிடுவதற்கு முடியுமான போதிலும், தகவல் கோரும் நபர் விரும்பும் மொழியில் தகவலை வழங்குவதற்கு அரச அதிகாரிகள் கட்டுப்பட்டுள்ள ஏற்பாடுகள் தகவல் அறிவதற்கான உரிமை சட்டத்தின் சட்ட வரையறைக்குள் இல்லாமையானது பல மொழிகள் பேசும் சமூகத்தின் அடிப்படை உரிமையாக தகவலை அணுகும் உரிமை சமமாக பயன்படுத்தப்படுகின்ற போது பிரஜைகள் முகம்கொடுக்கும் ஓர் பிரச்சனையாக காணப்படுகின்றது. இது மறுபுறம் **'சமத்துவத்திற்கான உரிமை, அதாவது, சட்டத்தின் முன்பு ஆட்கள் எல்லோரும் சமமானவர்கள், அத்துடன் அவர்கள் சட்டத்தினால் சமமாகப் பாதுகாக்கப்படுவதற்கு உரித்துடையவர்கள் ஆவர்[4] என்பதும் மற்றும் "எந்தவொரு பிரஜையும் இனம், மதம், மொழி, சாதி, பால், அரசியற் கொள்கை அல்லது பிறப்பிடம் காரணமாக அல்லது அத்தகைய காரணங்களுள் ஏதாவதொரு விடயம் காரணமாகவும் ஓரங்கட்டுதல் ஆகாது"[5]** என அரசியல் அமைப்பில் உறுதிப்படுத்தப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளுடன் தொடர்புபடுகிறது.

ஏனெனில், குறித்த அரச அதிகாரிகளின் சட்டரீதியான கடமையாக அமைவது குறித்த தகவல்கள் பேணப்படுகின்ற மொழியினால் வழங்கப்படுவதனால் ஆகும். இதன்படி, சகல பிரஜைகளுக்கும் கிடைக்கின்ற தகவல்கள் அவர்கள் விரும்பும் மொழியில் காணப்படாதிருக்கும் அதேவேளை, அடிப்படை உரிமையாக தகவல் அறிவதற்கான உரிமையின் பிரதிபலன்களை உச்ச அளவில் பயன்படுத்துவதற்கு அவர்களால் இயலாமல் போகலாம்.

அடிப்படை உரிமையாக தகவல் அறிவதற்கான உரிமைச் சட்டம் நாட்டில் செயற்படுத்தப்படுவதன் ஒட்டுமொத்த செயலாற்றுகையினுள் பன்மைத்துவ கொள்கைகள் மற்றும் நடைமுறை சாத்தியமான மறுசீரமைப்புக்களின் தேவைப்பாடுகளை புரிந்துகொள்வதற்கு கொள்கை வகுப்பாளர்களின் கவனத்தை ஈர்க்கும் தேவைப்பாடு இதனூடாக சுட்டிக்காட்டப்படுகின்றது. தகவல் அறிவதற்கான உரிமையை அனுபவிப்பதற்கு பிரஜைகளின் மொழி உரிமையை உறுதிப்படுத்துவது அடிப்படைத் தேவையாக அமைகிறது. எவ்வாறெனினும் தகவல் அறிவதற்கான உரிமை பற்றிய ஆணைக்குழுவின் பணிகள் மற்றும் கடமைகள்[6] அது தொடர்பிலான கட்டளைகளை பிறப்பித்து நடைமுறைப்படுத்தும் அளவிற்கு விரிவானதாக அமையவில்லை.[7] எவ்வாறாயினும் சட்டத்தின் 37வது பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டளைகளின் பிரகாரம் தகவல் ஆணைக்குழுவிற்கு 'அரச மொழிக்கொள்கை' போன்ற கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதில் காணப்படுகின்ற குறைபாடுகளின் தாக்கம் தொடர்பில் விதப்புரைகளை வழங்க முடிவதோடு ஆணைக்குழுவின் வருடாந்த அறிக்கையில்[8] சட்டம் இயற்றுபவர்களால் கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் பாராளுமன்றத்திற்கு முன்மொழிவுகளை சமர்ப்பிக்க முடியும்.

---

4 12(1) உறுப்புரை. அரசியலமைப்பின் III ஆவது அத்தியாயம்.

5 அரசியலமைப்பின் 12(3) உறுப்புரை

6 2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க தகவலறிவதற்கான உரிமைச் சட்டத்தின் 11 ஆவது பிரிவு.

7 15 ஆவது பிரிவு, மேற்படி சட்டம்.

8 37 ஆவது பிரிவு, 'ஆணைக்குழு அதனது தொழிற்பாடுகள் பற்றிய அறிக்கையொன்றைத் தயாரித்தல்

தகவல்களை அணுகுவதற்கான அடிப்படை உரிமை நடைமுறைப்படுத்துகின்ற போது பிரஜைகள் முகம்கொடுக்கும் சவால்களுக்கு, அரச அதிகாரிகள் மத்தியில் மிக ஆழமாக வேரூன்றிப் போயுள்ள தகவல்களின் இரகசியத் தன்மையை பேணும் நிலைமை, தகவல்களை வெளிப்படுத்த அரசு அதிகாரிகள் மத்தியில் நிலவும் விருப்பமின்மை என்பன தாக்கம் செலுத்துகின்ற போதிலும் வேறு பல காரணங்களும் அதற்கு ஏதுவானதாக அமையக்கூடும். மேலும், தகவல்களை வெளிப்படுத்துதல் என்பது அரச இரகசியங்களை வெளிப்படுத்துவதற்கு சமமானது என்ற புரிதலில் வேரூன்றிப் போயுள்ள மனப்பாங்கு மற்றும் தகவல் கோரல்களுக்கு செயற்றிறன்மிக்கதாக பதிலளிப்பதற்கு நிலவும் வளங்களின் பற்றாக்குறை தொடர்பிலும் இங்கு கவனம் செலுத்துவது பொருத்தமானதாக அமையும்.

எனவே, 2015ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட 19 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தின் மூலமாக தகவல் அறிவதற்கான அடிப்படை உரிமையை தாபிப்பதற்காக எடுக்கப்பட்ட பெருமுயற்சியின் சாதகமான காரணங்களை ஏற்றுக் கொள்வதுடன் அரசியலமைப்பின் 20 ஆவது திருத்தத்தின் ஊடாக மேற்படி உரிமை தொடர்பில் எந்த ஒரு மாற்றமும் ஏற்படுத்தப்படாத பின்னணியில் மேற்படி உரிமையை நடைமுறை ரீதியில் செயற்படுத்துகின்ற போது எழக்கூடிய கொள்கை ரீதியான மற்றும் நடைமுறைச் சிக்கல்கள் மற்றும் சவால்கள் தொடர்பில் கவனம் செலுத்துவது தொடர்பில் பகிரங்க நிறுவனங்களுள் கொள்கை வகுப்பாளர்கள் மற்றும் தீர்மானங்களை மேற்கொள்வோர் ஆகிய இரு தரப்பினரதும் நேர்மையான அர்ப்பணிப்பு தொடர்பிலான தேவைப்பாடு மிக முக்கியமானதாக கருதப்படுகின்றது.

## அறிக்கையின் கட்டமைப்பு

இந்த அறிக்கை மூன்று பகுதிகளைக் கொண்டமைந்துள்ளது

முதலாவது அத்தியாயத்தின் மூலம் தகவல் அறிவதற்கான உரிமைச் சட்டத்தினை நடைமுறைப்படுத்துதல், ஊடகவியலாளர் சிலரால் தகவல் அறியும் சட்டத்தினை பயன்படுத்தி பெற்றுக்கொண்ட விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்ட கட்டுரைத் தொடர்கள் வாயிலாக வெளிக் கொணரப்பட்ட பல்வேறு விடயந்துறையில் தொடர்பான கொள்கை ரீதியான பிரச்சினைகள் மற்றும் அவற்றை நடைமுறைப்படுத்துவது தொடர்பான சவால்கள் மற்றும் அவற்றுக்குரியதான மறுசீரமைப்புக்கள் பற்றி கலந்துரையாடப்படுகின்றது. தகவல் அறியும் உரிமை சட்டத்தினை பயன்மிக்க வகையில் பயன்படுத்துவது தொடர்பில் ஒளிபரப்பு செய்யப்பட்ட வானொலி அலைவரிசை நிகழ்ச்சித் தொடரை அடிப்படையாகக் கொண்டு அடையாளம் காணப்பட்ட பிரச்சினைகள் மற்றும் அந்த உரிமை பயன்பாட்டிற்கு கொண்டு வருவதற்கு முக்கியத்துவம் தொடர்பிலான தெளிவூட்டலை அதிகரிக்கும் நோக்கத்துடன் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் தொடர்பிலும் சாராம்சமாக இந்த அத்தியாயத்தின் வாயிலாக முன்வைக்கப்பட்டுள்ளது. அந்தவகையில், பார்க்கின்றபோது மேலே தெரிவிக்கப்பட்ட வகையில் தகவல் அறிவதற்கான உரிமை சட்டத்தின் வாயிலாக பிரஜைகளின் வாழ்க்கை மற்றும் வாழ்வாதாரத்திற்கான அவசியமாகும் மற்றும் தாக்கம் செலுத்தும் மற்றும் அவ்வாறானதொரு சட்டம் காணப்படாவிடின் எப்போதும் வெளிக்கொணரப்படாதிருப்பதற்கு பெரும்பாலும் ஏதுவாக இருந்த தகவல்கள் வெளிக்கொணரப்பட்டதன் வாயிலாக தெரிவு செய்யப்பட்ட பல துறைகளில் கொள்கை ரீதியானதும் நடைமுறைப்படுத்துவதில் உள்ள பிரச்சினைகள், சவால்கள் மற்றும் முன்மொழிவு மறுசீரமைப்பு தொடர்பில் முழுமையான கொள்கை ரீதியான பகுப்பாய்வு

இடம்பெறாத, அதேவேளை சிறியதொரு விளக்கம் இந்தப் பகுதியில் முன்வைக்கப்படுகிறது.

மேலும், தகவல் அறிவதற்கான உரிமைச் சட்டத்தினை பயனுறுதிமிக்க வகையில் பயன்படுத்துதல் மற்றும் அரசியல் அமைப்பில் உறுதிப்படுத்தப்பட்டுள்ள தகவல் அணுகும் பிரஜைகளின் அடிப்படை உரிமையில் காணப்படுகின்ற உறுதித் தன்மையையும் சுட்டிக் காட்டுகின்ற மிகச்சிறந்த சில கையாளுகைகளும் இங்கு உள்ளடக்கப்பட்டுள்ளன.

இரண்டாவது, ஊடகவியலாளர்களின் கட்டுரைத் தொகுப்புகளை தொடர்ந்து இலங்கையில் தகவல் அறிவதற்கான உரிமை தொடர்பான சட்டத்தினை செயற்திறன் மிக்க வகையில் பயன்படுத்துவது தொடர்பிலான பிரச்சினைகள் மற்றும் அடிப்படை கலந்துரையாடல் விடயங்கள் தொடர்பில் புதியதொரு பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது.

அதன்படி, முதலாவது அத்தியாயத்தில் பல்வேறு கட்டுரைகளின் வாயிலாக கலந்துரையாடப்படுகின்ற தெரிவு செய்யப்பட்ட விடயத்துறைகளுக்குரியதாக நிலவும் பிரச்சினைகள், கொள்கைகளை நடைமுறைப் படுத்துவதில் காணப்படும் குறைபாடுகள் மற்றும் மறுசீரமைப்பிற்கு உட்படுத்தப்பட வேண்டிய துறைகள் தொடர்பில் சுட்டிக்காட்டப்படுகின்றது.

மேற்படி ஊடகவியலாளர்களின் கட்டுரைத் தொகுப்பின் வாயிலாக வெளிக்கொணரப்படும் அடிப்படை பிரச்சினைகளில் உள்ளடங்கும் விடயங்கள் :

### ஊடகவியலாளர்களினால் எழுதப்பட்ட கட்டுரைகளின் வாயிலாக வெளிக்கொணரப்படும் அடிப்படை பிரச்சனைகள்

- நுண்கடன் நிதிச் சேவைகளை ஒழுங்குபடுத்துவதற்காக காணப்படுகின்ற சட்டரீதியான மற்றும் கொள்கை வரைவுகளின் பற்றாக்குறை மற்றும் காணப்படுகின்ற ஒழுங்குறுத்தல் பொறிமுறையின் செயற்றிறனின்மை.
- 2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க தகவல் அறிவதற்கான உரிமை சட்டத்தில் பொறுப்புக்கள் தொடர்பில் பகிரங்க நிறுவனங்களில் உரியவாறு இசைவாகிச் செயற்படாமை மற்றும் உரிய அதிகாரிகள் வெளிப்படைத்தன்மை இன்றி செயற்படுதல்.
- இலங்கையில் கழிவு முகாமைத்துவம் தொடர்பிலான தேசியக் கொள்கையினை செயற்படுத்துவதில் நிலவும் குறைபாடுகள்.
- 1975 ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளை வெளிப்படுத்தல் சட்டத்தின்படி இசைவாகிச் செயற்படாமை மற்றும் தேர்தல் பிரசார நிதி ஒழுங்குபடுத்தல்களுக்கான சட்டங்கள் இயற்றப்படாமையின் பிரதிபலனாக தேர்தல்களின் போது ஊழல்கள் இடம்பெறுவதற்கான சாத்தியப்பாடு.
- கடற்றொழில் துறையில் காணப்படுகின்ற சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளில் உள்ள தெளிவற்ற நிலைமை, கொள்கைகள் உரியவாறு நடைமுறைப்படுத்தப்படாமை (விசேடமாக பேசின் வலைகள் / சுருக்கு வலைகள் தொடர்பில்), செயற்றிறனற்ற ஒழுங்குபடுத்தல் முறைமை காரணமாக கடல் மீன் வளம் மற்றும் சிறு மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படல்.
- 1994 ஆம் ஆண்டில் 22 ஆம் இலக்க சித்திரவதை மற்றும் வேறு கொடூரமான, மனிதாபிமானமற்ற அல்லது கீழ்த்தரமாக நடத்துதல் அல்லது தண்டித்தல் என்பனவற்றிற்கெதிரான சமவாயச் சட்டத்தின் ஏற்பாடுகள் உச்ச அளவில் பயன்படுத்தப்படாமை மற்றும் சித்திரவதைகளில் இருந்து பாதுகாப்புப் பெறல் தொடர்பில் அரசியலமைப்பில் உறுதிப்படுத்தப்பட்டுள்ள அடிப்படை உரிமை மீறப்படுதல் தொடர்பில் காணப்படுகின்ற சட்ட உதவிகளைப் பெறுவதிலுள்ள கஷ்டங்கள்.
- அபிவிருத்தித் திட்டங்களில் இடம்பெறுகின்ற ஊழல் மற்றும் முறைகேடுகள் மற்றும் அதன் காரணமாக இருக்கின்ற சட்டக் கட்டமைப்புகள் மற்றும் பல்வேறான ஒழுங்குவிதிகளில் இருந்து நுழைந்து தப்பிச் செல்லும் தரப்பினரின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்வதும் அரசியல் தீர்மானங்கள் காரணமாக கொள்கை

- தகவல் அறிவதற்கான உரிமைச் சட்டத்தின் கீழ் இயற்றப்பட்டுள்ள சட்டரீதியான உடன்பாடுகள் மீறப்படல் மற்றும் இரகசியத் தன்மை கலாசாரத்தின் விளைவாக தகவல்களை அணுகுவதற்கான அடிப்படை உரிமை நசுக்கப்படுகின்றமை

- தகவல் அறிவதற்கான உரிமை சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இசைவாகிச் செயற்படுவதற்கு அரச அதிகாரிகள் மத்தியில் காணப்படும் விருப்பமின்மை மற்றும் ஆர்வமின்மை மற்றும் குற்றவாளிகளுக்கு எதிராக சட்டரீதியான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு தகவலுக்கான உரிமை ஆணைக்குழுவிற்கு அவசியமான வளங்கள் இன்மை மற்றும் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான தேவைப்பாட்டினை சுட்டிக் காட்டும் கொள்கை ரீதியான நிலைப்பாடு இல்லாமை.

ரீதியான ஆலோசனை வழங்கும் பொறுப்புடைய நிறுவனங்களின் பணிகள் அவமதிப்பிற்கு உட்படுத்தப்படல்.

- கழிவு முகாமைத்துவம் தொடர்பான தேசியக் கொள்கை, அதனுடன் தொடர்புடைய சகல தேசிய மற்றும் உள்ளூராட்சி மட்டத்திலான தாபன ரீதியான கட்டமைப்புகளுக்கிடையில் முறையான ஒருங்கிணைப்புடன் பணிகள் இடம்பெறாமை.

- சிறுவர் உரிமைகளைப் பாதுகாப்பதற்கென காணப்படுகின்ற சட்டரீதியான கட்டமைப்பு உச்ச அளவில் பயன்படுத்தப்படாமை மற்றும் அது தொடர்பில் நிலவும் உதாசீன நிலைமை.

- சொத்து விற்பனை வியாபாரங்களில் இடம்பெறுகின்ற முறைகேடுகள் மற்றும் இடம்பெறக்கூடிய இலஞ்சம் மற்றும் ஊழலுக்கான சந்தர்ப்பங்கள் அத்துடன் அவ்வாறான வியாபாரங்களுக்கு அனுமதி வழங்குவதற்குரியதாக உள்ளூராட்சி நிறுவனங்களில் ஒழுங்குவிதிகள் முறையாக நடைமுறைப்படுத்தப்படாமை.

இது, தகவல் அறிவதற்கான உரிமைச் சட்டத்தினை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் விபரமான மற்றும் அனைத்து விடயங்களையும் உள்ளடக்கிய பகுப்பாய்வு அல்லது ஊடகவியலாளர்களால் எழுதப்பட்ட கட்டுரைகள் மற்றும் ஒலிபரப்பு செய்யப்பட்ட வானொலி நிகழ்ச்சிகள் ஆகிய இரண்டிலும் வெளிக்கொணரப்பட்டுள்ள விசேட பிரச்சினைகள் தொடர்பில் விரிவானதும் முழுமையானதுமான, சட்டரீதியான மற்றும் கொள்கை ரீதியானதுமான பகுப்பாய்வு அல்ல என்பதையும் குறிப்பிட வேண்டும். மேலும், முதலாவது அத்தியாயத்தினூடாக ஊடகவியலாளர்களால் அவர்கள் எழுதிய கட்டுரைகள் வாயிலாக வெளிக்கொணரப்பட்ட சில விடயங்கள் தொடர்பில் சுருக்கமாக அந்ததந்த துறைகளுக்குரிய சட்டரீதியான அல்லது கொள்கை ரீதியான பின்னணியும், வெளிக்கொணரப்பட்டுள்ள அடிப்படை பிரச்சினைகள் மற்றும் கவனம் செலுத்தப்பட வேண்டிய மறுசீரமைப்பு ஆகிய விடயங்கள் தொடர்பிலும் பங்குப்பாய்வு செய்யப்பட்டுள்ளது. அதன்படி, முதலாவது அத்தியாயத்தில் குறிக்கோளாக அமைவது, மறுசீரமைப்பின் போது அறிமுகம் செய்யப்பட வேண்டிய அத்தியாவசிய அடிப்படை சட்டவாக்கம், கொள்கைகள் மற்றும் கையாளுகைகள் தொடர்பில் நிலவும் குறைபாடுகள் மற்றும் சவால்களை சுட்டிக்காட்டுவதாகும்.

இரண்டாவது அத்தியாயத்தின் மூலம் தகவல் அறிவதற்கான சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் படி ஊடகவியலாளர்களால் எழுதப்பட்ட கட்டுரைகளுக்கான தகவல் அணுகல் உரிமையை நடைமுறை ரீதியில் பயன்படுத்தி பல்வேறு விடயத்துறைகளுக்கு உரியதாக வெளிப்படுத்தப்பட்ட சாட்சியங்களை அடிப்படையாக கொண்டு தேடல்கள் பல முன்வைக்கப்பட்டுள்ளன. பல்வேறு வகையிலான அநீதிகள், ஓரங்கட்டப்பட்டுதல், சட்டத்தை நடைமுறைப்படுத்தும் நிறுவனங்களால் சமமற்ற விதத்தில் அதிகாரம் கையாளப்படல் மற்றும் பிரஜைகளின் உரிமைகள் கவனத்திற் கொள்ளப்படாமை என்ற வகையிலான நிலைமைகள் மேற்படி கட்டுரை ஆசிரியர்களால் மக்கள் மத்தியில் முன்வைக்கப்பட்டுள்ளது. அடிப்படை உரிமையாக தாபிக்கப்பட்ட தகவல் அணுகலுக்கான உரிமைச் சட்டம் நடைமுறைப்படுத்தும் நிலைமை இல்லாதிருக்க இவ்வாறான பல பிரச்சினைகளை வெளிக்கொண்டுவர முடியாது போயிருக்கும்.

நாட்டில் தகவல் அறிவதற்கான உரிமைச் சட்டத்தின் வாயிலாக தகவல் வெளிப்படுத்தலை கட்டளையாக மாற்றி பல தசாப்த காலமாக பொதுவாக பொது அதிகார சபைகளின் தரப்பினர் தகவலை வெளிப்படுத்தாதிருக்கும் கலாசாரத்திற்கு விதிவிலக்காக மாற்றம் செய்யும் நிலைமை மேற்கொள்ளப்பட்டது. தகவல்களின் இரகசியத் தன்மையைப் பேணுவது என்ற உடன்பாட்டில் வேரூன்றிப் போயுள்ள மனப்பாங்கு பொது அதிகார சபைகளின் பெரும்பாலான அதிகாரிகளின் கையாளுகைகளாக மாறியிருப்பது இக்கட்டுரைகளின் உள்ளடக்கத்தின் வாயிலாக சுட்டிக்காட்டப்படுகின்றது. அது தகவல் அறிவதற்கான உரிமையை பயனுறுதிமிக்க வகையில் நடைமுறைப்படுத்தப்படுவதனை உறுதிப்படுத்துதல் மற்றும் தகவலுக்கான அணுகல் அடிப்படை உரிமையை முழுமையாக அடைந்து கொள்வதிலுள்ள பிரச்சினைகள் மற்றும் சவால்கள் என்பன ஒட்டு மொத்த சவால்களுள் வெளியில் புலப்படக்கூடிய சிறியதொரு பகுதியாகும். அதன்படி, சமூகமயப்படுத்தப்பட வேண்டியுள்ள எனினும் பகிரங்க அதிகார சபைகளினால் வெளிப்படுத்த விருப்பமில்லாத தகவல்களை பொதுச் சமூகத்திற்கு ஆற்றுப்படுத்துவது மட்டுமன்றி, தகவல் அறிவதற்கான உரிமைமையின் முக்கியத்துவம் தொடர்பில் ஊடகங்கள் வாயிலாக சமூகக் கலந்துரையாடலுக்கு வித்திட்டு தகவல்களை இரகசியமாக பேணிச் செல்லும் கையாளுகை மற்றும் அதனூடாக எழக்கக்கூடிய அநீதியான பிரதிபலன்களை தடுப்பது தொடர்பிலான இயலுமை பற்றியும் மிக முக்கியமான சாட்சியங்கள் இந்தக் கட்டுரைத் தொடர்கள் வாயிலாக முன்வைக்கப்படுகின்றன.

**மூன்றாவது அத்தியாயத்தின்** வாயிலாக சுருக்கமாகக் கவனம் செலுத்தப்படும் விடயமாக அமைவது, தகவல் அறிவதற்கான உரிமையை அடிப்படை உரிமையாக அதன் விடயப்பரப்பு தொடர்பிலான மிகச்சிறந்த தெளிவினை பொதுமக்கள் மத்தியில் ஏற்படுத்தும் பொருட்டு வானொலி நிகழ்ச்சிகள் வாயிலாக அறிவினைக் கட்டியெழுப்பும் முயற்சி மற்றும் அநீதிக்கு எதிராக குரல் எழுப்பவும் மற்றும் பகிரங்க அதிகார சபைகளின் அதிகாரிகளை பொறுப்புக்கூறலுக்கு உட்படுத்தும் வகையில் மேற்படி உரிமையினை பயன்மிக்க வகையில் பயன்படுத்துவது தொடர்பிலாகும். மேலும், இந்த வானொலி அலைவரிசை நிகழ்ச்சிகளூ டாக, உரிய துறைகளின் பல்வேறு நிபுணர்களிடமிருந்து சட்ட ரீதியான மற்றும் கொள்கை ரீதியான விடயங்கள் தொடர்பில் நிலவும் சிக்கல்களை தெளிவுபடுத்திக்கொள்ளல் மற்றும் பிரஜைகள் முகம் கொடுக்கும் பல்வேறான பிரச்சினைகளை உரிய பகிரங்க அதிகார சபைகளின் அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டுவருவது தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இதற்கு மேலதிகமாக, மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் ஆளுமை விருத்தி மற்றும் மக்கள் பங்கேற்பு நிகழ்ச்சித்திட்டப் பிரிவின் மூலமாக இந்த வானொலி அலைவரிசை நிகழ்ச்சிகளின் ஓர் உள்ளடக்க அங்கமாக மக்களின் பிரச்சினைகளுக்கு வழிகாட்டல் வழங்குவதற்காக தாபிக்கப்பட்ட துரித அழைப்பு இலக்கத்தினூடாக பிரஜைகளால் முன்வைக்கப்பட்ட பிரச்சினைகள் தொடர்பிலான சிறு தெளிவுபடுத்தலும் வழங்கப்பட்டுள்ளது.

## அத்தியாயம் 01

# தகவல் அறிவதற்கான உரிமைச் சட்டத்தினை நடைமுறைப்படுத்துதல்

## தெரிவு செய்யப்பட்ட சிறு தலைப்புக்கள் பற்றியதான கொள்கைகள், நடைமுறைச் சிக்கல்கள் மற்றும் அவற்றுக்காக முன்மொழியப்பட்ட மறுசீரமைப்பு பற்றிய சுருக்கமான அவதானிப்பு

இந்த அத்தியாயத்தின் வாயிலாக தகவல் அறியும் உரிமை சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் ஆராயப்பட்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டு ஊடகவியலாளர்கள் சிலரால் எழுதப்பட்ட கட்டுரை தொகுப்புகளின் அடிப்படையில் அடையாளம் காணப்பட்ட கொள்கைகள் மற்றும் நடைமுறை ரீதியான பிரச்சினைகள் தொடர்பில் கவனம் செலுத்தப்படுகிறது. அதன்படி, தகவல் அறிவதற்கான உரிமைச் சட்டத்தின் ஏற்பாடுகளை பயன்படுத்தி அணுகப்பட்ட மற்றும் பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையில் கேள்வி எழுப்பப்பட்ட சில விடயப்பரப்புகளில் முக்கிய குறிக்கோள்கள் மற்றும் நடைமுறைக் கையாளுகைகள் தொடர்பிலான பிரச்சனைகள் சில கட்டுரைகளின் வாயிலாக வெளிப்படுத்தப்பட்டுள்ளன. ஏனைய கட்டுரைகளின் வாயிலாக வெளிப்படுத்தப்படுவது பகிரங்க அதிகார சபைகளின் தகவல் வழங்க மறுக்கும் நிலைமை, தற்போது நடைமுறைப்படுத்தப்படுகின்றன தகவல் அறிவதற்கான சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இடையில் வேறுபாட்டினை காண்பிக்கின்ற ஏற்பாடுகளையுடைய வேறு சட்டங்கள் ஊடாக ஏற்படுகின்ற தடைகளின் சிக்கல் நிலைமைகள், அத்துடன் போராட்டங்கள் காரணமாக பகிரங்க சபைகளின் அதிகாரிகளின் மனப்பாங்கு மாற்றத்தின் தேவைப்பாடு மற்றும் தகவல் அறிவதற்கான உரிமைச் சட்டத்தின் மிக முக்கியமான குறிக்கோளினை அடைந்து கொள்வதற்கு அவசியமாகும் பொருத்தமான அரச கொள்கைக் கட்டமைப்பினை உருவாக்குவதன் முக்கியத்துவமுமாகும்.

## இலங்கையில் ஒழுங்குபடுத்தப்படாத நுண்நிதிச் சேவைகள் மற்றும் அதனால் மக்களது வாழ்க்கையில் ஏற்படுகின்ற தீங்கான பிரதிபலன்கள்

### சட்டவாக்கப் பின்னணி

குறைந்த வருமானம் பெறுபவர்களின் சுயமான பொருளாதார நிலைமையைக் கட்டியெழுப்புவதற்காக அடிப்படையில் நிதிச் சேவைகளுக்கு இலகுவான மற்றும் முறையான அணுகுமுறை இல்லாத ஒரு பின்னணியில், நுண்நிதிச் சேவைகளின் பயன்பாடு மற்றும் பங்களிப்பு என்பன பொருளாதாரத்துக்கு மிக அத்தியாவசியமான அங்கங்களாகும்.

குறைந்த வருமானம் பெறும் மக்கள் மத்தியில் நுண்நிதிச் சேவைகளின் வருகையானது விரிவான வகையில் இடம்பெறுவதனூடாக வறுமையில் வாடும் மக்களின் இயல்புகளை கட்டியெழுப்பவும் அவர்களது வருமானத்தை அதிகரித்தல் மற்றும் பொருளாதார வீழ்ச்சிகளால் இரையாகும் அவதானமிகு நிலைமைகளை குறைத்துக் கொள்ளல் ஆகிய நிலைமைகள் ஊடாக வறுமையினை குறைப்பதற்கான விசேட பங்களிப்பினை வழங்குகிறது. மேலும், வறுமையில் வாடும் மக்களுக்கு ஒத்துழைப்பதற்கான ஆலோசனைக் குழுவினால் (Consultative Group to Assist the poor (CGAP, 2006) நுண்நிதி தொடர்பில் வரைவிலக்கணம் செய்யும்போது "குறைந்த வருமானம் பெறுவோருக்கான நிதிச் சேவை அளித்தல்" எனவும் "நுண்நிதிச் சேவைகளினூடாக மக்களுக்கு அவர்களது திட்டத்தின் அடிப்படையில், நிலைபேறான வகையில் வறுமைக்கு எதிராக போராடுவதற்காக உதவிகள் வழங்கப்படும்" எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.[1]

2016ஆம் ஆண்டின் 06 இலக்க நுண்நிதிச் சட்டம்[2] என்பது, ஏனைய விடயங்களுக்கு மத்தியில், நுண் நிதி வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்கின்ற கம்பனிகளுக்கு அனுமதிப்பத்திரம் வழங்குதல், ஒழுங்குபடுத்தல் மற்றும் மேற்பார்வை தொடர்பிலான ஏற்பாடுகளை அளிக்கும் பிரதான சட்ட கட்டமைப்பாகும். இச்சட்டத்தின் 11 ஆவது உறுப்புரை[3] மூலமாக வழங்கப்பட்டுள்ள ஏற்பாடுகளின் அடிப்படையில், இலங்கை மத்திய வங்கியின் நிதிச் சபையினூடாக[4] அனுமதிப்பத்திரதார நுண்நிதிக் கம்பனிகளுக்கோ அல்லது எந்தவொரு அனுமதிப்பத்திரம் பெற்ற நுண்நிதிக் கம்பனிக்கோ அல்லது நுண்நிதிக் கம்பனி கூட்டமைப்பிற்கோ அல்லது குழுவிற்கோ அவை எவ்வாறு செயற்பட வேண்டும் என்பது தொடர்பாக மற்றும் இவ்வாறான கம்பனி ஒன்றில் வியாபார மற்றும் தாபனரீதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டிய விதம் தொடர்பாக ஆலோசனைகளை வெளியிட முடியும். சட்டத்தின் 12 ஆவது பிரிவின் (1)[5] மற்றும் (2) ஆவது உப பிரிவுகளின் கீழ், இந்த நிதிச் சபை தொடர்பிலான ஒத்திசைவினை கண்காணித்தல், வழிகாட்டல்களை வழங்க முடிவதோடு, அதனை பின்பற்றத் தவறுகின்ற சந்தர்ப்பங்களில் முறையே 17ஆவது பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் நுண்நிதிக் கம்பனியின் அனுமதிப்பத்திரத்தினை இரத்துச் செய்ய முடியும்.[6]

## அடிப்படை பிரச்சினைகள்

நுண் நிதி நிறுவனங்களின் முறையான மற்றும் நியாயமான செயற்பாட்டினை உறுதிப்படுத்துவதற்காக இவ்வாறான சட்ட ரீதியான ஏற்பாடுகள் தாபிக்கப்பட்டுள்ள போதிலும் அவ்வாறான நிறுவனங்களிடமிருந்து சேவையைப் பெறும் தரப்பினராக

---

1 இலங்கை மத்திய வங்கி. https://www.cbsl.gov.lk/en/financial-system/financial-system-stability/microfinance-sector

2 2016 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க நுண்பாக நிதிச்சட்டம். https://www.cbsl.gov.lk/sites/default/files/cbslweb_documents/laws/acts/si/microfinance_Act_2016_6s.pdf

3 11 ஆவது பிரிவு, மேற்படி 'அனுமதிப்பத்திரதார நுண்நிதி நிறுவனங்களை கட்டுப்படுத்துவது தொடர்பிலான சட்டங்கள் மற்றும் கட்டளைகள்'

4 நிதிச் சட்டம் (422 ஆவது அத்தியாயம்)

5 12(1) ஆவது பிரிவு, 2016 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க நுண்பாக நிதிச்சட்டம்

6 17 ஆவது பிரிவு, 2016 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க நுண்பாக நிதிச்சட்டம்

மக்கள் முகம் கொடுக்கின்ற பிரச்சினைகள் மூலம் தெளிவாகின்ற விடயங்களாவது, சட்டத்தினை நடைமுறைப்படுத்தல் மற்றும் அதன் ஒழுங்குபடுத்தல் தொடர்பாக நிலவும் குறைபாடுகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட வேண்டும் என்ற விடயமாகும். உதாரணமாக, இலங்கை மத்திய வங்கியின் நிதிச் சபையினால் வெளியிடப்பட்ட 2019 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க ஒழுங்குவிதிகளின் பிரகாரம் அனுமதிப்பத்திரம் பெற்ற நுண் நிதி நிறுவனங்களுக்கு, நுண் நிதிக் கடன் வழங்குகின்றபோது உச்ச வட்டி விகிதம்[7] தீர்மானிக்கப்பட்டுள்ள அதேவேளை, அக்கட்டளைகள் நுண்நிதிக் கடன் வழங்குகின்றன, அனுமதிப்பத்திரம் இல்லாத அதிகமான கம்பனிகளால் மீறப்பட்டுள்ளமை தொடர்பில் தகவல்கள் கிடைக்கப்பெற்றுள்ளன. அனுமதிப்பத்திரம் பெற்ற நுண்நிதிக் கம்பனிகளால் வழங்கப்படும் நுண் நிதிக் கடன்களுக்காக அநீதியான வகையில் அதிக வட்டி வீதத்தை[8] செலுத்துகின்ற வாடிக்கையாளர்களை பாதுகாப்பதே இந்த ஒழுங்கு விதிகளின் குறிக்கோளாகும்.

நுண் நிதிக் கடன் சேவைகள் அதிகமாக இடம்பெறுகின்ற நாட்டின் பல்வேறு பிரதேசங்களைச் சார்ந்த பிரஜைகளிடமிருந்து விசேடமாக பெண்களிடமிருந்து கேட்கக் கிடைக்கின்ற வாழ்க்கையின் யதார்த்தங்கள் மற்றும் வேதனை மிகுந்த அனுபவங்கள் மூலமாக அறிந்து கொள்ளக் கூடிய காரணியாக இருப்பது, மத்திய வங்கியின் ஒழுங்குவிதிகள் மூலமாக நிர்ணயிக்கப்படுகின்றன வட்டி வீதங்களின் உச்ச எல்லைகளையும் தாண்டிச் செல்லும் நிலைமைகள் உருவாகியுள்ளன என்பதாகும். இதன்போது காணப்படுகின்ற பிரச்சினை யாதெனில், பிரதானமாக நுண் நிதிக் கடன் உட்பட நுண் நிதிச் சேவைகளை மேற்கொள்வதற்கான தகுதியைப் பெறுவது அனுமதிப்பத்திரம் பெற்ற நுண்நிதிக் கம்பனிகள் மாத்திரமே எனவும், அவ்வாறான அனுமதிப்பத்திரதார நிறுவனங்களாக நான்கு[9] கம்பனிகள் மாத்திரமே பட்டியலிடப்பட்டுள்ளது எனவும், இலங்கை மத்திய வங்கியின் கட்டளைகளில் குறிப்பிடப்பட்டுள்ள நிலையிலும்கூட, நுண் நிதிக் கடன் வழங்கல் உட்பட அதனுடன் தொடர்புடைய மேலும் பல சேவைகளை வழங்குகின்ற பல நிறுவனங்கள் செயற்பாட்டு மட்டத்தில் இருப்பதனை பிரஜைகளின் அனுபவங்கள் மூலமாக அறிந்து கொள்ளக் கூடியதாக உள்ளது. மேலும், நுண் நிதி தொடர்பிலான சேவைகளை வழங்கும் பெரும்பாலான நிறுவனங்கள் பிரதானமாக இரண்டு தொகுதிகளின் கீழ், அதாவது (1) பொதுவான அங்கத்தவர்கள் மற்றும் (2) தொடர்புடைய அங்கத்தவர்கள் என்ற வகையில் இலங்கை நுண் நிதித் தொழில்வாண்மையாளர்களின் சங்கத்தில்[10] அங்கத்துவம் பெற்றுள்ளன. அடிப்படையில் பண ரீதியாக கடன் வழங்கும் பணிகளில் ஈடுபட்டுள்ள போதிலும் அதிகாரிகளின் ஒழுங்குபடுத்தலுக்கு உட்படாது செயற்படுகின்ற அதிகப்படியான

7 2016 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க நுண்பாக நிதிச்சட்டத்தின் 12 ஆவது பிரிவின் கீழான கட்டளைகள்.

8 கட்டளை இலக்கம் 2.1 ''அனுமதிப்பத்திரதார நுண்நிதி நிறுவனங்களால் நுண்நிதிக் கடன்களுக்காக அறவிடப்படுகின்ற வட்டி மற்றும் ஏனைய கட்டணங்களும் உள்ளடங்களாக, வருடாந்தம் 35 இற்கும் (வருடாந்த நடைமுறை வட்டி வீதம்) அதிகரிக்கக் கூடாது''

9 2021 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 30 ஆம் திகதியின் போது இலங்கை மத்திய வங்கியில் பதிவு செய்யப்பட்ட அனுமதிப்பத்திரதார நுண்நிதி நிறுவனங்கள். வரையறுக்கப்பட்ட பெரென்டினா நுண் முதலீட்டு நிறுவனம், லக் ஜய மைக்ரோ பினேன்ஸ் லிமிட்டெட், தும்பர மைக்ரோ கிரெடிட் லிமிட்டெட், மற்றும் சேஜய மைக்ரோ கிரெடிட் லிமிட்டெட் https://www.cbsl.gov.lk/en/authorized-financial-institutions/licenced-microfinance-companies

10 இலங்கை நுண்நிதி தொழில்வாண்மையாளர்களின் சங்கம் 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் கீழான இலாபம் உழைக்காத அமைப்பாக கூட்டிணைக்கப்பட்டுள்ளது. https://www.microfinance.lk/membership/

நிறுவனங்கள் இந்நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளன என்பதற்கான சாட்சிகள் மூலம் இது உறுதியாகின்றது. பண ரீதியான கடன் வழங்கல் அளவுகோல்கள், வட்டிக் கணிப்பீட்டு முறைமை, செலுத்தல் மீறுதல் தொடர்பிலான சட்ட ரீதியான பாதிப்புக்கள் தொடர்பில் மக்கள் மத்தியில் தெளிவில்லாத சூழ்நிலையில், நுண் நிதிச் சேவைகளை வழங்குகின்ற நிறுவனங்களின் பணிகள் மற்றும் சட்டரீதியான தன்மை தொடர்பிலான தகவல் இல்லாத நிலைமையில் நுண் நிதிக் கடன் பிரச்சினையானது மேலும் சிக்கல் நிலைமையாக மாறியுள்ளது.

மேலும், பல்வேறு நிறுவனங்களின் நுண் நிதிச் சேவைகள் போன்ற செயற்பாடுகள் மேற்பார்வை மற்றும் ஒழுங்குபடுத்தப்படாததன் காரணமாக ஏற்படுகின்ற பிரச்சினைகள் மேலும் சிக்கலை ஏற்படுத்துவது பிரதானமாக நுண் நிதிக் கடன் என்ற பெயரில் கடன் வழங்குதலை ''நுண் நிதிக் கடன்'' என்ற பொருள்கோடலுக்கு[11] உள்ளடக்காத காரணத்தினால் ஆகும்.

## மறுசீரமைப்பு முன்மொழிவுகள்

நுண் நிதிப் பிரிவின் பணிகளை பெறுமதிமிக்க வகையில் தரப்படுத்தும் நடவடிக்கை பயன்மிக்கதும் வலுவானதுமான ஒழுங்குபடுத்தல் பொறிமுறை ஒன்றினூடாக நடைமுறைப்படுத்தப்படாததன் விளைவாக எழுகின்ற சிக்கல் நிலைமைகள் இங்கு காணப்படுகின்ற பிரதான கொள்கை ரீதியான பிரச்சினைகளுள் ஒன்றாகும். அவ்வாறான ஒழுங்குபடுத்தல் கொள்கையின் மூலமாக அனுமதிப்பத்திரதார நுண் நிதி நிறுவனங்கள் என்ற பெயரில் நபர்கள் அல்லது நிறுவனங்கள் சட்ட முரணான வகையில் செயற்படுவதும் குறைந்த வருமானம் பெறும் சமூகத்திலுள்ள நபர்கள் சுயமாக பொருளாதார ரீதியாக கட்டியெழுப்பும் வகையில் நிதியுழைப்பை மேற்கொள்வதற்காக நிதியுதவியைப் பெறுவதற்கு முயற்சிக்கின்ற நிலைமையினை சாதகமாக பயன்படுத்தி அவர்களை சுரண்டும் செயற்பாடுகள் நிறுத்தப்படவேண்டும்.

அந்தவகையில் இலங்கை மத்திய வங்கியினால் வரைவு செய்யப்பட்டுள்ள முன்மொழிவுக் கடன் ஒழுங்குபடுத்தல் சட்டமூலம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு அதனை வலுவான ஒரு சட்டமாக நடைமுறைப்படுத்த அவசியமான துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

நுண் நிதிக் கடன் வசதிகளுக்கு குறைந்த வருமானம் பெறுகின்ற நபர்களிடமிருந்து அதிகமான கேள்வி நிலவுகின்ற சூழ்நிலையில், இலங்கை மத்திய வங்கியினால் நுண்நிதிச் சட்டத்தின் 11 ஆவது பந்தியின் ஏற்பாடுகளின் கீழ் விதிக்கப்பட்டுள்ள ஒழுங்குவிதிகள், பிரஜைகளின் நிதித் தேவைப்பாட்டினை நிறைவேற்றுவதற்காக தற்போதுள்ள வரையறுக்கப்பட்ட அனுமதிப்பத்திரம் பெற்ற நிறுவனங்களின் இயலுமை, மற்றும் காணப்படுகின்ற ஒழுங்குபடுத்தல் கட்டமைப்பினுள் அதிகமான நிறுவனங்கள் உள்ளடங்காமை, நுண் நிதிக் கடன் பொறியில் சிக்கிக் சிக்குண்ட மக்களின் பாதிப்பினை அதிகரிக்க ஏதுவாகின்ற காரணத்தினால் அவை தொடர்பில் மீண்டும் ஆராய்வது அவசியமாகும்.

---

11 கட்டளை இலக்கம் 3.1 ''நுண்பாக முயற்சியாண்மைகளைத் தாபித்தல் மற்றும் முகாமைத்துவம் செய்வதற்காக கடன் உட்பட வருமானம் ஈட்டுகின்ற செயற்பாடுகளுக்காக குழுக் கடன் வழங்கல் முறைமையின் கீழ் நபருக்கு/நபர்களுக்கு வழங்கப்பட்டுள்ள கடன்கள்''

2016 ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க நுண்நிதிச் சட்டத்தின் கட்டளைகளின்[12] கீழ் இலங்கை மத்திய வங்கியின் நிதிச் சபையின் ஆலோசனையின்படி, நுண்நிதிச் சேவையை வழங்குகின்ற நிறுவனங்களால் எப்போதும் பேணப்பட வேண்டிய ஆகக்குறைந்த மூலதன வரையறைகள் தீர்மானிக்கப்படுகின்றன.[13] பிரதானமாக கடன் வழங்கல் உட்பட நுண் நிதிச் சேவைகளை வழங்கும் அதிகமான நிறுவனங்கள் நுண் நிதி நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள போதிலும், 2021 ஜூன் 30ஆம் திகதியின் போது நுண் நிதிச் சட்டத்தின் கீழான ஆலோசனைகள் மற்றும் அளவுகோல்களை நிறைவு செய்து பதிவு செய்யப்பட்டிருப்பது 4 நிறுவனங்கள் மாத்திரமே என்பது ஏன் என்று மத்திய வங்கி ஆராய்ந்து பார்க்க வேண்டும். நுண் நிதிச் சட்டத்தினூடாக விதிக்கப்படுகின்றன ஒழுங்கு விதிகளுக்கான அளவுகோல்கள் அல்லது அது தொடர்பில் இயற்றப்படவுள்ள எந்தவொரு சட்ட வரைவின் கீழும் நுண் நிதி நிறுவனங்களிடமிருந்தும் சேவைகளை பெறுகின்ற தரப்பினரின் மொழி உரிமை மதிக்கப்படுவதற்காண வழிகாட்டல்கள் உள்ளடக்கப்பட வேண்டும். நுண் நிதி உடன் தொடர்புடைய சேவைகளை வழங்குகின்ற போது தயாரிக்கப்படும் ஒப்பந்தங்கள் பங்காளர்களாக கையொப்பமிடும் தரப்பினருக்கு அதன் உள்ளடக்க ஏற்பாடுகள் மற்றும் நிபந்தனைகளை வாசித்து புரிந்து கொள்ள முடியாத மொழியில் காணப்படின், அதனை 1997ஆம் ஆண்டின் 26ஆம் இலக்க அநீதியான ஒப்பந்த ஒழுங்குகள் சட்டத்தில்[14] குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளையும் மீறுகின்ற ஒரு விடயமாக முன்மொழிவு செய்யமுடியும்.

இலங்கை மத்திய வங்கி, விசேடமாக அதன் நிதிச் சபை நுண்நிதிச் சட்டத்தின் 11 ஆவது உறுப்புரையில் குறிப்பிட்டுள்ள ஏற்பாடுகளின் கீழ் கட்டளைகளை வழங்குவதன் மூலம், அநீதியான கடன் வழங்கல் முறைமை மூலமாக குறைந்த வருமானம் பெறுகின்ற தரப்பினர் சுரண்டப்படுவது தொடர்பில் நுண்நிதிச் சேவை வழங்கும் அதிகமான நிறுவனங்கள் நிலவும் ஒழுங்குபடுத்தல் கட்டமைப்பில் இருந்து விலகிச் செயற்படுகின்ற பிரச்சினையை தீர்ப்பதற்கு தமது கடமைகளையும் அதிகாரங்களையும் பயனுள்ள வகையில் பயன்படுத்த வேண்டும்.

## தகவல் தொடர்பான இரகசியத்தைப் பேணும் கலாச்சாரம், ஊழல் ஏற்படுவதற்கான சந்தர்ப்பங்கள் மற்றும் பகிரங்க அதிகார சபைகள் தகவல் அறிந்து கொள்ளும் உரிமை தொடர்பான சட்டத்தின் பொறுப்புகளுக்கு ஏற்புடையதாக இருக்காமை.

## சட்டவாக்கப் பின்னணி

தகவல் அறியும் உரிமைக்காக சிவில் சமூகத்தினரால் நீண்ட காலமாக அழுத்தம் மேற்கொள்ளப்பட்ட சூழமைவில், அரசியல் யாப்பின் பத்தொன்பதாவது திருத்தம் அறிமுகம் செய்யப்பட்டதுடன், இலங்கை தனது அடிப்படை உரிமைகளில் பகுதியாக தகவல் அறிவதற்கான உரிமையையும் உள்ளடக்கியது. அதன் பின்னர் 2016 ஆம் ஆண்டு

12 2016 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க நுண்பாக நிதிச்சட்டத்தின் 12 ஆவது பிரிவின் கீழ் வெளியிடப்பட்ட 2016 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க நுண்பாக நிதி தொடர்பிலான கட்டளைகளின் பிரகாரம் காணப்படும் ஆகக் குறைந்த மூலதனம்.

13 கட்டளைகள் இலக்கம் 1.1 மற்றும் 1.2, மேற்படி சட்டம்

14 1997 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க அநீதியான ஒப்பந்த உடன்பாடுகள் சட்டத்தின் 8 ஆவது பிரிவு.

தகவல் அறியும் உரிமை தொடர்பான சட்டம்[15] தயாரிக்கப்பட்டது. அது விடயத்துக்கு பொறுப்பான அமைச்சரால் 2017 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தல் மூலம்[16] அமுல்படுத்தப்பட்டது. அத் திகதியிலிருந்து, இலங்கை பிரஜைகள் பொது நிறுவனங்களிடமிருந்து தகவல்களைக் கோருதலை உரிமையாகப் பாவிக்கும் புதிய அனுபவம் கிடைத்தது. முதன்மையாக புலனாய்வு ரீதியான ஊடகவியலில் ஈடுபட்டுள்ள சில ஊடகவியலாளர்களும் அடங்கலாக பெருமளவான பிரஜைகள் இந்த உரிமையை தமது சொந்த வாழ்க்கை தொடர்பான மற்றும் பொதுவான தேவைகள் ஆகிய இரண்டுக்கும் உரிய விடயங்களுக்காக பாவிக்க ஆரம்பித்துள்ளனர்.

அதற்கமைய, இத் தகவல் அறியும் அடிப்படை உரிமை அரசியலமைப்பின்[17] 14 ஆவது உறுப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ளதுடன், **(1) (அ) அரசு, ஒரு அமைச்சு அல்லது அரசாங்க திணைக்களம் அல்லது ஏதாவது சட்டத்தின் மூலம் அல்லது சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட அல்லது உருவாக்கப்பட்ட ஏதாவது நியதிச்சட்ட சபையிடம் இருக்கும், (ஆ) ஏதாவது மாகாண அமைச்சரவை அமைச்சரின் ஏதாவது ஒரு அமைச்சு அல்லது ஏதாவது திணைக்களம் அல்லது மாகாண சபை நியதிச் சட்டத்தின் மூலம் நிறுவப்பட்ட ஏதாவது நியதிச் சட்ட சபையிடம் இருக்கும் (இ) ஏதாவது உள்ளூராட்சி மன்றத்திடம் இருக்கும், மற்றும் (ஈ) இந்த உப உறுப்புரையின் (அ), (ஆ) மற்றும் (இ) பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனங்களுக்கு உரிய ஏனைய யாராவது நபரிடம் இருக்கும் மற்றும் ஒரு பிரஜையின் உரிமையை அமுல்படுத்துவதற்காக அல்லது பாதுகாப்பதற்கு தேவையான ஏதாவது தகவலை சட்டத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள வகையில் அணுகுவதற்கான உரிமை உள்ளது** என குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், தகவல் அறியும் உரிமை சட்டத்தின் 3. (1) பிரிவின் எற்பாடுகளுக்கு அமைய,

“இச் சட்டத்தின் 5 ஆவது பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைய, ஒரு பொது நிறுவனத்தின் உடமையில், பொறுப்பில் அல்லது கட்டுப்பாட்டில் உள்ள தகவல்களை பெறுவதற்கான உரிமை அனைத்து பிரஜைகளுக்கும் இருத்தல் வேண்டும்”[18] என குறிப்பிடப்பட்டுள்ளது.

தகவல் அறியும் உரிமை தொடர்பான சட்டத்தின் மூலம் ‘தகவல்களைப் பெறுவதனை நிராகரித்தல்’[19] தொடர்பாக நிச்சயிக்கப்பட்ட சந்தர்ப்பங்கள் குறிப்பிடப்பட்டுள்ளதுடன், அது ‘முன்னோக்கு வெளிப்படுத்தல்’[20] எனவும் குறிப்பிடப்படுகிறது. மேலும், தகவல் அறியும் உரிமை தொடர்பான சட்ட ரீதியான கட்டமைப்பு ஊடாகத் தகவல்களை அணுகும் பிரஜைகளின் அடிப்படை உரிமைகளை அமுல்படுத்தக்கூடிய வகையில் அனைத்து பொது நிறுவனங்களிலும் மேலே சொல்லப்பட்ட அனைத்து அறிக்கைகளும் பொருத்தமான முறையில், தகுந்த வகையில் வகைப்படுத்தப்பட்டு. குறியீட்டு அட்டவணை

---

15 2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க தகவலறிவதற்கான உரிமைச் சட்டம். http://www.rticommission.lk/web/images/pdf/act/rti-act-si-13122018.pdf

16 2017 பெப்ரவரி 3 ஆம்’ திகதிய 2004/66 ஆம் இலக்க வர்த்தமானி (அதிவிசேட) பத்திரிகை. http:/documents.gov.lk/files/egz/2017/2/2004-66_S.pdf

17 பத்தொன்பதாவது அரசியலமைப்பு சீர்திருத்தத்தின் 2 ஆவது உறுப்புரை. https:/www.parliament.lk/uploads/acts/gbills/Sinhala/5974.pdf

18 2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க தகவலறிவதற்கான உரிமைச் சட்டத்தின் 3(1) ஆம் பிரிவு.

19 II ஆம் பகுதி 5 ஆவது பிரிவு, மேற்படி சட்டம்.

20 14(உ) ஆவது பிரிவு, மேற்படி சட்டம்.

தயாரிக்கப்பட்டு[21] பேண வேண்டிய பொறுப்பு உரித்தளிக்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கைகள் நியாயமான காலத்தினுள், அதற்காக இருக்கும் வளங்களின் போதுமான தன்மைக்கு ஏற்ற வகையில், இலத்திரனியல் மாதிரிகளில் பேணுகை செய்வதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அரச அலுவலர்களுக்கு ஆலோசனை வழங்கும் ஏற்பாடுகள் சட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தேவையான சந்தர்ப்பத்தில் நல்ல முறையில் தகவல்களைப் பெறுவதற்கான வசதிகளை வழங்குவதற்காக பல்வேறு வகையான தகவல்களைப் பெறுவதற்கான விடயப் பரப்பை விரிவாக்குவதற்காக தகவல் அறியும் உரிமை தொடர்பான சட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்படும் குறிக்கோள் இதன் மூலம் வெளிப்படுத்தப்படுகிறது.

தகவல் பெறும் செயல் ஒழுங்குவிதியின் ஏற்புடைய தன்மையை உறுதி செய்வதற்காக பிரஜைகளிடமிருந்து தகவல் கோரும் கோரிக்கை கிடைத்தமையை உறுதி செய்யும் பொறுப்பு பொது நிறுவனத்துக்கு உரித்தளிக்கப்பட்டுள்ளது.[22] மேலும், அது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தை இயன்றளவு விரைவாக குறித்த தகவல்களைக் கோரி அறிவிக்க வேண்டும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. [23]எனவே, பிரஜைகள் தகவல்களை பெறுவதனை உறுதி செய்தல் மற்றும் அதன் மூலம் ஊழலுக்கு எதிராகப் போராடுதல் மற்றும் வகை பொறுப்புக் கூறல் மற்றும் நல்லாட்சியை மேம்படுத்துவதன் மூலம் இலங்கை பிரஜைகளுக்கு மிகவும் பூரணமாக பொது மக்கள் வாழ்க்கையில் வினைத்திறனாக பங்குபற்றக்கூடிய சமூகத்தை விருத்தி செய்தலே தகவல் அறியும் உரிமை தொடர்பான சட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்படும் குறிக்கோள் என்பது தெளிவானதாகும்.

இதற்கு மேலதிகமாக, தகவல் அறியும் உரிமை தொடர்பான சட்டத்தின் மூலம் தகவல்களை வழங்குவதற்காக தகவல் அலுவலர்களை (Information Officers) நியமித்தல் மற்றும் மேன்முறையீட்டை விசாரணை செய்வதற்காக பெயரிடப்பட்ட அலுவலர்களை (Designated Officers) நியமிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.[24] இச் சட்டத்தின் கீழ் பொது நிறுவனம் தனது தேவைக்கு ஏற்ப ஒரு தகவல் அலுவலரை விடவும் கூடுதலான தகவல் அலுவலர்களை நியமிக்கலாம்.

தகவல்களைப் பெறுவதற்கான அடிப்படை உரிமை தொடர்பில் இந்த முற்போக்கான நடவடிக்கை இருந்த போதிலும், பிரதானமாக பொது மக்களின் கவனத்தக்கு உட்படும் அல்லது மக்கள் அக்கறை கொண்டுள்ள விடயங்கள் மற்றும் தீர்மானங்கள் தொடர்பான தகவல்களை பெறும் போது முகங்கொடுக்க வேண்டியுள்ள பல சவால்கள் உள்ளன. பல தசாப்தங்களாக பொது நிறுவனங்களில் உள்ள தகவல்களின் இரகசியத் தன்மையைப் பேணும் பழக்கத்தினால் உருவான நீண்டகாலமாக புரையோடிப் போயுள்ள மனப்பாங்கு காரணமாக அது தொடர்பாக உள்ள கொள்கைச் சட்டகத்தின் கொள்கை ரீதியான மற்றும் மனப்பாங்கு ரீதியான மறுசீரமைப்புகளின் அத்தியாவசிய தன்மை தகவல் அறியும் சட்டத்தை அமுல்படுத்துவதன் மூலம் வெளிப்படுகிறது. வினைத்திறனான கொள்கைகளை அமுல்படுத்தும் திட்டம் அமுல்படுத்தப்படவில்லை எனின். ஏந்தவொரு முற்போக்கான சட்ட கட்டமைப்பின் மூலம் எதிர்பார்க்கப்படும் பெறுபேற்றை வழங்காது. எனவே, பொது மக்களின் வாழ்க்கையில் வினைத்திறனாக பங்குபற்றுவதில் மற்றும் ஊழலுக்கு எதிராக செயற்படுவதற்கான பிரஜைகளின் விருப்பு மற்றும் அக்கறை வரையறுக்கப்படுவதனை

---

21 7 ஆவது பிரிவு, மேற்படி சட்டம்.

22 24(3) ஆவது பிரிவு, மேற்படி சட்டம்.

23 25(1) ஆவது பிரிவு, மேற்படி சட்டம்.

24 23(1)(அ) ஆவது பிரிவு, மேற்படி சட்டம்.

தவிர்ப்பதற்காக தகவலை அணுகும் போது தற்போதுள்ள சட்டம் மற்றும் கொள்கை அமுல்படுத்தலின் குறைபாடுகள் மற்றும் சவால்களை விரைவாக தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

## அடிப்படை பிரச்சினைகள்

பல்வேறு பொது நிறுவனங்களில் இருந்து தகவல்களைப் பெறும் குறிக்கோளுக்காக தமது தகவல் அறியும் அடிப்படை உரிமையை இதுவரை பாவித்துள்ள பிரஜைகளில் பெரும்பாலானோர் அது தொடர்பான பிரச்சினைகள் மற்றும் பல சவால்களுக்கு முகங்கொடுத்துள்ளனர்.[25] அதன் மூலம் கற்றுக் கொண்ட பாடங்கள் ஊடாக தற்போதுள்ள சட்ட ரீதியான மற்றும் கொள்கை ரீதியான கட்டமைப்புகளின் சாரமான மற்றும் செயல் ஒழுங்குவிதிகளின் உள்ளடக்கம் மற்றும் அவற்றை அமுல்படுத்தும் போதும் பின்பற்றப்படும் செயன்முறைகள் ஆகிய இரண்டுக்கும் தேவையான கொள்கைகள் மற்றும் பயன்பாடுகள் தொடர்பான மாற்றங்களைக் கொண்டுவரும் போது அது தொடர்பாக மிகவும் சாதகமாக பதில்வினையாற்றும் போது தகவல் அறியும் உரிமை தொடர்பான சட்டத்தை அமுல்படுத்தும் போது, அது அமுலுக்கு வந்த நாளில் இருந்து முகங்கொடுக்கும் அடிப்படை பிரச்சினைகள் மிகவும் முக்கியமானவையாக இருக்கின்றன.

பெரும்பாலான பொது நிறுவனங்களின் அலுவலர்கள் சட்டத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ள செயல் ஒழுங்குவிதிகளுக்கு ஏற்ற வகையில் செயற்படாமை தகவல் அறியும் உரிமை சட்டத்தை அமுல்படுத்தும் போது அடையாளம் காணப்பட்ட ஒரு முக்கியமான விடயமாகும். அலுவலர்கள் மற்றும் பெயரிடப்பட்ட அலுவலர்களை நியமிக்கும் தேவைப்பாடு குறிப்பிடப்படும் 23 (1) (அ) பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைவாக செயற்படுதல் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தை வினைத்திறனாக அமுல்படுத்துவதற்கான அடிப்படை தேவையாகும். சில பொது நிறுவனங்கள் மூலம் 2021 ஒக்டோபர் 5 ஆம் திகதி[26] வரை தகவல் அலுவலரை நியமிக்கவில்லை எனத் தெரிய வருகிறது. இச் சட்டம் அமுல்படுத்தப்பட்டு மூன்று மாத காலத்தினுள் அவ்வாறான நியமனம் செய்யப்பட வேண்டும் என சட்டத்தில் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. அரச அலுவலர்களின் பொறுப்பற்ற தன்மை மற்றும் தகவல் அறியும் உரிமை தொடர்பான சட்டத்தின் அடிப்படை விடயங்கள் தொடர்பான புரிதல் இன்மை ஆகிய இரண்டு பிரச்சினைகளும் அதன் மூலம் தெளிவாக வெளிப்படுகிறது. இதற்கு மேலதிகமாக, பிரஜைகள் தேடும் அனைத்து தகவல்களுக்கும் நேரடி அணுகும் வசதி இருக்காது என்பதனால், அந்தந்த பொது நிறுவனங்களின் ஏனைய அலுவலர்களின் ஒத்துழைப்பு மற்றும் பங்களிப்பு[27] இன்மை காரணமாக பிரஜைகளின் அனைத்து தகவல் கோரிக்கைகளுக்கும் பதில்வினையாற்றுவதில் அனைத்து தகவல் அலுவலர்கள் அல்லது பெயரிடப்பட்ட அலுவலர்களுக்கு குறிப்பிடத்தக்க இடையூறுகள் தோன்றலாம்.

தேசிய பாதுகாப்பு அல்லது பொது பாதுகாப்புக்கு பாரதூரமான பாதிப்பு ஏற்படுத்தும், சர்வதேச உடன்படிக்கைகளின் கீழ் இலங்கையின் தொடர்புகளுக்கு பாதிப்பை ஏற்படுத்தும், பொருளாதாரத்துக்கு பாரதூரமான பாதிப்பை ஏற்படுத்தும், தொழில்வாண்மையாளர்கள் மற்றும் பொது நிறுவனங்களுக்கு இடையிலான தொடர்பாடல் போன்ற வகையில்

---

25 ஊடகவியலாளர்களினால் எழுதப்பட்ட கட்டுரைகள் பற்றிய சாராம்ச அட்டவணை

26 ஊடகவியலாளர் பிங்குன் மேனகவினால் எழுதப்பட்ட 'தகவல் அறிவதற்கான உரிமைச் சட்டத்தின் முன் வெள்ளைப்பூடு மோசடி செய்யும் லக்சதொச' என்ற தலைப்பிலான கட்டுரை

27 2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க தகவலறிவதற்கான உரிமைச் சட்டத்தின் 23(3) ஆம் பிரிவு

விபரமாக சுட்டிக்காட்டப்பட்டுள்ள பல விடயங்களில் மறைந்து சட்டத்தின் 5ஆவது பிரிவில் காட்டப்பட்டுள்ள ஏற்பாடுகளை தவறாக பொருள்கோடல் செய்தல் மற்றும் அவற்றை முறைகேடாக பாவித்தல் தொடர்பாக நிலவும் போக்குகள் தகவல் அறியும் உரிமை தொடர்பான சட்டத்தை அமுல்படுத்தும் போது கவனத்தில் கொள்ள வேண்டிய சிக்கலான விடயமாக உள்ளது. இச் சட்டத்தின் 5 ஆவது பிரிவின் எற்பாடுகள் தேவையற்ற அல்லது தொடர்பற்ற சூழமைவுகளில் தகவல் வழங்குதலை நிராகரிக்கும் எண்ணத்துடன் பாவிக்கப்படும் போக்கு அரசியல் யாப்பில் உறுதி செய்யப்பட்டுள்ள தகவல்களைப் பெறுவதற்கான அடிப்படை உரிமையை அமுல்படுத்தும் போது குறிப்பிடத்தக்க அளவான இடையூறாக மாறியிருப்பதாக அவதானிக்கப்படுகிறது.

இச் சட்டத்தின் 5 ஆவது பிரிவை அடிப்படையாகக் கொண்டு ஆரம்ப சந்தர்ப்பத்தில் தகவல் அலுவலகர் மற்றும் பின்னர் பெயரிடப்பட்ட அலுவலகரால் தகவல் வெளியிடுதல் நிராகரிக்கப்படுதல் மற்றும் தகவல் அறியும் உரிமை தொடர்பான ஆணைக்குழுவின் ஆலோசனைக்கு அமைய பின்னரான சந்தர்ப்பத்தில் அதே தகவலை வெளிப்படுத்த உடன்படுதலும் ஒரு விதமான போக்காக மாறியுள்ளது. இதன் மூலம் தகவல் அறியும் உரிமை தொடர்பாக நிலவும் சில வரையறைகள் தொடர்பாக தெளிவாகிறது. ஒரு புறம், தகவல் அறியும் உரிமை கோரிக்கையை நிராகரிப்பதற்காக தகவல் அலுவலகர் மற்றும் பெயரிடப்பட்ட அலுவலகர்களால் பாவிக்கப்படும் பெரும்பாலான நியாயப்படுத்தல்கள் 5 ஆவது பிரிவின் விடயப் பரப்புக்கு உரியதல்லாதவை என்பது அதன் மூலம் வெளிப்படுவதுடன், மறுபுறமாக தகவல் அறியும் உரிமை சட்டத்தின் மூலம் அவ்வாறான அலுவலகர்களின் பக்கத்தால் விதிக்கப்படும் கடமைகளை புரிந்து கொள்ளாமையின் விளைவாகவும், அந்த நிலை ஊடாக வெளிப்படுகிறது. மிகவும் முக்கியமாக ‘முன்னோக்கிய வெளிப்படுத்தல்’ தொடர்பாக அவ்வாறான விருப்பமின்மைக்கு, சில தகவல்கள் மக்கள் மத்தியில் செல்வதன் மூலம் பல்வேறு துறைகளில் இடம்பெறக்கூடிய ஊழல் செயற்பாடுகள் தொடர்பான தகவல்கள் பொது சமூகத்திடம் செல்லலாம் எனும் அச்சம் காரணியாக இருக்கிறதா ? என்பதனை ஆராய்ந்து பார்க்க வேண்டும். மேலும், தகவல் அலுவலகர் மற்றும் பெயரிடப்பட்ட அலுவலர் ஏனைய சட்டங்களின் கீழ் தகவல் வெளியிடுதல் தொடர்பாக, தகவல் அறியும் உரிமை தொடர்பாக சட்டத்தில் உள்ள பொறுப்புகளுக்கு புறம்பான வகையில் பல்வேறு கட்டுப்பாடுகள் விதிக்கப்படும் ஏனைய சட்ட ரீதியான ஏற்பாடுகள் அமுல்படுத்தப்படுதல் தொடர்பாகவும் இதன் போது கருத்தில் கொள்ள வேண்டும். எனவே, தகவல் அறியும் உரிமை தொடர்பான சட்டத்தின் செயற்பாட்டு விடயப் பரப்புக்கு இடையூறு செய்யும் மற்றும் அதனை மட்டுப்படுத்தும் சட்ட ரீதியான இடையூறுகள் தொடர்பாக கொள்கை வகுப்பாளர்கள் தமது கவனத்தை செலுத்த வேண்டும் என்பதுடன், அவற்றுக்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுதலும் தேவையாகும்.[28]

பெரும்பாலான பொது நிறுவனங்கள், தகவல் அறியும் உரிமை சட்டத்தின் 24 (3)[29] மற்றும்

---

28 தகவல் அறிவதற்கான சட்டநிலைமைகள் தொடர்பில் காணப்படுகின்ற சட்டங்கள் பற்றிய மீளாய்வு. https://www.lk.undp.org/content/s

29 2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க தகவலறிவதற்கான உரிமைச் சட்டத்தின் 24(3) ஆம் பிரிவு ‘கோரிக்கையொன்று கிடைக்கப்பெற்றதன் மேல், தகவல் அலுவலர் ஒருவர் பிரசைக்கு கோரிக்கையின் எழுத்திலான ஏற்பொன்றை உடனடியாகக் கொடுத்தல் வேண்டும்’

25 (1)[30] ஆகிய பிரிவுகளின் ஏற்பாடுகள் இருந்த போதிலும், சட்டத்தில் காட்டப்பட்டுள்ள செயல் ஒழுங்குவிதிகளுக்கு அமைவாக இருக்கவில்லை. தகவல்களை பெறும் அடிப்படை உரிமையின் பெறுமானத்தை உதாசீனப்படுத்தி, உடன்பட முடியாத முறையில் தகவல் வழங்குதலை தாமதித்தல் அல்லது பொது நிறுவனங்களால் அவை சிறிய விடயமாக கருதப்படும் நிலையையும் காணலாம். பொது நிறுவனங்களின் அலுவலகர்கள் இந்த வகையில் தொடர்ந்தும் செயற்பட்டால், அவ்வாறான செயற்பாடுகள் சட்டத்தின் 39 ஆவது பிரிவின் கீழ் உண்மையிலேயே தவறு இடம்பெறுவதுடன், அவ்வாறான தவறுகள் தொடர்பில் செயற்படுவதற்கு தகவல் அறியும் உரிமை தொடர்பான ஆணைக்குழுவுக்கு தகுந்த அதிகாரம் உள்ளது. தகவல் அறியும் உரிமை தொடர்பான ஆணைக்குழு பிரஜைகளின் தகவல் அறியும் உரிமையை பிரபலப்படுத்த மேற்கொண்ட தீர்மானத்தின் ஊடாக பெரும் அர்ப்பணிப்பு வெளிப்படுத்தப்பட்டுள்ளமை மிகவும் சாதகமான போக்காகும். இருந்த போதிலும், தகவல் அறியும் ஆணைக்குழுவினால் சட்டத்தின் 39 ஆவது பிரிவின் கீழ் இதுவரை அவ்வாறான வழக்கு தாக்கல் செய்யப்படவில்லை என்பதுடன், அவ்வாறான தலையீட்டை அங்கீகாரமாக உருவாக்க நடவடிக்கை எடுக்கப்படாமை ஊடாக தகவல் அறியும் சட்டம் அமுல்படுத்தப்படும் பாங்கு தொடர்ந்தும் உதாசீனப்படுத்தவதற்கு ஏதுவாகலாம் என்பது ஒரு அவதானிப்பாகும்.

ஒழுங்குவிதிகள் மற்றும் அவற்றின் விடயப் பரப்புகள், பொது நிறுவனங்களின் கடமைகள், தகவல் அலுவலகர்கள் மற்றும் பெயரிடப்பட்ட அலுவலகர்களுக்கு உரிய ஆலோசனை அடங்கலாக, இருப்பினும் அவற்றுக்கு வரையறுக்காமல், தகவல் அறியும் உரிமை சட்டம் தொடர்பான பயிற்சி மற்றும் தகுந்த வழிகாட்டல்கள் இல்லாமை, பொது நிறுவனங்களின் அலுவலகர்களிடமிருந்து கிடைக்கும் பிரதிபலிப்புகளின் தன்மையை ஆராய்ந்து பார்க்கும்போது கடுமையாக கவனம் செலுத்தப்பட வேண்டிய துறையாக காணப்படுகிறது. உதாரணமாக, மருத்துவ கழிவுகளை அகற்றுதல் தொடர்பான தகவல்களை கோரும் பிரஜைக்கு, தகவல் வழங்க வேண்டும் எனின், தேசிய அடையாள அட்டையை சமர்ப்பித்து பிரஜா உரிமையை நிரூபிக்குமாறு தகவல் அலுவலகர் மற்றும் பெயரிடப்பட்ட அலுவலகரால் ஆலோசனை வழங்கப்படுதலை குறிப்பிடலாம். இருந்த போதிலும், தகவல் அறியும் உரிமை ஆணைக்குழுவுக்கு 71/2021 இலக்க மேன்முறையீட்டை சமர்ப்பிக்கும் போது அந்த மேன்முறையீடு தொடர்பான ஆணைக்குழுவின் தீர்மானத்தில் "விண்ணப்பதாரி இலங்கைப் பிரஜை அல்ல எனும் சந்தேகம் இருந்தால் அன்றி, ஒரு நபரின் தகவல் அறியும் உரிமை ஊடாக தகவல் கோரப்படும் போது அதற்காக பிரஜா உரிமையை உறுதி செய்ய வேண்டிய தேவையில்லை" என குறிப்பிடப்பட்டுள்ளது. இது தகவல் அறியும் உரிமை சட்டம் தொடர்பிலான அரச அலுவலகர்களின் புரிதல் மட்டத்தை வெளிப்படுத்துகிறது. அத்துடன், ஊழலுக்கு எதிராக போராடுதல், வகைகூறல் மற்றும் நல்லாட்சியை மேம்படுத்துவதன் மூலம் பொது மக்களின் வாழ்க்கையுடன் மிகவும் நெருக்கமான அரச நிர்வாகத்தில் முழுமையாக பங்கேற்கும் வசதிகளை வழங்குவதில் காணப்படும் அவர்களது குறைவான அர்ப்பணிப்பு தொடர்பாக கடுமையான கவலையை

30 25(1) ஆவது பிரிவு. மேற்படிச் சட்டம், 'ஒரு தகவல் அலுவலர் இயன்றளவு விரைவாக, எச்சந்தர்ப்பத் திலும் 24 ஆம் பிரிவின் கீழான கோரிக்கை ஒன்றின் பெறுகையின் பதின்நான்கு நாட்களுக்குள் 14(உ) என்னும் பிரிவின் கீழ் தீர்மானிக்கப்பட்ட கட்டண அட்டவணைக்கு இணங்க தீர்மானிக்கப்பட்ட கட்டணம் ஒன்றின் கொடுப்பனவின் மீது கோரப்பட்ட தகவலை ஒன்றில் வழங்குவதற்கு அல்லது இச்சட்டத்தின் 5 ஆம் பிரிவில் குறிப்பீடு செய்யப்படும் ஏதுக்களின் ஏதேனும் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவற்றின் மீது வேண்டுகோளை நிராகரிப்பதற்கு முடிபு ஒன்றை எடுத்தல் வேண்டும் என்பதுடன் கோரிக்கை விடுத்த பிரசைக்கு அத்தகைய முடிபை உடனடுத்து அறிவித்தலும் வேண்டும்.

தோற்றுவிக்கிறது. அதன் காரணமாக இவ்வாறான பிரச்சினைகளுக்கு கவனம் செலுத்தாமல் இருப்பதன் மூலம் பாரதூரமான விளைவுகள் ஏற்படலாம் என்பதுடன், பிரஜைகளின் அடிப்படை உரிமைகளுக்கும் பாதிப்பு ஏற்படலாம்.

## உத்தேச மறுசீரமைப்பு

தகவல் அறியும் உரிமையை அமுல்படுத்தும் போது தோன்றும் பிரச்சினைகள் மற்றும் சவால்களை ஆராய்ந்து பார்க்கும் போது, பொது நிறுவனத்தில் வெளிப்படைத்தன்மை மற்றும் வகை பொறுப்புக்கூறல் தொடர்பான கலாச்சாரத்துக்கு ஊக்கமளிக்கும் போது, அந்த அவதானிப்பு மிகவும் முக்கியமானது என அடையாளம் காணப்பட்டுள்ளது.

தகவல் அறியும் உரிமை தொடர்பான ஆணைக்குழுவின் குறிக்கோள், விடயப் பரப்பு, வகை பொறுப்புக் கூறல், அதிகாரம் மற்றும் கருமங்களும், தகவல் அறியும் உரிமை தொடர்பான சட்டத்தை மீறுதல் தொடர்பான தவறுகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய தண்டனைகள் தொடர்பாக பொது நிறுவன அலுவலகர்களுக்கு சிறந்த ஒருங்கிணைப்பு மற்றும் நாடு தழுவிய பயிற்சிகள் மற்றும் தெளிவூட்டல் நிகழ்ச்சிகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட வேண்டும்.

2016 ஆண்டின் 12 இலக்க தகவல் அறியும் உரிமை சட்டத்தின் 41 (2) பிரிவின் கீழ் வெளியிடப்பட்டுள்ள ஒழுங்குவிதிகளுக்கு அமைவாக இருத்தல் கண்காணிக்கப்பட வேண்டும் என்பதுடன், அந்த உத்தரவுகள் தொடர்பான ஏற்புடைய தன்மையை வெளிப்படுத்தாத பொது நிறுவனங்களின் அலுவலகர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

அதற்கமைய, தகவல் அறியும் சட்டத்தின் 23 ஆவது பிரிவின் கீழ் செய்யப்பட்டுள்ள ஏற்பாடுகள் மற்றும் 2017 பெப்ரவரி 3 ஆம் திகதிய 2004 இன் 66 இலக்க வர்த்தமானியின் (அதிவிசேட) 21 ஆம் இலக்க ஒழுங்குவிதி மூலம் குறிப்பிடப்பட்டுள்ள வகையில் அனைத்து பொது நிறுவனங்களாலும் தகவல் அலுவலர்கள் மற்றும் பெயரிடப்பட்ட அலுவலகர்கள் நியமிக்கப்பட வேண்டும். ஏனைய பொது நிறுவனங்களின் ஒத்துழைப்பு மற்றும் பங்களிப்புடன் தகவல் அறியும் உரிமை தொடர்பான ஆணைக்குழுவுடன் கலந்துரையாடி பொது நிறுவனங்களின் பட்டியலை தயாரிப்பதற்கு பொதுசன ஊடகத்துறை அமைச்சு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதுடன், தகவல் அலுவலகர்கள் மற்றும் பெயரிடப்பட்ட அலுவலர்களை அடையாளம் காணுதல் மற்றும் நியமனம் செய்தல் தொடர்பான சுட்டிகளை உருவாக்குதல் மற்றும் ஒவ்வொரு பொது நிறுவனங்களினதும் தகவல் அலுவலகர்கள் மற்றும் பெயரிடப்பட்ட அலுவலகர்களின் தொடர்பு விபரங்கள் அடங்கிய பட்டியலை தயாரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். அவ்வாறான தகவல்கள் தகவல் அறியும் உரிமை தொடர்பான ஆணைக்குழுவின் இணையத்தளத்தில் மும்மொழிகளிலும் வெளியிடப்பட வேண்டும் என்பதுடன், பிரஜைகள் அவற்றை அணுகக்கூடிய வகையில் அவ்வப்போது இற்றைப்படுத்தப்பட வேண்டும்.

தகவல் அலுவலகர்கள் மற்றும் பெயரிடப்பட்ட அலுவலகர்களின் தரப்பில் தேவையற்ற தாமதம் மற்றும் வெளிப்படுத்தல் நிராகரிக்கப்படுதல் தொடர்பாக நிலவும் சிக்கலான நிலையை கருத்தில் கொண்டு, தகவல் அறியும் உரிமை தொடர்பான சட்டத்தின் 23 (3) பிரிவில் காட்டப்பட்டுள்ள ஏற்பாடுகளின் வினைத்திறனான செயலாற்றுகையை உறுதி செய்வதற்காக மேலதிக ஒழுங்குவிதிகள், உத்தரவுகள் மற்றும் ஒருங்கிணைப்புக்கான முறைமைகள் உருவாக்கப்பட வேண்டும்.

பகிரங்க நிறுவனங்களின் அலுவலர்களை பயிற்றுவித்தல் மற்றும் தெளிவூட்டுவதற்காக கட்டாயமாக இந்த சட்டத்தின் 5 ஆவது பிரிவின் கீழ் உள்ள ஏற்பாடுகள் முறைகேடாக பாவிக்கப்படும் பிரபலமான பிரச்சினையை குறைப்பதற்காக 'தகவல் அறியும் உரிமை தொடர்பான சட்டத்தின் 5 ஆவது பிரிவை வினைத்திறனாக பாவித்தல்' தொடர்பாக விரிவான பயிற்சி மொடியூல் உள்ளடக்கப்பட வேண்டும்.

மேலும், தகவல் அறியும் உரிமை தொடர்பான சட்டத்தின் ஏற்பாடுகள் காரணமாக முன்னோக்கிய தகவல் வெளியிடுதல் கூட தாமதமான முன்னேற்றத்தை காட்டுவதனால் முன்னோக்கிய வெளிப்படுத்தல் கோட்பாடு தொடர்பான 20 ஆம் இலக்க ஒழுங்குவிதி விரிவாக அமுல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அதே வேளை தகவல் அறியும் உரிமை தொடர்பான சட்டத்தின் 8 ஆவது பிரிவின் மூலம் எதிர்பார்க்கப்படும் குறிக்கோளை அடைவதற்கான செயற்பாட்டு திட்டத்தை அமுல்படுத்துவதற்காக தகவல் அறியும் உரிமை ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படும் பலமான மற்றும் நடைமுறைச் சாத்தியமான கொள்கைச் சட்டகம் தயாரிக்கப்படுதல் மிகவும் முக்கியமானதாகும்.

| சிக்கலான நிலை ஏற்பட்டுள்ள பிரதான துறைகள்* | தகவல் அறியும் உரிமை சட்டத்தின் தொடர்புடைய ஏற்பாடுகள் |
|---|---|
| அநீதியான காரணிகளின் அடிப்படையில் தகவல் பெறுதலை நிராகரித்தல் தொடர்பான முறைகேடான பாவனை | பிரிவு 5 |
| பொது நிறுவனத்தின் தகவல் அலுவலர்கள் மற்றும் பெயரிடப்பட்ட அலுவலகர்களை நியமிப்பதில் நிலவும் தாமதம் | பிரிவு 23 (a) and (b) |
| பிரஜைகளின் தகவல் கோரிக்கை கிடைத்தமைக்கான எழுத்துமூல அங்கீகாரம் பொறுப்புக்கு ஏற்புடைய வகையில் செயற்படாமை | பிரிவு 24(3) |
| பிரஜைகளால் கோரப்பட்ட தகவல் கோரிக்கைகளுக்கு பதில்வினையாற்றும் போது பொது நிறுவனத்தின் தேவையற்ற தாமதம் | பிரிவு 25(1) |
| சிறுபான்மை சமூகத்தை பிரதிநிதித்துவம் செய்யும் பிரஜைகள் விரும்பும் மொழியில் தகவல்களை பெறுவதற்கான உரிமை தொடர்பில் அரசகரும மொழிக் கொள்கையை அமுல்படுத்துதலில் நிலவும் வெற்றிடங்களின் தாக்கம் | பிரிவு 24(5)(b) |
| முன்னோக்கிய வெளிப்படுத்தலின் கோட்பாடுகளுக்கு அமைவாக இருப்பதற்கு சாதகமான கொள்கை ரீதியான செயற்திட்டம் இல்லாதிருத்தல் | பிரிவு 14(e) |
| தகவல் அறியும் சட்டத்தின் கீழ் விதிக்கப்பட்டுள்ள கடமை நிறைவேற்றல் கருமத்துக்காக ஏனைய அலுவலகர்களின் ஒத்துழைப்பைப் பெறும் போது தகவல் அலுவலகர்கள் மற்றும் பெயரிடப்பட்ட அலுவலகர்கள் முகங்கொடுக்கும் சவால்கள் | பிரிவு 23(3) |

1. இது தகவல் அறியும் உரிமை தொடர்பான சட்டத்தை அமுல்படுத்துதல் தொடர்பாக நிலவும் பிரச்சினைகள் தொடர்பான முழுமைப்படுத்தப்படாத பட்டியலாகும். அது முழுமையான பட்டியல் அல்ல என்பதனை கருத்தில் கொள்ள வேண்டும்.

| | |
|---|---|
| தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் விடயப் பரப்பில் அனைத்த சந்தர்ப்பங்களிலும் இலத்திரனியல் ஆவணங்கள் மூலம் நிகழ்நிலையில் தகவல்களை அணுகுவதற்கான வசதிகளை வழங்க அர்ப்பணிப்புடன் செயற்படாமை | பிரிவு 7(5)<br>பிரிவு 8(4)(a)<br>பிரிவு 24(6)<br>பிரிவு 27(3)(d) |
| தகவல் அறியும் உரிமைச் சட்டம் தொடர்பான ஆணைக்குழுவுக்கு மேன்முறையீடு செய்யும் பிரஜைகளுக்கு உள்ள உரிமையை மழுங்கடிக்காமல், தகவல் அலுவலகர்களுக்கு தகவல் அறியும் உரிமை ஆணைக்குழுவின் ஆலோசனைகளை பெறுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்படாமல் சட்டத்தின் 5 ஆவது பிரிவை பாவித்து ஆரம்ப சந்தர்ப்பத்திலேயே தகவல் வழங்குதலை நிராகரித்தல். | பிரிவு 5(5) |
| தகவல் அறியும் உரிமை தொடர்பான சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு முரணாக செயற்படும் பகிரங்க நிறுவனங்களின் அலுவலகர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படாமை. | பிரிவு 39(4) |

ஓட்டுமொத்தமாக பார்க்கும் போது, தகவல் அறியும் உரிமை தொடர்பான சட்டத்தை வினைத்திறனாக அமுல்படுத்துதல் மற்றும் அதன் மூலம் ஊழலுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதும், வகைகூறல் மற்றும் நல்லாட்சியை மேம்படுத்தவதற்கு வினைத்திறனாக பங்களிப்பு செய்வதன் மூலம் இலங்கை பிரஜைகள் பொது மக்களின் வாழ்க்கையுடன் மிகவும் முழுமையாக பங்குபற்றக்கூடிய சமூகத்தை உருவாக்குவதற்காக இணைந்து செயற்படும் போது, கொள்கை வகுப்பாளர்கள், அரச அலுவலகர்கள் மற்றும் இலங்கை பிரஜைகளின் 'மனப்பாங்கு ரீதியான' மாற்றம் விவாதத்துக்கு அப்பாற்பட்ட வகையில் தேவையானதாகும்.

**முறைமைப்படுத்தப்படாத தேர்தல் பிரச்சார நிதிப் பாவனை, இலஞ்சம், தேர்தல் சட்டங்கள் மீறப்படுதல் மற்றும் தேர்தல் பிரச்சார செலவை முறைமைப்படுத்தல் தொடர்பான தெளிவான சட்டம் வகுக்கப்படுதலின் தேவைப்பாடு.**

## அரசியல் யாப்பு ரீதியான பின்னணி

தற்போது இலங்கையில் அரசியல் கட்சிகள் அல்லது தேர்தல்களில் போட்டியிடும் வேட்பாளர்கள் தேர்தல் பிரச்சார செயற்பாடுகளுக்காக பாவிக்கும் நிதி தொடர்பாக தெளிவான, சட்ட ரீதியான கட்டமைப்பு அல்லது முறைமைப்படுத்தல் பொறிமுறை அமுலில் இல்லை. இருந்த போதிலும், தேசிய, மாகாண மற்றும் உள்ளூராட்சி நிறுவன மட்டத்தில் நடைபெறும் தேர்தல்கள் உள்ளடங்கும் ஒட்டுமொத்த சட்ட ரீதியான வரையறைகளுக்கு[1] அமைய, தேர்தல்கள் தொடர்பான செயற்பாடுகளில் ஈடுபடும் போது அரசியல் கட்சிகள் மற்றும் வேட்பாளர்கள் செயற்பட வேண்டிய முறை தொடர்பாக ஒவ்வொரு தேர்தல் சட்டங்கள் மற்றும் ஏனைய[2] சட்டங்கள் மூலம் பல்வேறு நியமங்கள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. இத் தேர்தல்கள் தொடர்பான சட்டங்களை ஆராய்ந்து பார்க்கும் போது உள்ளூராட்சி மன்ற தேர்தல் கட்டளைச் சட்ட ஏற்பாடுகளுக்கு அமைவாக, ஏனைய விடயங்களில் உபசரணை செய்தல், முறைகேடான அழுத்தம் அல்லது இலஞ்சம் வழங்குதல் ஆகிய தவறுகளை இழைக்கும் அனைத்து நபர்கள் மற்றும் அவ்வாறான ஏதாவது ஊழல் செயற்பாடு தொடர்பில் தவறாளியாக்கப்படும் அனைத்து நபர்களும் பொருத்தமான சட்ட விசாரணையின் பின்னர் தவறாளி ஆக்கப்படுவதன் அடிப்படையில் எந்தவொரு தேர்தலின் போதும் வாக்காளராக பதிவு செய்யப்படுதல் அல்லது வாக்களித்தல் அல்லது உள்ளூராட்சி மன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட முடியாத வகையில் சிவில் தகைமை இழப்புக்கு உள்ளாவதுடன், அந்த நாளில் அவர் உள்ளூராட்சி மன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டிருந்தால், அவரது பதவி அவ்வாறு தவறாளியாக்கப்பட்ட நாளில் இருந்து வறிதாக்கப்பட வேண்டும் என[3] சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. 2021 செப்ரெம்பர் 13 ஆம் திகதி மொனராகல மேல் நீதிமன்ற நீதிபதியால் வழங்கப்பட்ட விசேட முக்கியத்துவம் மிக்க தீர்ப்புடன், இந்த சட்ட ரீதியான ஏற்பாடு அண்மைக் காலத்தில் பிரயோகிக்கப்படுதலை காணும் வாய்ப்பு கிடைத்தது.[4]

---

1 1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பாராளுமன்ற தேர்தல் சட்டம், https://www.lawnet.gov.lk/parliament-elections/ ; 1981 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க ஜனாதிபதித் தேர்தல் சட்டம், https://elections.gov.lk/web/wp-content/uploads/ ; 1988 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க மாகாண சபைத் தேர்தல்கள் சட்டம், https://www.ifes.org/sites/default/files/el00109.pdf ; 1987 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க மக்கள் தீர்ப்பு சட்டம், https://elections.gov.lk/web/up/-content/uploads/publication/acts/07-1981_E.pdf ; 1946 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் கட்டளைச் சட்டம், http://www.mediareform.lk/web/up-content/uploads/2020/03/153-Local-Authorities-Elections-Ordinance_No.53-of-1946.pdf

2 1975 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் வெளிப்படுத்தல் சட்டம்

3 1946 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க உளளூராட்சி மன்றத் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 82உ பிரிவு

4 டப்ளியூ.எம். சுனில் சாந்த வனசிங்க என்பவரால் தாக்கல் செய்யப்பட்ட 01/2018 தேர்தல் மனு. https://economynext.com/sri-lanka-ruling-party-local-govt-member-disqualified-in-landmark-verdict-86134/

மொனராகல பிரதேசச் சபையின் மதுருகெட்டியவ வட்டாரத்தில் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி வேட்பாளராக போட்டியிட்ட டி.எம். தரங்க ஹர்ஷக பிரிய பிரசாத் திஸாநாயக்க உள்ளூராட்சி தேர்தல் கட்டளைச் சட்டத்தின் 82 ஆவது பிரிவின் கீழ் காட்டப்பட்டுள்ள ஏற்பாடுகளை மீறி தேர்தல் காலத்தில் வாக்காளர்களுக்கு இலஞ்சமாக பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்கி செயற்பட்டுள்ளதாகவும், அதற்கமைய அப் பிரதேச சபையின் உறுப்பினராக எதிராளி தெரிவு செய்யப்பட்டமை வறிதாக்கப்பட வேண்டும் எனக் கோரி தாக்கல் செய்யப்பட்டிருந்த மனுவின் தீர்ப்பாக அமைந்தது.

சட்ட ரீதியாக சவாலுக்கு உட்படாத போதிலும், தேர்தல் பிரச்சார செயற்பாடுகளின் போது பணபலத்தை பாவித்து வாக்காளர்களை கவனித்தல், முறைகேடான அழுத்தம் கொடுத்தல் மற்றும் இலஞ்சம் வழங்குதல் போன்ற செயற்பாடுகள் பல தசாப்தங்களாக இலங்கை தேர்தல் பிரச்சார கலாச்சாரத்தில் அடங்கியுள்ளன. இது தொடர்பாக போதுமானளவு சான்றுகள் தேர்தல் இடம்பெறும் வேளைகளில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. இருந்த போதிலும், அவ்வாறான செற்பாடுகளுக்கு எதிராக சட்ட ரீதியாக செயற்படும் பாங்கு இருக்காமை தேர்தல்களில் போட்டியிடும் பெரும்பாலான வேட்பாளர்கள் தாம் போட்டியிடும் தேர்தல்களின் நேர்மைத்தன்மைக்கு பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தும் அதே வேளை, தேர்தல் பிரச்சார செயற்பாடுகளின் அடிப்படை தேவைப்பாடான தேர்தல் பிரச்சாரத்தை முன்னெடுப்பதற்கான சமமான தளம் இல்லாமல் செய்யப்படுவதன் மூலம் ஏற்படும் பாதகமான அழுத்தங்களுக்கு எதிரான சட்ட ரீதியான ஏற்பாடுகள் அற்ற சூழமைவில் எல்லையற்ற, கண்காணிக்க முடியாத அளவான நிதியை பாவிப்பதற்கு வழி அமைத்துள்ளது.

இதற்கு மேலதிகமாக சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் வெளிப்படுத்தல் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய, உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள்[5] மற்றும் ஜனாதிபதித் தேர்தல், பாராளுமன்ற தேர்தல், மாகாண சபைத் தேர்தல் மற்றும் உள்ளூராட்சி மன்ற தேர்தல் கட்டளைச் சட்டம் போன்ற தேர்தல் சட்டங்களின்[6] கீழ் நடைபெறும் தேர்தல்களில் தேர்தலுக்கான வேட்புமனுவை தாக்கல் செய்த வேட்பாளர்கள் தமது சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் வெளிப்படுத்தல் சமர்ப்பிக்கப்பட வேண்டும் எனும் சட்ட ரீதியான தேவைப்பாடு உறுதி செய்யப்பட்டுள்ளது. பல தசாப்தங்களாக இந்த சட்டம் வினைத்திறனாக அமுல்படுத்தப்படவில்லை எனும் விடயத்தை குறிப்பிட வேண்டும் என்ற போதிலும், வேட்பாளர்கள் தமது தேர்தல் பிரச்சார செயற்பாடுகளுக்காக செலவு செய்த விபரங்கள் அடங்கிய அறிக்கையை சமர்ப்பிப்பதற்கான கட்டாயப்படுத்தப்பட்ட சட்ட ஏற்பாடு செய்யப்படாமை காரணமாக தேர்தல்களின் போது வரையறையற்ற வகையில் நிதியை செலவிடுவதற்கான பாரிய வாய்ப்பு காணப்படுகிறது.

நீண்ட கால சிவில் சமூக அழுத்தம் காரணமாக தேர்தல் சட்டங்கள் மற்றும் தேர்தல் முறையின் பொருத்தமான மறுசீரமைப்பு அடையாளம் காணப்பட்டு, தேவையான திருத்தங்களை விதந்துரை செய்வதற்கான பாராளுமன்ற தெரிவுக் குழு[7] அமைச்சர் தினேஸ் குணவர்த்தன அவர்களது தலைமையில் அண்மைக் காலத்தில் நியமிக்கப்பட்டது. பிரதானமாக தேர்தல் பிரச்சாரத்துக்கான நிதியை முறைமைப்படுத்துவதற்காக

---

5 1975 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் வெளிப்படுத்தல் சட்டத்தின் 2(ஈ) பிரிவு

6 2(ஈஇ) பிரிவு, மேற்படி சட்டம்.

7 https://www.parliament.lk/news-en/view/2158

சட்ட ஏற்பாடுகளை செய்வதற்கான தேவைப்பாடுகள் தொடர்பான முன்மொழிவுகள், பல்வேறு சிவில் அமைப்புகள் மற்றும் தேர்தல் கண்காணிப்பு குழுக்களால் அந்த பாராளுமன்றத்துக்குச் சமர்ப்பிக்கப்பட்டன.

## அடிப்படைப் பிரச்சினைகள்

தேர்தல் பிரச்சார செயற்பாடுகளின் போது எல்லையற்ற மற்றும் கண்காணிக்கப்படாத நிதி பாவனையின் பாதகமான தாக்கம் பல்வேறு தன்மையில் வெளிப்படுகிறது. அது பிரதானமாக தேர்தல்களின் போது இருக்க வேண்டிய நேர்மைக்கு ஏற்படும் பாதகமான விளைவுகளை எற்படுத்துவதுடன், மிகவும் பெரும்பான்மையான வேட்பாளர்கள் தேர்தலில் போட்டியிடும் போது அவர்களுக்கான சம தளம் இருப்பதனை உறுதி செய்வதற்கான வாய்ப்பை அது ஒருபோதும் உருவாக்காது. மேலும், இலங்கையில் சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தல், தேர்தலின் நேர்மைத் தன்மை மற்றும் ஜனநாயக பெறுமானங்களை போசிப்பதற்காக அரசியல் நிதி அல்லது தேர்தல் பிரச்சார நிதியை முறைமைப்படுத்துவதற்காக தேர்தல் பிரச்சார நிதியை முறைமைப்படுத்தும் சட்டம் அல்லது அமுல்படுத்தக்கூடிய முறைமைப்படுத்தல் பொறிமுறை இன்மை பாரதூரமான பிரச்சினையாகும்.

மிகவும் பெருமளவு நிதியை பெறும் வசதி எந்த கட்சி அல்லது வேட்பாளருக்கு உள்ளது என்பதன்றி, ஒவ்வொரு அரசியல் கட்சி அல்லது தேர்தல் வேட்பாளர்களால் எவ்வளவு நிதி தேர்தல் பிரச்சாரத்துக்காக பாவிக்கப்பட்டுள்ளது மற்றும் அது எந்த நோக்கத்துக்காக செலவிடப்பட்டுள்ளது என்பதனை வாக்காளர் தெரிந்து கொள்வதற்கான வாய்ப்பு மற்றும் உரிமை இல்லாதிருத்தல் முறைமைப்படுத்தப்படாத தேர்தல் பிரச்சார நிதி தொடர்பான பிரச்சினையாகும். மறுபுறமாக தேர்தல் பிரச்சார நிதி தொடர்பில் முறைமைப்படுத்தல் அற்ற சூழமைவில், தேர்தல் மூலம் தெரிவு செய்யப்பட்ட பின்னர், அந்த மக்கள் பிரதிநிதிகள் தமது தேர்தல் பிரச்சாரத்துக்காக ஒத்துழைப்பு வழங்கிய அனுசரணையாளர்களுக்கு மீண்டும் அனுசரணை வழங்க நடவடிக்கை எடுப்பதன் மூலம் பொது சமூகத்தில் ஊழல் மேலும் நிறுவனமயப்படுத்தல் இடம்பெறலாம். வேட்பாளர் அல்லது கட்சி எவ்வளவு நிதியை பெறலாம் எனும் விடயம் அவர்களது பிரபலத்தை அடிப்படையாகக் கொண்டதாக இருக்கும் என்பதுடன், நிதி வெளிப்படைத் தன்மையின்மை உள்ளடங்கிய மற்றும் உண்மையான பிரதிநிதித்துவத்துடனான ஜனநாயகத்தின் ஒட்டுமொத்த பெறுமானமும் தாக்கத்துக்கு உள்ளாகலாம். தேர்தலில் போட்டியிடுதலை தைரியம் இழக்கச் செய்தல் அல்லது அதன் வெற்றியை தீர்மானிப்பதற்கு தேர்தல்களில் பாவிக்கப்படும் நிதிக்கு இடமளிக்கலாகாது என்பதனை அதன்போது குறிப்பிட வேண்டும்.

இதற்கு மேலதிகமாக, உபசரணை செய்தல், முறைகேடான அழுத்தம் கொடுத்தல் மற்றும் இலஞ்சம் வழங்குதல் போன்ற விடயங்கள் தொடர்பாக நம்பகமான தகவல்கள் பொது சமூகத்தில் இல்லாதிருத்தல் தேர்தல் பிரச்சார செயற்பாடுகளின் போது எல்லையற்ற நிதி வளத்தை பாவித்தல் தொடர்பாக தீர்மானித்தல் மற்றும் அவ்வாறான விடயத்துக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யும் போது இருக்கும் ஒரு முக்கியமான விடயமாகும். இருந்த போதிலும், மொனராகல மேல் நீதிமன்றத்தினால் அண்மையில் தீர்ப்பு வழங்கப்பட்ட மேற்குறித்த வழக்கு இடம்பெற்ற வேளையில் அது தொடர்பாக தேவையான சாட்சிகளை பெறுவதற்கான தகவல்களை பெறும் போது அடிப்படை உரிமைகள் மற்றும் தகவல் அறியும் உரிமை தொடர்பான சட்டத்தின் கீழ் இருந்த சாதகமான பின்னணி முக்கியமான சாதகமாக இருந்தது என்பதுடன், அதன் மூலம் அந்த வழக்கை நிரூபிப்பதற்காக

“இலஞ்சம்” தொடர்பாக தேவையான நம்பிக்கையான மற்றும் உறுதி செய்யக்கூடிய மிகவும் முக்கியமான சாட்சிகளை சேகரிப்பதற்கான இயலுமை மனுதார் தரப்புக்கு கிடைத்தது.[8]

எல்லையற்ற மற்றும் முறைமைப்படுத்தப்படாத தேர்தல் பிரச்சார செலவுகள் தொடர்பான பிரச்சினை பிரஜைகள் தேர்தலில் தமது வாக்கை பாவித்தல் தொடர்பாக தெளிவான தீர்மானத்தை எடுப்பதற்கான இயலுமை மற்றும் சுதந்திரத்துக்கு பாதகமாக தாக்கம் செலுத்தும் பிரச்சினையாக மாறியுள்ளது. எல்லையற்ற மற்றும் முறைமைப்படுத்தப்படாத தேர்தல் பிரச்சார நிதி தொடர்பான பிரச்சினை நேரடியாக அல்லது மறைமுகமான ஊழலுடன் தொடர்புபடும் அனைத்து செயற்பாடுகளுக்கும், அதன் மூலம் ஒட்டுமொத்த தேர்தல் முறைக்கு முறைகேடான தாக்கத்தை ஏற்படுத்தும் அளவுக்கு சட்ட விரோத கறுப்புப் பண பாவனைக்கும் வாய்ப்பு வழங்குகிறது.

எல்லையற்ற மற்றும் முறைமைப்படுத்தப்படாத தேர்தல் பிரச்சார நிதியிடலின் பாதகமான தாக்கம், கொள்கை வகுப்பின் போதும், அமுல்படுத்தும் போதும் பக்கச்சார்பான முறையில் பாதகமான விளைவுகளை கொண்டு வரும், அதாவது, பல்வேறு நிறுவன கட்டமைப்புகளில் தீர்மானம் எடுக்கும் பதவிகளுக்கு நியமிக்கப்படும் போதும், பொது அபிவிருத்தி மற்றும் ஏனைய செயற்பாடுகளுக்கு உரிய ஒப்பந்தங்கள் மற்றும் டென்டர்கள் வழங்கப்படும் போதும், வரி விலக்கு தொடர்பான தீர்மானங்களை மேற்கொள்ளும் போதும் தேர்தல் பிரச்சார செயற்பாடுகளுக்கு நிதி மற்றும் ஏனைய அனுசரணை வழங்குபவர்களுக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக விசாரணை செயற்பாடுகளின் போதும், அவ்வாறான ஏனைய நிலமைகளில் அவ்வாறு தேர்தல் பிரச்சாரத்துக்காக எல்லையற்ற பணத்தை செலவிடும் குழுக்கள் அல்லது வேட்பாளர்கள் தொடர்பில் விசேஷட அக்கறை மற்றும் சட்ட ரீதியான செயற்பாடுகளின் போது சட்டத்தின் ஆட்சியை மழுங்கடித்தல் மற்றும் நீதிமன்றத்தின் சுயாதீனத்துக்கும் பாதிப்பு ஏற்படுத்தி, அரசியல் தலையீடு மேற்கொள்ளும் ஆபத்து ஏற்படலாம்.

பரிசு, பணம், உணவு, மதுசாரம், தொழில் வாய்ப்பு தொடர்பான எதிர்பார்ப்புகள் மற்றும் அவ்வாறான ஊக்குவிப்புகளை வழங்கி பிரச்சார காலத்தில் நேரடியாக அல்லது மறைமுகமாக வாக்காளர்களை கொள்வனவு செய்தல் அல்லது அவர்களது சுயாதீன தீர்மானங்களில் அழுத்தம் கொடுப்பதற்காக இவ்வாறு சட்ட விரோத மூலங்களில் இருந்து உழைத்த பணத்தை தேர்தல் பிரச்சார செயற்பாடுகளுக்காக பாவிப்பதன் மூலம் இடம்பெறலாம்.

## உத்தேச மறுசீரமைப்பு

தேர்தல் பிரச்சார நிதி தொடர்பான முறைமைப்படுத்தல் தொடர்பாக புதிய சட்டத்தை வகுத்தல் அல்லது தற்போதுள்ள தேர்தல் சட்டங்களில் அந்த விடயங்களை உள்ளடக்கும் வகையிலான பலமான திருத்தத்தை கொண்டு வருதல்[9] சுதந்திரமான, நியாயமான மற்றும் நம்பகமான தேர்தல் சமமான போட்டித் தளத்தில் நடைபெறுதலை உறுதி செய்வதற்கான

8 பார்வையிடவும், டப்ளியூ.எம். சுனில் சாந்த வனசிங்க என்பவரால் தாக்கல் செய்யப்பட்ட 01/2018 தேர்தல் மனு

9 அவ்வாறானதொரு சட்டத்தின் விடயப்பரப்பினூடாக அரசியல் நிதியாக்கல் செயற்பாடும் ஒழுங்குபடுத்தப்படுதல் உள்ளடக்கப்பட வேண்டும்.

அத்தியாவசியமான பிரதான மறுசீரமைப்பாகும். பாராளுமன்ற தெரிவுக் குழுவினால் தேர்தல் சட்டங்கள் மற்றும் தேர்தல் முறையில் மறுசீரமைப்பு செய்தல் தொடர்பான தனது விதந்துரையை சமர்ப்பிக்கும் போது இலங்கை தேர்தல்கள் ஆணைக்குழுவினால் 2018 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட தேர்தல் செலவு முறைமைப்படுத்தல் சட்ட வரைபில் உள்ளடங்கியுள்ள ஏற்பாடுகளை தேர்தல் பிரச்சார நிதியிடல் அல்லது தேர்தல் செலவு முறைமைப்படுத்தல் தொடர்பான விதந்துரைகளை தயாரிப்பதற்கான அடிப்படையாக பாவிக்க வேண்டும்.

அவ்வாறான சட்டரீதியான கட்டமைப்பின் ஊடாக, அரசியல் கட்சிகளின் வருமானம் மற்றும் செலவு அறிக்கையிடலின் வெளிப்படைத் தன்மை மற்றும் வகைகூறல் தொடர்பான ஏற்பாடுகள் உள்ளடங்க வேண்டும். மேலும், தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கு அவர்களது ஆதரவாளர்களால் நிதி சேகரிக்கப்படும் நிலமைகள், அரசியல் கட்சிகளால் தேர்தல் நிதி தொடர்பான கணக்குகளை வெளியிடுதல், வேட்பாளர்கள் மற்றும் தெரிவு செய்யப்படும் மக்கள் பிரதிநிதிகளின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை பிரகடனப்படுத்துதல் மற்றும் தேர்தல் பிரச்சார செயற்பாடுகளுக்காக நிதி மற்றும் ஏனைய பங்களிப்புகளின் வரையறைகள் அல்லது தடை செய்தல் மற்றும் அவ்வாறான அனுசரணைகள் அல்லது பங்களிப்புகளின் மூலங்களுடன் நிதி அல்லது ஏனைய பங்களிப்புகளை வெளிப்படுத்தும் பொறுப்பை ஒப்படைத்தல் போன்ற விடயங்கள் தொடர்பான சட்டபூர்வ ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட வேண்டும். அவ்வாறான எந்தவொரு சட்டபூர்வமான மற்றும் கொள்கை ரீதியான கட்டமைப்புகள் அல்லது முறைமைப்படுத்தல் பொறிமுறை இருப்பின், அவை இலங்கையின் ஒட்டுமொத்த தேர்தல் மறுசீரமைப்பு செயன்முறையில் உள்ளடக்க வேண்டிய கட்டாயமான விடயமாக இடம்பெற வேண்டும்.

தேர்தல் பிரச்சார செயற்பாடுகளுக்காக வெளிநாட்டு மூலங்களிலிருந்து அனுப்பப்படும் நிதி தொடர்பான நிலமை மற்றும் சட்ட விரோத முறைகள் ஊடாக சேகரிக்கப்படும் நிதி வளங்களின் பாவனை மற்றும் நிதி தூய்மையாக்கல் தொடர்பான பிரச்சினைகளை தீர்ப்பதற்கு இலங்கை மத்திய வங்கி ஊடாக நிதி ஒழுங்குவிதிகள் அறிமுகம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.


இதன் போது, தேர்தல் சட்டங்கள் மீறப்படுதல் தொடர்பான முறைப்பாடுகள் கிடைத்த பின்னர் சுயாதீனமாக வழக்கு தாக்கல் செய்யும் அதிகாரம் கொண்ட இலங்கை தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு உரிய நிறுவன ரீதியான செயல் ஒழுங்குவிதிகள் மற்றும் அதிகார விரிவாக்கல் மற்றும் பலப்படுத்தல் முக்கியமானதாகும். உதாரணமாக பார்க்கும் போது அரசியல் கட்சிகள், வேட்பாளர்கள் மற்றும் அவர்களது ஆதரவாளர்களால் தேர்தல் பிரச்சார செயற்பாடுகளுக்காக அரச சொத்துக்களை முறைகேடாக பாவித்தலுக்கு எதிராக தேர்தல்கள் ஆணைக்குழு சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும், தேர்தல் பிரச்சார செயற்பாடுகளுக்காக கிடைத்த நிதி மற்றும் ஏனைய பங்களிப்புகள் மற்றும் அது தொடர்பில் மேற்கொண்ட செலவுகளை வெளியிடுவதற்கான கட்டுப்பாட்டை தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் மீது சுமத்துவதற்கு தேவையான உத்தரவுகள் மற்றும் வழிகாட்டல்களை விதிப்பதற்கு தேர்தல்கள் ஆணைக்குழு தனது அதிகாரத்தை உச்ச அளவில் பாவிக்க வேண்டும்.

சொத்துக்கள், பொறுப்புக்கள் பிரகடனத்தை சமர்ப்பிக்குமாறு வேட்பாளர்கள் மற்றும் அரசியல் கட்சிகளை கட்டாயப்படுத்துதல் மற்றும் அவற்றை பொது மக்கள் பெறக்கூடிய வகையிலான தகவல்களாக மாற்றி 1975 ஆம் ஆண்டின் 1 இலக்க சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் சட்டத்தை திருத்தம் செய்யும் செயற்பாடுகள் துரிதப்படுத்தப்படுத்துவதற்கு

தேர்தல்கள் ஆணைக்குழு கொள்கை வகுப்பாளர்களுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும்.

இருந்த போதிலும், தேர்தல் பிரச்சார நிதியிடல் தொடர்பான சட்ட ரீதியான ஏற்பாடுகளை திட்டமிடுதல், அந்த முறைமைப்படுத்தல் செயற்பாடுகளுக்காக இருக்கும் கட்டுப்பாட்டு பொறிமுறையின் வினைத்திறனை உயர்த்துதல் மற்றும் வாக்காளர்களுக்கு முறைகேடாக அழுத்தம் கொடுத்தல் மற்றும் இலஞ்சம் காரணமாக அவர்கள் தாம் விரும்பும் வேட்பாளர்களுக்கு தமது வாக்கை அளிப்பதற்கான சுதந்திரத்துக்கு அழுத்தம் கொடுப்பதற்கு எதிராக போராடுதல் அத்தியாவசியமான ஜனநாயக தேர்தல் கலாச்சாரத்தை நிறுவுவதற்கான முக்கிய விடயம் என்பதனால் தேர்தல்கள் தொடர்பான இலஞ்சம் மற்றும் ஏனைய தவறுகளுக்கு எதிராக செயற்படுவதற்காக ஒட்டுமொத்த அரசியல் யாப்பு மற்றும் கொள்கை மறுசீரமைப்பு செயன்முறை இன்றியமையாததாகும்.

- முறைமைப்படுத்தல் பொறிமுறை ஊடாக சட்டத்தை வினைத்திறனாக அமுல்படுத்துதல்.
- அரசியல் கட்சிகள் உள்ளக ரீதியில் பொருத்தமான வகையிலான நிதி செயற்பாடுகளை நிர்வகித்தல் மற்றும் மேற்பார்வை.
- வெளித் தரப்பினரின் மேற்பார்வை மற்றும் வெளிப்படுத்தல் (தகவல் அறியும் சட்டத்தை வினைத்திறனாக பாவித்தல் அடங்கலாக)



## சிறுவர் பாதுகாப்புக்காக தற்போதுள்ள சட்ட ரீதியான ஏற்பாடுகள் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையால் உயர்ந்த பட்சமாக பாவிக்கப்படாமை.

### அரசியல் யாப்பு ரீதியான பின்னணி

சிறுவர் துஷ்பிரயோகங்களைத் தடுத்தல்[10] மற்றும் அவ்வாறான துஸ்பிரயோகங்களுக்கு இரையாகும் சிறுவர்களைப் பாதுகாத்தல் மற்றும் சிகிச்சை வழங்குதல் தொடர்பான கொள்கை மற்றும் சட்டங்கள் தொடர்பாக அரசுக்கு ஆலோசனை வழங்குதல் மற்றும் அவற்றுக்கு எதிரான நடவடிக்கைகளை ஒருங்கிணைப்பு செய்தல் மற்றும் மேற்பார்வை செய்வதற்காக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை[11] நிறுவப்பட்டது. தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைக்கு உரிய கருமங்கள், பணிகளின் விரிவான பரப்பின்[12] மூலம், அனைத்து வகையிலுமான சிறுவர் துஸ்பிரயோகங்களுடன் தொடர்புடைய சட்டங்களின் அமுல்படுத்தப்படும் பாங்கு மற்றும் அவற்றின் முன்னேற்றம் தொடர்பாக கண்காணிக்கும் கருமமும் உள்ளடக்கப்படுவதுடன், அது தொடர்பாக அந்த அதிகாரசபை பல நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான இயலுமை உள்ளது. அதற்கு மேலதிகமாக, அனைத்து வகையிலுமான துஸ்பிரயோகங்களிலிருந்து சிறுவர்கள் பாதுகாக்கப்படுவதனை உறுதி செய்தல் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் பணியாகும். அதன் மூலம் இலங்கையின் சிறுவர் உரிமைகள் தொடர்பில் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் பணிப்பொறுப்பு மற்றும் பொறுப்பு எவ்வளவு முக்கியத்துவம் மிக்கது என்பது தெளிவாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தகவல் அறியும் உரிமை அரசியல் யாப்பின் அடிப்படை உரிமைகள் அத்தியாயத்தின் ஒரு பகுதியாக அங்கீகரிக்கப்படுவதற்கு முன்னரே, பிள்ளைகளின் பாதுகாப்பு மற்றும் பிள்ளைகளின் தேவைப்பாடுகளை பாதுகாத்தல் தொடர்பில் பொது மக்களுக்கு தகவல்களை வழங்குதல் மற்றும் கல்வியை வழங்குதல் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் பணிப்பொறுப்பின் உள்ளடக்கமாக இருந்தது.[13]

தேசிய சிறுவர் பாதுகாப்பு கொள்கையின் வழிகாட்டல் கோட்பாடுகள் மற்றும் பெறுமானங்களின்[14] ஒரு பகுதியாக ‘சிறுவரின் அந்தரங்கம் மற்றும் ஊடகம்’ தொடர்பாக விபரிக்கப்படுகிறது. தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் சட்டத்தை அமுல்படுத்தும் பணிப்பொறுப்புக்கு அமைய தடுத்தல் மற்றும் பதில்வினையாற்றல் பொறிமுறை தொடர்பான பொருத்தமான தலையீடு மேற்கொள்ளும் பணிப்பொறுப்பை கொண்ட தனியான சட்ட

---

10 1998 ஆம் ஆண்டின் 50 ஆம் இலக்க தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைச் சட்டம், https://www.childprotection.gov.lk/images/pdfs/acts-guidlines/National%20Protection%20Act,%20No.%2050%20of%201998.pdf

11 39 ஆவது பிரிவு, மேற்படி சட்டம்.

12 14 ஆவது பிரிவு, மேற்படி சட்டம். தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் கடமைகள் பணிகள் https://www.childprotection.gov.lk/about-us/about-ncpa

13 4(ங) ஆவது பிரிவு, மேற்படி சட்டம்.

14 சிறுவர் பாதுகாப்பு தொடர்பான தேசியக் கொள்கை, ஒக்டோபர் 2109, https://www.childprotection.gov.lk/images/pdfs/acts-guidlines/2020.12.31%20National%Policy%20on%20Child%20Protection.pdf

அலகு[15] நிறுவப்பட்டுள்ள ஏனைய விடயங்களில் 'சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான குற்றங்கள், சட்டங்கள், செயல் ஒழுங்குவிதிகளை கண்காணித்தல்' மற்றும் 'சிறுவர்கள் தொடர்பான ஊடக அறிக்கையிடலின் சட்டபூர்வத் தன்மையை கண்காணித்தல்' தொடர்பான நடவடிக்கை எடுத்தல் அவற்றில் பிரதான பொறுப்பாகும்.

இலங்கையில் தண்டனைச் சட்டக் கோவையில்[16] உள்ள சட்ட ரீதியான சட்டகத்தின் வரையறைகளுக்கு ஏற்ற வகையில் இருக்காத பிரதான ஊடகங்கள் மற்றும் சமூக ஊடகங்கள் ஆகிய இரண்டிலும் இடம்பெறும் பொறுப்பற்ற அறிக்கையிடல் சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்கள் தொடர்பான பாரதூரமான பிரச்சினையாக உள்ளது. தண்டனைச் சட்டக் கோவையின் 365 இ பிரிவுக்கு அமைய, தண்டனைச் சட்டக் கோவையின் 'சில தவறுகள் தொடர்பான விடயங்களை வெளியிடுதல்' எனும் தலைப்பின் கீழ்,

(1) பிரிவு 345[17] அல்லது பிரிவு 360 (அ)[18] அல்லது பிரிவு 360 (ஆ)[19] அல்லது பிரிவு 363 அல்லது பிரிவு 364 (அ) அல்லது பிரிவு 365 அல்லது பிரிவு 365 (அ) அல்லது 365 (ஆ) பிரிவின் கீழ் யாராவதொரு நபருக்கு எதிராக தவறு இழைக்கப்பட்டிருப்பதாக சொல்லப்படுவதும், அல்லது தவறு இடம்பெற்றுள்ளதாக ஆராய்ந்து தெரிந்து கொண்டதும் (இதன் பின்னர் 'இரையான நபர்' என இந்த பிரிவில் குறிப்பிடப்படும்) அந்த நபரின் பெயர் அல்லது அந்த நபரின் அடையாளத்தை வெளிப்படுத்தும் அனைத்து விடயங்களும் அச்சிட்ட அல்லது வெளியிட்ட யாராவது நபருக்கு இரண்டு ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய காலத்துக்கு இரு வகைகளில் ஒரு வகையான சிறையில் அடைத்தல் மற்றும் அபராதம் ஆகிய இரண்டு தண்டனைகளாலும் தண்டிக்கப்பட வேண்டும்.

(2) இரையான நபரின் பெயர் அல்லது அந்த நபரின் அடையாளம் வெளிப்படும் ஏதாவது விடயத்தை அச்சிடுதல் அல்லது வெளியிடுதல்.

(அ) அந்த தவறு தொடர்பாக விசாரணை மேற்கொள்ளும் பொலீஸ் நிலைய பொறுப்பு அலுவலரால் அல்லது அவரது உத்தரவுக்கு அமைய அல்லது நல்லெண்ணத்துடன் செயற்பட்டு அந்த விசாரணை கருமத்துக்காக செய்யப்பட்டிருந்தால், அல்லது

(ஆ) இரையான நபரால் அல்லது அந்த நபரின் எழுத்துமூல அனுமதி பெற்று செய்யப்பட்டிருந்தால், அல்லது

(இ) இரையான நபர் மரணமடைந்துள்ள சந்தர்ப்பத்தில், அந்த நபரின் நெருங்கிய உறவினரால் அல்லது அந்த நபர் இள வயதுடையவர் அல்லது சித்த சுவாதீமற்ற நபராக இருக்கும் போது அந்த நபரின் பெற்றோரில் ஒருவர் அல்லது பாதுகாவலரால் வழங்கப்பட்ட எழுத்துமூல அனுமதி பெறப்பட்டிருந்தால்,

---

15 தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் சட்டப் பிரிவு, https://www.childprotection.gov.lk/what-we-do/legal-service

16 1995 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க தண்டனைச் சட்ட கோவையின் (திருத்தச்) சட்டத்தின் 365இ பிரிவு.

17 பாலியல் துன்புறுத்தல்.

18 *பாலியல் வியாபாரம்.*

19 சிறுவர்களை தவறான பாலியல் நடவடிக்கைகளுக்கு பயன்படுத்ததல்.

அவ்வாறான அச்சிடல் அல்லது வெளியிடுதலுக்கு (1) ஆவது உப பிரிவில் உள்ளடங்கும் எதனுடனும் பொருத்தமற்றதாகும்.

இருந்த போதிலும், அரசினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட நலன்புரி நிறுவனம் அல்லது அமைப்பு ஏதாவது வகையில் விபரிக்கப்படும் அதன் தவிசாளர், செயலாளர் அல்லது முகாமையாளர் அல்லாத வேறு யாராவது நபருக்கு, அந்த நெருங்கிய உறவினரால் அந்த அனுமதி வழங்கப்படலாகாது.

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை சட்டத்தின் 37 (4) பிரிவின்[20] மூலம் ''சபையின் அனைத்து அலுவலர்களும் அல்லது அதிகாரசபையினால் எழுத்துமூலம் அதிகாரம் வழங்கப்பட்ட அலுவலர் அல்லது ஊழியர் 1979 ஆண்டின் 15 இலக்க குற்றவியல் வழக்கு நடபடிக் கோவை சட்டத்தின் 136 ஆவது பிரிவின் பொருள்கோடலில், சிறுவர்கள் தொடர்பான சட்டங்களின் கீழ் இடம்பெறும் தவறுகள் தொடர்பில் வழக்கு தாக்கல் செய்யும் குறிக்கோளுடன், அரச அலுவலர் என கருதப்பட வேண்டும்.''

1988 ஆம் ஆண்டில் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை நிறுவப்பட்ட பின்னர் நீண்ட மௌனத்தின் பின்னர் 2019 ஆண்டில் சிறுவர் பாதுகாப்பு தொடர்பான தேசிய கொள்கையை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், அதன் ''வழிகாட்டல் கோட்பாடுகள் மற்றும் பெறுமானங்கள்'' எனும் தலைப்பின் கீழ் விபரிக்கப்பட்டுள்ள 9 ஆவது கோட்பாட்டில் இவ்வாறு குறிப்பிடப்படுகிறது.

''**9. சிறுவர்களின் அந்தரங்கம் மற்றும் ஊடகங்கள் :** சேவை வழங்கும் போது அல்லது மக்களுக்கு தகவல் வழங்கும் போது விஷேடமான சிறுவரின், சிறுவர் குழுவின் அந்தரங்கம் மற்றும் இரகசியத் தன்மை அனைத்து சந்தர்ப்பங்களிலும் உறுதி செய்யப்பட வேண்டும். தனியாக இடம்பெறும் சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்களை பொதுசன ஊடகங்கள் மூலம் அறிக்கையிடுதல் மற்றும் பிரச்சாரம் அரசினால் வினைத்திறனாக தைரியம் இழக்கச் செய்யப்படும். ஆரம்ப கண்காணிப்பில் வெளிப்படுத்தப்படும் சான்றுகளுக்கு அமைய, அதனை அறிக்கையிடுதல் மூலம் சிறுவருக்கு மிகவும் பயனுள்ள வாய்ப்பு ஏற்படும் எனின், சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பாக ஊடகங்கள் அறிக்கையிடலாம். (உதாரணமாக காணாமல் போன சிறுவரை கண்டுபிடித்தல்.) துஸ்பிரயோகத்துக்கு உள்ளான, துஸ்பிரயோகம் காரணமாக உயிரிழந்த அல்லது அவ்வாறான அச்சுறுத்தலுக்கு உள்ளாகும் சாத்தியம் உள்ள சிறுவர்கள் தொடர்பாக அவர்களது அடையாளம் வெளியிடப்படும் வகையில் அல்லது தொடர்ந்தும் அச்சுறுத்தல் தீவிரமாகும் வகையில் அறிக்கையிடுதல் எந்தவொரு நிலமையிலும் மேற்கொள்ளப்படலாகாது. அத்துடன் அனைத்து இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்கள் மற்றும் சமூக ஊடகங்கள் உள்ளிட்ட புதிய ஊடகங்களால் சிறுவர்கள் தொடர்பான விளம்பரங்கள், நிகழ்ச்சிகள் மற்றும் அனைத்து வகையிலுமான ஏனைய ஊடக ஆக்கங்களில் எந்தவொரு முறையிலும் சிறுவர்கள் அனைத்து வகையிலுமான துஸ்ப்பிரயோகங்கள், சுரண்டல், ஊறு, பாதிப்பு அல்லது கருத்தில் கொள்ளப்படாமை, சிறுவர்களின் ஆளுமைக்கு பாதிப்பு போன்றவை ஏற்படுத்தப்படலாகாது. சிறுவரின் ஆகக்கூடிய நலன், அபிவிருத்தி மற்றும் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் இலங்கை கலாச்சாரம் மற்றும் அடையாளத்துக்கு ஏற்புடைய முறையில் தொழில்நுட்ப மற்றும் ஊடக பாவனையை தரப்படுத்தல் தொடர்பான அனைத்து தரப்பினராலும் பார்த்துக் கொள்ளுதல் மற்றும் தலையீடு செய்தல் தொடர்பாக கவனம் செலுத்தப்பட வேண்டும். சிறுவர் மற்றும் ஊடகங்கள் தொடர்பான புதிய ஒழுக்கநெறி உருவாக்கப்பட வேண்டும்.

---

20 1998 ஆம் ஆண்டின் 50 ஆம் இலக்க தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைச் சட்டத்தின் 37 ஆவது பிரிவு. https://www.childprotection.gov.lk/images/pdfs/acts-guidlines/National%20Child%20Protection%20Act,%20No.%2050%20of%201998..pdf

## அடிப்படை பிரச்சினைகள்

சிறுவர் துஷ்பிரயோகங்களுக்கு உள்ளாகும் சிறுவர்களின் பாதுகாப்புக்காகவும், ஊடகங்கள் ஊடாக தேவையற்ற வகையில் சமூகத்துக்கு வெளிப்படுத்தப்படுதலை தவிர்ப்பதற்காக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை மூலம் விசேடமாக மேலே குறிப்பிடப்பட்ட அரசியல் யாப்பு ரீதியான பின்னணியில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளைப் பாவிக்காமை, கருத்தில் கொள்ளப்படாமை அல்லது அது தொடர்பாக குறைவான கவனம் செலுத்தப்பட வேண்டிய விடயமாகும். சிறுவர் துஸ்பிரயோகங்கள் தொடர்பில் குறைவாக கவனம் செலுத்துதல் தொடர்பாக கவனம் செலுத்தப்பட வேண்டும். சிறுவர் துஸ்பிரயோகங்களுக்கு இரையானோரின் அடையாளங்களை வெளிப்படுத்தும் முடிவில்லா ஊடக அறிக்கையிடல் சிறுவர் துஷ்பிரயோகத்தை தடுத்தல் மற்றும் அவ்வாறான துஸ்பிரயோகங்களுக்கு இரையாகும் பிள்ளைகளின் பாதுகாப்பு மற்றும் கவனமெடுத்தல் தொடர்பில் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் உதாசீன போக்கை மீண்டும் குறிப்பிடப்படுகிறது.

1988 ஆண்டின் 50 இலக்க சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை சட்டத்தின் 14 (ஈ) பிரிவு மூலம் செய்யப்பட்டுள்ள ஏற்பாடுகள் மூலம் அரச மற்றும் தனியார் துறையின் நிறுவனங்களுக்கு ஆலோசனை வழங்குவதற்கான வாய்ப்புள்ள போதிலும், அது தொடர்பில் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையினால் சிறுவர் துஸ்பிரயோகம் மற்றும் அவ்வாறான துஸ்பிரயோகங்களுக்கு இரையானோரின் தேவைகளை பாதுகாத்தல் மற்றும் பாதுகாப்புக்காக முன்கூட்டிய நடவடிக்கை எடுத்தல் பல ஆண்டுகளாக பிரச்சினையின் பாரதூரத்தன்மைக்கு ஏற்ற வகையில் இடம்பெறாமை தொடர்பில் கேள்வி எழுகிறது. சிறுவர் துஷ்பிரயோகங்களுக்கு இரையானோரின் அடையாளம் வெளியிடப்படுதலைத் தடுத்தல் மற்றும் அவர்களது தேவைப்பாடுகளை பாதுகாப்பதற்கு தேவையான ஒழுங்குவிதிகளை தயாரித்தல் மற்றும் நிரல் அமைச்சு மற்றும் தொடர்புடைய அரச மற்றும் தனியார் துறை ஊடக நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் செயற்படுவதற்கு தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் உரித்தளிக்கப்பட்டுள்ள கருமங்கள் பணிகள் மூலம் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

2019 ஆண்டில் சிறுவர் பாதுகாப்பு தொடர்பான தேசிய கொள்கை தயாரிக்கப்பட்டு 15 மாதங்கள் கடந்துள்ள போதிலும், சிறுவர் துஷ்பிரயோகத்துக்கு இரையானோர் ஊடகங்கள் மூலம் வெளிப்படுத்தப்படுவதனை தடுப்பதற்காக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையினால் முன்னெடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் தற்போதுள்ள சட்ட ரீதியான சட்டகத்தில் அல்லது மேலே குறிப்பிடப்பட்ட கொள்கைகளில் காட்டப்படும் ஏற்பாடுகள் அல்லது வழிகாட்டல்களை யதார்த்தமாக்கும் அளவுக்கு போதுமான அல்லது சாதகமாக இருக்காமை விரைவாக கவனம் செலுத்தப்பட வேண்டிய பிரச்சினையாகும்.

## உத்தேச மறுசீரமைப்பு

1988 ஆண்டின் 50 இலக்க சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை சட்டத்தின் ஏற்பாடுகள் ‘அதிகார சபையின்’[21] மற்றும் ‘சபையின்’[22] உறுப்பினர்களால் தகுந்த அர்ப்பணிப்புடன் செயற்படுதல் உறுதி செய்யப்பட வேண்டும்.

21 1998 ஆம் ஆண்டின் 50 ஆம் இலக்க தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைச் சட்டம்.

22 16 ஆவது பிரிவு, மேற்படி சட்டம்.

மருத்துவம், சட்டம், சட்டத்தை அமுல்படுத்துதல், சிறுவர் நலன்கள் ஆகிய துறைகளை பிரதிநிதித்துவம் செய்யும் நிபுணர்கள் மற்றும் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் ஏனைய எந்தவொரு உறுப்பினருடனும் இணைந்து, சிறுவர் துஷ்பிரயோகங்களுக்கு இரையானோரின் அடையாளங்கள் உள்ளிட்ட தேவைப்பாடுகளை பாதுகாப்பதற்காக 1995 ஆண்டின் 22 இலக்க தண்டனைச் சட்டக் கோவையின் (திருத்த) சட்டத்தின் 365 (இ) பிரிவு ஏற்பாடுகளை வினைத்திறனாக அமுல்படுத்துவதனை உறுதி செய்ய வேண்டும்.

சிறுவர் பாதுகாப்பு தொடர்பான தேசிய கொள்கையில் விரிவாக முன்வைக்கப்பட்டுள்ள கொள்கைச் சட்டகத்தை வினைத்திறனாகவும், பயனுள்ள வகையிலும் பாவிக்கக்கூடிய செயற்பாட்டுத் திட்டம் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையினால் திட்டமிடப்பட வேண்டும். அந்த கொள்கையை அமுல்படுத்தும் போது தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் செயலாற்றுகையை மீளாய்வு செய்தல் மற்றும் மதிப்பீடு செய்வதற்காக பலமான மேற்பார்வை மற்றும் மதிப்பீட்டு பொறிமுறை நிறுவப்பட்டு செயற்படுத்தப்பட வேண்டும்.

சிறுவர் பாதுகாப்பு தொடர்பான தேசிய சிறுவர் பாதுகாப்பு தொடர்பான தேசிய கொள்கையின் 'வழிகாட்டல் கோட்பாடுகள் மற்றும் பெறுமானங்கள்' எனும் பகுதியின் கீழ் 'சிறுவரின் அந்தரங்கம் மற்றும் ஊடகம்' தொடர்பாக மேற்கொள்ள எதிர்பார்க்கும் பொறுப்புகள், துஷ்பிரயோகத்துக்கு இரையானோர் தொடர்பாக தகவல்களை தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையால் வெளியிடுவதற்கான பொருத்தமான முறைமைப்படுத்தல் வழிகாட்டல்கள் உடனடியாக தயாரிக்கப்பட வேண்டும். அதற்கமைய, தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையால் அந்த கருமங்களுக்கு உரிய நிரல் அமைச்சுக்கு தேவையான கொள்கை ஆலோசனைகள் வழங்கப்பட வேண்டும் என்பதுடன், தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை சட்டத்தின் 38 ஆவது பிரிவுக்கு அமைய அவ்வாறான வழிகாட்டல்களை நடைமுறையில் அமுல்படுத்தக்கூடிய ஒழுங்குவிதிகளாக மாற்றம் செய்தலை உறுதிப்படுத்த வேண்டும்.

கடந்த இரண்டு தசாப்தங்களில் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை தனது நிறுவன ரீதியான செயலாற்றுகை மற்றும் செயற்பாடுகளை மதிப்பீடு செய்ய வேண்டும் என்பதுடன், அதன் மூலம் கற்றுக்கொண்ட பாடங்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்பதுடன், தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை சட்டத்தில் காட்டப்பட்டுள்ள கருமங்களை வினைத்திறனாக நிறைவேற்றுவதனை உறுதி செய்வதற்காக தமது கடந்தகால அனுபவங்கள் பாவிக்கப்பட வேண்டும்.

## 1975 ஆண்டின் 50 இலக்க சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை வெளிப்படுத்தும் சட்டத்தின் யதார்த்தமடையாத குறிக்கோள்

### சட்டவாக்கப் பின்னணி

'முன்னோக்கிய வெளிப்படுத்தல் கோட்பாடு' நிலமை வெறுமனே அரிதான அனுபவமாக உள்ள சந்தர்ப்பத்தில் வினைத்திறனாக அமுல்படுத்தப்பட்டால் பிரதானமாக அரச அலுவலர்கள் மற்றும் மக்கள் பிரதிநிதிகளால் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் வெளியிடப்படுதல் ஊடாக அசாதாரணமாக செல்வந்தராதல், ஊழல் மற்றும் அரச சொத்துக்களின் முறைகேடான பாவனை, அதிகார துஸ்பிரயோகத்தில் ஈடுபடுதல் போன்றவையும் அடங்கலாக வகைகூறல் தொடர்பாக எழுந்துள்ளபல பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான மிகவும் சிறந்த அத்தியாயமாகும். இலங்கையிலும், அதற்கு வெளியேயும் சில தெளிவான வகுதிகளைச் சேர்ந்த நபர்களின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் சட்டபூர்வத் தன்மை மற்றும் உழைத்த நிதி மூலங்களுடன் தொடர்புடைய விடயங்கள் தொடர்பான பிரச்சினைகளை தீர்ப்பதற்காக 1975 ஆண்டின் 1 இலக்க சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை வெளிப்படுத்தும் சட்டம்[23] இலங்கையில் அமுலில் உள்ளது.

இச் சட்டத்துடன் தொடர்புடைய பல்வேறு தரங்களுக்கு உரிய நபர்கள் தொடர்பான விபரங்கள் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் சட்டத்தின் 2 ஆவது பிரிவில்[24] விதிக்கப்பட்டுள்ளது. சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் சட்டத்தின்[25] கீழ் வெளிப்படுத்தல் செய்ய வேண்டியோர் தொடர்பான ஏற்பாடுகள் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் சட்டத்தின் 4 ஆவது பிரிவில் காட்டப்பட்டுள்ளது.

> 3 (1) பிரிவு "இச் சட்டம் பொருத்தமாகும் அனைத்து நபர்களும் தமது நியமனம் கிடைத்த திகதியில் இருந்து மூன்று மாத காலத்தினுள் சட்டத்தினால் விதிக்கப்பட்டுள்ள வகையில், அதன் பின்னர் இச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வகையில் 'சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள்' எனும் வெளிப்படுத்தல் மூலம், (அ) அவரது சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், (ஆ) அவரது வாழ்க்கைத்துணையின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் மற்றும் (இ) அவரது ஒவ்வொரு பிள்ளைகளினதும் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் பாராளுமன்ற முன்மொழிவின் மூலம் உத்தரவிடப்படக்கூடிய திகதியில் இருந்து சமர்ப்பிக்க வேண்டும்."

### அடிப்படைப் பிரச்சினைகள்

சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் சட்டத்தில் உள்ள ஏற்பாடுகள் கூட சம காலத்திலும், கடந்த காலத்திலும் தகுந்த வகையில் அமுல்படுத்தப்படாமை பிரதானமான சிக்கலான பிரச்சினையாகும்.

---

23 1975 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் வெளிப்படுத்தல் சட்டம்

24 2 ஆவது பிரிவு, மேற்படி சட்டம்.

25 4 ஆவது பிரிவு, மேற்படி சட்டம்.

இலங்கையில் தகவல் அறியும் உரிமை அடிப்படை உரிமையாக இருந்த போதிலும், சட்டத்தில் தெளிவாக காட்டப்பட்டுள்ள நபர்களின் சொத்துக்கள், பொறுப்புக்கள்[26] தொடர்பான தகவல்கள் வெளிப்படுதல் பெற்று எதிர்பார்ப்பாக மாறியுள்ளது. சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் வெளிப்படுத்தல் சட்டத்தில் உள்ள ஏற்பாடுகள் ஊடாக யாராவது ஒருவர் அந்த சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நபரின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான தகவல்களை பெறுவதற்கான வாய்ப்புக் கிடைத்த போதிலும், அந்த தகவல்கள் அந்த சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வரையறைகள் காரணமாக மூன்றாம் தரப்புக்கு வழங்கப்பட முடியாத வகையிலான வரையறை காணப்படுதலே அதற்குக் காரணமாகும்.

இச் சட்டத்தின் ஏற்பாடுகளை மீறும் வகையில் செயற்படுவதன் மூலம் மேற்கொள்ளப்படும் தவறுகளுக்கு எதிராக உள்ள தண்டனைகள் தொடர்பாக உள்ள நிலமையை ஆராய்ந்து பார்க்கும் போது, தற்போதுள்ள சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் சட்டத்தின் ஏற்பாடுகள் நாட்டின் தற்போதைய சமூக – பொருளாதார மற்றும் அரசியல் சூழமைவுக்கு பொருத்தமற்ற அளவுக்கு காலாவதியான தன்மையில் இருப்பதனைக் காணலாம். சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் சட்டத்தின் 9 ஆவது பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைய, இச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு முரணாக செயற்படும் நபர் நீதிவான் முன்னிலையில் நடத்தப்படும் வழக்கு விசாரணையின் பின்னர் தவறாளியாக்கப்பட்ட பின்னர், ஓர் ஆண்டுக்கு கூடாத காலத்துக்கு இரண்டு வகையில் ஒரு வகையிலான சிறைத் தண்டனை வழங்குதல் அல்லது ஆயிரம் ரூபாவுக்கு மேற்படாத அபராதம் அல்லது சிறைத் தண்டனை மற்றும் அபராதம் ஆகிய இரண்டு தண்டனைகளுக்கும் உள்ளாகலாம் என குறிப்பிடப்பட்டுள்ளது. 'முன்நோக்கிய வெளிப்படுத்தல் கோட்பாட்டுக்கு'' மதிப்பளித்து சில[27] பாராளுமன்ற உறுப்பினர்கள் தமது சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை வெளிப்படுத்தி சாதகமாக செயற்பட்டுள்ள போதிலும், மிகப் பெரும்பாலானோர் அவ்வாறு செய்யாமை காரணமாக பொதுச் சமூகத்தில் அவ்வாறான தகவல்களை பெறுவதற்கான வாய்ப்பு வாக்காளர்களுக்கு கிடைக்காது.

மேலும், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் சட்டத்தில் உள்ள சட்ட ரீதியான சில ஏற்பாடுகள் மூலம் அடிப்படையில் மேலே சொல்லப்பட்ட சட்டத்தின் கீழ் தவறு இழைக்கும் நபருக்கு எதிராக சட்ட மா அதிபர் நடவடிக்கை எடுக்க முன்னர்[28] இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டுக்களை விசாரணை செய்யும் ஆணைக்குழுவுக்கு அவ்வாறான தவறு தொடர்பாக சட்டத்தை அமுல்படுத்துதலுக்குத் தேவையான நடவடிக்கை எடுத்தல் தடுக்கப்படுகிறது.

## மறுசீரமைப்பு அவசியம்

சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் வெளிப்படுத்தல் சட்டத்தில் உள்ள சட்ட ரீதியான ஏற்பாடுகளுக்கு அமைய குறித்த வெளிப்படுத்தலை சமர்ப்பிக்கத் தவறுதல் தொடர்பான தண்டப்பணம் ரூ. 1,000/- ஆகும் என்பதனால் அது தொடர்பாக கருத்தில் எடுக்காமல்

26 மேற்படி சட்டம்.

27 1975 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் வெளிப்படுத்தல் சட்டத்தின் 9(5) ஆவது பிரிவு

28 1994 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க இலஞ்சம் அல்லது ஊழல் குற்றங்களை விசாரிப்பதற்கான ஆணைக்குழுச் சட்டம்.

சட்டத்தை உதாசீனப்படுத்துவதன் விளைவாக சட்டத்தைக் கவனத்தில் கொள்ளாதிருத்தல் இலகுவானது என கருதும் அளவுக்கு மாறியிருத்தல் மற்றும் இச் சட்ட ஏற்பாடுகளில் உள்ள காலாவதியான தன்மைக்கு விரைவாக தீர்வு காண வேண்டும். இதன் மூலம் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் சட்டத்தின் குறிக்கோள் முழுமையாக வலுவிழக்கச் செய்யப்படுவதனால் அவ்வாறான காலாவதியான ஏற்பாடுகள் உண்மையிலேயே திருத்தம் செய்யப்பட வேண்டும் என்பதே அதற்குக் காரணமாகும். சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் வெளிப்படுத்தல் தொடர்பாக ஏதாவது திருத்தம் அல்லது புதிய சட்டங்கள் வகுக்கப்படுவதன் மூலம் தவறு இழைப்போருக்கு கடுமையான தண்டனைகளை விதிக்க வேண்டும் என்பதுடன், கொள்கை மற்றும் பாவனையில் முறைமைப்படுத்தலை உருவாக்குவதற்காக அவ்வாறான சட்டங்கள் வினைத்திறனாக பாவிக்கப்படுதல் உறுதி செய்யப்பட வேண்டும்.

ஊழல் இடம்பெற்றதாக சொல்லப்படும் குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக பல்வேறு அரச அலுவலர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் விமர்சனங்கள் தொடர்பாக ஆராய்ந்து பார்க்கும் போது, ''இச் சட்டத்துடன் தொடர்புடைய நபர்'' எனக் குறிப்பிடப்படும் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை வெளிப்படுத்தல் சட்டத்தின் 2 ஆவது பிரிவின் விடயப் பரப்பு, விஷேடமாக ராஜதந்திர சேவை அலுவலர்கள், அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள், ஆணைக்குமுக்களின் ஆணையாளர்கள், ஜனாதிபதி மற்றும் பொது மக்களின் வரிப் பணத்திலிருந்து சம்பளம் பெறும் ஏனைய நபர்களும் அடங்கும் வகையில் விரிவுபடுத்தப்பட வேண்டும்.

சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை வெளிப்படுத்தல் சட்டத்தின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான தகவல்களை பெறக்கூடிய வாய்ப்புள்ள நபர்கள் கூட அத் தகவல் வெளிப்படுத்தப்படுதலை தடுக்கும் ஏற்பாடுகளை வலுவிழக்கச் செய்வதற்கான திருத்தங்கள் கொண்டு வரப்பட வேண்டும். மேலும், தற்போதுள்ள சட்டத்துக்கு அமைய, தமது பொறுப்பிலுள்ள அல்லது தமக்கு கிடைத்த தகவல்களை வெளியிடும் தண்டனை வழங்குவதற்கான இயலுமை உள்ளது.[29] அதற்கமைய, சட்டத் திருத்தங்கள் அல்லது எந்தவொரு புதிய சட்டங்களை உருவாக்குவதன் ஊடாக பிரஜைகளின் தகவல் அறிவதற்கான அடிப்படை உரிமையை மேலும் பலப்படுத்தும் ஏற்பாடுகள் அடங்கியிருக்க வேண்டும் என்பதுடன், அத் தகவல்கள் பொதுச் சமூகத்தில் பாவிப்பதற்கான இயலுமை அவர்களுக்குக் கிடைக்கும் வகையில் தேவையான சட்ட ரீதியான மற்றும் கொள்கை ரீதியான மறுசீரமைப்பு மேற்கொள்ளப்பட வேண்டும்.

மேலும், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை வெளிப்படுத்தல் சட்டத்தில் உள்ள ஏற்பாடுகளுக்கு அமைய ஆரம்பத்தில் மேலே குறிப்பிடப்பட்ட சட்டத்தின் கீழ் தவறிழைக்கும் நபருக்கு எதிராக சட்ட மா அதிபர், சட்ட ரீதியாக நடவடிக்கை எடுப்பதற்காக உள்ள வரையறை காரணமாக இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டுக்களை விசாரணை செய்யும் ஆணைக்குழுவுக்கு அவ்வாறான தவறு தொடர்பான சட்டத்தை அமுல்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தலை தடுக்கும் ஏற்பாடுகளில் திருத்தம் செய்யப்பட வேண்டும்.

---

29 1975 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் வெளிப்படுத்தல் சட்டத்தின் 7(5) ஆவது பிரிவு.

## இலங்கையில் கழிவு முகாமைத்துவம் தொடர்பான தேசிய கொள்கை மற்றும் அது தொடர்பான உள்ளூராட்சி நிறுவனத்தின் சட்டங்கள் வினைத்திறனாக அமுல்படுத்தப்படாமை.

### சட்டவாக்கப் பின்னணி

கழிவு முகாமைத்துவம் தொடர்பாக இலங்கையில் உள்ள நிலமை தற்போது மிகவும் முக்கியமான பிரச்சினையாகும். வினைத்திறனாகவும், முறையாகவும் கழிவு முகாமைத்துவம் செய்யும் முறைமை மற்றும் அதனுடன் தொடர்புடைய அவற்றுக்கு மட்டும் உரியதான தனித்துவமான சட்ட ரீதியான மற்றும் கொள்கை ரீதியான கட்டமைப்புக்களின் தகுந்த செயற்பாடுகள் இன்மை காரணமாக இலங்கையிலுள்ள மனிதர்களின் வாழ்க்கை மற்றும் வாழ்வாதாரம் அழிவடைந்துள்ளது.[30] நூறு ஆண்டுகளுக்கு முன்னர் கூட கழிவு முகாமைத்துவம் தொடர்பான வினைத்திறனாக கவனம் செலுத்தப்படாமை காரணமாக ஏற்படக்கூடிய விளைவுகள் தொடர்பாக அதனை சட்டத்தின் மூலம் கையாளப்படும் நிலை இருந்துள்ளது. அதன்படி 1862 ஆண்டின் 15 இலக்க பொதுமக்கள் தொந்தரவு தொடர்பான கட்டளைச் சட்டம் (பின்னர் திருத்தம் செய்யப்பட்ட வகையில்) அறிமுகம் செய்யப்படுதல் மற்றும் அமுல்படுத்துதல் தொடக்கம் இலங்கையின் கழிவு முகாமைத்துவம் தொடர்பான செயற்பாடுகள் தொடர்பான சில சட்டங்கள் தொடர்புடையவையாகும்.

அதற்கமைய, கழிவு முகாமைத்துவம் தொடர்பான இந்த நாட்டின் சட்ட ரீதியான மற்றும் கொள்கை ரீதியான சட்டகம் தொடர்பாக பார்க்கும் போது, தேசிய மற்றும் உள்ளூ ராட்சி நிறுவனங்களில் அவ்வாறான கொள்கைகளை அமுல்படுத்துவதற்கு தேவையான கொள்கைச் சட்டகத்தை தயாரித்தல் மற்றும் பொது சொத்துக்களை பாவித்தல் தொடர்பான அதிகாரம் உள்ள நிறுவனங்களுக்கு[31] கருமங்கள் பணிகள் மற்றும் அதிகாரங்களை சுட்டிக்காட்டும் சில சட்டங்கள் மற்றும் பல ஒழுங்குவிதிகள் உள்ளன.[32] திண்மக் கழிவு முகாமைத்துவத்தின் பொறுப்பு முக்கியமாக உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு உரித்தளிக்கப்பட்டுள்ளன.

கழிவு முகாமைத்துவத்துக்கு உரிய ஏற்பாடுகளை உள்ளடக்கிய பிரதான சட்டங்களில் முதன்மையாக அடங்கியிருப்பது :

- 1962 ஆண்டின் 15 இலக்க பொதுமக்கள் தொந்தரவு தொடர்பான கட்டளைச் சட்டம்
- 1965 ஆண்டின் 16 இலக்க பொலீஸ் கட்டளைச் சட்டம்

---

30 மீதொட்டமுல்ல கழிவு நிரப்பல் வேலைத்திட்ட தோல்வி தொடர்பிலான புவியியல் தொழிநுட்ப மதிப்பீடு, தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம், 2019 மே. https://www.nbro.gov.lk/images/2016_pdf/final-Report-of-Meethotamulla-to-Megapolis-PDF.pdf

31 நகர சபை, நகர சபை, பிரதேச சபை, மத்திய சுற்றாடல் அதிகார சபை, பொலிஸ் திணைக்களம், நகர அபிவிருத்தி அதிகார சபை, தேசிய திண்மக் கழிவு முகாமைத்துவ நிறுவனம், மேல் மாகாண கழிவு முகாமைத்துவ அதிகார சபை உட்பட ஏனைய உரிய நிறுவனக் கட்டமைப்புகள்.

32 நகர்ப்புற கழிவுகள் தொடர்பில் கூடுதல் கவனத்தை செலுத்தி திண்மக் கழிவு முகாமைத்துவத்திற்கு வசதிகளைப் பெற்றுக் கொடுக்கும் குறிக்கோளுடன் சுற்றாடல் அமைச்சு 2000 ஆம் ஆண்டில் திண்மக் கழிவு முகாமைத்துவம் தொடர்பிலான தேசிய உபாயமார்க்கம் மற்றும் 2007 இல் திண்மக் கழிவு முகாமைத்துவம் பற்றிய தேசியக் கொள்கை தயாரிக்கப்பட்டது.

- 1947 ஆண்டின் 16 இலக்க மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 129, 130 மற்றும் 131 பிரிவுகள்.
- 1939 ஆண்டின் 61 இலக்க நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 118[33], 119[34] மற்றும் 120 பிரிவுகள்.
- 1978 ஆண்டின் 41 இலக்க நகர அபிவிருத்தி சட்டம்.
- 1980 ஆண்டின் 47 இலக்க தேசிய சுற்றாடல் சட்டம்.

தேசிய சுற்றாடல் சட்டத்தின் விபரிப்புக்கு அமைய, 'கழிவுப்பொருள்' என்பது கழிவுப்பொருள் என தீர்மானிக்கப்பட்ட எந்தவொரு பொருள் அல்லது அவ்வாறான பரிமாணங்கள், தேர்தல் வட்டாரங்களில் சுற்றாடலில் விடப்படும், கதிரியக்கத்தை வெளியிடும் அல்லது சுற்றாடலில் படியும் அல்லது சுற்றாடலில் மாற்றத்தை ஏற்படுத்தும் வகையிலான பதார்த்தங்கள், திண்ம, வாயு அல்லது கதிரியக்கத்தை வெளிப்படுத்தும் எந்தவொரு பொருளும் உள்ளடங்கும்.

எனவே, கழிவுப்பொருள் முகாமைத்துவம் தொடர்பான சட்ட ரீதியான மற்றும் கொள்கை ரீதியான சூழமைவில், எந்தவொரு முடிவடையாத பிரச்சினைகள் மற்றும் கழிவுப்பொருள் முகாமைத்துவ சவால்களுக்கு பேண்தகு தீர்வை காண்பதற்காக நெருக்கமான ஒத்துழைப்புடன் செயற்படும் கருமங்களுக்காக செயற்படும் பல நிறுவனங்கள் உள்ளன.

## அடிப்படைப் பிரச்சினைகள்

திண்மக் கழிவு முகாமைத்துவத்துக்கு உரிய சட்டங்கள் மற்றும் கொள்கைகள் தேசிய மற்றும் பிரதேச மட்டத்தில் வினைத்திறனாக அமுல்படுத்தப்படாமை.

திண்மக் கழிவு முகாமைத்தவம் தொடர்பான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குத் தேவையான கருமங்கள் உரித்தளிக்கப்பட்டுள்ள அரச நிறுவனங்களின் சிறந்த ஒருங்கிணைப்புடனான அணுகுமுறை மற்றும் நிலையான மூலோபாயத்தை உள்ளடக்கிய செயற்திட்டம் இல்லாதிருத்தல்.

சட்டம் மற்றும் கொள்கைகளை அமுல்படுத்தும் மூலோபாயங்களில் உள்ள குறைபாடுகள் காரணமாக 2018 ஆண்டளவில் கழிவுப்பொருள் அற்ற இலங்கையை உறுதி செய்வதற்காக

---

33 1939 ஆம் ஆண்டின் 61 ஆம் இலக்க நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 118 ஆவதஜ பிரிவு. ''நியாயமான வகையில் நடைமுறைச் சாத்தியமாக மேற்கொள்ளக்கூடிய நிலைமை வரையில், நகரின் சகல பிரதேசங்களிலும் - (அ) முறையாக கூடடித்துப்பரவாக்குவதற்கு அவசியமான சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுதல் நகர சபையின் பணியாதல் வேண்டும். நடைபாதையாகவுள்ள பாதைகள் உட்பட வீதிகளை துப்பரவு செய்தல் மற்றும் சகல வீதிகளிலும் கழிவுகளை சேகரித்தல் மற்றும் அகற்றுதல்; (ஆ) சகல வீடுகளிலும் கழிவுகளை உரிய காலப்பகுதியில் முறையாக அகற்றி பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்கும், உரிய கால எல்லைக்கள் உரிய காலப்பகுதிகளில் உரிய வகையில் துப்பரவு செய்தல்மற்றும் அகற்றுவதற்கும் ; மற்றும் (இ) சகல வீதிக் கழிவுகள், வீட்டுக் கழிவுகள் மற்றும் மலம் மற்றும் சிறுநீர்க் கழிவுகளை முறையாக அகற்றுவதற்காக

34 119 ஆவது பிரிவு, மேற்படி சட்டத்தின். ''இந்த பந்தியின் ஏற்பாடுகளின் கீழ் எந்தவொரு நகரசபையாலும் சேகரிக்கப்பட்ட அனைத்து வீதிக் கழிவுகள், வீட்டுக் கழிவுகள், மலம் மற்றும் சிறுநீர்க் கழிவுகள் அல்லது வேறு சமமான கழிவுகள் சபையின் சொத்தாதல் வேண்டும் என்பதுடன், அவவ்னைத்தையும் விற்பனை செய்வதற்கோ அல்லது அகற்றுவதற்கோ முழுமையான அதிகாரம் சபைக்கு உண்டு. அதன் மூலமாக கிடைக்கின்ற நிதியை நகர சபைக்கு ஒப்படைத்தல் வேண்டும்.

அமுல்படுத்தப்பட்ட 'பிலிசரு' போன்ற செயற்திட்டங்கள் கூட எதிர்பார்க்கும் பெறுபேறுகளை அடைய முடியாமல் போயுள்ளன. கொள்கை வகுப்பாளர்கள் தொடக்கம் சாதாரண நபர்கள் வரை இந்த பிரச்சினையுடன் தொடர்புடைய அனைத்து தரப்பினரினதும் அர்ப்பணிப்பு இல்லாதிருத்தல் கடந்த கால வரலாற்றில் இடம்பெற்ற தோல்விகளில் குறிப்பிடத்தக்க விடயமாகும்.

இதற்கு மேலதிகமாக, அனைத்து உள்ளூராட்சி நிறுவனங்களால் உரிய தேர்தல் வட்டாரங்களில் மக்களின் வரி மற்றும் ஏனைய அறவீடுகள் மேற்கொள்ளப்படும் கழிவுப்பொருட்களை கழுவுதல் மற்றும் சுத்தப்படுத்தல் தொடர்பாக குறித்த உள்ளூராட்சி

நிறுவனங்களின் கட்டளைகள் அமுல்படுத்தப்படும் போது அவ்வப்போது தோன்றும் பிரச்சினைகளுக்கு தற்காலிக தீர்வுகளை இலக்காகக் கொண்ட செயற்திட்டங்களே அன்றி, நீண்ட கால மூலோபாயத்துடனான செயற்பாட்டுத் திட்டத்தை முன்னெடுக்கும் செயன்முறை இல்லாதிருத்தல்.

மறுபுறமாக, கழிவுப்பொருள் முகாமைத்துவம் தொடர்பான தேசிய கொள்கைகளில் கொள்கை ரீதியான நிலைப்பாடுகள் மற்றும் குறிக்கோளை அடைவதற்காக மாற்றி, நீண்டகால திட்டத்தைத் தயாரித்து அமுல்படுத்தும் பலமான முயற்சியை மேற்கொள்ளாமல், பிரச்சினைகளை மையப்படுத்திய தற்காலிக கருத்திட்டங்களை மையப்படுத்திய முறைகள் பின்பற்றப்படுதலும் கூடுதலாக கருத்தில் கொள்ளப்பட வேண்டிய நிலையாகும்.

மக்கள், கழிவுப்பொருட்களை சேகரிப்போர் மற்றும் ஏனைய தொழிலாளர்கள், உள்ளூராட்சி நிறுவனங்களின் உறுப்பினர்கள், கழிவு முகாமைத்துவத்தில் ஈடுபட்டுள்ள நிறுவனம் சார்ந்த பிரிவுகள் மற்றும் கழிவு முகாமைத்துவம் தொடர்பான கொள்கை வகுப்பாளர்கள் மற்றும் நிர்வாக கட்டமைப்புகள் தொடர்பாக ஏனைய அனைத்து நபர்களினதும் அறிவு மற்றும் புரிதல் இன்மையும் அடிப்படைப் பிரச்சினையாக உள்ளது.

கழிவு முகாமைத்துவ செயற்திட்டங்களை அமுல்படுத்துவதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள பொது மக்களின் நிதி வினைத்திறன் இன்றி பாவிக்கப்படுதல் மற்றும் அதனுடன் தொடர்புடைய அடிப்படைப் பிரச்சினைகள் தொடர்பான நிலமைகளுக்கு தீர்வு காண்பதனை தமது கருமங்களின் அடிப்படை பொறுப்பாகக் கொண்டுள்ள நிறுவனங்களின் வகைபொறுப்புக்கூறல் தன்மை இல்லாதிருத்தல்,

## உத்தேச மறுசீரமைப்பு

பிரதானமாக உள்ளூராட்சி நிறுவனங்கள் மற்றும் ஏனைய தேசிய மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்கள் அடங்கலாக கழிவு முகாமைத்துவம் தொடர்பான அதிகாரம் ஒப்படைக்கப்பட்டுள்ள நிறுவனங்கள், அமுலில் உள்ள சட்ட ஏற்பாடுகள், கொள்கை மற்றும் அவற்றுக்கு ஏற்புடைய ஒழுங்குவிதிகளை வினைத்திறனாக அமுல்படுத்துவதற்கு முறையான மற்றும் வினைத்திறனான செயற்பாட்டுத் திட்டத்தை தயாரித்து அவற்றின் பிரயோகத்தை தொடர்ச்சியாக கண்காணிக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

நாட்டின் அபிவிருத்தி தொடர்பான பேசுபொருளில் கழிவு முகாமைத்துவத்தை பரந்த தேசிய முக்கியத்துவமான பிரச்சினையாக கருதி தொடர்புடைய அனைத்து தரப்பினரினதும் சுற்றாடல் வகை பொறுப்புக் கூறல் மற்றும் சமூக பொறுப்புகள் உறுதி செய்யப்படுவதற்கான பொறுப்புள்ள அனைத்து அதிகாரம் உள்ள நிறுவனங்கள் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

அரசியல் யாப்பில் காட்டப்பட்டுள்ள "அரச கொள்கைகளை நெறிப்படுத்தும் கோட்பாடுகள் மற்றும் அடிப்படை கடமைகள்" எனும் தலைப்பின் கீழ் உரிமைகள் மற்றும் பல்வேறு கொள்கைகளை சுதந்திரமாக அமுல்படுத்துவதும், அனுபவிப்பதும் கடமை மற்றும் கட்டுபாடுகளை நிறைவேற்றுவதும் பிரிந்திருக்க முடியாதவை என குறிப்பிடப்பட்டுள்ள 28 (ஊ) பிரிவு ஏற்பாடுகளுக்கு அமைய 'இயற்கை மற்றும் இயற்கை வளங்களை பாதுகாப்பதற்காக[35] அனைத்து தரப்பினரும் செயற்பட வேண்டும் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அதற்கமைய, தேசிய ரீதியில் முக்கியத்துவம் உள்ள 2019 ஒக்டோபர் 1 திகதியிலிருந்து அமுலாகும் வகையில் கழிவு முகாமைத்துவம் தொடர்பான தேசிய கொள்கை வரை உள்ள கொள்கை ரீதியான நிலையை அமுல்படுத்துதல் மற்றும் அந்த குறிக்கோளை அடைவதற்கு அனைத்து தரப்பினரும் நெருக்கமான ஒத்துழைப்புடன் செயற்படுதல் அத்தியாவசியமானதாகும்.[36]

கழிவு முகாமைத்துவம் தொடர்பாக பிரஜைகள், நிறுவனங்கள், கழிவு முகாமையாளர்கள் மற்றும் சேவை வழங்குனர்கள் மேலிருந்து கீழும், கீழிருந்து மேலும் என்ற வகையிலான வகை பொறுப்புக்கூறல் செயன்முறையை மேம்படுத்துவதற்காக வினைத்திறனாக சட்டத்தை அமுல்படுத்துதல் உறுதி செய்யப்பட வேண்டும்.

இலங்கையின் கழிவு முகாமைத்துவ கட்டமைப்பின் அடைவு மற்றும் வகைபொறுப்புக் கூறலுடனான மாற்றங்களும் அடங்கலாக தற்போதுள்ள சட்டங்கள் மற்றும் கொள்கைகளை அமுல்படுத்துதல் தொடர்பாக காலத்துக்கேற்ற வகையில் மதிப்பீடு செய்யப்படுதலை உறுதி செய்வதற்காக மனித மற்றும் பௌதீக வளங்களுடன் தேவையான கருமங்கள் மற்றும் அதிகாரங்களுடன் நிலையான மற்றும் பலமான மேற்பார்வை, மதிப்பீடு, கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் வகைபொறுப்புக் கூறல் பொறிமுறை நிறுவப்பட வேண்டும்.

பொறுப்பு மிக்க கழிவு முகாமைத்துவத்தின் முக்கியத்துவம் தொடர்பான மக்களின் மனப்பாங்கு சிறிய வயதிலிருந்தே உருவாக்கப்படுகிறது என்பதுடன், பாடசாலை பாடத்திட்டத்தில் அந்த விடயம் உள்ளடக்கப்பட வேண்டும்.

---

35 அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள 'அரச கொள்கையின் வழிகாட்டிக் கோட்பாடுகள் மற்றும் அடிப்படைக் கடமைகள்' கீழ்வரும் 28(ஊ) உறுப்புரை. https://www.parliament.lk/files/pdf/constitution-si.pdf

36 இலங்கை சுற்றாடல் அமைச்சின் கழிவு மகாமைத்துவம் தொடர்பான தேசியக் கொள்கையின் குறிக்கோள்கள் "2030 ஆண்டு வரையில் நிலையான தீர்வுகளைப் பெற்றுக் கொடுக்கும் எதிர்பார்ப்புடன், மத்திய மற்றும் நீண்டகால நிலையான வகையில் பாரதூரமான குறுகியகால சவால்களுக்கு முகம் கொடுக்கும் வகையில் கழிவகளை உள்ளடக்கும் நாட்டில் கழிவு முகாமைத்துவம் தொடர்பில் இணக்கப்பாடுடையதும் விரிவானதுமான ஆலோசனைகளை பெற்றுக் கொடுத்தல்"

**சித்திரவதையை ஒழிப்பதற்குரிய சட்டங்கள் வினைத்திறனாக அமுல்படுத்தப் படாமை, 'சித்திரவதையிலிருந்து விடுபடுவதற்காக' அரசியலமைப்பில் உறுதி செய்யப்பட்டுள்ள அடிப்படை உரிமைகள் மழுங்கடிக்கப்படுதல் மற்றும் அது தொடர்பான சர்வதேச கடப்பாடுகளை உதாசீனப்படுத்துதல்.**

## சட்டவாக்கப் பின்னணி

அனைத்து நபர்களும் சித்திரவதையிலிருந்து விடுபடுவதற்கு உலகளாவிய ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட உரிமைகள் இந்த நாட்டின் உன்னதமான சட்டமான அரசியலமைப்பில் உள்ளடக்கப்பட்டுள்ள ஓர் அங்கமாகும். இலங்கை அரசியலமைப்பின் III ஆவது அத்தியாயத்தின் அடிப்படை உரிமைகளின் கீழ் 'சித்திரவதையிலிருந்து விடுதலை' என குறிப்பிடப்படுகிறது.[37] இந்த உரிமைகள் பிறப்புரிமையாகவே நபர்களின் கௌரவத்துடன் பிணைந்துள்ளது. மேலும், அரசியலமைப்பின் II ஆவது உறுப்புரையில் காட்டப்பட்டுள்ள சித்திரவதைகளிலிருந்து விடுதலை எனப்படும் அடிப்படை உரிமைகளை மீறுதல் தொடர்பான தீர்வுகளைப் பார்க்கும் போது, நிறைவேற்று அல்லது நிர்வாகக் கருமங்கள் மூலம் அந்த உரிமை மீறப்படுதல் அல்லது மீறப்படுவதற்கு அண்மித்த நிலையில் இருத்தல் தொடர்பாக அரசியல் யாப்பின் 17 ஆவது உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 126 ஆவது உறுப்புரை மூலம் காட்டப்பட்டுள்ள வகையில், உயர் நீதிமன்றத்தில் விண்ணப்பிப்பதற்கான உரிமை அனைத்து நபர்களுக்கும் உள்ளது.

இந்த உரிமைகள் தொடர்பான சர்வதேச ரீதியான கடப்பாடுகள்[38] தொடர்பாக இலங்கையின் நிலையை ஆராய்ந்து பார்க்கும் போது, சித்திரவதையிலிருந்து விடுபடுவதனை உறுதி செய்தல் அரசின் பொறுப்பாகும். மேலும், சித்திரவதை மற்றும் ஏனைய குரூரமான மனிதாபிமானமற்ற அல்லது அவமதிக்கும் வகையில் நடத்துதல் அல்லது தண்டனைகளுக்கு எதிரான சமவாயம்.[39] 1994 பெப்ரவரி 2 ஆம் திகதி தொடக்கம் அமுலாகும் வகையில் இலங்கையில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இந்த சமவாயத்தின் 2 (1) பிரிவை அமுல்படுத்தவதற்கு நிர்வாக ரீதியான, நீதிமன்ற ரீதியான அல்லது ஏனைய செயன்முறைகள் ஒவ்வொரு அரசுகளாலும் சித்திரவதைகள் செய்யப்படுதலை தடுப்பதற்கான பொறுப்பு அனைத்து நாடுகளுக்கும் சட்ட ரீதியாக சுமத்தப்பட்டுள்ளது.[40] அந்த சமவாயத்தின் கீழ் இலங்கையின் கடப்பாடுகளை அமுல்படுத்துவதற்கான அரசியலமைப்பு ரீதியான ஏற்பாடுகளை உருவாக்கும் தேவையை கருத்தில் கொண்டு, இலங்கை பாராளுமன்றம் 1994 ஆண்டின் 22 இலக்க சித்திரவதைகள் மற்றும் ஏனைய குரூரமான மனிதாபிமானமற்ற அல்லது அவமதிக்கும் வகையில் நடத்துதல் அல்லது தண்டனைகளுக்கு எதிரான சமவாயம் தொடர்பான சட்டம் நிறைவேற்றப்பட்டது.

---

37 இலங்கை அரசியலமைப்பின் 11 ஆவது உறுப்புரை, https://www.parliament.lk/files/pdf/constitution-si.pdf

38 சிவில் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச சமவாயத்தின் III ஆவது பகுதியின் கீழ் காணப்படும் ஏழாவது உறுப்புரை, https://www.ohchr.org/documents/professionalinterest/ccpr.pdf

39 1984 ஆம் ஆண்டு 10 ஆம் திகதிய 39:.46 ஆம் இலக்க ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் முன்மொழிவினூடாக பங்குதார அரசுகளுக்கு இந்த சமவாயத்தில் கையொப்பமிட்டு பின்பற்றுவதற்கான சந்தர்ப்பம் உள்ளது. https://www.ohchr.org/documents/professionalinterest/pages/cat.aspx

40 1 ஆவது பகுதியின் 2(1) உறுப்புரை, மேற்படி சட்டம்.

சித்திரவதையிலிருந்து விடுபடுவதற்கான உரிமைக்கு புறம்பான செயல்களின் பாரதூரத்தன்மை மேலே சொல்லப்பட்ட சட்டத்தின் 2 (5) பிரிவில் குறிப்பிடப்படுவதுடன், "1979 ஆண்டின் 15 இலக்க குற்றவியல் வழக்கு நடவடிக்கைக் கோவை சட்டத்தின் குறிக்கோள் மற்றும் அர்த்தத்தில் இந்த சட்டத்தின் கீழான தவறு பிடியாணையுடன் கைது செய்யக்கூடிய தவறு மற்றும் பிணை வழங்க முடியாத தவறு என குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், 3 (அ) மற்றும் (ஆ) ஆகிய உப பிரிவுகளில் ";சித்திரவதைக்கு எதிரான சமவாயம் மற்றும் 1994 ஆண்டின் 22 இலக்க சித்திரவதைகள் மற்றும் ஏனைய குரூரமான மனிதாபிமானமற்ற அல்லது அவமதிக்கும் வகையில் நடத்துதல் அல்லது தண்டனைகளுக்கு எதிரான சமவாயம் தொடர்பான சட்டத்தின் கீழ் (அ) போர் இடம்பெறும் போது, போர்நிலை தொடர்பான அச்சுறுத்தல் நிலவும் போது, உள்ளக அரசியல் தளம்பல் அல்லது (ஆ) எந்தவொரு அவசர காலத்திலும் அல்லது பொது நிறுவனம் அல்லது உயர் அலுவலரின் உத்தரவுக்கு அமைய மேற்கொள்ளப்படும் எந்தவொரு செயல் ஊடாகவும் இந்தச் சட்டத்தின் கீழான தவறு இழைக்கப்படும் போது அவ்வாறான தவறுக்கு மேலே சொல்லப்பட்ட எந்தவொரு நிலமையும் எதிராளியின் பதிலாக அமையலாகாது" என குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு என்பது அடிப்படை உரிமைகள் மீறப்பட்டிருத்தல் அல்லது மீறப்படுவதற்கு அண்மித்த நிலையில் இருத்தல் தொடர்பான முறைப்பாடுகளை புலனாய்வு செய்தல் மற்றும விசாரித்தல் தமது கருமமாக கொண்டுள்ள பிறிதொரு நிறுவனமாகும்.[41]

மேலும், இச் சட்டத்தின் 11 (இ) பிரிவின் மூலம் "நீதிமன்ற உத்தரவின் மூலம் அல்லது ஏனைய வகையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள நபர்களின் நலன்களை மேற்பார்வை செய்தல், அவர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ள இடங்களை தொடர்ச்சியாக பரிசீலித்தல் மற்றும் அவர்களது தடுத்து வைக்கும் நிபந்தனைகளை மேம்படுத்துவதற்கு தேவையான பரிந்துரைகளை முன்வைத்தல்" இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன், 1979 ஆண்டின் 48 இலக்க பயங்கரவாத தடுப்பு (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டத்தின் அல்லது பொதுமக்கள் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்டுள்ள ஒழுங்குவிதிகளின் கீழ் கைது செய்யப்படுதல் மற்றும் தடுத்து வைத்தல் தொடர்பாக ஆணைக்குழுவுக்கு அறிவிக்க வேண்டிய பொறுப்பு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுச் சட்டத்தின் 28 ஆவது பிரிவின் மூலம் விபரிக்கப்படுகிறது.[42] அதற்கமைய, அவ்வாறான தகவல்களை பெறுதல் மற்றும் அவை தொடர்பான புலனாய்வுகளை மேற்கொள்வதற்கான ஆணைக்குழுவின் அதிகாரத்தை அமுல்படுத்தும் போது 28 (1) பிரிவின் மூலம் விதிக்கப்பட்டுள்ள கடமைகள் வேண்டுமென்றே மேற்கொள்ளாதிருக்கும் எந்தவொரு நபர் தொடர்பிலும் வரையறைகளை விதிக்கும் ஆற்றல் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு உள்ளது.[43] இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ தரவுகளுக்கு அமைய 2018 ஆண்டில் அந்த ஆணைக்குழுவுக்கு 449 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதுடன்,

---

41 1996 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு சட்டத்தின் 10(ஆ) பிரிவு. https://www.hrcsl.lk/about/hrcsl-act/?lang=si

42 28(1) பிரிவு, மேற்படி சட்டம்.

43 28(2) பிரிவு, மேற்படி சட்டம்.

அவற்றில் 400 முறைப்பாடுகள் சித்திரவதை (உடல் ரீதியான மற்றும் உள ரீதியான) சம்பவங்கள் தொடர்பாகவும், 49 அவமானப்படுத்தல் சம்பவங்களும் பதிவாகி இருப்பதாக தெரியவருகிறது.[44]

சட்டத்தை அமுல்படுத்தும் அலுவலர்கள் சித்திரவதையிலிருந்து விடுபடும் உரிமையை உறுதி செய்வதற்காக பல சட்ட ரீதியான கட்டமைப்புகள் ஊடாக போதுமானளவு சந்தர்ப்பம் வழங்கப்படுதல் இதன் மூலம் மீண்டும் வெளிப்படுகிறது. இந்த சட்டரீதியான ஏற்பாடுகள் மற்றும் மனித உரிமைகள் ஆணைக்குழு போன்ற நிறுவன கட்டமைப்புகள் செயற்பட்ட போதிலும், சித்திரவதைகளுக்கு இரையான பெரும்பாலானோர் நியாயத்தை பெறுவதற்கான நியாயமான அணுகுமுறை இல்லாதிருப்பதன் காரணமாக நிர்க்கதி நிலைக்கு உள்ளாகின்றனர்.

## அடிப்படைப் பிரச்சினைகள்

அமுலில் உள்ள சட்ட வரையறைக்குள் தமது மனக்கவலைகள் தொடர்பான சட்டத்தை அமுல்படுத்தும் கட்டமைப்புக்கு வினைத்திறனாக கொண்டு வருவதற்கான வாய்ப்பு அந்த பாதிக்கபட்டவருக்கு இல்லாதிருத்தல் சித்திரவதைக்கு இரையானோர் முகங்கொடுக்கும் ஒரு முக்கியமான பிரச்சினையாகும். பிரதானமாக அவ்வாறான சம்பவங்கள் கூடுதலாக பொலீஸ், குற்றவியல் மற்றும் பயங்கரவாத செயற்பாடுகளை புலனாய்வு செய்யும் நிறுவனங்கள் போன்ற சட்டத்தை அமுல்படுத்தும் நிறுவனங்களில் இடம்பெறுவதனால், சித்திரவதைக்கு உள்ளானோர் தொடர்பான புலனாய்வு செயற்பாடுகள் மற்றும் நிவாரணம் வழங்கல் செயற்பாடுகள் போதுமானளவு இடம்பெறாமை போன்றவையே அதற்கான காரணமாகும்.

சித்திரவதைகளிலிருந்து விடுபடும் உரிமை மீறப்படுவதற்கு எதிராக செயற்படுவதற்கு பொலீஸ், மருத்துவ அலுவலர்கள், சட்ட மா அதிபர் திணைக்களம் மற்றும் நீதிமன்ற அலுவலர்களின் ஒத்துழைப்புடன் செயற்படுவதற்கு சிறந்த ஒருங்கிணைப்புடனான மூலோபாயம் மற்றும் அதற்கு ஏற்ற வகையிலான செயற்பாட்டுத் திட்டம் இல்லாதிருத்தல் பிறிதொரு சவாலாகும்.

கைது செய்யப்படுதல், விசாரணை செய்தல், தடுத்து வைத்தல், சிகிச்சை வழங்குதல் மற்றும் சிறைப்படுத்துதல் தொடர்பான விடயங்களுடன் தொடர்புபடும் சட்டத்தை அமுல்படுத்தும் நிறுவனங்களின் அலுவலர்கள், மருத்துவ அலுவலர்கள், தொடர்புடைய அரச நிறுவனங்களின் அலுவலர்களுக்கு சித்திரவதைக்கு எதிராகப் போராடும் பல்வேறு தரப்பினரின் சட்ட ரீதியான மற்றும் கொள்கை ரீதியான சட்டகம் மற்றும் கடப்பாடுகள் தொடர்பான பயிற்சிகள் மற்றும் கூருணர்வு இன்மை இந்த பிரச்சினை தீவிரமாவதற்கு தாக்கம் செலுத்தியுள்ளது.

1994 ஆண்டின் 22 இலக்க சித்திரவதைகள் மற்றும் ஏனைய குரூரமான மனிதாபிமானமற்ற அல்லது அவமதிக்கும் வகையில் நடத்துதல் அல்லது தண்டனைகளுக்கு எதிரான சமவாயம் தொடர்பான சட்டத்தின் ஏற்பாடுகள் மற்றும் அரசியலமைப்பின் 11 ஆவது பிரிவில்

---

44 இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைமை அலுவலகத்திற்கு மற்றும் பிரதேச அலுவலகங்களுக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகள் தொடர்பான விபரங்கள். https://www.hrcsl.lk/wp-content/uploads/2020/01/Annual-Report-2019.pdf

காட்டப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளை மீறிய நபர்களுக்கு எதிராக சட்ட மா அதிபர் திணைக்களத்தினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள சட்ட ரீதியான செயற்பாடுகளின் தாமதமான தன்மை காரணமாக பாதிக்கப்பட்டோர் சட்டத்தின் உயர்ந்த பட்ச உதவியை நாடுவதற்கான வாய்ப்பு மேலும் வரையறுக்கப்பட்டுள்ளது.

சித்திரவதைக்கு உள்ளானோருக்காக தேசிய மற்றும் சர்வதேச கடப்பாடுகள், சித்திரவதைகளிலிருந்து விடுபடும் உரிமைகளைப் பாதுகாக்கும் அரசின் பொறுப்பு, சட்ட ரீதியான ஏற்பாடுகள் மற்றும் கொள்கைகள் சித்திரவதைகள் தொடர்பான செயற்பாடுகளுக்கு எதிராக செயற்படுதலை மேம்படுத்துதல் தொடர்பாக நீதிபதிகள் மற்றும் சட்டத்தரணிகளுக்கு பரந்த அறிவை வழங்குவதற்கான நிகழ்ச்சிகள் முறையாகவும், தொடர்ச்சியாகவும் மேற்கொள்ளாமையும் விஷேட கவனம் செலுத்த வேண்டிய துறையாகும்.

சித்திரவதைகளை மேற்கொண்டோரிடமிருந்து இழப்பீடு கோரி சிவில் வழக்கு தாக்கல் செய்வதற்கு சித்திரவதைக்கு உள்ளாகி, உயிர் தப்பிய நபர்களுக்கு போதுமானளவு சட்ட ரீதியான உதவி இல்லாதிருத்தல் தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினைகளில் ஒரு முக்கியமான விடயமாகும். மேலும், சித்திரவதை புரிதல் தொடர்பான பிரச்சினைகளை வினைத்திறனாக தீர்ப்பதற்கு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு சொந்தமான வளங்களின் பற்றாக்குறையும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய விடயமாகும்.

## உத்தேச மறுசீரமைப்பு

சித்திரவதைக்கு உள்ளான நபர்கள் தற்போது அமுலில் உள்ள சட்ட ரீதியான வினையாற்றல் தொடர்பாக விரிவாக மக்களைத் தெளிவூட்டுதல் மற்றும் சித்திரவதை புரிதல் தொடர்பான கருமங்கள் தொடர்பில் எந்தவொரு வகையிலும் பொறுத்துக் கொள்ளாதிருக்கும் கொள்கையை பின்பற்றுதலை மேம்படுத்துதல்.

சித்திரவதை புரிதலுக்கு எதிராக நியாயத்தை வழங்குவதனை தடுப்பதற்கு ஏதுவாகும் வகையில் சித்திரவதைக்கு உள்ளானோர் தொடர்பாக முறைப்பாடு செய்யும் போது சட்டத்தை அமுல்படுத்தும் நிறுவனங்களின் அலுவலர்களின் முறைகேடான அழுத்தங்களுக்கு உள்ளாகவில்லை என்பதனை உறுதி செய்வதற்கு தேவையான கொள்கை ரீதியான மறுசீரமைப்பை அறிமுகம் செய்தல் மற்றும் அவை தொடர்பான சட்டங்களை அமுல்படுத்தும் பிரிவுகள் பொருத்தமான வகையில் தெளிவுபடுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். அதற்கமைய, பிரதானமாக சித்திரவதைக்கு உள்ளானோர் அது தொடர்பாக முறைப்பாடு செய்யும் போது அந்த முறைப்பாடு பொலிஸாரால் பொறுப்பேற்கப்படும் போது அல்லது அவற்றை உரிய வகையில் ஆவணப்படுத்தும் போது இடையூறுகள் ஏற்படுத்தப்படுவதாக முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக ஆராய்ந்து பார்க்கும் போது சுயாதீனமான பொதுமக்கள் முறைப்பாட்டு முறைமை உருவாக்கப்பட்டு, அமுல்படுத்தப்பட வேண்டும்.

மேலும், குற்றவாளிகளுக்கு குற்றச்சாட்டுப் பத்திரத்தை சமர்ப்பிப்பதா ? இல்லையா ? என்பதனை தீர்மானிப்பதற்கு சட்ட மா அதிபருக்கு வழங்கப்பட்டுள்ள தற்துணிபுக்கு ஏற்ற வகையில் பாவிக்கும் நிலை கொள்கை வகுப்பாளர்களால் மிகவும் ஆழமாக பகுப்பாய்வு செய்யப்பட்டு, மதிப்பீடு செய்யப்பட வேண்டும். அதற்கமைய, நிச்சயிக்கப்பட்டது என சொல்லப்படும் குற்றவாளிகளுக்கு எதிராக, விஷேடமாக அரசியல் அழுத்தம் அல்லது தொடர்புகள் காரணமாக குற்றச்சாட்டுப் பத்திரம் தாக்கல் செய்வதில் தாமதம் ஏற்படுவதாக

கருதும், குற்றச்சாட்டை ஆராய்ந்து பார்ப்பதற்கு சட்ட மா அதிபரின் தீர்மானத்தக்கு அமைய மூடப்பட்ட மற்றும் சமமான நிலையை உருவாக்குவதற்கு தேவையான மறுசீரமைப்பு அறிமுகம் செய்யப்பட வேண்டும்.

கைது செய்யப்படுதல், விசாரணை செய்தல், தடுத்து வைத்தல், சிகிச்சை வழங்குதல் மற்றும் சிறைப்படுத்துதல் போன்ற நிலமைகள் தொடர்பாக தொடர்புடைய சட்ட ரீதியான கட்டமைப்புகள், தேசிய மற்றும் சர்வதேச கடப்பாடுகள் மற்றும் அடிப்படை உரிமைகளுக்கு மதிப்பளித்தல் பெறுமானம் தொடர்பான பயிற்சிகள் மற்றும் கூருணர்வு ஏற்படுத்தும் நிகழ்ச்சிகள் நீதிபதிகள் மற்றும் சட்டத்தரணிகள், சட்டத்தை அமுல்படுத்தும் நிறுவனங்களின் அலுவலர்கள் மற்றும் ஏனைய நபர்களை இலக்காகக் கொண்டு தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட வேண்டும். கைது செய்யப்படும் நபர்களிடம் விசாரணை செய்யும் செயற்பாடுகளில் ஈடுபடும் பொலீஸ் திணைக்களம் மற்றும் அதன் கீழுள்ள ஏனைய தொடர்புடைய நிறுவனங்களின் அலுவலர்களுக்கு ஒப்புதல் வாக்குமூலம் பெறுவதற்காக சித்திரவதை செய்தலுக்கு மாற்றீடாக முறையான மற்றும் சட்ட ரீதியான புலனாய்வு செயன்முறைகள் மற்றும் நிபுணத்துவ முறைகள் தொடர்பான பயிற்சியை வழங்குவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

மனித உரிமைகள் ஆணைக்குழுச் சட்டத்தின் 14 ஆவது பிரிவில் காட்டப்பட்டுள்ள ஏற்பாடுகளின் கீழ் சித்திரவதைகளிலிருந்து விடுபடுவதற்கான உரிமை மீறப்பட்டிருத்தல் அல்லது மீறப்படுவதனை அண்மிக்கும் நிலையில் இருத்தல் தொடர்பாக மனித உரிமைகள் ஆணைக்குழு தமது கருத்துக்கு ஏற்ப விசாரணை செய்வதற்காக கொண்டுள்ள ஆற்றலை மேலும் பலப்படுத்த வேண்டும். 2016 ஆண்டில் மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்ட ‘சித்திரவதைகள் மற்றும் பாதுகாப்பு மீறல் தடுப்பு’ தொடர்பான உபகுழுவில், இலங்கையில் சித்திரவதை புரியும் நிலை தொடர்பாக தீவிரமான மதிப்பீட்டை மேற்கொள்ளுதல் மற்றும் சித்திரவதைகளுக்கு எதிராக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பணிப்பொறுப்பை அதிகரிப்பதற்கான பரிந்துரைகளை சமர்ப்பிப்பதற்கு தேவையான வகையில் அந்த செயன்முறை மேலும் பலப்படுத்தப்பட வேண்டும்.

## சட்ட விரோத மீன்பிடித்தல் முறைகளை முறைமைப்படுத்துவதற்காக முறையான கொள்கைச் சட்டகம் இன்மை மற்றும் அதன் பெறுபேறாக சிறிய அளவான மீனவர்களின் வாழ்வாதாரம் மற்றும் நீரியல் வளம் தொடர்பாக ஏற்படும் விளைவுகள்

### சட்டவாக்கப் பின்னணி

இலங்கையின் மின்பிடித் துறையின் ஒட்டுமொத்த சட்ட ரீதியான சட்டகங்கள் அரசியலமைப்பு ரீதியான ஏற்பாடுகள் தொடக்கம் பல்வேறு வகையான சட்டங்கள், கொள்கைகள் மற்றும் ஒழுங்குவிதிகள் வரையான விரிவாக பரந்துள்ளது. அரசியலமைப்பின் பதின்மூன்றாவது திருத்தத்துக்கு அமைய, தேசிய நீர்ப் பரப்புக்கு அப்பால் மீன் பிடித்தல் மற்றும் மீன்பிடி நடவடிக்கைகள் 'மூடப்பட்ட பட்டியலில்' உள்ளடங்குகிறது. தேசிய நீர் பரப்புக்கு அப்பால் மீன் பிடித்தல் தவிர ஏனைய மீன்பிடி செயற்பாடுகள் 'இணைந்த பட்டியலில்' உள்ளடங்குகிறது.[45]

மேலும், 1996 ஆண்டின் 2 இலக்க மீன்பிடி மற்றும் நீரியல் வள சட்டத்தின்[46] மூலம் இலங்கையில் மீன்பிடி மற்றும் நீரியல் வள முகாமைத்துவம், முறைமைப்படுத்தல், பேணுகை மற்றும் அபிவிருத்திக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. காலத்துக்குக் காலம் ஆட்சிக்கு வரும் அரசாங்கங்கள் மற்றும் ஒவ்வொரு காலப் பகுதியிலும் மீன்பிடித் துறை விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சர்கள் இலங்கையின் மீன்பிடித் துறை தொடர்பான பல ஒழுங்குவிதிகளை விதித்துள்ளனர். அவற்றுக்கு அமைய, சட்டத்தின் 31 மற்றும் 32 பிரிவுகளின் மூலம் நாட்டின் மீன்பிடி வளத்தை முகாமைத்துவம் செய்வதற்காக மீன்பிடி முகாமைத்துவ பிரதேசங்கள் மற்றும் மீன்பிடி முகாமைத்துவ அதிகார சபைகள் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன. அதற்கு மேலதிகமாக சமூக பங்கேற்புடன் மீன்படி வளத்தை முகாமைத்தவம் செய்வதற்காக சட்டத்தின் கீழான ஏழு முகாமைத்துவத் துறைகள் பிரகடனம் செய்யப்பட்டுள்ளன. வளப் பேணுகை மற்றும் முறைமைப்படுத்தல் கருமங்களுக்கான பல ஒழுங்குவிதிகள் விதிக்கப்பட்டுள்ளன.[47]

மீன்பிடித் துறை தொடர்பான சட்ட ரீதியான மற்றும் முறைமைப்படுத்தல் கட்டமைப்புகள் பரந்த எல்லை வீச்சைக் கொண்ட ஒழுங்குவிதிகளைக் கொண்டுள்ளதுடன், அவற்றில் சில தற்போது அமுலில் உள்ள பல்வேறு மீன்பிடி முறைகள் (முறையற்ற சுருக்கு வலை பாவனை போன்ற) பாவிக்கப்படுவதனால் ஏற்படும் அழிவுகள் காரணமாக விசேடமாக

---

45 பதின்மூன்றாவது அரசியலமைப்பு சீர்திருத்தம், இலங்கை அரசியலமைப்பு. https://www.parliament.lk/files/pdf/constitution-si.pdf

46 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க கடற்றொழில் மற்றும் நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டம் (பின்னர் திருத்தம் செய்யப்பட்ட) https://www.fisheriesdept.gov.lk/web/images/ADDENDUMS/fisheriesAct_Sinhala/02-1996_S.pdf

47 சட்டத்தின் 15 மற்றும் 16 ஆவது பிரிவுகளின் படி மீன்பிடிப் படகுகளை பதிவு செய்தல் மற்றும் 1980.10.03 ஆம் திகதிய 109 ஆம் இலக்க வர்த்தமானி, 1998.11.26 ஆம் திகதிய 1055/13 ஆம் இலக்க மற்றும் 1996.11.07 ஆம் திகதிய மற்றும் 948/24 ஆம் இலக்க ; கடற்றொழில் நடவடிக்கை அனுமதிப்பத்திர சட்டத்தின் 6 - 14 ஆம் பிரிவுகள் மற்றும் 1996.11.07 ஆம் திகதிய 948/25 ஒழுங்குவிதிகள் ; சட்டத்தின் 27 – 29 ஆம் பிரிவுகளின் பிரகாரம் அழிவடையும் வகையில் மீன்பிடியில் ஈடுபடுவதனைத் தடுத்தல் அல்லது ஒழுங்குபடுத்தல் ; சட்டத்தின் 34 ஆவது பிரிவின் கீழ் மீன் பிடிப்பதற்கான மூடிய அல்லது திறந்த சந்தர்ப்பங்களை அறிவித்தல் ; சட்டத்தின் 36 – 37 ஆம் பிரிவுகளின் பிரகாரம் மீன் இருப்பகளை வெளிப்படுத்ததல் ; சட்டத்தின் 39 – 43 ஆம் பிரிவுகள் நீர்வாழ் உயிரின வளர்ப்பு முகாமைத்தவ அனுமதிப்பத்திரங்கள்.

சிறு அளவில் மீன்பிடியில் ஈடுபடும் மீனவ சமூகத்தினர் முகங்கொடுக்கும் அடிப்படைப் பிரச்சினைகளை தீர்ப்பதற்காகவும், இந்த நாட்டின் மீன்பிடி வளத்தை பாதுகாத்தல் தொடர்பாகவும் விரைவாக கவனம் செலுத்தப்பட வேண்டும்.

## அடிப்படைப் பிரச்சினைகள்

மீன்பிடித் துறையின் முக்கியத்துவத்தை அடையாளம் கண்டு, அதற்காக நிலையான அமைச்சரவை அமைச்சுப் பதவி வழங்கப்பட்டிருந்த போதிலும், மீனவ சமூகம் முகங்கொடுக்கும் பிரச்சினைகள் மற்றும் இந்த நாட்டின் நீரியல் வளம் அழிவடைதல் தொடர்பாக நிலவும் அச்சுறுத்தல் தொடர்பான நிலை போன்ற விடயங்கள் கடுமையான கவனத்துக்கு உட்பட வேண்டிய துறையாக மாறியுள்ளதன் மூலம் மீன்பிடித் துறையில், விஷேடமாக சிறிய அளவில் மீன்பிடியில் ஈடுபடும் சமூகத்தினர் மற்றும் மீன்பிடி வளங்கள் தொடர்பான கொள்கைகள் மற்றும் நிர்வாக கட்டமைப்புகளின் கருமங்கள் பொருத்தமான வகையில் வினைத்திறனாக நிறைவேற்றப்படவில்லை என்பது வெளிப்படுகிறது.

சட்ட விரோத மீன்பிடி முறைப் பாவனை மற்றும் அதன் விளைவாக நாட்டின் பல்வேறு மீனவ குழுக்கள் மத்தியில், விஷேடமாக சிறு தொழிலில் ஈடுபடும் மீனவ சமூகத்தினர் மற்றும் சுருக்கு வலை பாவிப்போர் ஆகியோருக்கு இடையில் ஏற்படும் மோதல் அதில் ஒரு பிரதான பிரச்சினையாகும். தற்போதுள்ள ஒழுங்குவிதிகளில் நிலவும் குறைபாடுகள் மற்றும் சில ஒழுங்குவிதிகள் இத் துறையில் நிலவும் பிரச்சினைகளுக்கு தற்பொது அமுலில் உள்ள ஒழுங்குவிதிகள் நடைமுறைச் சாத்தியமற்றவையாக இருப்பது இதற்கான பிரதான காரணமாகும். உதாரணமாக, திருத்தம் செய்யப்பட்ட பர்சின் வலை மீன்பிடி ஒழுங்குவிதிகள் தொடர்பான 437/1987 இலக்க வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து உரிமங்களுக்கும் ரூ. 20,000 அறவிடப்பட வேண்டும் என்ற போதிலும், அது சட்ட விரோத மீன்பிடி முறைகள் பாவிக்கப்படுதலை தைரியமிழக்க செய்வதனை நோக்கமாக கொண்டிருந்த போதிலும், இந்த ஏற்பாடுகளின் காலாவதியான நிலையினால் அந்த நோக்கம் நிறைவேறவில்லை. மேலும், 13 ஆம் இலக்க ஒழுங்குவிதியில் ‘எந்தவொரு நபரும் 3/8 அங்குலத்துக்கு குறைவான வலை பாவிக்கப்படலாகாது’ என குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், உண்மையிலேயே தகுந்த மேற்பார்வை, கட்டுப்பாடு மற்றும் கண்காணிப்பு கட்டமைப்பு மற்றும் கடற்கல கண்காணிப்பு முறைகளில் நிலவும் குறைபாடுகள் மற்றும் தற்போதுள்ள பொருத்தமான ஏற்பாடுகளையாவது உரிய முறையில் அமுல்படுத்தாமை போன்ற விடயங்கள் கவனம் செலுத்தப்பட வேண்டிய பிரச்சினையாகும்.

பர்சின் வலையை பாவிக்கும் மீன்பிடி செயற்பாடுகள் தொடர்பான ஒழுங்குவிதிகள் உரிய முறையில் அமுல்படுத்தப்படாமை காரணமாக சிறிய அளவில் தொழில் மேற்கொள்ளும் மீனவர்கள் மற்றும் பர்சின் வலையை பாவிக்கும் மீனவர் குழுக்கள் ஆகியவற்றுக்கு இடையில் சமூகங்களுக்கிடையிலான அமைதியின்மை ஏற்பட்டுள்ளது. அதன் மூலம் பல பிரதேசங்களில் சிறிய அளவில் மீன்பிடியில் ஈடுபடும் மீனவ சமூகத்தவர்களின் வாழ்வாதாரத்துக்கு பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதுடன், ஒழுங்குவிதிகளை அமுல்படுத்தும் பொறுப்பை கொண்டுள்ள நிறுவனங்களில் ஊழல் மற்றும் முறைகேடுகள் அதிகரிப்பதற்கும் ஏதுவாக உள்ளது.[48] பர்சின் வலைப் பாவனை மற்றும் தடை செய்யப்பட்ட

48 இந்த வெளியீட்டின் இரண்டாவது அத்தியாயத்தில் ஊடகவியலாளர் லக்மால் பதுகேவியால் எழுதப்பட்ட “முணைப்பாடுகளுக்கு காரணம் வர்த்தமானி அறிவித்தலிலுள்ள குறைபாடுகள் - சுருக்கு வலையால் அடைக்கப்பட்ட சிறுகடல் மீன்பிடித் தொழிலாளர்கள்” என்ற கட்டுரையை பார்க்கவும்.

வெடிபொருட்கள் (டைனமைற் அடங்கலாக) பாவனை தொடர்பான ஒழுங்குவிதிகள் முறைகேடாக பாவிக்கப்படுதல் மற்றும் அது தொடர்பாக உள்ள வரையறைகளை மீறி, தகுந்த கண்காணிப்புக்கு உட்படாமல் சில மீனவ சமூகங்கள் செயற்படுவதன் காரணமாக நீரியல் வளங்கள் அழிவடைவதுடன், சிறிய அளவிலான மீனவர்கள், பிரதானமாக வடக்கு மற்றும் கிழக்கு கரையோரப் பிரதேசங்களில் மீன் வளம் குறைவடைதல் உள்ளிட்ட பல கடுமையான சவால்களுக்கு முகங்கொடுத்துள்ளனர்.

மீன்பிடி மற்றும் நீரியல் வளத்தை பாதுகாப்பதனை குறிக்கோளாகக் கொண்ட பல்வேறு ஒழுங்குவிதிகள் தொடர்பாக மீனவ சமூகத்தினர் மத்தியில் தெளிவு இல்லாதிருத்தல் கவலைக்குரிய விடயமாகும். அத்துடன், எந்தவொரு பயனுள்ள அல்லது வினைத்திறனான முறைமைப்படுத்தல் இன்றி இடம்பெறும் மீன்பிடி முறைகள் காரணமாக கடலில் சிறிய மீன்கள் பயனின்றி அழிவடைதல் தொடர்ச்சியாக இடம்பெறும் பல பிரச்சினைகளுக்கு ஏதுவாக உள்ளது. பர்சின் வலை ஒழுங்குவிதிகளின் கீழ் வழங்கப்பட்ட உரிமங்களை முறைகேடாக பாவிக்கும் நபர்களுக்கு எதிராக பல சட்ட ரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ள போதிலும், தற்போதுள்ள கொள்கைகள் மற்றும் முறைமைப்படுத்தல் கட்டமைப்புகளில் பலமான மறுசீரமைப்பு மேற்கொள்ளப்படாமை மற்றும் அது தொடர்பான தேசிய மட்டத்திலான செயற்பாட்டுத் திட்டம் இன்மை காரணமாக நாட்டின் நீரியல் வளங்களுக்கு ஈடுசெய்ய முடியாத இழப்பை ஏற்படுத்தியுள்ளன.

## உத்தேச மறுசீரமைப்பு

ஒருங்கிணைந்த மற்றும் பங்கேற்பு முகாமைத்துவம் ஊடாக கரையோர மற்றும் நீரியல் வளங்களை மேம்படுத்துதல் மற்றும் பேணுகையை மேம்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இந்த நாட்டின் மீன்பிடி மற்றும் நீரியல் வளங்களின் நீண்டகால பேண்தகு தன்மைக்கு கடுமையான தாக்கத்தை ஏற்படுத்தி, குறுங்கால இலாபத்துக்காக அவ்வாறான ஒழுங்குவிதிகளின் தொழில்நுட்ப ரீதியான குறைபாடுகளை தந்திரமாக பாவிக்கக்கூடிய பல்வேறு ஒழுங்குவிதிகளில் உள்ள தவறுகளை திருத்தம் செய்வதற்கு கொள்கை வகுப்பாளர்களும், மீன்பிடி மற்றும் நீரியல் வளம் தொடர்பான பொறுப்புகள் ஒப்படைக்கப்பட்டுள்ள அரச அலுவலர்களும் இணைந்த ஒருங்கிணைப்புடன் செயற்பட வேண்டும். உதாரணமாக மீனவ சமூகத்தினரின் வாழ்க்கை, வாழ்வாதாரம் மற்றும் நாட்டின் மீன்பிடி மற்றும் நீரியல் வளங்களுக்கு அண்மைக் காலத்தில் ஏற்பட்ட விளைவுகளை கருத்தில் கொண்டு, பர்சின் வலை பாவனை தொடர்பான ஒழுங்குவிதிகளை மீளாய்வு செய்து, அது தொடர்பில் தோன்றியுள்ள பிரச்சினைகளுக்கு பேண்தகு தீர்வுகளை பெறக்கூடிய வகையில் மறுசீரமைப்பு செய்ய வேண்டும்.

மீன்பிடி மற்றும் நீரியல் வளம் தொடர்பாக, விஷேடமாக மீன் பிடிக்கும் முறைகள் தொடர்பான ஒழுங்குவிதிகள் கொள்ளை ரீதியான நிலைப்பாடு ஊடாக தாக்கத்தக்கு அல்லது பாதிப்புக்கு உள்ளான சமூகங்களின் விரிவான ஆலோசனையுடன் மட்டுமே அறிமுகம் செய்யப்பட வேண்டும் என்பதுடன், அந்தச் கொள்கைகள் அல்லது முறைமைப்படுத்தல்களை அமுல்படுத்தும் போது தொடர்புடைய நபர்களின் வாழ்வாதாரம் தொடர்பில் ஏற்படக்கூடிய தாக்கம் தொடர்பாக விரிவான பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட வேண்டும். மேலும் சட்டங்கள், கொள்கைகள் அல்லது ஒழுங்குவிதிகள் விதிக்கப்படுதல் மற்றும் அமுல்படுத்தப்படுதலுக்கு இணையாக அந்தச் செயற்பாடுகளின் ஊடாக ஏற்படும்

சமூக மற்றும் பொருளாதார தாக்கங்கள் தொடர்பாக பொருத்தமான மீளாய்வு மற்றும் மதிப்பீடு மேற்கொள்ளக்கூடிய வகையில் பயனுள்ள மேற்பார்வை மற்றும் மதிப்பீட்டுத் திட்டம் அமுல்படுத்தப்பட வேண்டும்.

மீன்பிடி மற்றும் நீரியல் வள பேணுகை தொடர்பான சட்டத்தை அமுல்படுத்தும் அலுவலர்கள் மற்றும் மீன்பிடித் துறையின் முறைமைப்படுத்தல் பொறிமுறை பொருத்தமாக அமுல்படுத்தப்படுவதனை உறுதி செய்வதற்காக பொறுப்பான அலுவலர்களுக்கு போதுமானளவு பயிற்சி வழங்கப்பட வேண்டும்.

பிரதானமாக பொருத்தமற்ற மற்றும் சட்ட விரோத முறைகளுடன் தொடர்புடைய முறைமைப்படுத்தல் பொறிமுறைகளின் குறிக்கோளை அடைவதற்காக புதிய ஒழுங்குவிதிகள், அவற்றின் விடயப் பரப்பு, வரையறைகள் மற்றும் நீண்ட கால பயன்கள் தொடர்பாக மீனவ சமூகத்தினரைத் தெளிவூட்டுதல் மிகவும் முக்கியமானதாகும்.

## ஊடகவியலாளர்களின் கட்டுரைகள் தொடர்பான அட்டவணை : தகவல் அறியும் உரிமை ஊடாக வெளிப்படுத்தப்பட்ட பிரதான பிரச்சினைகளின் சாராம்சம்.

| இல. | கட்டுரையின் விடயப் பரப்பு | கட்டுரை ஆசிரியர் | வெளிப்படுத்தப்பட்ட அடிப்படையான முதன்மை விடயம் |
|---|---|---|---|
| 1 | **ஒரு கிளாஸ் குளிர்ந்த தண்ணீர் அருந்துவோமா ?** நுண்நிதி கதைகளில் துவாரம் தேடிய ஆர்.ரி.ஐ | லசந்த டி சில்வா | ● நுண்நிதி சேவை முறைமைப்படுத்தலுக்காக உள்ள சட்ட ரீதியான மற்றும் கொள்கைச் சட்டகத்தில் உள்ள குறைபாடுகள்.<br>● தகுந்த மேற்பார்வை, கண்காணிப்பு இன்றி சட்ட விரோதமாக கடன் வழங்குதல் மற்றும் தவணைப் பணத்தை சேகரிக்கும் பொறிமுறை பாவனை.<br>● கடன் உடன்படிக்கை ஊடாக கடன் பெறும் நபர்களின் மொழி உரிமை மீறப்படுதல். |
| 2 | **சுங்கமும் வழுக்கி விழுந்த பாம் எண்ணை அதிகாரம்** | லசந்த டி சில்வா | ● பொது மக்களுக்கு முக்கியமான தகவல்களை வெளியிடும் போது சுங்க திணைக்களத்தின் வெளிப்படைத்தன்மை தொடர்பான பிரச்சினை<br>● சுங்க திணைக்கள அலுவலர்கள் தகவல் அறியும் சட்ட ஏற்பாடுகளை பின்பற்றாமை<br>● தகவல் அறியும் சட்டத்தின் 5 ஆவது பிரிவு தேவையற்ற வகையில் பாவிக்கப்படுதல் மற்றும் அதிலுள்ள மட்டுப்பாடுகளில் மறைந்து தகவல்களை வழங்காமை. |
| 3 | **மொனராகல தேர்தல் மனு தகவல் அறியும் உரிமையால்** வெற்றி பெற்ற வரலாற்று முக்கியத்துவமான வழக்கு | லசந்த டி சில்வா | ● 1946 ஆண்டின் 53 இலக்க உள்ளூராட்சி தேர்தல் கட்டளைச் சட்டத்தின் 82 இ (உ) பிரிவின் சட்ட ரீதியான ஏற்பாடுகள் மீறப்பட்டிருத்தல்.<br>● தேர்தல் பிரச்சார நிதி முறைமைப்படுத்தல் பொறிமுறை அல்லது தேர்தல்களின் போது இலஞ்சம் மற்றும் முறைகேடான அழுத்தங்கள் தொடர்பான விடயங்களை தீர்ப்பதற்கான விசேஷடமான சட்டங்கள் வகுக்கப்படாமை. |
| 4 | **இரண்டு தசாப்தங்களாக கிடப்பில் போடப்பட்டிருந்த சிறுவர் பாதுகாப்பு சட்டம்** தொடர்பான தகவல் விண்ணப்பத்தால் கிடைத்த உயிர் | பிங்குன் மேனக்க கமகே | ● தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைக்கு இருக்கும் சட்ட ரீதியான ஏற்பாடுகள் உயர்ந்தளவு வினைத்திறனாக பாவிக்கப்படாமை.<br>● இரண்டு தசாப்தங்களின் பின்னர் 1995 ஆண்டின் 22 இலக்க தண்டனைச் சட்டக் கோவை (திருத்த) சட்டத்தின் 365 இ பிரிவின் சாரத்துக்கு மீண்டும் உயிரூட்டுவதற்காக சிறுவர் துஸ்பிரயோகங்கள் தொடர்பான ஊடக அறிக்கையிடலுக்கான வழிகாட்டலை உருவாக்கி தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் மறைமுக செயற்பாடு |
| 5 | **தகவல் சட்டத்தின் முன்னால் வெள்ளைப்பூடு தூளாக்கிய லக் சதோச** | லசந்த டி சில்வா | ● நீண்ட காலமாக லங்கா சதோச நிறுவனத்தின் தகவல் அலுவலர் நியமிக்கப்படாமை.<br>● தகவல் அறியும் சட்டத்தின் மூலம் செய்யப்பட்டுள்ள ஏற்பாடுகள் மற்றும் பொறுப்புகளுக்கு அமைய அலுவலர்கள் தகவல்களை வழங்காமை<br>● லங்கா சதோச அலுவலர்களின் செயற்பாடுகளில் வெளிப்படைத்தன்மை மற்றும் வகைகூறல் இருக்காமை. |

| | | | |
|---|---|---|---|
| 6 | **இலங்கையில் தகவல் அறியும் சட்டம் தகுந்தவாறு அமுல்படுத்தப்படுகிறதா ?** | ராஹுல் சமந்த ஹெட்டிஆராச்சி | ● மேன்முறையீட்டு செயன்முறையில் இலங்கையின் தகவல் அறியும் உரிமை ஆணைக்குழுவினால் பின்பற்றப்பட்ட செயல் ஒழுங்குவிதிகளின் வினைத்திறன் தொடர்பாக கவனம் செலுத்த வேண்டும். (திங்கள், செவ்வாய் ஆகிய நாட்களில் மட்டுமே விசாரணை மேற்கொள்ளப்படுகிறது.)<br>● மேன்முறையீட்டுக்கான தீர்மானம் வழங்குவதற்கு நீண்டகாலம் எடுத்தல். (சில வேளைகளில் ஒரு வருடத்தை அண்மித்த காலம்)<br>● பொது நிறுவனங்களின் அலுவலர்கள் தகவல் அறியும் சட்டத்தை பின்பற்றாமை.<br>● தகவல் அறியும் சட்டத்தின் 24 (3) மற்றும் 25 (I) பிரிவுகள் அமுல்படுத்தப்படாமை.<br>● தகவல் அறியும் சட்டம் தொடர்பாக பொது நிறுவன அலுவலர்களின் அறிவு மற்றும் புரிதல் தேவையான மட்டத்தில் இருக்காமை.<br>● தகவல் அறியும் சட்டத்தின் 5 ஆவது பிரிவில் அடங்கியுள்ள ஏற்பாடுகள் தவறாக பாவிக்கப்படுதல். |
| 7 | **ஹொரவப்பொத்தானையில் பத்து யானைகளும் பட்டினியால் இறந்தன.** | ராஹுல் சமந்த ஹெட்டிஆராச்சி | ● யானைகளின் வாழிடங்கள் இழக்கப்படுதல் மற்றும் யானைகளுக்கான நீர் மற்றும் உணவு போன்ற இயற்கை வளங்கள் இழக்கப்படுதலை தடுப்பதற்காக வினைத்திறனான கொள்கை ரீதியான தீர்மானங்கள் மற்றும் அமுல்படுத்தக்கூடிய செயற்பாட்டுத் திட்டம் இன்மை மற்றும் யானைகள் வசிக்கக்கூடிய வெளிகள் தொடர்ச்சியாக, மேண்டுமென்றே இழக்கப்படுதல். |
| 8 | **சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் சட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட குறிக்கோள் அடையப்பட்டுள்ளதா ?** | சாமர சம்பத் | ● சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் வெளிப்படுத்தப்படாமைக்கு எதிராக அமுல்படுத்தக்கூடிய சட்ட ரீதியான ஏற்பாடுகள் இருக்காமை.<br>● சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக அமுலில் உள்ள சட்ட ஏற்பாடுகளை யாதார்த்தமாக்கிய கொள்கைகள் மற்றும் வழிமுறைகள் இன்மை.<br>● தேர்தல் பிரச்சார நிதி முறைமைப்படுத்தல் பொறிமுறை அல்லது அது தொடர்பான பொருத்தமான சட்ட ஏற்பாடுகள் இன்மை.<br>● சட்டவாக்கத் துறையின் உதாசீன செயன்முறைகள் – அதாவது. தகவல் சட்டத்தை விதித்தல் மற்றும் சில சந்தர்ப்பங்களில் பாராளுமன்றம் தமது தகவல்கள் வெளியிடுவதனை நிராகரித்தல். |
| 9 | **நாடு பூராவும் 200 குப்பை மேடுகள் தீர்வுக்கு தாமதம் ஏன் ?** | சாமர சம்பத் | ● இலங்கையில் கழிவு முகாமைத்துவம் தொடர்பான தேசிய கொள்கை தகுந்த முறையில் அமுல்படுத்தப்படாமை.<br>● பயனுள்ள கழிவு முகாமைத்துவ கொள்கைக்கான மூலோபாய திட்டம் இன்மை.<br>● உள்ளூராட்சி நிறுவனங்களின் துணை விதிகள் ஊடாக கழிவு முகாமைத்துவம் தொடர்பான ஏற்பாடுகள் அர்த்தமுள்ள வகையில் அமுல்படுத்தப்படாமை. |

| | | | |
|---|---|---|---|
| 10 | **மூன்று கட்ட மின்சாரத்துக்கு பணம் செலுத்தி குப்பி விளக்கில் வெளிச்சம் பார்த்தல்**<br><br>உள்ளூராட்சி நிறுவனங்கள் மற்றும் காணி ஏலம் விடுபவர்களின் வஞ்சக மோசடி தொடர்பான ஆய்வு | சாந்தனி திசாநாயக்க | • உள்ளூராட்சி சட்டத்தை தவறாக பாவித்து காணி ஏல விற்பனை கம்பனிகள் செயற்படுதல்.<br>• காணி ஏல விற்பனைக்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகள் தொடர்பான அங்கீகாரம் பெற வேண்டிய உள்ளூராட்சி ஒழுங்குவிதிகளுக்கு ஏற்புடையதாக இருக்காமை.<br>• மாகாண செயற்பாட்டுக் குழு, சுற்றாடல் அதிகார சபை, கமநல அபிவிருத்தி ஆணையாளர், கரையோர பேணுகை, காணி நிரப்பல் மற்றும் அபிவிருத்தி பணிப்பாளர், மின்சார சபை, தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்பு சபை போன்ற பல்வேறு அரச நிறுவனங்களில் உள்ள அங்கீகாரம் பெறும் செயன்முறைகள் மற்றும் தொடர்புடைய ஒழுங்குவிதிகளுக்கு ஏற்புடையதாக இருக்காமை. |
| 11 | **சுன்னாகம் தபால் அலுவலகம் அரைவாசி நிறைவடைந்த கட்டிடத்தில் மறைந்துள்ள ஊழல்** | திலீப் அமுதன் | • பொதுச் சொத்துக்கள் & வளங்கள் முறைகேடாக பாவித்தல் தொடர்பான குற்றச்சாட்டுகள்.<br>• யாழ்ப்பாண மாவட்ட அபிவிருத்தி செயற்பாடுகள் தொடர்பான ஊழல் குற்றச்சாட்டுகள்.<br>• கணக்காய்வு மற்றும் புலனாய்வுகளை தவறாக வழிநடத்துவதற்காக தகவல்களைப் கையாளுதல்.<br>• தகவல் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு ஏற்புடையதாக இருக்காமை.<br>• தகவல்களை கையாளும் அரச அலுவலர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கு தாபன விதிக்கோவையில் பொதுமானளவு விடயங்கள் குறிப்பிடப்படாமை. |
| 12 | **சுருக்கு வலையால் சுற்றி வளைக்கப்பட்ட சிறு மீன்பிடியாளர்களின்**<br>பிரச்சினைகளுக்கு காரணம் வர்த்தமானியின் ஓட்டைகள் | லக்மால் படுஹே | • தடை செய்யப்பட்ட முறைகள் மீன் பிடித்தலுக்காக பாவிக்கப்படுதல்.<br>• 1996 ஆண்டின் 2 இலக்க மீன்பிடி மற்றும் நீரியல் வள சட்டத்தின் ஏற்பாடுகள் தகுந்த வகையில் அமுல்படுத்தப்படாமை.<br>• மீன்பிடித் துறையின் கருமங்கள் ஒப்படைக்கப்பட்டுள்ள அரச அலுவலர்களின் பொறுப்பற்ற மேற்பார்வை காரணமாக நீரியல் வளங்கள் அழிவடைதல்.<br>• அடிப்படைப் பிரச்சினைகளைத் தீர்க்கும் போது எந்தவொரு ஏற்புடைய தன்மையும் இன்றி வர்த்தமானி அறிவித்தல் ஊடாக சுற்றாடல் விரோத மற்றும் முரண்பாடான ஒழுங்குவிதிகள் / உத்தரவுகள்.<br>• நீரியல் வளங்கள் மற்றும் சிறிய அளவான மீனவர்களை பாதுகாக்கும் கொள்கை மறுசீரமைப்பு செயன்முறை மற்றும் அதற்கு ஏற்புடைய மேற்பார்வை பொறிமுறை இன்மை. |

| | | | |
|---|---|---|---|
| 13 | **சுனிலின் மரணம் தொடர்பாக உண்மையை கண்டுபிடித்த தகவல் சட்டம்** | அசேல குருலுவங்ச | ● மருத்துவ தகவல்கள் வெளியிடப்படாமை.<br>● மருத்துவ தகவல்கள் மறைக்கப்பட்டதன் காரணமாக மருத்துவர்களின் உதாசீனத்துக்கு சவால் விடுவதற்கான வாய்ப்பு இன்மை. |
| 14 | **பல பெருந்தோட்ட வீடமைப்பு திட்டங்கள் இடைநடுவில் –**<br><br>நிறைவு செய்ய நிதி ஒதுக்கப்படவில்லை | கே. பிரசன்ன | ● தேசிய கட்டிட ஆராய்ச்சி அமைப்பின் கொள்கை ரீதியான மற்றும் முறைமைப்படுத்தல் பொறிமுறைகளின் உத்தரவை தாண்டிச் அரசியல் தீர்மானம் செல்லுதல்.<br>● "அனர்த்தம் ஏற்படும் ஆபத்துள்ள பிரதேசங்கள் மற்றும் காலநிலை மாற்றத்துக்கு அமைய அழிவடையும் ஆபத்து உள்ள பிரதேசங்களில் பேண்தகு வீடமைப்பு மற்றும் பாதுகாப்பான மனித குடியிருப்புக்கு திட்டமிடுதல் மற்றும் அபிவிருத்தி செய்தல் தொடர்பான ஆராய்ச்சிகளை மேற்கொள்ளுதல் மற்றும் வழிகாட்டல் ஆலோசனை மற்றும் பரிந்துரை வழங்குதல்" தேசிய கட்டிட மற்றும் ஆராய்ச்சி அமைப்பின் ஒரு கருமமாகும். இருப்பினும் அவ்வாறான கொள்கை ஆலோசனை நிறுவனங்களின் வழிகாட்டல் ஆலோசனைகள் அரசியல் தீர்மானங்கள் மூலம் மழுங்கடிக்கப்படுகின்றன.<br>● பொது மக்கள் நிதியை பாவிக்கும் போது வெளிப்படைத் தன்மை இன்மை. |
| 15 | **சித்திரவதைக்கு எதிரான சட்டம் பெயரளவானதா ?** | சமந்தி உபேக்ஷா வீரசேகர | ● அரசியல் யாப்பின் II உறுப்புரை மூலம் உறுதி செய்யப்பட்டுள்ள வகையில் "எந்தவொரு நபரும் சித்திரவதை அல்லது குரூரமான, மனிதாபிமானமற்ற அல்லது அவமதிக்கும் வகையிலான நடத்துதல் அல்லது தண்டனைக்கு உட்படுத்தலாகாது" எனும் அரசியல் யாப்பில் உறுதி செய்யப்பட்டுள்ள அடிப்படை உரிமைகள் பாதுகாப்பதற்கு அர்ப்பணிக்காமை.<br>● 1994 ஆண்டின் 22 இலக்க சித்திரவதை அல்லது குரூரமான, மனிதாபிமானமற்ற அல்லது அவமதிக்கும் வகையிலான நடத்துதல் அல்லது தண்டனைக்கு எதிரான சமவாய சட்டத்தின் கீழான ஏற்பாடுகளுக்கு ஏற்புடையதாக இருக்காமை.<br>● சித்திரவதைக்கு உட்படாமல் இருப்பதற்கு முயற்சிக்கும் போது சட்டத்தை அமுல்படுத்தும் அலுவலர்கள் மற்றும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு ஆகியவற்றுக்கு இடையிலான ஒருங்கிணைப்பு இன்மை.<br>● சித்திரவதையிலிருந்து விடுபடுதல் தொடர்பான அரசியல் யாப்பு ரீதியான சட்டகம் தொடர்பான பிரஜைகளின் அறிவு மற்றும் புரிதலின்மை மற்றும் சட்டத்தை அமுல்படுத்தும் நிறுவனங்களின் பாராமுகம் அடிப்படை உரிமைகளுக்கு பாதகமாக அமைதல். |
| 16 | **தகவல் சட்டத்தை பாவித்து சுற்றாடல் பிரச்சினைகள் தொடர்பான அண்மைக்கால தலையீடுகள்** | ரிசித்ரா மென்டிஸ் | ● துறைமுக நகரம் தொடர்பான பிரச்சினைகள் அடங்கலாக சுற்றாடல் பேணுகையுடன் தொடர்புடைய பல்வேறு விதமான சுற்றாடல் பிரச்சினைகள் தொடர்பில் சூழலியலாளர்கள் சுற்றாடல் நீதிக்காக தகவல் அறியும் உரிமை தொடர்பான சட்டத்தைப் பாவித்தல். |

## அத்தியாயம் 02

ஊடகவியலாளர்களின் கட்டுரைத் தொகுதி ஊழலைப் புறக்கணிப்பதற்கும் வகைப்பொறுப்பை மேம்படுத்துவதற்கும் ஊடக மற்றும் தகவல் அறியும் உரிமையை பயனுறுதி வாய்ந்த ஆதரித்து வாதாடும் கருவியாகப் பயன்படுத்துதல்

### குளிர்ந்த நீர்க் குவளையொன்றைக் குடிப்போமா?

# நுண் நிதிக் கதைகளின் ஓட்டைகளை ஆராய்ந்த தகவல் அறிதல் சட்டம்

வாழ்வதற்கு இயலுமை இல்லாமல் கடையொன்றை ஆரம்பித்து ஏதாவது வருமானத்தைத் தேடிக்கொள்வதற்குத் தான் கடன் எடுத்தேன். கடந்த மே மாதம் வரைக்கும் வாங்கிய கடனைச் செலுத்தி வந்தேன். அண்மையில் திடீரென கணவருக்கு புற்றுநோய் இருப்பதை அறிந்து கொண்டோம். ஆகையால் கடையை ஒருசில மாதங்கள் மூட வேண்டிய நிலைமை ஏற்பட்டது. சிறிய தொகை கடனே மீளச் செலுத்துவதற்கு இருந்தது. வட்டியுடன் சேர்த்து தொண்ணூற்று மூவாயிரம் ரூபாவைச் செலுத்துமாறு கடிதமொன்று வந்தது. கடவுளே என்ன செய்வது? கணவர் இன்னுமே சுகவீனமுற்ற நிலையில்தான் இருக்கின்றார்.'' அந்தப் பெண்ணின் ஒப்பாரி முடிவடையும் போது, இன்னுமொரு பெண்ணின் கதை ஆரம்பிக்கின்றது. ''நான் கொழும்பில் ஒரு வேலைக்குச் சென்றிருந்தேன். கொரோனாவால் அனைத்துமே மாறிப் போய்விட்டது. வேலைக்குச் செல்வது எவ்வாறு? இங்கு கார்மன்ட்ல சம்பளம் குறைவானதால்தான் கொழும்புக்குச் சென்றேன். கடைசியில் அந்த வேலைக்கும் செல்ல முடியாமல் போனது. வாழ்வதற்கென்று எடுத்த கடனால் இறுதியில் வாழ்க்கையையே அழிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. ''அவளுடைய கதையைச் சொல்லி முடிக்கும் கணத்தில் இன்னுமொரு கதை ஆரம்பித்தது. ''நாங்கள் பால் பசுவொன்றை வாங்குவதற்குக் கடன் எடுத்ததுதான், நாங்கள் செய்துகொண்ட பெரிய மூட்டாள்தனம். அரசாங்கம் சமுர்தியால் கூறிய கதைக்கு ஏமாந்து வாங்கிய பால் பசு இப்பிரதேசத்தின் காலநிலைக்கு பொருத்தமில்லாததால், அது ஒரு வருடத்தில் இறந்துவிட்டது. பாலும் இல்லை, சாணமும் இல்லை, இறுதியில் கடன்தொல்லைதான் மீதமானது. அந்தக் கடனைச் செலுத்துவதற்கு மீண்டும் கடன் எடுத்து இறுதியில் நாங்கள் நுண்நிதிக் கம்பனிக்காரர்களின் கடன்காரர்கள் ஆனோம்''.

இருபத்து நான்கு இலட்சம் இலங்கைப் பெண்களின் பொதுவான கதைகளுடன், இவ்வாறான நூற்றுக்கணக்கான கதைகளைச் சேர்த்துக்கொள்ளும் அவகாசம் இலங்கையின் அனைத்து மாவட்டங்களிலும் கிடைக்கின்றது. தற்போது நுண்நிதிக் கடன்வசதிகளை வழங்கும் கம்பனிகள் எனத் தம்மைத் தாமே அடையாளப்படுத்திக் கொண்டு பாரிய மற்றும் நடுத்தர அளவிலான நிதிக் கம்பனிகள் இலங்கையின் மூலை

முடுக்கெங்கும் புற்றுநோயைப் போல் பரவலடைந்து மக்களின் உதிரத்தை உறிஞ்சிக் குடிக்கின்றன.

இவை ஒரு சில வேளைகளில் மத்திய வங்கியில் பதிவு செய்யப்பட்ட கம்பனிகளும் அல்ல. அம்பாறை, பொலன்னறுவை, மொணராகலை, திருகோணமலை மாவட்டங்களில் தமிழ் மற்றும் சிங்களக் கிராமங்களிலுள்ள பெண்களைத் தங்களின் பிடிக்குள் கொண்டு வந்து நசுக்கிக் கொண்டிருக்கும் இருபது கம்பனிகள் உள்ளன. அவற்றில் ஒரு சில கம்பனிகள் அப்பிரதேசத்திற்குரிய கிராமத்து வட்டிக்கார முதலாளி போல நடந்து கொள்வதுடன், நெருப்பு வட்டியையும் அறவிடுகின்றனர்.

கிராமத்து வட்டிக்கார முதலாளி சில வேளைகளில் அப்பாவியென நினைக்கக் கூடிய அளவுக்கு அவர்கள் அதிக வட்டியை அறவிடுகின்றனர.

நுண்நிதிக் கடன்பிடியில் சிக்கிய பெண்களைப் பற்றி மேற்கொள்ளும் ஆய்வுகள் மூலம், இறுதியில் கொள்கை ரீதியான முன்மொழிவைச் சமர்ப்பிக்கும் எதிர்பார்ப்பில் மாற்றுக் கொள்கைக்கான நிலையத்துடன் இணைந்து செயலாற்றும் கந்தளாய் தேசிய அபிவிருத்தி மன்றத்தின் சுரங்க ரூபசிங்கவுக்கு இப்பிரச்சினை தொடர்பாக தெளிவான அறிவுண்டு.

“இது பெரும் நாசகாரச் செயலாகும். தற்போது பல குடும்பங்கள் சின்னாபின்ன மாயிருக்கின்றன. குடும்ப அலகுகள் சீர்குலைந்து போகும் போது இடம்பெறும் மோசமான கவலைக்குரிய விடயங்கள் அனைத்தையும் கிராமியப் பிரதேசங்களில் காணலாம். அரசாங்கம எந்தவொரு ஒழுங்குறுத்தல்களையும் மேற்கொள்ளத் தவறியமையால், நுண்நிதிக் கம்பனிகள் மனித்தத்துவம் என்று மாயைக் கதைகளைக் கூறிக்கொண்டு வந்து, எந்தவித அனுதாபமுமின்றி மக்களைச் சுரண்டி உறிஞ்சிப் பிழிகின்றனர். இந்நிலைமை மனிதநேயமற்றதால் நாங்களும் அதுபற்றித் தேடி ஆராய்வதற்கு முன்வந்துள்ளோம்.” என சுரங்க ரூபசிங்க அவர்கள் குறிப்பிட்டார்.

## குடும்பத்தின் குலவிளக்கை நிலைகுலையச் செய்தல்

அரசாங்கத்தின் சூழ்ச்சிக்கு ஏமாந்து பால் பசுவொன்றை விலைக்கு வாங்கி, இறுதியில் பசுவும் உயிரிழந்து, கணவரும் உயிரிழந்த ஒரு பெண்ணின் சோகக் கதையை ஆவேசத்துடன் கூறினார் “குடும்பத்தின் குலவிளக்கு எனக் கூறும் அம்மா இக்கடன் சுமை நிலைகுலைந்து செல்லும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார். கிராமத்தவர் புல்லுருவிகளாகக் கருதும் விபச்சாரத் தொழிலானது இரகசியமாக நடைபெறுவது எனப் பொதுவாகக் கேட்கின்றார். கந்தளாய் வேகந்த பிரதேசத்தில் சந்தித்த பாத்தியகம நாலிகா எனும் பெயருடைய நபர் கூறுவதாவது, பதினைந்துக்கு மேற்பட்ட நுண்நிதிக் கடன் வழங்கும் கம்பனிகளிடமிருந்து தானும் இன்னும் பல பெண்களும் கடனைப் பெற்றுள்ளதாகக் கூறுகின்றார்.

“நாங்கள் ஏன் கடன் எடுத்தோம் என்று இன்னுமே எங்களுக்குப் புரிந்து கொள்ள முடியாமல் உள்ளது. எவருக்கும் பலவந்தமாக கடன் வழங்குவதில்லையே என யாராவது நினைக்கலாம். ஆனாலும் எங்களை மனிதத்துவத்துடன் பார்க்க வேண்டும். ஏனெனில் எங்களை எல்லோரும் சேர்ந்து ஏமாற்றி விட்டார்கள். எங்களுக்கு யாரும் வட்டி வீதத்தைப் பற்றி சொல்லித்தரவில்லை. இக்கம்பனிகள் பதிவு செய்யப்பட்டவையா எனக்கூட எவருமே கூறவில்லை.

எங்களுக்கு அவற்றைப் பற்றித் தேடி ஆராய்வதற்கும் வசதியிருக்கவில்லை. அடுத்தது நாங்கள் நாட்டிலுள்ள பொருளாதாரப் பின்னணியால்தான் இவ்வாறு கடன்காரர்கள் ஆகியிருக்கின்றோம்.'' அவர் பல இலட்சம் பெண்களின் கடன் கதைகளின் உள்ளக்கிடக்கையை தெளிவுபடுத்த முயற்சித்தார்.

பொலன்னறுவையைச் சேர்ந்த நிரோசா குமாரிக்கு வழக்குத் தொடரப் போவதாக அச்சுறுத்தி கடிதம் கிடைத்த வண்ணமுள்ளது. அவரது கணவர் புற்றுநோயாளர் எனத் திடீரென அடையாளங் காணப்பட்டதால், அதுவரைக்கும் உயிர்வாழ்ந்த பெட்டிக்கடையை மூடுவதற்கு நேரிட்டமையாலும் கடன் நெருப்புக்குள் வீழ்ந்துள்ளார். கந்தளாய் தினேசா பிரபானியின் கணவர் குளத்தில் மீன்பிடித்து வாழ்க்கையை நடாத்துபவர். மீன்பிடிப்பதற்குத் தேவையான உபகரணங்களை வாங்குவதற்காகப் பெற்றுக்கொண்ட சிறிய கடனும், அதனை செலுத்துவதற்காக சிலவேளை கம்பனிகள் வீட்டிற்கே வந்து வற்புறுத்தி வழங்கிய கடனும் மலையாக மாறியமையால் தினேஷா மிகப் பயங்கரமான கடன் பிடிக்குள் சிக்கியுள்ளார். ''தற்போது கடன் சுமை பதினைந்து இலட்சம் ரூபாய்களுக்கும் அதிகமாகவுள்ளது. இக்கடன்கள் அனைத்தும் எனது பெயரிலேயே எடுக்கப்பட்டதால் நானே கடனாளியாக உள்ளேன். கணவர் பிடிக்கின்ற மீன்களை விற்று மாதாந்தம் கிடைக்கும் பணம் இருபத்தையாயிரம், முப்பதாயிரம் ரூபாய்களில் வாழ்க்கையைக் கொண்டு நடாத்துவதற்குக் கூட போதுமானதாக இல்லை. அதனால் கடன் செலுத்துவதற்கு இயலாமையால் நாளாந்தம் வட்டி சேர்கின்றது. சரியாக மரணக்கொடி போலவாகும்.'' அவர் கூறியது மிகச் சரியான உவமையாகும். வீட்டில் நாங்கள் கடனை எப்படி மீளச் செலுத்துவது எனக் கதைக்கின்றோம். அப்போது கணவர் கூறுகின்றார், தன்னுடைய பெயரில் கடன் இல்லாததால், கடன் எடுத்தால் செலுத்தும் விதத்தையும் நானே சிந்திக்க வேண்டுமெனவும் கூறுகிறார். அப்படிச் சொல்லிவிட்டு அவர் எழுந்து செல்லும் போது ''எனக்கு தற்கொலை செய்துகொள்ள தோன்றுகின்றது. உண்மையாகவே எனக்கு சாவு மட்டும்தான் மீதமாகவுள்ளது.''

நிதிக் கம்பனிகளின் கடன் சேகரிப்போர் நாளாந்தம் மோட்டார் சைக்கிள்களில் கிராமங்களுக்கு வந்து வலை வீசுவார்கள். அவர்கள் இரும்புக் கதிரையில் வருகின்ற பிசாசுகளாக கிராமத்துப் பெண்களுக்கு தெரிவதால், ஒரு சில பெண்கள் நாள் முழுவதும் வீட்டிலிருந்து வெளியே சென்று மறைந்திருப்பதற்குப் பழக்கப்பட்டுள்ளனர். ''ஆனாலும் அதனைத் தற்போது செய்ய முடியாது. கடனைச் செலுத்தும் வரைக்கும் அவர்கள் போகமாட்டோம் எனக் கூறி வீட்டு முற்றத்தில் அமர்ந்திருக்கின்றனர். பெண்களாகிய எங்களுக்கு குளிப்பதற்குக் கூட இயலாது. இவர்கள் பார்த்துக்கொண்டிருப்பார்கள். போட்ட சோற்றைக் கூடச் சாப்பிட முடியாது. சாப்பிடக் காசு இருக்கின்றது, எங்களுடைய கடனைக் கொடுக்கத்தான் உங்களிடம் காசு இல்லை என முணுமுணுப்பார்கள். சொன்னால் என்ன, இது இரகசியமும் அல்ல. ஒருசில பெண்கள் தமது மானம் மரியாதையைக் கூட இவர்களிடம் அடகு வைக்க வேண்டிய நிலைமையும் காணப்படுகின்றது.'' எனக் கூறினார் தெஹிஅத்தகண்டியைச் சேர்ந்த பெயர் குறிப்பிட விரும்பாத பெண்ணொருவர்.

## மத்திய வங்கியின் ஒழுங்குபடுத்தல்கள்?

சட்ட வல்லுநர் துசித்த சிறிவர்தன அவர்கள் மாற்றுக் கொள்கைக்கான நிலையத்தின் சார்பாக பின்தங்கிய கிராமங்களுக்குச் சென்று இக்கடன் தொல்லைகள் தொடர்பான விடயங்களைத் தேடி ஆராய்ந்தார். ''நுண்நிதிநிறுவனங்களாகத் தம்மை அடையாளப்படுத்திக் கொள்ளும் இந்நிறுவனங்கள் கூடுதலாக பொருளாதாரத்தால் மிகவும் பாதிக்கப்பட்டுள்ள ஊவா, கிழக்கு, வடமேல், வடமத்திய மற்றும் வட மாகாணங்களில் இயங்கி வருகின்றன.

குறிப்பாக யுத்தத்தின் பின்னர் கிராமங்களை அபிவிருத்தி செய்வதாகக் கூறி அரசாங்கத்தின் கண்ணுக்கு எண்ணெயை ஊற்றிவிட்டு கவர்ச்சிகரமான விளம்பரங்கள் மூலமாக மக்களை ஏமாற்றிக் கடன் வழங்குவதற்கு ஆரம்பித்தார்கள். நாங்கள் தேடி ஆராயும் போது, சிறிய மற்றும் பாரியளவிலான இருபது கம்பனிகள் வரை நாளாந்த வட்டி வீதத்திற்கு கடன் வழங்குவதாக தெரியவந்துள்ளது. குறித்த நாளாந்த வட்டி அல்லது வாராந்த வட்டி வீதத்தைக் கணிப்பிட்டுப் பார்க்கும் போது ஆண்டு வட்டி வீதம் நூற்றுக்கு அறுபது எழுபது வீதத்தையும் கடந்து செல்கின்றது. அதனைத் தாங்கிக் கொள்ளவே முடியாத நிலைமை. அதனால் அரசாங்கம் எந்தவொரு ஒழுங்குறுத்தல்களையும் மேற்கொள்ளவில்லையென எம்மால் கூற முடியும். இது மத்திய வங்கியால் ஒழுங்குபடுத்தப்பட வேண்டும். ஆனாலும் ஒருசில கம்பனிகள் வெறுமனே மூட்டிப் பொருத்தப்பட்ட கம்பனிகளே தவிர, மத்திய வங்கியின் நாணய சபையில் பதிவு செய்யப்பட்டுள்ளதா என்பது சந்தேகத்திற்கிடமானது. அவ்வாறு பதிவு செய்யப்பட்டிருந்தாலும் இந்தளவுக்கு அதிக வட்டி அறவிடுவதைக் கண்டும் காணாதது போல மத்திய வங்கி அதிகாரிகள் நடந்து கொள்வதால் இதனை டீல் எனக் கூறினால் பிழையாகாது. தற்போது இப்பிரச்சினை முற்றி விட்டது.

உடனடியாகத் தேடி ஆராய்ந்து தீர்வு காணப்படாவிட்டால், முன்னொரு காலத்தில் விவசாயிகள் கடனை மீளச் செலுத்த முடியாமல் தற்கொலை செய்து கொண்டது போல இதுவும் ஒரு சமூகப் பிரச்சினையாக மாறிவிட முடியும்.'' என சட்ட வல்லுநர் துசித்த அவர்கள் கூறுகின்றார்.

இப்பிரச்சினையை ஆழமாக ஆராய்ந்து தெரிவிக்கும் அவர், இப்பிரச்சினையுடன் பால்நிலைப் பிரச்சினையும் மேலெழுந்துள்ளதாக சுட்டிக்காட்டுகின்றார். ''இக்கடன்களை நூற்றுக்கு நூறு வீதம் பெற்றுக்கொண்டவர்கள் பெண்களாவார். கடன் குழுக்களில் ஆண்கள் இல்லை. கடனை மீள அறவிடும் கம்பனிகள் பெண்களையே துரத்திச் செல்கின்றனர். அதன் விளைவாக கிராமத்துப் பெண்கள் குற்றங்களுக்கு இரையாகியுள்ளனர். உண்மையாகவே ஒருசில கம்பனிகள் இப்பெண்களைத் துஷ்பிரயோகம் செய்தும் வருகின்றனர் எனக் கூறினால் மிகையாகாது ஒருசில பிரதேசங்களில் பெண்களுக்கு எதிராக வழக்குகளையும் தொடுத்துள்ளனர். அவர்கள் தமது கடனை மீள அறவிடுவதற்கு நீதிமன்றத்தை நாடுவதற்கு உரிமையுண்டு. ஆனாலும் நீதிமன்றங்களுக்குச் சென்று தமது கதைகளைக் கூறுவதற்கு இப்பெண்களுக்கு அறிவு போதாமல் உள்ளது. இந்த அசாதாரண வட்டி வீதம் தொடர்பாக எடுத்துக் கூறுவதற்கும், அநீதியான கடன் நிபந்தனைகள் பற்றிக் கூறுவதற்கும். அவ்வாறு பல இடங்களில் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளமையை கூறுவதற்கும் முடியாதுள்ளது, தங்களுக்குத் தெரியாத ஆங்கிலத்தில் உடனடியாக புரியாத விடயங்களை வாசித்துப் புரிந்துகொண்டேன் எனக் கையொப்பமிட்டது ஏன் எனவும் இப்பெண்களுக்குத் தெரியவில்லை. கம்பனிகளைப் போன்று சட்டத்தரணிகளுக்கு பணம் செலவிடுவதற்கும் இவர்களிடம் இயலுமையில்லை. ஆகவே ஒட்டுமொத்த பிரச்சினை தொடர்பாக முறையான அணுகுமுறையில் ஆராய்ந்து கொள்கை ரீதியான நடவடிக்கை எடுப்பதற்குக் கவனம் செலுத்தப்பட வேண்டும்.'' என சட்டத்தரணி துசித்த சிறிவர்தன அவர்கள் சுட்டிக் காட்டுகின்றார்.

## அமைச்சு பெயரளவில் மாத்திரமேயாகும்

கொள்கை ரீதியான தீர்மானமொன்றை எடுப்பதே நுண்நிதிக் கடனைச் செலுத்துவதற்குத் தேவையாக அமையும். அதற்குப் புத்திசாதுரியமான அணுகுமுறை அவசியமாவதுடன், தற்போது காணப்படும் பிரச்சினைகள் தொடர்பாக உண்மையான

தகவல்களும் தேவையாகும். இக்கம்பனிகள் பதிவு செய்யப்படவில்லையா எனவும், அல்லது அவர்களுக்கு அறவிடுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ள வட்டி வீதம், கடன் வழங்கும் நிபந்தனைகள் போன்றவற்றை விசாரிக்கும் போது அவற்றுக்குப் பதில் கிடைப்பதில்லை. அதனாலேயே தகவல் அறிதல் சட்டத்தைப் பன்படுத்தி தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. தற்போது நுண்நிதி நடவடிக்கைகள் தொடர்பாக பிரிதான இராஜாங்க அமைச்சு இருப்பதால் அவர்களிடம் குறித்த தகவல்களைக் கோரி விண்ணப்பிக்கும் போது, குறித்த விடயங்கள் பற்றித் தமக்குத் தெரியாது எனவும், அதுதொடர்பாக நிதி அமைச்சிடம் கோருமாறும் தெரிவிக்கப்பட்டது. அதற்குப் பதிலளித்த கந்தளாய் பிரதேச சபையின் பெண் உறுப்பினரான சீதா ரஞ்சனி அவர்கள் கூறியதாவது: நுண்நிதி தொடர்பான இராஜாங்க அமைச்சு வெறுமனே உருவாக்கப்பட்டுள்ள பிரயோசனமற்ற பெயர்ப்பலகை மாத்திரமே எனத் தெரிவித்தார். குறைந்தது இக்கடன்களை வழங்குதல் மற்றும் அறவிடுதல் தொடர்பாக இற்றைப்படுத்தப்பட்ட தரவுத்தொகுதியாவது நிறுவனத்திடம் இல்லை என்பது தெளிவாகின்றது. குறிப்பாக கடன் ஒழுங்குபடுத்தல் மற்றும் மக்களுக்கு நிவாரணம் வழங்கல் பற்றி வழங்கிய தேர்தல் வாக்குறுதிகளுக்கமைய உருவாக்கப்பட்ட இராஜாங்க அமைச்சிடம் போதுமானளவு தகவல் இல்லையெனின் மூன்று வருடங்கள் கடந்தும் கொள்கை ரீதியான தீர்மானத்தை எடுப்பதற்கான ஒரு அணுகுமுறையைக் கூட அதிகாரிகள் எடுக்க முயற்சிக்கவில்லையெனத் தெரிய வருகின்றது.

மத்திய வங்கிக்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல் விண்ணப்படிவங்களுக்கு பிரதி ஆளுநர் கே.எம்.எம். சிறிவர்தன அவர்கள் தகவல் அலுவலராக பதில் அனுப்பியுள்ளார். அவர் சுட்டிக்காட்டிவாறு, 2016 ஆம் ஆண்டு 06 ஆம் இலக்க நுண்நிதிச் சட்டத்திற்கமைய வெளியிடப்பட்டுள்ள 2019 ஆம் ஆண்டு 02 ஆம் இலக்க சட்டத்தின் ஏற்பாடுகளையே கவனத்தின்கொள்ள வேண்டும். அதற்கமைய, நுண்நிதி நிறுவனங்கள் தமது கடன்களுக்காக அதன் ஏனைய அனைத்துக் கட்டணங்கள் உள்ளடங்கலாக நூற்றுக்கு முப்பந்தைந்து வீதத்திற்கு அதிகரிக்காத வட்டியையே அறிவிட முடியும். அவ்வாறே அனுமதிப்பத்திரம் கொண்ட நிதிக் கம்பனிகளுக்கும் ஏனைய அனைத்துக் கட்டணங்கள் உள்ளடங்கலாக நூற்றுக்கு முப்பந்தைந்து வீதத்திற்கு அதிகரிக்காத வட்டியையே அறவிட முடியும். அது, 2011 ஆம் ஆண்டு 42 ஆம் இலக்க நிதி வர்த்தகச் சட்டம் மற்றும் 2018 ஆம் ஆண்டு 10 ஆம் இலக்க ஏற்பாடுகளுக்கமையவேயாகும். ஆனாலும், இத்தகவல்களுக்கமைய குறித்த கம்பனிகள், சட்டங்களில் குறிப்பிட்டவாறான சட்ட ரீதியான ஒழுங்குவிதிகளுக்கமைய செயற்படத் தவறியுள்ளன. குறிப்பாக கிழக்கு மாகாணத்தில் கடன் வழங்கும் நிறுவனங்கள் மத்திய வங்கியின் நாணய சபையில் பதிவு செய்யப்படாத வெறுமனே கம்பனிச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட வியாபார முயற்சியே ஆகும்.

ஊவா மாகாணத்தை மையமாகக் கொண்டு ஒரு நிறுவனம் பண்டாரவளையில் இருந்து செயற்பாடுகளை மேற்கொண்டு வந்துள்ளது. இவற்றில் ஒருசில நிறுவனங்கள் கூட்டுறவுச் சங்கங்களாக தம்மை அறிமுகப்படுத்திக் கொண்டு பதிவு செய்யப்பட்டிருப்பதால் அவர்களின் தூய்மையற்ற நுண்நிதி மோசடி வியாபாரக் கடன்களால் மூடப்பட்டுள்ளது. ஊவா மாகாணத்தில் அவ்வாறாக மோசமாக செயற்பட்டு வரும் ஒரு நிறுவனம் நாளாந்த வட்டிக்குக் கடன் வழங்குவதுடன், அதன் உரிமையாளர் ஒரு பாராளுமன்ற உறுப்பினர் எனக் கடந்த பாராளுமன்ற அமர்வின் போது எதிர்கட்சியினரால் தெரிவிக்கப்பட்டது. இவ்வாறாக அதிகமான நிறுவனங்கள் நாளாந்த மற்றும் வாராந்த வட்டி வீதத்திற்குக் கடன் வழங்கும் போது வருடாந்த வட்டி வீதம் மத்திய வங்கியின் எல்லையைக் கடந்து செல்வது தெளிவாகின்றது. அதேபோல் அவர்கள் கடன் பெறுபவர்களுடன் மேற்கொள்ளும் ஒப்பந்தம்

ஆங்கில மொழியில் மாத்திரம் இருக்கும் சந்தர்ப்பங்களில் மக்களை ஏமாற்றுவதுடன், அது அரச கரும மொழிகள் சட்டத்தை மீறுவதாகவும் உள்ளது.

தற்போது வெடித்துச் சிதறியுள்ள நுண்நிதி எரிமலை நெருப்பு நீரோட்டத்திலிருந்து மக்களைப் பாதுகாப்பதற்கு பொதுமக்கள் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்வது பற்றி சட்டத்தரணி ருஷ்ட் ஹபிபி அவர்கள் வலியுறுத்துகின்றார். அவர் மேலும், கொள்கை ரீதியான இசைவுத் தீர்ப்புக்காக இலங்கையின் உயர் நீதிமன்றத்தின் உதவியை நாட வேண்டும் எனவும் கூறுகின்றார். "இக்கம்பனிகள் மக்களுடன் மேற்கொண்டுள்ள ஒப்பந்தங்களைப் பார்க்கும் போது, மத்திய வங்கியின் சுற்றுநிருபங்களுக்கு மாறாக நடந்து கொண்டுள்ளமை தெளிவாகின்றது. குறித்த ஒப்பந்தங்களின் நிபந்தனைகளில் கம்பனி அத்துமீறிய வகையில் தனவந்தர்களாவதற்கு முயற்சித்திருக்கின்றமையும், அவ்வாறு செய்துள்ளமையும் காணக்கூடியதாகவுள்ளது. அது சட்ட விரோதமானதாகும். கூடுதலான கம்பனிகள் ஒழுங்குறுத்தப்படுவதில்லை. பதிவு செய்யப்படுவதில்லை. பொலிசாரும் இதனை குற்றவியல் குற்றமாகக் கருதுவதில்லை. அதனால் பொதுமக்களின் முறைப்பாடுகளை ஏற்றுக்கொள்வதில்லை. ஆனாலும் இது தொடர்பாக அதிகாரிகளின் கண்கள் திறக்கப்படுவதில்லை. பரந்தளவிலான சட்ட ரீதியான செயன்முறைக்குச் சென்று மாற்றத்திற்கு வழிவகுக்க வேண்டும். மக்கள் என்ன செய்ய வேண்டும், நிதி தொடர்பான குறைகேள் அதிகாரிக்கு எழுதுதல் வேண்டும். அதேபோல் மத்திய வங்கிக்கு குறித்த ஒவ்வொரு கம்பனிகளைப் பற்றிய தகவல்களைப் பெறுவதற்கு, மேன்மேலும் தகவல் விண்ணப்பங்களை சமர்ப்பிக்க வேண்டுமெனவும் நான் கூறுகின்றேன். அவை பொதுமக்களுக்கு வெளிப்படையானதாக அமைய வேண்டும். விடயங்களை மூடிமறைத்து கொள்கைகளை மாற்ற முடியாது. அதிகமான கம்பனிகள் தங்களுடைய ஒப்பந்தங்களை ஆங்கில மொழியில் தயாரித்துள்ளன. சிங்களம் மற்றும் தமிழ் மொழியில் இருந்தாலும் மக்களுக்கு புரியாத கடும் சொற்களைப் பயன்படுத்துகின்றனர். இவற்றை ஒட்டுமொத்த சமூகமும் கேள்விக்குட்படுத்தும் அளவுக்குச் செல்ல வேண்டும். இறுதியில் மக்களுடைய அழுத்தங்கள் தொடர்பாக வழக்குத் தொடர்வதாயின் சரியான தகவல்கள் தேவையாகும். அதனால்தான் தகவல் அறியும் சட்டத்தைப் பயன்படுத்துமாறு வலியுறுத்துகின்றேன்." என சட்டத்தரணி ருஷ்ட் ஹபிபி அவர்கள் கூறுகின்றார்.

அவர் சுட்டிக்காட்டுகின்ற வகையில் வழக்குத் தொடுப்பதற்கு தகவல்கள் அவசியமாகும். முற்காலத்தில் அது மிகவும் சிரமமான விடயமாகும். அதிகமான தகவல்கள் பூட்டுப் போட்டு மூடப்பட்டிருந்ததுடன், அவற்றை அணுகுவதற்கான இயலுமையும் மக்களுக்கு இருக்கவில்லை. தற்போது எந்தவொரு தகவல் களஞ்சியத்தின் பூட்டும் திறக்கக்கூடிய திறப்பும் மக்களின் கைகளில் உள்ளது. அது RTI எனும் தகவல் அறிதல் உரிமையாகும். அத்திறப்பைப் பயன்படுத்தி தங்களுக்குத் தேவையான தகவல்களை பெற்றுக்கொள்வது மக்களின் பொறுப்பாகும்.

- **லசந்த டி சில்வா**

---

***லசந்த டி சில்வா :*** *சுதந்திர ஊடக இயக்கத்தின் தற்போதைய ஏற்பாட்டாளர். வெகுசன ஊடகத் துறையில் 22 வருட அனுபவமுள்ள வானொலி, பத்திரிகை மற்றும் இணையத்தள ஊடகவியலாளர். ஊடகப் பயிற்றுவிப்பாளர், இலங்கை வெகுசன ஊடகக் கல்லூரியின் ஆசிரியராகக் கடமையாற்றுபவர். தகவல் உரிமை தொடர்பான செயற்பாட்டாளராக உள்ளதுடன், அது பற்றிய பயிற்சி மாதிரியின் தொகுப்பாளரும் ஆவார். தகவல் உரிமையைப் பயன்படுத்தி ஆய்வு ரீதியான பல கட்டுரைகளை எழுதியுள்ள அவர், அந்த விடயப்பரப்பு தொடர்பில் 60 வானொலி நிகழ்ச்சிகளைத் தயாரித்துள்ளார்.*

# சுங்கத் திணைக்களமும் வழுக்கி வீழ்ந்த ஃபாம் ஒயில் அதிகாரம்

கடந்த தமிழ் சிங்களப் புத்தாண்டுக் காலத்தில் பலகாரம் உண்பதற்கு எதிர்பார்த்திருந்த பிரஜைகளுக்கு தேங்காய் எண்ணெயில் அல்ஃபாடொக்சின் நஞ்சுப்பதார்த்தம் அடங்கியுள்ளது என்ற செய்தியே கிட்டியது. அது இறக்குமதி செய்யப்பட்ட தேங்காய் எண்ணெய் என அதிகாரிகள் கூறினார்கள். அக்காலப்பகுதியில் தேங்காய் எண்ணெய் இல்லாததால் பொதுமக்கள் மரக்கறி எண்ணெயைப் பயன்படுத்துவதற்குத் தீர்மானித்தார்கள். ஆனாலும் அதிகமான மரக்கறி எண்ணெய் வகைகளும் இறக்குமதி செய்யப்படுகின்றவையேயாகும். பொதுவாக எமது நாட்டில் சந்தையில் மரக்கறி எண்ணெய் என அழைக்கப்படும் எண்ணெய் வடிக்கப்படும் ஃபாம் ஒயில் ஆகும். செம்பணை (முள்ளுத் தேங்காய்) செய்கை அதிகளவில் இன்மையால் இலங்கையில் ஃபாம் ஒயில் இறக்குமதி செய்வதற்கு நேரிட்டுள்ளது.

இலங்கையில் வருடாந்தம் கிட்டத்தட்ட 165,000 மெட்ரிக்தொன் ஃபாம் ஒயில் உற்பத்தி செய்யப்படுகின்றது. குறிப்பாக இரண்டு கம்பனிகளால் உற்பத்தி செய்யப்படும் அவ் உற்பத்தியை வறிய மக்களின் பாவனைக்கு சந்தைக்கு விடாமல் வேறு உற்பத்திகளுக்காக பயன்படுத்துவதாலும், ஒருபகுதி ஏற்றுமதி செய்யப்படுவதாலும் அதிகளவில் எமக்கு இறக்குமதி செய்ய நேரிடுகின்றது.

அதேபோல் சுற்றுலா விடுதிகள் மற்றும் ஹோட்டல்கள் மற்றும் அதிகளவில் தேங்காய் எண்ணெயைப் பயன்படுத்தி தயாரிக்க முடியாத உணவு வகைகளான ஐஸ்கிறீம், சொக்கலட், பிஸ்கட் போன்ற உணவுகளைத் தயாரிக்கும் கம்பனிகளும் வீதியோரங்களில் வடை, பட்டிஸ் போன்ற சிற்றுண்டிகளை தயாரித்து விற்கும் வியாபாரிகளும் ஃபாம் ஒயிலைப் பயன்படுத்துகின்றனர். அதற்கமைய இலங்கையில் அத்தியாவசியப் பொருளாக உள்வாங்கப்பட்டுள்ள ஃபாம் எண்ணெயை இறக்குமதி செய்வதற்காக குறிப்பிடத்தக்களவு அந்நியச் செலாவணியை செலவிட வேண்டியுள்ளது. அதற்கமைய 2021 ஆம் ஆண்டில் 185,000 மெற்றிக்தொன் ஃபாம் ஒயில் இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. 2020 ஆம் ஆண்டில் 95,000 மெற்றிக்தொன்களும், 2019 ஆம் ஆண்டில் 120,000 மெற்றிக்தொன்களும் இறக்குமதி செய்யப்பட்டுள்ளதெனப் பதிவாகியுள்ளது. இவ் ஆண்டில் ஒரு மெற்றிக்தொன் ஃபாம் ஒயில் உலகச் சந்தையில் 950 அமெரிக்க டொலர்களுக்கு விற்பனை செய்யப்படுகின்றது.

ஆகவே இவ்வாறு இறக்குமதி செய்யப்படுகின்ற ஃபாம் ஒயிலுக்காகச் செலுத்தியுள்ள டொலர்கள் ஏராளமாகும். டொலர் ஒன்றுக்கு செலுத்தும் ரூபாய்களும் தற்போது இலங்கை முகங்கொடுத்திருக்கின்ற டொலர் பிரச்சினையைக் கருத்தில் கொள்ளும் போது ஃபாம் ஒயிலிலும் பொதுமக்கள் சிரமங்களை எதிர்கொண்டுள்ளதுடன், மோசடி வியாபாரிகள் ஃ பாம் ஒயிலிலும் மோசடி செய்திருக்கின்றார்கள் என கோப் குழு கூறுகின்றது. இது மோசடி எனக் கூறுவதற்குக் காரணம், கோப் குழு கூறிய விடயங்களுக்கமைய இம்மோசடியுடன் இலங்கை சுங்கத்திணைக்களத்தின் பெயரும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## கோப் குழுவில் வெளிப்படுத்தப்பட்ட உண்மைகள்

சுங்கத் திணைக்களத்தில் எவரது கால்களிலாவது எண்ணெய் தேய்க்கப்பட்டுள்ளதா? எனச் சந்தேகிப்பதற்குக் காரணம் கோப் குழுவின் அறிக்கையாகும். 2013 ஆம் ஆண்டு தொடக்கம் 2016 ஆம் ஆண்டு வரை எமது நாட்டுக்கு ஃபாம் ஒயில் இறக்குமதி செய்த இரண்டு கம்பனிகளால் இலங்கை சுங்கத் திணைக்களம் 6,130 மில்லியன் ரூபாய்களை இழந்துள்ளது என கோப் குழுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2013 ஆம் ஆண்டு தொடக்கம் 2016 ஆம் ஆண்டு வரை முறையாக 142,000, 162,000, 121,000, 195,000 மெட்ரிக்தொன் ஃபாம் ஒயில் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. திடீரென்று 2017 ஆம் ஆண்டு 217,000 மெட்ரிக்தொன்களாக அதிகரிப்பதைக் காணலாம்.

எவ்வாறாயினும், இக்காலத்தில் குறித்த இரண்டு கம்பனிகளின் நடவடிக்கைகளால் இலங்கை சுங்கத் திணைக்களத்திற்கு 6,130 மில்லியன் ரூபாய்கள் இழக்கப்பட்டுள்ளதுடன், குறித்த இழப்பு எவ்வாறு ஏற்பட்டதென விசாரணை செய்ய வேண்டியது முக்கிய விடயமாகவுள்ளது. அப்படியானால் உண்மையாகவே இத்தொகை இழக்கப்பட்டது, இலங்கை சுங்கத் திணைக்களத்திற்கு அல்ல மாறாக நாட்டுக்கும், மக்களுக்கும் இழக்கப்பட்ட தொகையாகும். கோப் குழு உண்மையை வெளிப்படுத்தும் போது குறித்த இரண்டு கம்பனிகளும் பெயர் மற்றும் குறித்த தொகை இழக்கப்பட்ட விதம் பற்றியும் வெளிப்படுத்தவில்லை. இந்த நட்டம் தொடர்பாக சுங்கத் திணைக்களத்தின் கணக்காய்வு வினாவுகையில் குறிப்பிடப்பட்டுள்ளதாக கோப் குழு குறிப்பிட்டுள்ளது.

## தகவல் விண்ணப்ப படிவமொன்று

அவ்வாறான பின்னணியில் இக்கட்டுரையாளர் 2016 ஆம் ஆண்டு 12 ஆம் இலக்க தகவல் அறிதல் சட்டத்தைப் பயன்படுத்துவதற்கு நேரிட்டுள்ளது. அரச நிறுவனமான இலங்கை சுங்கத் திணைக்களத்திற்கு தகவல் சட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் விசாரணைகளுக்கு பதிலளிப்பதற்கான கடப்பாடுள்ளது. அதற்கமைய, சமர்ப்பிக்கப்பட்ட தகவல் விண்ணப்பத்தில் கோப் குழு சுங்கத் திணைக்களத்திற்கு ஏற்பட்டுள்ள நட்டம் தொடர்பாக அறிந்துள்ளீர்களா? என வினவப்பட்டிருந்தது. கோப் குழு குறிப்பிடும் குறித்த இரண்டு கம்பனிகள் யாவை? குறித்த கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருப்பது என்ன? நட்டத்தைத் தடுப்பதற்கு ஏன் நடவடிக்கை எடுக்கப்படவில்லை? மற்றும் தற்போது குறித்த நட்டத்தை ஈடுசெய்வது எவ்வாறு? போன்ற விடயங்கள் வினவப்பட்டிருந்தது. இத்தகவல்களுக்கு சுங்கத்தின் கொள்கைத் திட்டமிடல் மற்றும் ஆய்வுப் பிரிவின் சுங்க அதிகாரியாகப் பணிபுரிபவரும், தகவல் அலுவலர் II பதவி வகிக்கும் எம்.ஏ.ஏ. சாந்த அவர்கள் பதிலளித்திருந்தார். 2021.01.07 ஆம் திகதிய அவரது பதிலில் குறிப்பிட்டவாறு, தகவல் விண்ணப்பம் இலங்கை சுங்கத் திணைக்களத்தின் பணிக்குழாம் சேவைப் பிரிவுக்கு அனுப்பப்பட்டுள்ளதெனவும், அவர்கள் பதில் கூறிய பின்னர் அறியத் தருவதாகவும் தெரிவிக்கப்பட்டிருந்தது. மேற்குறிப்பிட்ட பணிக்குழாம் சேவைப் பிரிவு வழங்கிய பதிலாக,

"குறித்த கோரப்பட்டுள்ள தகவல்கள் தொடர்பாக பாராளுமன்ற அரச கணக்குகள் தொடர்பான செயற்குழுவில் கலந்துரையாடப்பட்டு வருவதுடன், இச்சம்பவம் தொடர்பான விசாரணைகள் முடிவடைந்த பின்னர் குறித்த தகவல்களை வழங்குவதற்கு இயலுமை கிட்டுமென விண்ணப்பதாரிக்கு அறிவிப்பது பொருத்தமானதாக அமையுமென்பதை தயவுடன் தெரிவித்துக்கொள்கின்றேன்." எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. இவ்வாறு பயனற்ற பதிலை வழங்கும் போது இரண்டு விடயங்களை திட்டமிட்டு மறந்துள்ளனர். முதலாவதாக அரச கணக்குகள் தொடர்பான செயற்குழுவில் கலந்துரையாடப்படுவதால் தகவல் வழங்கப்பட முடியாது எனச் சட்டத்தில் எந்தவொரு உறுப்புரையிலும் குறிப்பிடப்படவில்லை.

விசாரணை இடம்பெறுகின்றது என நிறுவன ரீதியான தர்க்கம் முன்வைக்கப்பட்டாலும், கோரப்படும் தகவல்கள் விசாரணைகளுக்கு எந்தவொரு தடைகளையும் ஏற்படுத்தாது என்பது தெளிவாகும். இங்கு ஏதோவொன்றை மறைப்பதற்கு முயற்சிப்பது தெளிவாகின்றது. குறித்த பதில்களின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட மேன்முறையீட்டுக்கு வழங்கிய பதிலுடன் தெளிவாகின்றது.

## சுங்கத் திணைக்களத்தின் பொய்த்திரை கிழிக்கப்பட்டது

2016 ஆம் ஆண்டு தகவல் அறிதல் உரிமை தொடர்பான சட்டத்தில் பிரஜைகளிடமுள்ள உரிமையே வென்றெடுக்கப்படுகின்றது. அது அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதனைப் பறித்தெடுக்க முடியாது. சட்டத்தின் ஐந்தாம் உறுப்புரையின் கீழ் மட்டுப்பட்டுப்படுத்தப்பட்ட தகவல்கள் தவிர்ந்த ஏனைய எந்தவொரு தகவல்களை வழங்காதிருத்தல் அல்லது வழங்க மறுப்பதற்கு சுங்கத் திணைக்களத்திற்கோ அல்லது வேறெந்த நிறுவனத்திற்கோ அதிகாரம் வழங்கப்படவில்லை. அதற்கமைய, மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் போது பாராளுமன்ற உறுப்பினர் சரித ஹேரத் அவர்கள், அரச கணக்குகள் தொடர்பான செயற்குழுவில் கலந்துரையாடப்படுவதால் எந்தவொரு தகவலையும் குறித்த காரணத்தைக் குறிப்பிட்டு தாமதிக்க முடியாதெனக் குறிப்பிட்டுக் கூறினார். அதற்கமைய, தகவல்களை வழங்குவதற்கு தாமதிப்பது குறித்த காரணம் நியாயமற்றதெனவும் குறிப்பிட்டும், வேறு விடயங்களின் கீழ் அரச கணக்குகள் தொடர்பான செயற்குழுவில் கலந்துரையாடப்படுவதால் எந்தவொரு தகவலையும் குறித்த காரணத்தைக் குறிப்பிட்டு தாமதிக்க முடியாதெனவும் கோப் குழுவின் தலைவரான பாராளுமன்ற உறுப்பினர் சரித ஹேரத் அவர்கள் கூறிய விடயங்களைக் குறிப்பிட்டுக் பெயர் குறித்துரைக்கப்பட்ட தகவல் அலுவலருக்கு மேன்முறையீடு செய்வதற்கு கட்டுரையாளர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

சுங்கத்தின் பொய்த்திரை இம்மேன்முறையீட்டுக்குப் பதிலளிக்கும் போது தெரிய வந்தது. 2021 பெப்ரவரி மாதம் 15 ஆம் திகதி கிடைக்கப்பெற்ற எழுத்துமூல மேன்முறையீட்டுக்கு ஒரு மாதத்திற்கும் அதிகமான காலத்தின் பின்னர் அதாவது 2021 மார்ச் மாதம் 17 ஆம் திகதி பதில் அனுப்பப்பட்டிருந்தது. குறித்த கடிதத்தில் கையொப்பமிட்டிருப்பது, சுங்கப் பணிப்பாளர் (மேன்முறையீடு) எனக் குறிப்பிட்டு பெயர் குறித்துரைக்கப்பட்ட அலுவலர் டப்.ஆர்.டீ. சில்வா ஆவார். தொடர்ந்து கோரப்பட்டுள்ள தகவல்கள் தகவல் சட்டத்தின் 5(1)(ஊ) உப உறுப்புரையின பிரகாரம் நிராகரிப்பதாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. அதனை நிராகரிப்பதற்கான காரணமாக, "தாங்கள் கோரிய தகவல்களிலுள்ள விடயங்கள் வரிகள் மேன்முறையீட்டு ஆணைக்குழுவில் விசாரணை இடம்பெறுவதால்" குறித்த தகவல்களை வழங்குவதை நிராகரிப்பதாகக் குறிப்பிடப்பட்டிருந்தது.

இங்கு அரச கணக்குகள் தொடர்பான செயற்குழுவில் கலந்துரையாடப்படுவதால் தகவல்களை வழங்க முடியாதென்ற காரணத்தைக் குறிப்பிடாமல் இருப்பதற்கு சுங்கத் திணைக்களம் தந்திரோபாயமாகச் செயற்பட்டுள்ளது. அதாவது பாராளுமன்ற உறுப்பினர்

அவர்கள் கூறிய விடயங்களைக் குறிப்பிட்டு மேன்முறையீடு செய்யப்பட்டமையாலாகும். அவ்வாறே இதற்கு முந்திய பதிலளிப்புக்களில் சுங்கத் திணைக்களம் வரிகள் மேன்முறையீட்டு ஆணைக்குழு தொடர்பாகக் குறிப்பிட்டிருக்கவில்லை.

## மூடி மறைப்பதற்கு தேவையிருப்பது யாருக்கு?

தகவல் சட்டத்தில், சுங்கத் திணைக்களம் கூறுகின்ற இந்த 5(1)(ஊ) உப உறுப்புரையில் கூறப்படுவது என்ன? குறித்த உறுப்புரையில் குறிப்பிடப்படுவதாவது, ஏதேனும் தகவலொன்றை வெளியிடுவதன் மூலம் ஏதேனுமொரு குற்றத்தைத் தடுப்பதற்கோ அல்லது அதுதொடர்பான ஆராய்வுகளுக்கு அல்லது குற்றவாளிகளுக்கு எதிராக வழக்கு தொடர்வதற்கு மோசமான வகையில் பாதிக்கின்ற எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அத்தகவல் வழங்குவதை நிராகரிக்க முடியும். ஆனாலும் சுங்கத் திணைக்களம் உண்மைக்குப் புறம்பான வாதத்தையே இங்கு முன்வைக்கின்றது. அது ஏதேனுமொரு தரப்பினரை மீட்டெடுப்பதற்கான முயற்சியாகும். அவர்கள் கூறுகின்ற வகையில் இங்கு வரி மேன்முறையீட்டு ஆணைக்குழுவில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள மேன்முறையீட்டு விசாரணைக்குட்படுத்துவதாகும். இது தொடர்பாகத் தெளிவுபடுத்தும் சட்டத்தரணி ஜகத் லியனஆராச்சி அவர்கள் சுட்டிக்காட்டுகின்ற வகையில், வரிகள் மேன்மறையீட்டு ஆணைக்குழுவுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள மேன்முறையீடு என்பதால் சுங்கத் திணைக்களம் குறித்த உறுப்புரையின் கீழ் தகவல்களை வழங்குவதை நிராகரிப்பது நியாயமற்றது எனக் குறிப்பிடுகின்றார். அவ்வாறே இங்கு மேன்முறையீடு செய்யப்படுவது அரச கணக்குகள் தொடர்பான செயற்குழு கூறுகின்ற வகையிலும், கணக்காய்வு அறிக்கையில் கம்பனிகளின் பெயர்களைக் குறிப்பிட்டுள்ள பின்னணியில் சுங்கத் திணைக்களம் குறித்த கம்பனிகளின் விபரங்களை வெளியிடுவதையே மூடி மறைப்பதற்கு முயற்சிக்கின்றது. அதேபோல் சட்டத்தரணி ஜகத் லியனஆராச்சி அவர்கள் குறிப்பிடுகின்ற வகையில், ஏதெனுமொரு வகையில் இதுதொடர்பாக வழக்கு நடவடிக்கைகளை ஆரம்பித்திருந்தாலும் நீதிமன்ற நடவடிக்கைகளின் போது வெளியிடப்படும் விடயங்கள் ஆவதால் இங்கு கோரப்படுகின்ற தகவல்களை வழங்காதிருப்பதற்குக் காரணமாக அமையாது.

இறுதியாக இலங்கை சுங்கத் திணைக்களம் எவரோ ஒருவரின் கால்களில் எண்ணெய் பூசுவதற்கு சென்று எண்ணெயிலேயே வழுக்கி விழுந்துள்ளது. ஆனாலும் இவ்வாறு வீழ்வதாலும் பொதுமக்களே பாதிக்கப்படுகின்றனர்.

ஏதோவொரு கம்பனியின் கீர்த்தியைப் பாதுகாப்பதற்கு முயற்சிக்கும் அதிகாரிகளின் இவ்வாறான நடவடிக்கைகளால் பொதுமக்களின் மனவிருப்புக்களே இல்லாமல் போகின்றன. சுங்க அதிகாரிகள் பொதுமக்களுடைய பணத்திலேயே சம்பளம் பெறுகின்றனர். அதனாலேயே அப்பணத்திற்குப் பொறுப்புக் கூறும் பின்னணியை ஏற்படுத்த வேண்டும். கடந்த காலங்களில் ஐக்கிய இராச்சியத்திலிருந்து இலங்கைக்குக் கொண்டு வரப்பட்ட மருத்துவக் கழிவுகள் பற்றிய உரையாடல் தோன்றியது. அவை மீளத்திருப்பி அனுப்பப்பட்டது. குறித்த வெளிநாட்டுக் கழிவுகள் தொடர்பாக எல்லோருடைய கண்களும் திறக்கப்பட்டமைக்கான காரணம், அதனைக் கொண்டு வந்தவர் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடப் போவதாகக் கூறியமையாலாகும். அவர் அவ்வாறு கூறாவிட்டால் இவர்கள் இன்னும் தூங்கிக் கொண்டிருப்பர். சுங்கம் பொதுமக்களுக்கும் நாட்டுக்கும் அவசியமான நிறுவனமாகும். ஆனாலும் அதன் சீருடையைப் போலவே செயற்பாடுகளும் தூய்மையாக இருப்பதற்கான கொள்கை ரீதியான மாற்றமொன்று தேவையாகும்.

- **லசந்த டி சில்வா**

## மொனராகலை தேர்தல் மனு

# தகவல் உரிமையினூடாக வெற்றிபெற்ற வரலாற்றுச் சிறப்பு மிக்க வழக்கு

"ஒரு துளி நீர் இல்லாத மதுருகெட்டியவின் அப்பாவி மக்களுக்கு எழுபது இலட்சம் ரூபா செலவில் குடிநீர் வசதிகளைப் பெற்றுக் கொடுத்தல்" இது பாராளுமன்றத் தேர்தலுக்கு போட்டியிடும் வேட்பாளர் ஒருவர் தமது பதவிக் காலத்தில் பொது மக்களின் பணத்தில் மேற்கொண்ட பணிகளின் பட்டியலைக் கூறும் பிரசார பத்திரத்திலுள்ள ஒரு வாக்கியமல்ல. 2018 பெப்ரவரி 10 ஆம் திகதி நடாத்தப்பட்ட உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கு முன்னதாக மொணராகலை பிரதேச சபைக்கு பொதுஜன பொரமுண கட்சியில் போட்டியிட்ட வேட்பாளரொருவராகிய தரங்க திசாநாயக்க தமது புகைப்படத்தினையும் உள்ளடக்கியதாக தயாரித்து பகிர்ந்தளித்த பிரசார பத்திரத்தில் இருந்தவொரு வாக்கியமாகும். தரங்க போட்டியிட்டதோ மொணராகலை மதுருகெட்டிய வட்டாரத்தின் ஒரு வேட்பாளராகவே. எனினும் அந்த வட்டாரமானது நாட்டின் வேறு எந்தவொரு உள்ளூ ராட்சி மன்ற வட்டாரத்தின் தேர்தலையும் மிஞ்சும் அளவிற்கு முக்கியத்துவம் வாய்ந்தவொரு பிரதேசமோ அல்லது அரசியல் ரீதியாக வெற்றி கொள்வதில் தீர்மானமிக்கதான அதிகார முக்கியத்துவம் வாய்ந்தவொரு பிரதேசமும் அல்ல.

"ஏன் அப்படி நடந்தது என்று புதுமையாக உள்ளது. பிரதேச சபைத் தேர்தலொன்றின் போது வேட்பாளரொருவர் இந்தளவு பணத்தொகையை செலவு செய்தமை, தமது உயர் அரசியல் அதிகாரிகள் குறித்த பிரதேச சபையின் தலைவர் பதவியை பெற்றுத் தருவதாக உறுதியளித்திருந்தாலும் செலவழித்தது மிக அதிகமான தொகை என்பது மட்டுமின்றி மீள அப்பணத்தினை பெற்றுக் கொள்ளவதற்கு முறையற்ற தவறான வழிகள் மற்றும் கொடுக்கல் வாங்கல்களை செய்ய வேண்டியது அவசியமாகும்." அவ்வாறு தெரிவித்தது, தேர்தல் கண்காணிப்பு அமைப்பாகிய பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டிஆரச்சி அவர்களே. தேர்தல் பிரசார செலவுகளை கட்டுப்படுத்தும் வகையிலான முறையான சட்டக் கட்டமைப்பொன்று உருவாக்கப்பட்டிராத நாட்டில் மொணராகலை மதுருகெட்டிய வட்டாரத்தில் இடம்பெற்ற தேர்தல் ஊழல்கள் தொடர்பிலான நீதிமன்ற நடவடிக்கைகள் வெற்றிகரமாக நிறைவடைந்ததன் பின்னர் சுதந்திர ஊடக அமைப்பு அழைத்திருந்த ஓர் விவாதத்தின் போது ரோஹண ஹெட்டிஆரச்சி அவர்கள் தெரிவித்த விடயமாவது, 2018 ஆம் ஆண்டில் நடைபெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தலில்

மொணராகலை மதுருகெட்டிய வட்டாரத்தின் மக்கள் பிரதிநிதியாக தெரிவு செய்யப்பட்ட தரங்க திசாநாயக்க அண்ணளவாக 350 இலட்சம் ரூபாயையேனும் செலவு செய்திருப்பார் என்பதாகும். உன்னிப்பாக கவனிக்கின்ற சாதாரண ஒரு பிரஜைக்கு கூட இதன் போது உறுதிப்படுத்தக்கூடியதொரு விடயம் உள்ளது. அதாவது, முக்கியத்துவம் எதுவுமே இல்லாத தேர்தல் தொகுதி ஒன்றுக்காக இந்தளவு பாரிய பிரசார நிதித் தொகையை செலவு செய்து வெற்றியீட்டியதன் பின்னர் அந்நிதியை மீள உழைப்பதற்காக பொருத்தமான முறையொன்றினை குறித்த வேட்பாளர் திட்டமிடுவார் என்பதாகும். பெரும்பாலும் அது உச்சகட்ட ஊழலின் ஆரம்பமாக அமைவது இலங்கை அரசியலின் அரிதான அனுபவமாகும். எவ்வாறெனினும் நடந்த அந்த பின்புல ஊழலை ஒருபுறம் வைத்துப் பார்க்கின்ற போதும் கூட இந்த தேர்தலின் போது வேட்பாளராகிய தரங்க மேற்கொண்டுள்ளதோ தேர்தல் ஊழலாகும்.

## தேர்தல் ஆணைக்குழுவில் முறைப்பாடு

2018 இல் நடைபெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் அவர் எல்லையற்ற வகையில் மேற்கொள்கின்ற பொருட்களை பகிர்ந்தளித்தல் மற்றும் நிதியை செலவு செய்தல் தொடர்பில் முதன் முதலில் தேர்தல் ஆணைக்குழுவில் தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையத்தின் மஞ்சுள கஜநாயக்க முறைப்பாடு செய்தார். ‘‘தேர்தலுக்கு முன்னர் 2018 ஜனவரி 20 ஆம் திகதி இந்த வேட்பாளர் எல்லையற்ற வகையில் பொருட்களை பகிர்ந்தளித்தும் பணத்தை செலவு செய்தும் வருவதாக நாம் முறைப்பாடு ஒன்றினை செய்தோம். நாம் அந்த முறைப்பாட்டில் கூறியது, அவர் தேர்தல் சட்டங்களை மீறும் வகையில் வாக்காளர்களுக்கு இலஞ்சம் வழங்கியும் உபசரிப்பு செய்தும் வருகின்றார் என்று’’ மஞ்சுள பிறகு அது தொடர்பில் தெரிவித்தார். 2018 பெப்ரவரி 09 ஆம் திகதி தேர்தலுக்கு ஒருநாள் எஞ்சிய நிலையில் பவ்ரல் அமைப்பும் தொடர்ந்து அதற்கு இணையான முறைப்பாடு ஒன்றினை சமர்ப்பித்துள்ளது. எனினும் இந்த முறைப்பாட்டின் விசாரணை தொடர்பிலான நீதிமன்ற அறிக்கைகளில் குறிப்பிடப்படுவது, ‘‘குறித்த முறைப்பாடு தொடர்பில் தேர்தல் ஆணையாளர் விரிவான விசாரணையொன்றினை மேற்கொண்டிராத அதேவேளை கண்காணிப்பிற்குச் சென்ற அதிகாரிகளும் சரளமான வகையிலேயே செயற்பட்டுள்ளனர்’’ என்றவாறாகும். சில வேளைகளில் வேட்பாளரான தரங்கவின் அரசியல் தொடர்புகள் அதற்கான காரணங்களாக அமைந்ததா என்பதனை அவ்வலுவலர்கள் மாத்திரமே அறிவார்கள்.

## மக்களது விருப்பத்தினை பணத்தைக் கொண்டு வாங்குவதற்கு எதிராக

இந்த தேர்தலின் போது தரங்கவின் எதிர்தரப்பு வேட்பாளராகிய ஐக்கிய தேசியக் கட்சியில் போட்டியிட்ட சுனில் ஷாந்த வணசிங்க பெற்றுக் கொண்ட விருப்பு வாக்குகளின் அடிப்படையில இரண்டாம் இடத்தைப் பெற்றமையினால் பிரதேச சபைக்கு தெரிவு செய்யப்படவில்லை. அந்த சந்தர்ப்பத்தின் போது பவ்ரல் மற்றும் தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையம் என்பன உதவித் தேர்தல் ஆணையாளரிடம் முறைப்பாட்டினை சமர்ப்பித்திருந்த அதேவேளை குறித்த தேர்தல் ஊழல் தொடர்பில் மொணராகலை மேல்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவிருந்த வழக்கில் முறைப்பாட்டாளர்களாக செயற்படுவதற்கு இணக்கம் தெரிவித்தன.

அதனடிப்படையில் தேர்தல் மனுத் தலைப்பிலான 01-2018 வழக்கு இலக்கத்தின் கீழ் மொணராகலை மேல்நீதிமன்றத்தில் வழக்கொன்று தாக்கல் செய்யப்பட்டது. மனுதாராகிய

சுனில் ஷாந்த வனசிங்க சாட்சிகளை சமர்ப்பித்து தெரிவித்ததாவது, முதலாவது பிரதிவாதியாகிய தரங்க திசாநாயக்க உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 82 (ஈ) பிரிவில் விபரிக்கப்பட்டவாறான ஊழல் செயற்பாடுகளுள் உள்ளடங்கும் ''இலஞ்சம்'' என்ற குற்றத்தினை புரிந்துள்ளார் என்பதாகும். அதன்படி இத்தேர்தலின் போது 'தரங்க திசாநாயக்க அல்லது அவர் சார்பில் வேறொரு நபர் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ ஏதேனும் பணத்தை அல்லது பெறுமதி கொண்ட பிரதி பயனை, வழங்குதல் அல்லது பரிசு, பணத்தொகையோ, கடனோ, வாக்குறுதியோ பெற்றுக் கொடுக்கும் அல்லது அவ்வாறு பெற்றுக் கொடுக்க உடன்படுவதன் மூலமாக வாக்கினைப் பெற்றுக் கொள்வதற்காக முயற்சி செய்தமை'' என்ற விடயம் நிரூபிக்கப்பட்டதனூடான உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 82 (ஈ) பிரிவின் (உ) உப பிரிவில் தண்டனை பெறுவதற்கான குற்றத்தினை புரிந்துள்ளார் என்பது தீர்மானிக்காப்படுவதற்கு உரியதாகவிருந்தது.

## நீர் இணைப்புகளுக்கு பணம் செலுத்துதல்

நீதிமன்றின் முன்னிலையில் தாம் கூறுகின்ற விடயங்களை உறுதிப்படுத்துவதற்கு முயற்சித்தவராக சுனில் ஷாந்த வனசிங்க சாட்சியங்களை தொகுக்கும் நடவடிக்கையினை இந்த வழக்கின் ஆரம்பத்திலிருந்தே காணக்கூடியதாகவிருந்தது. முதலாவது பிரதிவாதியாகிய தரங்க திசாநாயக்க மதுருகெட்டிய பிரதேசத்தின் வாக்காளர்களுக்கு பணம் மற்றும் பொருட்களை வழங்கியதற்கு மேலதிகமாக வேறு இலஞ்சத்தினை பெற்றுக் கொடுத்த விதம் தொடர்பில் அவர் தெளிவாக குறிப்பிட்டுள்ளார். விசேடமாக குறித்த தேர்தல் வட்டாரத்தில் நீர் இணைப்புகள் இல்லாத நபர்களுக்காக நீர் இணைப்புகளை பெற்றுக் கொடுப்பதற்காக பிரதிவாதி தமது பணத்தினைக் கொண்டு பணச் செலுத்தல் செய்ததாக மிகத் தெளிவாக நிரூபிக்கப்பட்டுள்ளது. பின்னர் வெளிப்படுத்தப்பட்ட விடயமாவது, தரங்க சார்பாக நீர் வசதிகளை சுமார் 30 பயனாளிகளுக்காக 812811402ஏ என்ற தேசிய அடையாள அட்டை இலக்கத்தினைக் கொண்ட அரச அலுவலர் ஒருவர் வங்கிக்குச் சென்று பணம் செலுத்தியுள்ளார் என்பதாகும். மொணராகலை மாவட்ட வைத்திய உத்தியோகத்தர் அலுவலகத்தில் பணியாற்றும் ஒருவராகிய மேற்குறித்த நபர் தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்க ஒத்துழைப்பு நல்கிய ஒருவருமாவார். நீதிமன்ற அறிக்கைகளின் படி அரச ஊழியரான அநுர ஷாந்த குமார என்பவரும் பொருட்களை பகிர்ந்தளித்து இத் தேர்தலில் இடம்பெற்ற ஊழல்களில் இணைந்து செயற்பட்டுள்ளார். பின்னர் அவர் பொலிஸ் நிலையத்திற்கு சென்று வாக்குமூலம் ஒன்றினை வழங்கி, தாம் 2017 நவம்பர் மாதம் 28 ஆம் திகதி முதல் தரங்கவின் பணத்தைக் கொண்டு பல்வேறு தரப்பினருக்கு நீர் இணைப்பு வசதிகளை பெற்றுக் கொடுப்பதற்காக பணம் செலுத்தியதாக தெரிவித்துள்ளார்.

எழுபது இலட்சம் ரூபா பணத்தினை செலவு செய்து நீர் இணைப்பு வசதிகளை பெற்றுக் கொடுப்பதற்கு மேலதிகமாக பொதுஜன பெரமுண கட்சியின் வேட்பாளரான தரங்க திசாநாயக்க இந்த தேர்தலின் போது தேர்தல் ஊழலின் கீழ்வரும் இலஞ்சமாக வழங்கியிருக்கும் வேறு விதமானவை தொடர்பிலும் மேல்நீதிமன்ற நீதிபதி சாட்சியங்களை சுட்டிக்காட்டி தமது தீர்ப்பினை வெளிப்படுத்தியுள்ளார். சீமெந்து பகிர்ந்தளித்தல், வேட்பாளரின் பிரசார நடவடிக்கைகளுக்காக வீடு வீடாகச் சென்று உணவுப் பொதிகள் மற்றும் பணத்தை பகிர்ந்தளித்தமை, வேறு கட்டிடப் பொருட்கள் மற்றும் பணமும், மதுசாரமும் பகிர்ந்தளித்திருப்பதுடன் வாக்காளர்களுக்கு பகிர்ந்தளிப்பதற்காக கரவைப் பசுக்களையும் கொண்டு வந்திருந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. ஒட்டுமொத்தமாக பார்க்கின்ற போது

இலங்கையின் தேர்தல் செயற்பாட்டில் ஆரம்ப சந்தர்ப்பமாக கருதப்படக்கூடிய பிரதேச சபைத் தேர்தலின் போது சிறியதொரு வட்டாரத்தில் இரண்டாயிரத்திற்கும் குறைவான வாக்குகளைப் பெற்றுக் கொள்வதற்காக பிரதிவாதி வேட்பாளர் 96 நீர் இணைப்பு வசதிகளுக்கும் 09 மின்சார இணைப்பு வசதிகளுக்கும் பணம் செலுத்தியுள்ளார்.

## வழக்கில் வெற்றி பெறுவதற்கான தகவல்கள் எங்கிருந்து கிடைத்தது?

முன்வைக்கப்பட்ட சாட்சியங்களை கருத்திற் கொண்டு மொணராகலை மேல்நீதிமன்ற நீதிபதி வராலாற்று சிறப்பு மிக்க தீர்ப்பொன்றினை அறிவித்தார். மேற்படி முன்னோடித் தீர்ப்பினை எதிர்காலத்தில் வழக்குத் தாக்கல் செய்கின்ற போது கௌரவமாக முன்வைத்து வாதாடும் வாய்ப்பு உள்ளது. இதிலுள்ள மிக முக்கியமான விடயம் யாதெனில், தேர்தல் பிரசார செலவுகளுக்குரியதாக ஏற்றுக் கொள்ளப்பட்ட சட்டமொன்று இல்லாத சூழ்நிலையில் இந்த வழக்குத் தீர்ப்பு அறிவிக்கப்பட்டமையாகும். அதன்படி, இறுதியாக சகல சாட்சியங்களையும் கவனத்திற் கொண்ட மேல்நீதிமன்ற நீதிபதி, ''மதுருகெட்டிய தேல்தல் வட்டாரத்திற்காக தெரிவு செய்யப்பட்ட அதேவேளை அதிகூடிய வாக்குகளைப் பெற்ற முதலாவது பிரதிவாதியாகிய தரங்க திசாநாயக்கவின் தெரிவு வறிதாக்கப்படுவதாக'' அறிவித்தார். அதனடிப்படையில் இரண்டாவதாக அதிகூடிய வாக்குகளைப் பெற்ற மனுதாரராகிய சுனில் ஷாந்த வனசிங்கவிற்கு உறுப்பினர் பதவி வழங்கப்பட வேண்டுமெனவும் நீதிபதி தீர்ப்பளித்தார்.

எனினும் அவ்வாறானதொரு தீர்மானத்தினை பெற்றுக் கொள்வதற்கு ஏதுவாக அமைந்த தகவல்களைப் பெறுவது சரளமானதும் இலகுவானதுமான பணியாக அமையவில்லை. பொதுஜன பெரமுணவின் வேட்பாளர் தரங்க திசாநாயக்க அரசியல் ரீதியாக பலம் கொண்டவர். பாரிய ஒரு நிதியை செலவு செய்த மற்றும் பிரதேசத்தின் அதிகாரமிக்க அரசியல்வாதிகளின் தொடர்புகளைக் கொண்ட ஒருவராவார். தேர்தல் கண்காணிப்பு அமைப்புகள் முறைப்பாடு செய்கின்ற சந்தர்ப்பத்திலும் கூட அவர் பொருட்களையும் பணத்தையும் மதுசாரத்தையும் பகிர்ந்தளித்தவாறு செயற்பட்டதுடன் மக்கள் அவருக்கெதிராக சாட்சியங்களை வழங்கவும் பயம் கொண்டிருந்தனர் எனவும் நீதிமன்ற தீர்ப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதேவேளை, மொணராகலை தலைமையக பொலிஸ் பரிசோதகரும் பிரதிவாதிக்கு எதிராக சட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கு பின்வாங்கியதாக நீதிபதி தமது தீர்ப்பில் தெரிவித்துள்ளார். தேர்தல் காலப்பகுதிக்குரியதாக பணம் செலுத்துதல் தேர்தல் இலஞ்சம் என்பதனை ஏற்றுக்கொள்ளும் தலைமையக பொலிஸ் பரிசோதகரால் பிரதிவாதியை கைது செய்வதற்கான இயலுமை இருந்த போதிலும் அவ்வாறு செய்யாமல் அதற்காக சட்டமா அதிபரிடம் ஆலோசனை கோரி நின்றமையானது ஒரு வகையில் கடமைகளை உரிய முறையில் நிறைவேற்றாது உதாசீனம் செய்த ஒரு விடயமென நீதிபதி தெரிவிக்கின்றார்.

''இப்படியானதொரு சூழ்நிலையில் தான் நாம் இந்த வழக்கினை பேசவேண்டியிருந்தது. மக்கள் சாட்சிகளை வழங்க பயந்தனர். அரச நிறுவனங்களாகிய நீர்வழங்கள் சபை, வங்கி, மின்சார சபை ஆகியனவும் தகவல்களை வழங்க பின்வாங்கின. அதாவது உத்தியோகபூர்வமாக தகவல்களைப் பெறுவது மிகவும் கடினமாக இருந்தது. அதற்கான காரணமே அரசியல் அதிகாரம் தான். ஆனாலும் நாம் கூறுகின்ற இந்த விடயங்களுக்கான சாட்சிகளை உரிய முறையில் முன்வைக்கவில்லையெனில் நாம் இந்த வழக்கில் வெற்றி பெறுவது சவாலான வியடமாக இருந்தது'' மனுதாரர் சுனில் ஷாந்த வனசிங்ஹ வெற்றித் தீர்ப்பு வழங்கப்பட்டதன் பின்னர் அவ்வாறு தெரிவித்தார்.

சுனில் ஷாந்த தகவல் உரிமை தொடர்பில் எதனையும் அறிந்திருந்த ஒருவரல்ல. இந்த வழக்கில் ஒத்துழைப்பு நல்கிய தரப்பினராக பவ்ரல் மற்றும் தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையம் என்பன ஆர்.டி.ஐ எனப்படும் தகவல் உரிமையை பயன்படுத்துவது தொடர்பில் அவரை தெளிவுபடுத்தியதும் ஊக்கப்படுத்தியதும் இதற்காகவே.

## தகவல் உரிமையின் பலம்

‘‘உண்மையில் ஒரு சந்தர்ப்பத்தில் நாம் மிக இக்கட்டான நிலைக்கு தள்ளப்பட்டோம். நீர் இணைப்புக்கள் மற்றும் மின்சார இணைப்புக்களுக்கு பணம் செலுத்தியது யார் என்பது தொடர்பில் நாம் அறிந்திருந்தோம். ஆனாலும் அதற்கான தரவுகள் உறுதியானதாக உறுதிப்படுத்த வேண்டுமெனில், ஏற்றுக்கொள்ளப்பட்ட கொடுப்பனவு சம்பந்தமான ஆவணங்களை பெற்றுக் கொள்வது தேவையாக இருந்தது. உரிய அரச நிறுவனங்களிடமிருந்து அந்த தகவல்களை உத்தியோகபூர்வமாக பெற்று சமர்ப்பிப்பது மிக முக்கியமானதாக காணப்பட்டது. ஆனாலும் இந்த நிறுவனங்கள் அந்த தகவல் அடங்கிய ஆவணங்களை எமக்கு பெற்றுத்தரவில்லை. அல்லது பெற்றுத் தருவதற்கு பின்வாங்கினர்’’ பவ்ரல் நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டிஆரச்சி அவ்வாறு தெரிவித்தார்.

‘‘இறுதியில் நாம் ஒரு தீர்மானத்திற்கு வந்தோம். அந்த நேரத்திலும் நாம் திடமாக நம்பிய 2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க சட்டத்தின் வாயிலாக உறுதிப்படுத்தப்பட்ட தகவல் உரிமையை பயன்படுத்தி பிரச்சினையைத் தீர்க்க வேண்டுமென.’’ ரோஹண ஹெட்டிஆரச்சி வழக்கிற்கு அவசியமான சாட்சியங்களை வலுவாக்கும் வகையில் பயன்படுத்திய உபாயமார்க்கங்கள் தொடர்பில் குறிப்பிட்டார். அதனடிப்படையில் சுனில் ஷாந்த உட்பட உதவிய தரப்பினர் தமக்கு அவசியமான தகவல்களைக் கோரி தகவல் உரிமை சட்டத்தினை பயன்படுத்தினர்.

இறுதியில் எமக்கு அவசியமான தகவல்களைப் பெற்றுக் கொள்ள முடிந்துது. வழக்கில் வெற்றி பெறுவதற்கு அந்தத் தகவல்களே உதவின. நீதிபதி தமது தீர்ப்பில் அதனையும் சுட்டிக்காட்டியுள்ளார். அதாவது தகவல் உரிமை இல்லாதிருக்க நாம் இந்த வழக்கில் வெற்றி பெற்றிருக்க முடியாது. தகவல் உரிமை இந்த வழக்கினை வெற்றி பெற்றுத் தந்தது மாத்திரமன்றி இலங்கையில் நேர்மையான தேர்தல் முறைமையொன்றினை உருவாக்குவதில் மிக முக்கியமான தடத்தினைப் பதிக்க உதவியுள்ளது என்றே எனக்குத் தோன்றுகிறது’’ ரோஹண ஹெட்டிஆரச்சி தெரிவித்தார்.

‘‘மனுதாரர் சாட்சி வழங்கிய சந்தர்ப்பத்தில் சமர்ப்பித்த ஆவணங்கள் தகவல் அறிவதற்கான சட்டத்தின் கீழ், தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் மொணராகலை மாவட்ட அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொண்ட ஆவணங்களாகும். அவ்வாவணங்கள் தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் மொணராகலை மாவட்ட அலுவலகத்தினால் வழங்கப்பட்ட ஆவணங்கள் என மனுதாரர் சார்பில் சாட்சியமளித்த தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் மொணராகலை பிரதேச அலவலகத்தின் சிவில் பொறியியலாளரால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது’’ என குறிப்பிடும் நீதிமன்றம் மேற்படி ஆவணங்களை உத்தியோகபூர்வ ஆவணங்களாக ஏற்றுக் கொண்டமையே இந்த வழக்கின் போது வலுவான சாட்சிகள் உள்ளதொரு வழக்காக இதனை மாற்றுவதற்கு ஏதுவான காரணியாக அமைந்தது.

- **லசந்த டி சில்வா**

# இரண்டு தசாப்தங்களாக மூடிமறைக்கப்பட்ட சிறுவர் பாதுகாப்பு சட்டத்திற்கு தகவலுக்கான உரிமை விண்ணப்பத்தினூடாக உயிரோட்டம்

குற்றப் புலனாய்வுச் செயற்பாட்டில் பாதிக்கப்பட்டவர்கள் மீண்டும் ஒரு சுற்றின் போது பாதிக்கப்பட்டவர்களாக்கப்படுவது இலங்கையின் அரச நிறுவனக் கட்டமைப்பில் காணப்படுகின்ற பாரிய குறைபாடாகும். இலங்கை பொலிஸ் தொடர்பில் பிரபலமான குற்றச்சாட்டாக இவ்விடயம் முன்வைக்கப்படுவது பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் குற்றங்கள் மீதான விடயத்திலாகும். இங்கு எமது விசேட கவனம் செலுத்துப்படுகின்ற விடயமாக அமைவது சிறுவர் பாதுகாப்பு தொடர்பிலாகும். அனைத்து வகையிலுமான துஷ்பிரயோகங்களில் இருந்து சிறுவர்களை பாதுகாக்கும் தேசிய பொறுப்பினை நிறைவேற்றுவதற்காகவே தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை தாபிக்கப்பட்டது. ஆனால் துரதிர்ஷ்டவசமாக இந்த நிறுவனம் தனது பொறுப்பை சரியாக நிறைவேற்றுவதில் இதுவரையில் வெற்றி காணவில்லை. தகவல் அறியும் சட்டத்தின் கீழ் நாம் இங்கு ஆராய்ந்தது 1998 ஆம் ஆண்டின் 50 ஆம் இலக்க சட்டத்தினூடாக வலுவாக்கம் செய்யப்பட்ட இந்த அரச நிறுவனம் தாபிக்கப்பட்டு இரண்டு தசாப்தங்கள் கழிந்த போதிலும் நிறுவனத்தினால் மேற்கொள்ள முடியாது போயுள்ள அடிப்படை இலக்குகள் பற்றியதாகும்.

## பாதிக்கப்பட்டோரின் அடையாளம்

சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்களின் போது பாதிக்கப்பட்டோரின் அடையாளத்தினை வெளிப்படுத்துவது தண்டனைக்குரிய குற்றமாகும். எனினும் இந்நாட்டின் வெகுசன ஊடகமானது இச் சட்ட நிலைமையை கவனத்திற் கொள்ளாது தமது அறிக்கையிடலில் ஈடுபடுவது நீண்ட காலமாக இடம்பெற்று வருகின்றது. இதன் காரணமாக ஒரு தடைவ பாதிக்கப்படுகின்ற பிள்ளையானது மீண்டும் பல்வேறான தடவைகள் சமூகத்தின் மத்தியிலும் பாதிக்கப்படுகின்றார். ஊடகத் துறையில் இடம்பெற்ற டிஜிட்டல் மயமாக்கல் மற்றும் சமூக ஊடகங்களின் வருகையின் பின்னர் இந்த நிலைமையானது தற்போது மிக மோசமான நிலையை அடைந்துள்ளது. சட்ட ரீதியான நிலைமையில் பார்க்குமிடத்து இச் சட்டமானது வெகுசன ஊடகத்துறை டிஜிட்டல்மயப்படுத்துவதற்கு நீண்ட காலத்திற்கு முன்னரே 1995 இல் கொண்டுவரப்பட்டதொன்றாகும். நேரடியாக சொல்வதாயின் 1995 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான தண்டனைச்

சட்டக் கோவையின் 365 சீ இன் அடிப்படையில் சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்களின் போது பாதிக்கப்பட்டவர்களின் அடையாளத்தினை வெளிப்படுத்துவது தண்டனைக்குரிய குற்றமாகும். எனினும் இச் சட்ட நிலைமையை கவனத்திற் கொள்ளாது இந்நாட்டின் வெகுசன ஊடகங்கள் செயற்பட்ட அதேவேளை இன்றைய சூழலில் சமூக ஊடகங்கள் வாயிலாகவும் அன்றாடம் இச் சட்டத்திற்கு முரணான செயற்பாடு இடம்பெற்று வருகின்றது. அதுவும் ஒரு வகையில் சிறுவர் துஷ்பிரயோகமாகும். இச் செயற்பாட்டுக்கு எதிராக முதலில் சட்டம் மற்றும் நிர்வாக ரீதியில் நடவடிக்கை எடுக்க வேண்டிய தரப்பாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை விளங்குகின்றது. ஆயினும் நாம் ஆராய்ந்து பார்த்ததில் அறியக் கிடைத்த விடயமாவது, இது வரையில் அவ்வாறானதொரு குற்றம் தொடர்பில் நீதிமன்றின் முன்னிலையில் சட்ட ரீதியான செயற்பாட்டினை மேற்கொள்வதற்கு தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை நடவடிக்கை எடுக்கவில்லை என்பதாகும். இது சரளமான ஒரு பதிலாக அமைய முடியாது. அதன் உட்பொருள் யாதெனில் 1995 ஆம் ஆண்டில் சந்திரிக்கா குமாரணதுங்க அரசாங்க காலப்பகுதியில் கொண்டுவரப்பட்ட இச் சட்டமானது இருபத்தாறு வருட காலமாக செயற்படுத்தப்படவில்லை என்பதாகும். ஆகக் குறைந்தது வெகுசன ஊடகம் மற்றும் ஏனைய கூட்டுத்தாபனங்களால் மேற்கொள்ளப்படுகின்ற தவறுகளின் எண்ணிக்கை கணிப்பீடு தொடர்பில் அதிகார சபையிடம் வினவிய போதிலும் அதற்கான கட்டமைப்பு ரீதியான பதில் கூட கிடைக்கவில்லை. அதனடிப்படையில் கட்டுரையாளர் தகவல் அறியும் சட்டத்தின் கீழ் அதற்கான விடயங்களை ஆராய்வதற்கு நடவடிக்கை எடுத்துள்ளார்.

அதனடிப்படையில் 1995 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்ட வாறான தண்டனை சட்டக் கோவையின் 365 சீ இன் படி அடிப்படையில் சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்களின் போது பாதிக்கப்பட்டவர்களின் அடையாளத்தினை வெளிப்படுத்துவது தண்டனைக்குரிய குற்றமாகும். எனினும் இச் சட்ட நிலைமையை கவனத்திற் கொள்ளாது வெகுசன ஊடகங்கள் உட்பட பல்வேறான அமைப்பு ரீதியான மட்டத்தில் இச் செயற்பாடானது தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றது. இந்த விடயம் தொடர்பில் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை மேற்கொண்ட சட்டரீதியான நடவடிக்கை ஏதும் உள்ளதா? அவ்வாறில்லையெனில், எதிர்காலத்தில் யாதேனும் நடவடிக்கை எடுக்கவுள்ளதா? என்ற கேள்விகள் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் முன்னே சமர்ப்பிக்கப்பட்டது.

## வழிகாட்டல் கோவை

அதன்படி தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை தெரிவிப்பதாவது தமது நிறுவனம் சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்கள் தொடர்பிலான ஊடக அறிக்கையிடலின் போது கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள் பற்றிய வழிகாட்டல் கோவையொன்று 2017 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டது. அத்துடன் அதனை சிறுவர் பாதுகாப்புத் துறைக்கு ஏற்புடையதாக அரச அலுவலர்கள், ஊடகவியலாளர்கள் உட்பட உரிய தரப்பினருக்குச் சமர்ப்பித்து அவசியமான திருத்தங்களை மேற்கொண்டு மக்களது கருத்துக்களையும் கேட்டறிந்து தயாரிக்கப்பட்ட இறுதி வரைவு அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்படுவதற்காக மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சிற்கு சமர்ப்பிக்கப்பட்டது என்பதாகும். சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் இச்செயற்பாட்டின் மூலமாக நாம் தீர்மானிக்கக் கூடிய இரண்டு அடிப்படை விடயங்கள் உள்ளன. அவையாவன, 1995 இல் தாபிக்கப்பட்ட சட்டத்திற்குரியதாக மறைமுகமாகவேனும் நடவடிக்கையொன்று இருபது வருடங்களுக்கு பிறகே எடுக்கப்பட்டுள்ளது. அத்துடன் அது குற்றவாளிகளுக்கு எதிராக சட்டரீதியான நடவடிக்கையை மேற்கொள்ளும் அடிப்படை இலக்குகளை கவனத்திற் கொள்ளவும் இல்லை என்பதாகும்.

அதிகார சபை அவ்வாறு தெரிவித்த போதிலும் மறுபுறம் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் கடமைப் பொறுப்புகள் தொடர்பில் அரச கணக்காய்வாளர் அண்மையில் வெளியிட்ட விசேட கணக்காய்வு அறிக்கையில் வேறொரு விடயமே கூறப்படுகிறது. அதாவது மேலே தெரிவித்த அமைச்சின் செயலாளருக்கு சமர்ப்பிக்கப்பட்ட சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்கள் தொடர்பில் ஊடக அறிக்கையிடலின் போது கவனத்திற் கொள்ள வேண்டிய விடயங்கள் தொடர்பிலான வழிகாட்டல் கோவையின் இறுதி வரைவு அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளமை தொடர்பிலான தகவல்கள் மற்றும் அதன் முன்னேற்றத்தினை தமது கணக்காய்விற்கு சமர்ப்பிப்பதில் அதிகார சபை தோல்வி கண்டுள்ளது என்பதாகும். எவ்வாறெனினும் கட்டுரையாளரின் தகவல் ஆராய்தலுக்கமைய தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை அறிவிக்கின்ற விடயமாவது, தற்போது நாம் பாதிக்கப்பட்டோரை வெளிப்படுத்தும் வகையில் மேற்கொள்ளப்பட்ட ஊடக அறிக்கையிடல்களை சரியாக அடையாளம் காண்பதற்கான பொறிமுறையொன்று தயாரிக்கப்பட்டுள்ளது என்றாகும். மேலும் அவ்வாறு அறிக்கையிடலை மேற்கொண்ட ஐந்து சந்தர்ப்பங்களை கண்காணிப்பு செய்ததாக சுட்டிக்காட்டி விடயங்களை தெளிவுபடுத்தும் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையானது உரிய நிறுவனங்களிடமிருந்து அது தொடர்பிலான விடயங்களை விசாரணை செய்வதற்கு ஏற்கனவே நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் தெரிவிக்கின்றது. அவ்வாறு பார்க்கின்ற போது இத் தகவல் விண்ணப்பத்தினூடாக இருபத்தாறு வருடங்களாக பயன்படுத்தப்படாது கிடப்பில் அடைத்து வைக்கப்பட்டிருந்த சட்டத்திற்கு ஓரளவேனும் உயிரோட்டமளிப்பதற்கு சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. அது பாதிப்பிற்குட்படுகின்ற இந்நாட்டின் சிறுவர்கள் தொடர்பிலான நீதியை நிலைநாட்டுவதில் ஓரளவேனும் சாதகமானதொரு நிலையாக கருதப்படுகின்றது. பிரச்சினை என்னவென்றால் இவ்வாறு ஆரம்பிக்கப்படுகின்ற பொறிமுறைகள் எந்தளவு தூரம் முன்னோக்கி பயணிக்கின்றது என்பதேயாகும்.

## ரியாலிட்டி போட்டிகள் மற்றும் சிறுவர் பாதுகாப்பு

உதாரணமாக சிறுவர்களைப் பயன்படுத்தி ஒழுங்கு செய்யப்படுகின்ற சில தொலைக்காட்சி ரியாலிட்டி போட்டிகளில் இடம்பெறுகின்ற பாதிப்புக்களைக் குறிப்பிட முடியும். இத் தொலைக்காட்சி அலைவரிசைகளில் இடம்பெறுகின்ற போட்டிகளின் போது மறைமுகமாக சிறுவர் உரிமைகள் மீறப்படுகின்றமையும் சிறுவர்கள் துஷ்பிரயோகத்திற்கு ஆளாக்கப்படுகின்றமையும் இடம்பெறுவதாக 2018ஆம் ஆண்டில் தெரிவித்ததும் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையேயாகும். சிறுவர்களின் உரிமைகள் தொடர்பில் உருவாக்கப்பட்டிருக்கும் தேசிய மற்றும் சர்வதேச மட்டத்திலான சட்ட ரீதியான பல இணக்கப்பாடுகளை மீறுகின்ற வகையில் இந்த ரியாலிட்டி போட்டி நிகழ்ச்சிகள் பயணித்துள்ளமையினால் உரிய தொலைக்காட்சி நிகழ்ச்சிகளின் ஒழுங்கமைப்பு தொடர்பில் தரநியமங்களை தயாரிப்பதற்கு தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையானது நடவடிக்கை எடுக்குமென அப்போதைய அதன் தலைவர் சட்டத்தரணி எச்.எம். அபேரத்ன அவர்கள் ஊடகங்களுக்கு தெரிவித்தமையை நாம் மறந்து விடவில்லை. உரிய ரியாலிட்டி போட்டிகளின் பயிற்சி நடவடிக்கைகளிலும் நடுவர்களின் தீர்ப்புக்களிலும் இந்த உரிமைகள் மீறப்படுவதாக குற்றஞ்சாட்டிய தலைவர் வணிக நோக்கங்களை தலைமேற் கொண்டு உபாயமார்க்கமாக சட்டத்தில் நுழைந்து செல்லும் நிலைமை அதன்போது இடம்பெறுவதாகவும் சுட்டிக்காட்டினார். பாதிக்கப்பட்டவர்களை வெளிப்படுத்தும் சம்பவங்களைப் போலவே இதன் போதும் ஊடகத்தின் மீதே குற்றம் சுமத்தப்படுகிறது. ஆயினும் அக்கூற்றுக்குப் பிறகும் கூட தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையானது தமது நிறுவனம் சார்பாக உரிய செயற்பாடு தொடர்பிலான எதுவிதமான மத்தியஸ்த செயற்பாடுகள் எதனையும் மேற்கொள்ளவில்லை. சிறுவர்களின் உடல் அவயவயங்களை

பல்வேறு நபர்கள் அவசியமற்ற வகையில் தொடுதல் தொடர்பில் அதிகார சபை செய்கின்ற தெளிவூட்டல்களை கேள்விக்குட்படுத்தி மேற்படி போட்டிகளை அதற்கு பிறகும் ஏற்பாடு செய்யப்பட்டதுடன் சமூகத்திலுள்ள வயதுவந்தவர்களாலேயே அந்நிகழ்ச்சிகளுக்கு கரகோசங்கள் அள்ளி வழங்கப்பட்டன.

மனோவியலாளர்கள் தெரிவிக்கின்ற வகையில் சில நடுவர் குழாம் உறுப்பினர்களின் கருத்துக்கள் காரணமாக பிள்ளைகள் உணர்ச்சி ரீதியான துஷ்பிரயோகத்திற்கு ஆளாக்கப்படுகின்ற அதேவேளை அது பிள்ளைகளின் உளவியல் சுகாதாரம் தொடர்பிலும் பாரிய அளவில் தாக்கத்தினை எற்படுத்துகின்றது. அத்துடன் இந்த செயற்பாட்டிலும் அதிகார சபையானது இதுவரையில் கட்டமைப்பு ரீதியான நடவடிக்கை எதனையும் மேற்கொண்டதாக காண்பதற்கில்லை. நாம் இங்கு இந்த உதாரணத்தினைக் கூறுவதற்கான காரணம் பிரபலமான மற்றும் பிரதானமானதுமெனக் கருதுகின்ற வெகுசன ஊடகங்கள் தொடர்பில் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் கவனம் செலுத்தப்பட வேண்டும் என்பதனாலாகும். ஆகக் குறைந்தது இந்த ஊடகங்களின் வானலை நேரத்தினையேனும் பயன்படுத்தி அதன் நிகழ்சசிகளில் பங்குபற்றும் அதிகார சபையின் அலுவலர்கள் அச்சந்தர்ப்பத்திலேனும் இந்த விடயங்கள் தொடர்பில் கதைப்பதற்கான கவனம் செலுத்தப்பட வேண்டும்.

2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் நிர்வாகப் பிரச்சினையாக வெடித்துக் கிளம்பிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் குழப்பத்தின் மூலமாகவே சிறுவர் பாதுகாப்பு விசாரணையொன்றினை மேற்கொள்ள முடியாத சூழல் ஏற்படுத்தப்பட்டது. பணிப்பாளர் சபையின் உள்ளக பிரச்சினைகள் குறிப்பிட்டளவு மட்டத்திற்கேனும் தீர்க்கப்பட்டதன் பின்னர் யானைக் கால் நோயுண்டதனைப் போன்று முன்னோக்கி நகர்ந்த தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் மீதான நம்பிக்கைக் கீற்று மீண்டும் 2019 ஆம் ஆண்டில் புதிய அரசாங்க உருவாக்கத்துடன் தோற்றம் பெற்றது. ஆனால் இன்றும் அங்கிருப்பதோ மற்றுமொரு புதிய தலைவர் மாத்திரமே. இருபத்தாறு வருடங்களாக பயன்பாடற்று கிடப்பில் காணப்படுகின்ற சட்டமொன்றினை யதார்த்தமாக்கிக் கொள்வதற்கு நாம் பயணிக்க முயற்சிப்பது இப்படியானதொரு சூழ்நிலைக்கு மத்தியிலாகும். அவ்வாறு பார்க்கின்ற போது தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையானது அதன் பெயருக்குரியதான பணியினை ஆற்றுவதற்கு தேசத்தின் பிள்ளைகளது பாதுகாவலனாக மாற்றமடைவதற்கு மாபெரும் அர்ப்பணிப்பினை செய்ய வேண்டிவரும். தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையால் தேசத்தில் நீண்டகாலமாக ஏற்பட்டுள்ள காயங்களை ஆற்றுவது அந்தளவு இலகுவான காரியமல்ல. விசேடமாக அதன் பாதிப்புக்களை சுட்டிக்காட்ட வேண்டிய வெகுசன ஊடகமும் ஓர் கூட்டுத்தாபனமாக மீண்டும் ஒரு சுற்றில் பாதிக்கப்பட்ட சிறுவர் உரிமைகளை பறிக்கின்ற இந்த நிலைமையில் அதுவோர் மெய்சிலிர்க்க வைக்கின்ற நிலைமையாகும்.

- **பிங்குன் மேனக கமகே**

***பிங்குன் மேனக கமகே :*** *ஏறக்குறைய பதினான்கு வருடங்களாக ஊடகத்துறையில் தனது ஊடக வாழ்க்கையை 'லங்காதீப' பத்திரிகையில் ஆரம்பித்து, தற்போது 'மவ்பிம' பத்திரிகையின் செய்தி ஆசிரியராக உள்ளார். ஊடகவியலாளர் தரிந்து ஜயவர்தனவுடன் லங்காதீப பத்திரிகையில் சுமார் ஐந்து வருடங்களாக 'சத்திய கவேஷன' என்ற தலைப்பில் அவர் ஆற்றிய தொடர் கட்டுரைகள் அவரது தீவிர ஆர்வத்திற்கு சிறந்த உதாரணம். தகவல் அறியும் உரிமைச் சட்டத்தைப் பயன்படுத்தி கட்டுரைகளை எழுதியதற்காக இலங்கை ஆசிரியர் சங்க விருதையும் வென்றார். பிரபல யூடியூப் சேனலான 'சதஹான் ரேடியோ' வில் சமகால சமூக-அரசியல் பிரச்சினைகள் குறித்து தொடர் நேர்காணல்களை நடத்துகிறார். அவர் இலங்கை இளம் ஊடகவியலாளர்கள் சங்கம் மற்றும் இலங்கை தொழில்முறை ஊடகவியலாளர்கள் சங்கத்தின் அங்கத்தவராவார்.*

# தகவலறியும் சட்டத்திற்கு முன்னால் வெள்ளைப்பூடு மோசடி செய்யும் லக் சதொச

பொதுமக்களுக்குத் தேவையான, அத்தியாவசிய உணவுப்பொருட்களை தங்கு தடையின்றி நியாயமான விலைக்கு விநியோகிக்கும் நோக்கில் 2021 யூன் மாதம் 07 ஆம் திகதி ஒன்றிணைந்த அமைச்சரவைப் பத்திரமொன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. துறைமுகங்கள் மற்றும் கப்பல்துறை அமைச்சர் ரோஹித்த அபேகுணவர்த்தன மற்றும் வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்த்தன இருவரும் சமர்ப்பித்திருந்த அமைச்சரவை யோசனையில் இலங்கை துறைமுக அதிகார சபை மற்றும் தனியார் கொள்கலன் முனையங்களில் கைவிடப்பட்டுள்ள அத்தியாவசிய உணவுப் பொருட்கள் மற்றும் இலங்கை சுங்கப் பணியகத்தால் அரசவுடைமையாக்கப்பட்ட அத்தியாவசிய உணவுப் பொருட்களை இலக்காகக் கொண்டிருந்தனர். அப்படியாயின் குறித்த அத்தியாவசிய உணவுப்பொருட்களை அந்நிறுவனத்தால் ஏலத்தில் விற்கப்படாமல் லங்கா சதொச நிறுவனம் விலைக்கு வாங்குவதாகும்.

குறித்த அமைச்சரவைப் பத்திரத்திற்கமைய பெருந்தொற்று நிலைமையில் பொதுமக்களுக்கு அத்தியாவசிய உணவுப்பொருட்களைப் பற்றாக்குறையின்றி விநியோகிக்கும் முறையொன்று லக் சதொச மூலம் நடைமுறைப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். இந்த உணவுப் பொருட்களைப் பெற்றுக்கொள்வதற்கு எதிர்பார்ப்பது, அம்முறையை வெற்றிகரமாக முன்னோக்கிக் கொண்டு செல்வதற்காகும். அமைச்சரவைப் பத்திரத்தில் 2.1 இற்கமைய இவ்வத்தியாவசிய உணவுப்பொருட்களின் விலையைத் தீர்மானிக்கும் போது இலங்கை துறைமுக அதிகாரசபையின் விலைமனுக் கோரல் சபை மூலம் லங்கா சதொச நிறுவனத்தின் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடியதுடன், அதற்குச் சமாந்தரமாக ஏனைய தரம் தொடர்பான பரிசோதனை அறிக்கைகள் மற்றும் அனுமதியையும் பெறுதல் வேண்டும். லங்கா சதொசவினால் உடன்படும் தொகை இலங்கை துறைமுக அதிகாரசபைக்கு செலுத்தப்பட வேண்டியதுடன், அதன்போது சுங்கக் கட்டணத்தை செலுத்துவதன் மூலம், குறித்த பொருட்கள் சுங்கத்தால் விடுவிக்கப்படும். இவ்வமைச்சரவைப் பத்திரத்திற்கு 2021.06.07 ஆம் திகதி இரண்டு அமைச்சர்களின் தலைமையில் இலங்கை துறைமுக அதிகாரசபை மற்றும் சுங்கத் திணைக்களத்தின் பிரதிநிதிகளுடன் இடம்பெற்ற கலந்துரையாடலில் மேற்கொள்ளப்பட்ட கருத்துக்களும்

கவனத்தில் கொள்ளப்பட்டது. அதற்கமைய அமைச்சரவை அலுவலகத்தின் செயலாளர் டப்ளிவ்.என்.டீ.ஜே. பர்னாந்து அவர்களின் கையொப்பத்துடன் அதற்கு அனுமதி வழங்கும் கடிதம் 2021 யூன் மாதம் 08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

## அதிகாரம் படைத்தவர்களின் கடிதப் பரிமாற்றம்

விவாதத்திற்குப் பாத்திரமான வெள்ளைப்பூடு கப்பல் துறைமுகத்திற்கு இச்சந்தர்ப்பத்திலேயே வந்தடைகின்றது. இறக்குமதி செய்த கம்பனி கூறுகின்ற வகையில், அதன் பெறுமதி இரண்டு கோடி ரூபாய்களாகும். அந்நிய செலாவணிப் பற்றாக்குறையின் கீழ் இறக்குமதிப் பொருட்களை வெளியில் கொண்டுவருவதற்குள்ள பிரச்சனையால், இவ் வெள்ளைப்பூடு தொகை துறைமுகத்தில் தேங்கிக் கிடப்பதற்கு நேரிடும். துறைமுகம் மற்றும் லக்சதொச வேலைத்திட்டத்திற்கு இவ்வெள்ளைப்பூடு தொகை அதன்பின்னரே சேர்கின்றது. துறைமுக அதிகார சபையின் உடன்பாட்டின் பிரகாரம் இவ்வெள்ளைப்பூடு தொகை 2021.09.07 ஆம் திகதி லக்சதொச இற்கு அறிவித்துள்ளதுடன், தரப் பரிசோதகர்களால் அது பரிசோதிக்கப்பட்டுள்ளது. யூலை 14 ஆம் திகதி துறைமுகத்தை வந்தடைந்த இரண்டு கொள்கலன்களிலுள்ள 56,000 கிலோக்கிராம் வெள்ளைப்பூடு மனிதப் பயன்பாட்டுக்கு உகந்ததென சான்றுப்படுத்தப்பட்டுள்ளது. இங்கு முக்கியமான விடயம், லக்சதொச உள்ளக ஆவணங்களுக்கமைய இவ்வெள்ளைப்பூடு தொகை தரப் பரிசோதனையின் முடிவுகள் மற்றும் பரிந்துரைகள் பற்றிய கருத்துப் பரிமாற்றம் அங்குள்ள உயரதிகாரிகளிடையே இடம்பெற்றுள்ளது. தரப்பரிசோதனையின் முடிவுகள் மற்றும் பரிந்துரைகளுடன் உதவி முகாமைத்துவ (தரச்சான்றிதழ்) துலாஞ்சி ரந்தெனிவல அவர்களால் சிரேஷ்ட முகாமையாளர் (தரச்சான்றிதழ்) சமில பொதேஜு மூலம் பிரதிப் பொதுமுகாமையாளர் (பெறுகை) சமில அசுரமான அவர்களும் மற்றும் சிரேஷ்ட முகாமையாளர் (விநியோகம்) ஆர்.எஸ்.பர்னாந்துவுக்கு சமர்ப்பித்த கடிதம் அதற்குச் சான்று பகிர்கின்றது.

பின்னர் 2021 செப்ரெம்பர் 09 ஆம் திகதிய சிரேஷ்ட முகாமையாளர் (விநியோகம்) ஆர்.எஸ்.பர்னாந்து அவர்களால் சமர்ப்பிக்கப்பட்ட கடிதத்தின் மூலம் கலந்துரையாடிய வகையில் 135.00 ரூபாவுக்கு அதிக விலை சமர்ப்பிக்கப்பட்டிருந்த M/s NS Enterprises கம்பனிக்கு வெள்ளைப்பூடு தொகையை வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டமையாகும். குறித்த கடிதத்தில் காட்டப்படும் வகையில் வரிசையாக 125.00 ரூபா மற்றும் 128.00 ரூபா எனும் கொள்வனவு விலை M/s SK Traders மற்றும் M/s V Helabima Trading Pvt /Ltd கம்பனிகள் சமர்ப்பித்திருந்தது. பிரதிப் பொதுமுகாமையாளர் (பெறுகை) சமிலா அசுரமான அவர்கள் மற்றும் பிரதிப் பொதுமுகாமையாளர் (நிதி) சுசிர பெரேராவுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள இக்கடிதத்தின் பிரதி பிரதான நிறைவேற்று அதிகாரி ரஞ்சித் ஜீ ரூபசிங்க, பிரதிப் பொது முகாமையாளர் (நடவடிக்கை) ரீ.பி குலதுங்க மற்றும் சிரேஷ்ட முகாமையாளர் (பெறுகை) லக்ஷ்மன் குமார போன்றோருக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

## துஷான் குணவர்த்தனவின் வெளிப்படுத்தல்

எவ்வாறெனினும் இக்கொடுக்கல் வாங்கல் தொடர்பாக பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் முன்னாள் தலைவர் ஒரு சில தினங்களுக்குப் பின்னர் கூறிய கருத்துக்கள் மூலமே வெளிவந்தது.

“செப்ரெம்பர் 09 ஆம் திகதி காலையில் எனக்கு லங்கா சதொசவில் இருந்து தொலைபேசி அழைப்பொன்று வந்தது. அப்போது நான் தலைவர் அவர்களுடன் இருந்தேன். வெலிசற மொத்தக் களஞ்சியத்திலிருந்து 50,000 கிலோவுக்கும் அதிகமான வெள்ளைப்பூடுகளைக் கடத்துகின்றனர் எனக் கூறப்பட்டது. நான் அப்போதே எமது குழுவொன்றை அவ்விடத்திற்கு அனுப்பி அதனைப் புகைப்படங்களை எடுக்குமாறு ஆலோசனை வழங்கினேன். கிடைத்த தகவலுக்கமைய அவ்விடத்தில் முதல் நாள் களவாக வர்த்தகர் ஒருவருக்கு வெள்ளைப்பூடு அடங்கிய இரண்டு கொள்கலன்களை விடுவித்து அதற்குரிய போலி ஆவணங்கள் தயாரிக்கப்படுவதே இடம்பெற்றுள்ளது. அதற்காக லங்கா சதொச தலைமைக் காரியாலயத்திலிருந்தே சென்றுள்ளனர். இவ்வெள்ளைப்பூடு தொகை பொதுமக்களுக்கு விற்பனை செய்வதற்கேயாகும். ஏனெனில் தற்போது தொகையாக விற்பனை செய்யாமல் பொதுமக்கள் தேவைக்கேற்ப சில்லறை விற்பனை செய்வதற்கு அமைச்சரவை தீர்மானமொன்றுள்ளது. இங்கு மோசமான விடயமாவது, ஒரு கிலோ 135 ரூபாவுக்கு பற்றுச்சீட்டு எதுவுமே வழங்காமல் மொத்த விற்பனை வர்த்தகர்களுக்கு விற்பனை செய்து 73 இலட்சம் ரூபாய்களைப் பெற்றுக் கொள்வதற்கு ஆலோசனை வழங்கியவர் சதொச தலைமை அலுவலகத்தைச் சார்ந்த ஒருவராவர். பணத்தை எடுத்துக் கொண்டு லாக்கரில் வைத்துள்ளார்.

துஷான் குணவர்த்தன கூறுகின்ற வகையில், இம்மோசடிக் கொடுக்கல் வாங்கல் பற்றிய புலன் தகவல் முதலில் அவருக்கே கிடைத்திருந்தது. அதேபோல் குறித்த சுற்றிவளைப்புக்காக குற்றப் புலனாய்வுப் பிரிவின் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்வதற்கான முயற்சி பலனளிக்கவில்லை என அவர் கூறினார். இவ்வாறான கொடுக்கல் வாங்கல் உயர்மட்ட பணிப்பாளர்சபைக்கு தெரியாமல் இடம்பெறுவதற்கு இயலாதென பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் முன்னாள் நிறைவேற்றுப் பணிப்பாளர் கூறிய கூற்றின் பின்னர் வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்த்தன அவர்களும் லக் சதொச உயர்மட்ட பணிப்பாளர் சபையும் அதனை நிராகரித்தனர். அமைச்சர் இவ்வனைத்துக்கும் குழப்பமடைந்தது, குறைந்தது ஆரம்பகட்ட விசாரணையைக் கூட நடாத்தாமையும் விசேடமானதாகும்.

## நான்கு பேருக்கு பணிநிறுத்தம்

சம்பவம் பற்றிய ஊடக அறிக்கையுடன் லக் சதொசவின் பிரதிப் பொதுமுகாமையாளர் (நிதி) சுசிரி பெரோ உள்ளிட்ட நான்கு பேர் செப்ரெம்பர் 13 ஆம் திகதி பணி நிறுத்தம் செய்யப்பட்டனர். மூன்று நாட்களின் பின்னர் 16 ஆம் திகதி சுசிரி பெரேரா பொலிசாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டார். அதிக விலைமனு சமர்ப்பித்திருந்த M/s NS Enterprises கம்பனிக்கு வெள்ளைப்பூடு தொகையை வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டதென்ற கடிதம் சிரேஷ்ட முகாமையாளர் (விநியோகம்) ஆர்.எஸ்.பர்னாந்து அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. பிரதிப் பொதுமுகாமையாளர் (நிதி) சுசிரி பெரேரா அவர்களுக்கு இக்கடிதம் பிரதிப் பொது முகாமையாளர் (பெறுகை) சமிலா அசுரமான அவர்கள் மூலமே சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. பிரதம நிறைவேற்று அதிகாரி ரஞ்சித் ஜி ரூபசிங்க, பிரதிப் பொது முகாமையாளர் (நடவடிக்கை) ரீ.டீ.குலதுங்க மற்றும் சிரேஷ்ட முகாமையாளர் (பெறுகை) லக்ஷ்மன் குமார என்பவர்களுக்கு குறித்த கடிதம் பிரதியிடப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது

அதேபோல் வெள்ளைப்பூடு கொடுக்கல் வாங்கலுக்குரிய தரப்பரிசோதனை முடிவுகள்

மற்றும் பரிந்துரைகளுடன் உதவி முகாமையாளர் (தரச்சான்றிதழ்) துலாஞ்சி ரந்தெனிவெல அவர்களால் செப்ரெம்பர் 07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட கடிதம் லக் சதொச தலைவர் ஆனந்த பீரிஸ் அவர்களுக்கும் பிரதியிடப்பட்டுள்ளது.

அதற்கமைய வெள்ளைப்பூடு கொடுக்கல் வாங்கல் தொடர்பாக ஆரம்ப கட்டத்திலிருந்து தொடர்பாடல் இடம்பெறவில்லையென எவரும் கூற முடியாது. ஆனாலும் விசாரணைகள் முடிவுறுவதற்கு முன்னரே ஆரம்பத்திலிருந்தே வர்த்தக அமைச்சர் அவர்கள் லக் சதொச உயர்மட்ட பணிப்பாளர் சபை அதனுடன் தொடர்பில்லையென கூறுவதற்கு பெரும் முயற்சி செய்தார். ஆனாலும் தற்போது குற்றப் புலனாய்வுத் திணைக்களம் இக்கடிதத்துடன் தொடர்புபட்ட மூன்று பேரையும் கைது செய்துள்ளது. கடிதக்காரர்கள் இவ்விடயத்தை ஆரம்பத்திலிருந்து கவனம் செலுத்தினாலும் பின்னர் லக் சதொச தலைவர் அவர்கள் உயர்மட்ட பணிப்பாளர் சபை எனும் சொற்பிரயோகத்தை ஊடகத்தால் தவறாகப் பயன்படுத்தியுள்ளதாகக் கூறினார். அமைச்சர் அவர்களின் குழப்பம் மிகுந்த முடிவுகள் இவ் ஆரம்ப தொடர்பாடல் நடவடிக்கைகள் மாத்திரம் போதுமானதாகும்.

## ஈமெயில் பார்க்காத தலைவர்

''இது வெள்ளிக்கிழமை இடம்பெற்றுள்ளது. அதற்கு முன்னர் செவ்வாய்க்கிழமை தொடக்கம் ஒரு வாரம் நான் கொழும்புக்கு வெளியே இருந்தேன். எனக்கு ஈமெயில் வந்ததா என எதுவுமே தெரியாது. எனக்கு ஈமெயில் பார்ப்பதற்கு நேரமில்லை. நான் சதொச நிலையங்களைத் தேடித்தேடி இலங்கை பூராகவும் சென்றேன். ஈமெயில் வந்ததென்று சிலர் கூறவும் இடமுண்டு. சிலர் வாசிக்காமல் இருப்பதற்கும் இடமுண்டு. முதலாவது எனக்கு சந்தர்ப்பம் கிடைக்காததால் நான் வாசிக்கவில்லை. அடுத்ததாக நான் தொலைபேசியில் வேறொரு வேலைக்குக் கதைக்கும் போது எனக்கு இத்தகவல் கிடைத்தது. உண்மையைச் சொல்ல வேண்டாமா. எனக்கு இத்தகவல் கிடைத்தது. எனக்கு வெள்ளிக்கிழமையோ அல்லது சனிக்கிழமையோ குறுஞ்செய்தியொன்று வந்தது. தற்போது பணிநீக்கம் செய்யப்பட்டுள்ள ஓர் உத்தியோகத்தர் வேறொரு வேலைக்கு எனக்குக் கதைத்தவுடன் இதற்கு முன்னர் இதைப்பற்றிக் கூறினார். அவருக்கு அதற்கு விசேடமான ஆலோசனை வழங்கியிருக்கும் போதுதான் இது இடம்பெற்றிருக்கின்றது. பிரதிப் பொதுமுகாமையாளர் (நிதி) சுசிரி பெரேராவுக்கு மேலே இருப்பவர், நானும் நிறைவேற்றுப் பணிப்பாளர் மாத்திரமேயாகும். பொலிசாரிடம் கேளுங்கள் எங்கள் இருவருக்குமுள்ள தொடர்பு என்னவென்று;.''

## அமைச்சர் பந்துலவின் பதில்கள்

லக் சதொச தலைவர் அவர்கள் கூறியதாவது, செப்ரெம்பர் 07 தொடக்கம் 14 ஆம் திகதி வரை தான் கொழும்புக்கு வெளியே இருந்தமையால் ஈமெயில் பார்ப்பதற்கு நடைமுறை ரீதியாக சிரமம் இருந்ததாகக் கூறினார். வெள்ளைப்பூடு தொடர்பான தரப் பரிசோதனையில் முடிவுகள் மற்றும் பரிந்துரைகள் அடங்கிய கடிதம் உதவி முகாமையாளர் (தரச்சான்றிதழ்) துலாஞ்சி ரன்தெனிவெல அவர்களால் தலைவர் உள்ளிட்ட பணிப்பாளர் சபைக்கு அன்றைய தினமே சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. ஏனைய எதுவுமே தேவையில்லை. அரச நிறுவனமொன்றின் தலைவர் அவர்கள் தனது கடமைக் கடிதங்களைப் பார்வையிடுவதற்கு

மின்னஞ்சலைப் பார்ப்பதற்கு முடியாவிடின் அது பெரும் பிரச்சினையாகும். ஆனந்த பீரிஸ் அவர்களின் பதிலில் அரச நிறுவனமொன்றின் தலைவர் அவர்களின் கடமைகளை வினாத்தொடுப்பதாகும். விசாரணை முடிவதற்கு முன்னிருந்தே லக் சதொசவின் உயர்மட்ட பணிப்பாளர் சபையை காப்பாற்றுவதற்கு போராடிய வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்த்தன அவர்கள் கடந்த தினத்தில் பாராளுமன்றத்தில் மிகவும் பொருத்தமான தருணத்தில் இவ்விவாதத்தைக் கொண்டு வந்தார். அமைச்சர் அவர்கள் லக் சதொச தலைவர் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரிக்கு அனுப்பப்பட்ட மின்னஞ்சல் அவர்கள் பயன்படுத்தாத மின்னஞ்சலுக்கே அனுப்பப்பட்டுள்ளதெனக் கூறினார். அமைச்சர் அவர்கள் அதிகாரிகளை காப்பாற்றுவதற்குக் கூறும் இக்கூற்றுக்கள் மூலம் வெள்ளைப்பூடு பிரச்சினையை விடப் பெரும் சிக்கலான விடயமாகும்.

## டிஜிட்டல் ஆட்சிமுறை

வர்த்தக அமைச்சர் அவர்களுக்குத் தெரியாமல் இருந்தாலும் ஆட்சி முறையில் மின்னஞ்சல் பாவனை உள்ளிட்ட டிஜிட்டல் தொழிநுட்பப் பாவனை தொடர்பான அரச கொள்கையொன்று உள்ளது. முன்னாள் ஜனாதிபதி செயலாளர் லலித் வீரதுங்க அவர்களால் ''அரச துறையின் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்பப் பயன்பாடு தொடர்பான கொள்கை மற்றும் நடைமுறைகள்'' எனும் பெயரிலான 2010 மே மாதம் வெளியிடப்பட்டுள்ள சுற்றிக்கையில் அதற்குரிய கட்டளைகள் வெளியிடப்பட்டுள்ளன. அதற்கமைய, அனைத்து அரச நிறுவனமும் தமது வருடாந்த வரவு செலவின் மூலம் நிறுவனத்தின் தகவல் தொடர்பாடல் தொழிநுட்பப் பெறுகை நடவடிக்கைகள் மற்றும் நிறுவனத்தில் காணப்படும் தகவல் தொடர்பாடல் தொழிநுட்ப உபகரணங்கள், கட்டமைப்பு மற்றும் வலையமைப்புப் பராமரிப்புக்களுக்குப் போதுமானளவு நிதியொதுக்கீடு செய்யப்பட வேண்டும். குறித்த நடவடிக்கை முறைக்கமைய அனைத்து அரச நிறுவனங்களிலும் உத்தியோகபூர்வ தொடர்பாடல் நடவடிக்கைகளுக்காக மின்னஞ்சல் பாவனையானது கட்டாயமானதாகும். அதேபோல் இந்த இ-அரச கொள்கை இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்ப பிரதிநிதி நிறுவனத்தால் விபரமாக வழிகாட்டப்பட்டுள்ளது. தற்போது பந்துல குணவர்த்தன அமைச்சர் அவர்களும் லக் சதொச உயர்மட்ட பணிப்பாளர் சபையும் மோசமான வாதங்களை முன்வைத்து தப்பித்துக் கொள்வதற்கு முயல்வது இ-அரச கொள்கை தொடர்பாக சிறிதளவேனும் அறிவில்லாமல் செயற்படுவது தெரியவருகின்றது. ஆனாலும் அதன் மூலம் ஒரு பொய்யை மூடி மறைக்கச் சென்று நூறு பொய்களைக் கூற முற்படுவதாலாகும்.

## தகவல் உத்தியோகத்தர் இல்லாத லக் சதொச

டிஜிட்டல் ஆட்சி முறைக்கமைய லக் சதொச மற்றும் வர்த்தக அமைச்சர் முன்வைக்கும் வாதங்கள் அடிப்படையற்றதென்பதும் உண்மைக்குப் புறம்பானதெனவும் கடிதக்காரர்களுக்கு நிரூபிக்க முடியம். அது இவ்வாறாகும்: இலங்கை துறைமுக அதிகார சபை மற்றும் தனியார் கொள்கலன் முனையங்களில் கைவிடப்பட்டுள்ள இலங்கை சுங்கத் திணைக்களத்தால் அரச உடமையாக்கப்பட்ட அத்தியாவசிய உணவுப் பொருட்களை ஏலத்தில் விடாமல் லங்கா சதொசவிற்கு வழங்குவதன் மூலம் லங்கா சதொச பெற்றுக்கொண்ட உணவுப் பொருட்கள் மற்றும் அவற்றின் அளவு மற்றும் விலைகள் அடங்கிய ஆவணங்கள், அவற்றை விநியோகித்த லங்கா சதொச கிளைகள்

மற்றும் அளவுகள், விலைகள் அவ்வாறில்லாவிட்டால் மொத்த வர்த்தகர்களுக்கு விற்பனை செய்தால், அதற்குரிய விலை அளவுகள் தொடர்பான ஆவணங்கள் போன்ற தகவல்கள், தகவல் அறிதல் சட்டத்தின் கீழ் பெற்றுக்கொள்வதற்கு கடிதக்காரர் செப்ரெம்பர் 26 ஆம் திகதி முயற்சி எடுத்துள்ளார். ஆனாலும் லக் சதொச இணையத்தளத்தில் அதுதொடர்பான தகவல் உத்தியோகத்தரோ அல்லது அதற்குரிய தொலைபேசி இலக்கம் குறிப்பிடப்படவில்லை. அங்கு குறிப்பிடப்பட்டுள்ள 1998 இலக்கத்துடன் தொடர்பு கொள்ளும் போது அது வீடுகளுக்கு பொருட்களை விநியோகிப்பதற்காக தயாரிக்கப்பட்ட முறையொன்றெனக் கூறப்பட்டது.

பின்னர் கடிதக்காரர் குறித்த தகவல் விண்ணப்பத்தை லக் சதொச விடயதானத்திற்குப் பொறுப்பான வர்த்தக அமைச்சின் மேலதிக செயலாளருக்கு அனுப்பியுள்ளார். குறித்த அதிகாரி அடுத்த நாளே அத் தகவலை வழங்குமாறு குறிப்பிட்டு லக் சதொச தலைவருக்கும் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரியின் மின்னஞ்சல் முகவரிகளுக்கு அனுப்பி கடிதக்காரருக்குப் பிரதியொன்றையும் அனுப்பியிருந்தார். ஆனாலும் தகவல் சட்டத்தின் பிரகாரம் லக் சதொச சார்பாக கடிதக்காரருக்கு எந்தவொரு அறிவித்தலையும் மேற்கொள்ளாமல் ஒக்ரோபர் 05 ஆம் திகதி பிற்பகல் 3.36 இற்கு அதன் தலைவர் ஆனந்த பீரிஸ் அவர்களிடம் அது பற்றி வினவப்பட்டது. அவருடைய பதிலாக, தனக்கு ஈமெயில் செய்தியை பார்ப்பதற்கு இயலுமை கிட்டவில்லை என்றார். அதற்கமைய செப்ரெம்பர் 26 ஆம் தொடக்கம் ஒக்ரோபர் 05 ஆம் திகதி வரை ஒன்பது நாட்கள் வரைக்கும் லக் சதொச தலைவர் அவர்கள் தனது உத்தியோகபூர்வ செய்தியை பார்க்கவில்லை. வெள்ளைப்பூடு கொடுக்கல் வாங்கலை ஒருபுறம் வையுங்கள். வர்த்தக அமைச்சர் அவர்கள் பாராளுமன்றத்திலும் வெகுசன ஊடக சந்திப்புக்களிலும் முன்வந்து பாதுகாக்க முயல்வது இவ்வாறானதொரு தலைவரையேயாகும். அது மாத்திரமல்ல தலைவர் ஆனந்த பீரிஸ் அவர்கள் தொலைபேசி அழைப்பின் போது மேலும் தெரிவித்ததாவது, லக் சதொசவுக்கு தகவல் உத்தியோகத்தர் ஒருவர் அப்போது நியமிக்கப்பட்டிருக்கவில்லை என்றார்.

தகவல் சட்டத்தின் 23(1)(அ) இற்கமைய சட்டத்தின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்காக, அனைத்து பகிரங்க நிறுவனத்தால் நடைமுறைப்படுத்தவதற்கு மூன்று மாதங்களுக்குள் குறித்த பகிரங்க நிறுவனத்தின் தகவல்கள் அதிகாரிகளான ஒருவரோ அல்லது அதற்கு மேலதிகமாக ஆட்சேபனையை விசாரிப்பதற்கான உத்தியோகத்தர்களை நியமித்தல் வேண்டும். அங்கு (ஆ) உறுப்புரையில் குறிப்பிட்டவாறு, அவ்வாறு தகவல் உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்படும் வரை பகிரங்க நிறுவனத்தின் பிரதானி அல்லது பிரதம நிறைவேற்று அதிகாரி இச்சட்டத்தின் செயற்பாடுகளுக்காக குறித்த பகிரங்க நிறுவனத்தின் தகவல் உத்தியோகத்தராகக் கருதப்படும். ஆனாலும் அப்பொறுப்பை லக் சதொச நிறைவேற்றவில்லை. கடிதக்காரர் பின்னர் வட்ஸ்அப் மூலம் தகவல் சட்டத்தின் குறித்த சட்டப் பகுதிகளை தலைவர் அவர்களுக்கும் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளுக்கும் தெளிவூட்டுவதற்காக அனுப்பியுள்ளார். (தகவல் சட்டத்திற்கமைய அவ்வாறான படிமுறை தேவையில்லை ஆனாலும் அதனை அவ்வாறு செய்தமைக்கான காரணம் தகவல் கலாச்சாரத்தின் ஆரோக்கியமான அணுகுமுறைக்கான படிமுறையாகவாகும்.

## நியமித்ததாக நினைவில்லை

வினவிய பின்னர் தகவல் விண்ணப்பமொன்றின் மூலம் அதனைத் தனக்கு நினைவூட்டினாலும், கடிதக்காரருக்கு நன்றி தெரிவித்து அரை மணித்தியாலயங்களின்

பின்னர் தொலைபேசி அழைப்பெடுத்துக் கூறியதாவது. சிரேஷ்ட முகாமையாளர் (சட்டம்) சுகத் அதற்காக நியமிக்கப்பட்டதாகவும் அவரிடம் அத்தகவலைப் பெற முடியுமெனவும் கூறினார். சிரேஷ்ட முகாமையாளர் சுகத் அவர்கள் தொலைபேசியில் தொடர்பு கொண்ட பின்னர் அது தொடர்பாகத் தேடிப்பார்ப்பதற்கு குறுகிய காலத்தை கேட்டுள்ளதுடன், கடந்த 09 ஆம் திகதி மீண்டும் அவரிடம் தகவல் பற்றிக் கேட்டோம். அப்போது அவர் கூறினார், தகவல் உத்தியோகத்தராகப் பணியாற்றுபவர் சிரேஷ்ட முகாமையாளர் (நடவடிக்கை) சஞ்சிவ் என்பதால் அவரிடம் தகவல்களைப் பெறுமாறும் கூறினார். ஆனாலும் கடந்த 22 ஆம் திகதி அவரிடம் வினவிய போது அவர் தகவல் உத்தியோகத்தரா என நம்பிக்கை இல்லையெனத் தெளிவாகப் புரிந்து கொள்ளக் கூடியதாகவிருந்தது. ''என்னை நியமித்ததாக ஞாபகம் இருக்கின்றது. கடிதமொன்றும் இருந்தது. நான் பார்க்கின்றேன்.'' என அவருக்கு கடிதக்காரர் நினைவூட்டினார் தகவல் விண்ணப்பத்தை மின்னஞ்சல் மூலம் அனுப்பியதாகக் கூறினார்.

தகவல் அறிதல் சட்டத்திற்கமைய 14 வேலை நாட்களில் தகவல் வழங்குவதா இல்லையென ஒக்டோபர் 14 ஆம் திகதியாகும் போது அறிவிக்க வேண்டியிருப்பினும், இன்னும் அவ்வாறானதொரு அறிவித்தலை வழங்கவில்லை. அதற்கமைய சட்டத்தின் பிரகாரம், லக் சதொச தலைவர் அவர்களுக்கு இந்நிலைமை தொடர்பாக மேன்முறையீடு செய்வதற்கு கடிதக்காரர் நடவடிக்கை எடுத்துள்ளார். அதன் மூலம் லக் சதொச உயர்மட்ட பணிப்பாளர் சபையினரிடையே நிர்வாக ரீதியான தீர்மானங்கள் தொடர்பாக சரியான உள்ளக தொடர்பாடல் கூட இல்லையென அறிந்து கொள்ள முடிகின்றது. கொவிட் தொற்று நிலையுடன் அரச மட்டத்தில் ஒட்டுமொத்த சமூகத்தையும் இணையவழியூடாக டிஜிட்டல் தொழிநுட்பத்தின் மூலம் உயரிய வகையில் விளைதிறனை அடைவதற்கே ஊக்குவிக்கின்றனர். அவ்வாறானதொரு சூழ்நிலையில் லக் சதொச பணிப்பாளர் சபையினர் இன்னும் 19 ஆம் நூற்றாண்டைப் போல் செயற்படுகின்றனர். லக் சதொச வின் இத்தொடர்பாடலில் மாத்திரமாவது அதன் உயர்மட்ட நிர்வாக பிரச்சினைகள் தொடர்பாக எமக்குச் சிந்திக்க முடியும். அதேபோல் இம்மோசடிக்குரிய அத்தியாவசிய தகவல்களை வெளியிடுவதற்கு தாமதிப்பது அவற்றை அழிக்கும் நோக்கமா எனச் சிந்திக்கத் தோன்றுகின்றது. மிகவும் மோசமான விடயம் அதுவாகும்.

## சுயாதீன விசாரணையொன்று அவசியமாகும்

வர்த்தக அமைச்சர் காப்பாற்றுவதற்கு முயற்சிக்கும் இவ் உயர்மட்ட பணிப்பாளர் சபை பற்றி தற்போது கூறுவது என்ன? வெள்ளைப்பூடு கொடுக்கல் வாங்கலுக்குரிய தகவல்கள் தொடர்பாடல் இதிலிருந்து மாற்றமடையுமென கூறுவதற்கு வர்த்தக அமைச்சர் அவர்கள் குழப்பமடைவாரா?

இந்த அத்தியாவசிய உணவுப் பொருட்கள் தொகையை கொள்வனவு செய்யும் போது தீர்மானம் எடுத்த பணிப்பாளர் சபை பதவிகளில் வைத்துக்கொண்டு மேற்கொள்ளும் விசாரணைகள் சுயாதீனமாக அமையாதென நாம் ஆரம்பத்திலிருந்தே எடுத்துக் கூறினோம். ஆனாலும் அதிகாரிகள் நாங்கள் எடுத்துக் கூறிய விடயங்களைத் தேடி ஆராயாமல் தகவல் வழங்குநரை விமர்சித்தனர். ஆனாலும் தற்போது குற்றப் புலனாய்வுத் திணைக்களம் நாங்கள் எடுத்துக் கூறிய விடயங்கள் சரியென நிரூபித்துள்ளது. அதிக விலைமனு சமர்ப்பிக்கப்பட்டிருந்த M/s NS Enterprises கம்பனிக்கு வெள்ளைப்பூடு தொகையை வழங்குவதற்குத் தீர்மானித்ததாக கடிதம் அனுப்பியது சிரேஷ்ட முகாமையாளர்

(விநியோகம்) ஆர்.எஸ்.பர்னாந்து அவர்களாகும். பிரதிப் பொதுமுகாமையாளர் (நிதி) சுசிர பெரேராவுக்கு இக்கடிதத்தை அனுப்பியிருந்தது பிரதிப் பொது முகாமையாளர் (பெறுகை) சமிலா அசுரமான அவர்கள் மூலமாகும். பிரதம நிறைவேற்று அதிகாரி ரஞ்சித் ஜி ரூபசிங்க, பிரதிப் பொது முகாமையாளர் (நடவடிக்கை) ரீ.டீ. குலதுங்க மற்றும் சிரேஷ்ட முகாமையாளர் (பெறுகை) லக்ஸ்மன் குமார போன்றோருக்கு குறித்த கடிதம் பிரதியிடப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. உணவுப் பொருட்கள் லக் சதொச கிளைகள் மூலம் பொதுமக்களுக்கு குறைந்த விலையில் வழங்குவதற்கான அமைச்சரவை உடன்பாட்டின் பிரகாரம் மொத்த விற்பனைக்குத் தீர்மானம் எடுத்திருப்பது உண்மையாகவே அச்சந்தர்ப்பத்திலேயாகும். தற்போது குற்றப் புலனாய்வுப் பிரிவின் விசாரணைகளின் படி வெள்ளைப்பூடு ஒரு கிலோவுக்கு 30.00 ரூபா கொமிஷன் தொகையைப் பெற்றுக்கொள்வதற்கு முயற்சிக்கப்பட்டுள்ளது. அது இக்கதையின் வெள்ளைப்பூடு அத்தியாயமாகும்.

இன்னும் வெள்ளைப்பூடு கொடுக்கல் வாங்கல் பற்றி மாத்திரமே சமூகத்தின் கவனம் உள்ளது. கடிதக்காரர் அதற்கு அப்பால் சென்று தகவல்களைக் கேட்டிருப்பது லக் சதொசவின் ஏனைய கொடுக்கல் வாங்கல் பற்றியாகும். அதுதொடர்பாக இன்னும் லக் சதொசவின் அதிகாரிகள் வெளிப்படைத்தன்மையற்ற வகையிலேயே நடந்துகொள்கின்றனர். வெள்ளைப்பூடு மோசடி செய்யாமல் இக்கொடுக்கல் வாங்கல் பற்றி துரிதமாக சட்டத்தின் பிரகாரம் தகவல் வெளியிடுவது லக் சதொச உயரதிகாரிகளின் பொறுப்பாகும். அரசியலமைப்பின் பிரகாரம் இத்தகவல்கள் தற்போது பொதுமக்களின் சொத்தாகும். அவற்றை மறைப்பதும் சட்டத்தின் படி தண்டனைக்குரிய குற்றமாகும்.


- பிங்குன் மேனக கமகே
  **bingungamage88@gmail.com**

# இலங்கையில் தகவல் அறிதல் சட்டம் சரியான வகையில் அமுல்படுத்தப்படுகின்றதா?

உலகில் குடியரசுகள் உருவாகிய பின்னர் அரசின் உரித்து மக்களுக்குரியது எனும் எண்ணக்கரு தோன்றியது. அரசாங்கம் மற்றும் அரச நிறுவனங்கள் மக்களுடைய வரிப்பணத்திலேயே பராமரிக்கப்பட்டு வருகின்றன. ஆகவே பொதுமக்களுடைய பணத்தில் அரசொன்று மேற்கொள்ளும் பணிகள் தொடர்பான தகவல்களை மக்கள் அறிந்துகொள்ள வேண்டுமென்பது அடிப்படைக் கொள்கையாக அமைந்தது. அது ஜனநாயக நாடொன்றின் அடிப்படைப் பண்பாகும்.

தகவல் அறியும் சுதந்திரம் மனித உரிமையாவதுடன், பிரஜைகளுக்குப் பொறுப்புக் கூறும் அரசொன்றிடமிருந்து தகவல்களை அறிந்துகொள்வதற்காக பிரஜைகளுக்கு உரிமை இருத்தல் வேண்டும். இந்தவகையில் உத்தியோகபூர்வ ஆவணங்களை அணுகும் உரிமை, தகவல் அறியும் சுதந்திரம் அண்மைக்காலமாக மிகவும் துரிதமாக வளர்ச்சியடைந்து வந்தாலும், அது ஒருபோதும் புதிய எண்ணக்கரு ஒன்றல்ல.

தகவல் உரிமைச் சட்டத்தின் அடிப்படைக் குறிக்கோளாக அமைவது, பிரஜைகளை வலுவூட்டுவதாகும். அதேபோல் அரசாங்கம் வேலை செய்யும் போது ஏற்பாடுகள் மற்றும் பொறுப்புக்களை மேம்படுத்தல், மோசடிகளைக் கட்டுப்படுத்தல் மற்றும் ஜனநாயகத்தை மக்களுக்காக உண்மையான அர்த்தத்துடன் செயற்படுத்துவதாகும். அதேபோல் பிரஜைகள் என்ற ரீதியில் ஆட்சியாளர்களின் நடவடிக்கைகள் தொடர்பாக விழிப்புடன் இருத்தல் மற்றும் அரச ஆட்சி முறையில் பொறுப்பு – வகைப் பொறுப்புக்கூறலை ஏற்படுத்துவதற்கு பிரஜைகளுக்கு தகவலுக்கான உரிமைச் சட்டத்தில் அவகாசம் கிடைத்துள்ளது. உண்மையாகவே தகவல் சட்டம் அரசாங்கத்தின் செயற்பாடுகளைப் பிரஜைகள் அறிந்திருப்பதற்கான படிமுறையாகும்.

இலங்கையர்களுக்கு தகவல் அறிதல் உரிமைக்கு சட்ட ரீதியான அணுகுமுறையை வழங்கி தகவல் அறிதல் உரிமை தொடர்பான ஆணைக்குழு, 2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க தகவல் அறிதலுக்கான உரிமைச் சட்டத்தின் பிரகாரம் நிறுவப்பட்டுள்ள சுயாதீன நியதிச்சட்ட ஆணைக்குழுவாகும். பிரஜைகளுக்கு தகவலறிதலுக்கான உரிமையை வென்றெடுப்பதற்காகவும், தகவலுக்கான உரிமை தொடர்பான சட்டத்தில்

உள்ளடக்கப்படும் பகிரங்க அதிகார சபைகளிடையே தகவல் வெளிப்படுத்தும் நட்புமிக்க நிர்வாகக் கலாச்சாரமொன்றை கட்டியெழுப்புவது பற்றியதான முக்கிய வகிபாகம் அதற்கு வழங்கப்பட்டுள்ளது.

அந்தவகையில் தகவல் சட்டத்தின் மூலம் மக்களுக்கு தகவலை அறிந்து கொள்ளும் உரிமையை சரியான வகையில் பாதுகாப்பதற்காக மூன்று அடிப்படைத் தேவைகள் தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டுள்ளது. குறிப்பாக :

1. தகவலுக்கான அணுகுமுறையை வழங்குதல் - மக்களுக்குத் தேவையான தகவல் தங்குதடையின்றி கிடைப்பதற்கான இயலுமையைக் குறிக்கின்றது. தகவல் இலகுவாகக் கிடைப்பதைப் போலவே தகவலைப் பெற்றுக் கொள்ளும் வழிகள் தங்குதடையின்றி சமூகத்தில் நடைமுறைப்படுத்தப்படுவதைக் குறிக்கின்றது. அதற்காக தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் 7 ஆம் உறுப்புரையின் கீழ் காணப்படும் உப உறுப்புரைகள் மூலமும் அவற்றின் தேவைகள் தொடர்பான விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

2. தகவல்களை பிரசித்தப்படுத்துவது தொடர்பில் அரச நிறுவனங்களுக்குள்ள பொறுப்பு

3. தகவல்களை சமர்ப்பிப்பதற்கான பொறுப்பு என்பன அவற்றில் அடங்கும்.

இந்தவகையிலான கட்டமைப்புடன் கூடியதாக இலங்கையின் தகவல் சட்டம் தயாரிக்கப்பட்டுள்ளமையால், உலகில் தகவல் அறிதல் சட்டம் தொடர்பான தரப்படுத்தலில் இலங்கைக்கு நான்காம் இடம் கிடைத்திருப்பதை உலகளாவிய தகவல் தரப்படுத்தல் இணையத்தளம் சுட்டிக்காட்டியுள்ளது.
(https (//www'rti-rating.org/)

## தரப்படுத்தப்படும் விதம்

புதிய தரப்படுத்தல்களில் மிகவும் கவர்ச்சியான மாற்றமாக அமைவது 2011 ஆம் ஆண்டு ஆரம்பத் தரப்படுத்தலில் இருந்து கடந்த வருடம் வரையிலும் உயர் நிலையில் இருந்த சேர்பியாவைக் கடந்து மெக்சிகோ முன்னோக்கி வந்துள்ளதுமையாகும். மெக்சிகோ தனது "வெளிப்படைத்தன்மை மற்றும் பொதுத் தகவல்களுக்கான அணுகுமுறைக்கான பொதுச் சட்டத்தை" குறிப்பிடத்தக்களவு மறுசீரமைப்பிற்கு உட்படுத்தியுள்ள அதேவேளை, அதற்காக வழங்கப்படும் மொத்தப் புள்ளிகள் 150 இல் 136 புள்ளிகளைப் பெற்றுக்கொண்டது. இது அவர்களுடைய முற்கூட்டிய 117 புள்ளிகளை விட குறிப்பிடத்தக்களவு முன்னேற்றமாகும்.

இந்தவகையில் இலங்கையில் தகவல் அறிதல் சட்டம் நிறைவேற்றப்பட்ட பின்னர் இந்தியா தரப்படுத்தலில் 128 புள்ளிகளைப் பெற்றுக் கொண்டு நான்காவது இடத்தில் இருந்ததுடன், தற்போது அவ்விடத்தை 131 புள்ளிகளைப் பெற்றுக்கொண்ட இலங்கை பெற்றுக்கொண்டுள்ளது. அதேபோல் 2020 ஆம் ஆண்டாகும் போது உலகளாவிய தரப்படுத்தலுக்கமைய உயர் நிலையில் இருக்கும் 10 நாடுகளுக்கிடையே ஆப்கானிஸ்தான் 139 புள்ளிகளைப் பெற்றுக்கொண்டு முதலிடத்திலுள்ளது. ஏனைய நாடுகள் பெற்றுக்கொண்ட புள்ளிகளுக்கமைய முறையே இவ்வாறு காணப்படுகின்றது. மெக்சிகோ 136, சேபீரியா 135, இலங்கை 131, ஸ்லோவேனியா 129, அல்பேனியா 127, இந்தியா 127, க்ரோஏசியா 126, லைபீரியா 124, எல்சல்வடோர் 122 புள்ளிகளாகும்.

இந்தியாவின் தகவல் அறிதல் சட்டத்தின் 8 ஆம் உறுப்புரையில் குறிப்பிட்டவாறு, அனைத்து விடுவிப்புக்களுக்கும் விசாரணை ஏற்புடையதல்ல என்பதால் இந்தியாவின்

தகவல் அறிதல் சட்டம் தனிச்சிறப்பு வகையில் 26 புள்ளிகளைப் பெற்றுள்ளது. மேன்முறையீட்டின் அடிப்படையில் இந்தியா அதிக புள்ளிகளைப் பெற்றுக்கொண்டுள்ளது. (30 இற்கு 29 ஆகும்.) தடைவிதிக்கும் பிரிவில் பலம்வாய்ந்த சட்டரீதியான பாதுகாப்பின்மையால் இந்தியா 8 புள்ளிகளில் 5 புள்ளிகளைப் பெற்றுக்கொண்டுள்ளது. அறிக்கைகளை முகாமைத்துவப்படுத்துவதற்காக திட்டவட்டமான தரநிர்ணயங்கள் இல்லாமையால் அவற்றை நடைமுறை ரீதியாகக் கடைப்பிடிக்காமையால் மேம்பாட்டு அளவீட்டுப் பிரிவில் 16 புள்ளிகளில் 13 புள்ளிகளைப் பெற்றுக்கொண்டுள்ளது. அதேவேளை இலங்கையின் தகவல் அறிதல் சட்டம் இந்தியாவின் தகவல் அறிதல் சட்டத்தில் கூட இல்லாத வகையில் பிரஜைகளுக்கு வழங்கப்பட்டுள்ள தகவல்களை அணுகுவதற்கான இயலுமையை அடிப்படையாகக் கொண்டு இவ்வகையில் இந்தியாவையும் கடந்து சென்று இலங்கை முன்னணியில் வருவதற்கான இயலுமை கிட்டியுள்ளது.

எவ்வாறாயினும் இவ்வகையில் சட்டமாக தகவல் அறியும் உரிமை வலுப்படுத்தப்பட்டிருந்தாலும், அதனை நடைமுறைச் சாத்தியமாக அமுல்படுத்தும் போது இலங்கையில் இன்னும் அதற்கு சாதகத்தன்மை இல்லை என்பது இலங்கையில் தகவல் அறிதல் ஆணைக்குழு உள்ளிட்ட உலகளாவிய ரீதியான ஏனைய தகவல் ஆணைக்குழு சிலவற்றுக்கு ஒரே வகையான வினாக்கொத்தினை சமர்ப்பித்து பெறப்பட்ட தகவல்கள் மூலம் அறியக் கூடியதாகவுள்ளது.

இங்கு ஒரே வருடத்தில் தரப்படுத்தலுக்கமைய நான்காம் இடத்தை வகிக்கின்ற இலங்கையைப் போலவே, ஆறாம் இடத்தை வகிக்கின்ற அல்பேனியாவைக் கருத்தில் கொள்ளும் போது ஆணைக்குழுவின் செயற்பாடுகள் மற்றும் பிரஜைகளுக்கு தகவல்களுக்கான அணுகலுக்கான நடைமுறைச் சாத்தியமான செயன்முறையில் இலங்கையை விட அல்பேனியா முன்னிலை வகிக்கின்றமை தெரியவந்துள்ளது.

இங்கு கடந்த 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் ஒரு சில நாடுகளில் தகவல் அறிதல் ஆணைக்குழுவுக்குக் கிடைத்துள்ள மேன்முறையீடுகளின் எண்ணிக்கையை கவனத்தில் கொள்ளும் போது இலங்கை ஆணைக்குழுவுக்கு 2018 ஆம் ஆண்டில் 800 மேன்முறையீடுகளும், 2019 ஆம் ஆண்டில் 1089 முறைப்பாடுகளும் கிடைத்துள்ளன. ஆனாலும் அல்பேனியாவின் தகவல் ஆணைக்குழுவுக்கு 2018 ஆம் ஆண்டில் 820 முறைப்பாடுகளும் 2019 இல் 786 முறைப்பாடுகளும் கிடைத்துள்ளன. ஜேர்மனியில் 2018 இல் 291 மேன்முறையீடுகளும் 2019 இல் 461 மேன்முறையீடுகளும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

இலங்கையில் தகவல் ஆணைக்குழுவுக்கு இவ்வாறு அதிகமான முறைப்பாடுகள் கிடைப்பதற்கான காரணமாக அமைவது, பகிரங்க அதிகாரசபைகள் தகவல் சட்டத்தை கருத்திலெடுக்காமல் தகவல்களை வழங்காமலிருப்பதற்கான பின்னணியை உருவாக்கியுள்ளமையாகும்.

அதேபோல், இவ்வாறு கிடைக்கின்ற முறைப்பாடுகளை விசாரணை செய்வதற்கு அல்பேனியாவில் வாரத்தில் ஐந்து நாட்கள் ஒதுக்கப்பட்டுள்ளதுடன், இலங்கையில் தகவல் ஆணைக்குழுவுக்குக் கிடைக்கும் மேன்முறையீடுகள் திங்கட்கிழமை மற்றும் செவ்வாய்க்கிழமைகளில் மாத்திரமே விசாரணை செய்யப்படுகின்றது. அதனால், மேன்முறையீட்டை விசாரணை செய்து அதற்கான தீர்வுகளைப் பெற்றுக்கொள்வதற்காக கூடுதலாக ஒரு வருடகாலம் எடுக்கின்றமை அவதானிக்கப்பட்டுள்ளது. எனவே நாங்கள் தரப்படுத்தல் பட்டியலில் முன்னிலை வகித்த போதிலும் நடைமுறைச் செயற்பாட்டில் இலங்கையில் தகவல் உரிமையானது ஏனைய உலகளாவிய குறிகாட்டிகளில் முன்னிலை வகிக்கும் சில நாடுகளை விடவும் குறைந்த மட்டத்திலேயாகும் என்பதனைக் காணக்கூடியதாகவுள்ளது.

## சட்டத்தை மீறுகின்ற பகிரங்க அதிகாரசபைகள்

குறிப்பாக தற்போது நாடு பூராகவுமுள்ள பகிரங்க அதிகாரசபைகள் தகவல் அறிதல் சட்டத்திலுள்ள விதிகளுக்கமைய நடவடிக்கை எடுக்கவில்லை என்பது கடந்த 04 வருடங்களாக சமர்ப்பிக்கப்பட்டுள்ள 2000 தகவல் விண்ணப்பங்களின் தரவுப் பகுப்பாய்வின் மூலம் தெரிய வந்துள்ளது. இங்கு தகவல் வழங்கும் காலப்பகுதி தொடர்பான கவனக்குறைவே முக்கிய விடயமாக அமைந்துள்ளது. 2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் 25(1) உறுப்புரைக்கமைய, தகவல் வழங்கும் போது அல்லது தகவல் கோரல் தொடர்பாக எடுக்கப்படும் தீர்மானங்கள் தொடர்பாக 14 நாட்களில் தகவலை கோருபவருக்கு அறிவித்தல் செய்யப்பட வேண்டும். ஆனாலும் தற்போது அதிகமான பகிரங்க அதிகாரசபைகள் இவ்விதிகளை மீறி பிரஜைகளின் தகவல் அறியும் உரிமையை கவனத்தில் கொள்ளாது செயற்படுகின்றதனை அவதானிக்க முடிகின்றது.

அதற்கு சிறந்த உதாரணமாக, பொலிஸ்மா அதிபர் அலுவலகம் மற்றும் ஏனைய பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகங்கள் மூலம் கடந்த 2020 ஆம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தல் காலத்தில் சுகாதார அமைச்சின் மூலம் வெளியிடப்பட்டுள்ள வர்த்தமானி அறிவித்தலுக்கமைய, சரியான வகையில் தெளிவுபடுத்தாமல் தேர்தல் பிரச்சாரக் கூட்டங்களை நடாத்தியமை மற்றும் அங்கு சுகாதார வழிமுறைகளை மீறியமையால் கைது செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை தொடர்பாக தகவல்களைக் கோரும் போது இவ்வகையில் தட்டிக்கழித்திருக்கின்றமையை சுட்டிக்காட்டலாம்.

அதற்கமைய, நாட்டிலுள்ள 42 பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகங்களுக்கு 2020 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 14 ஆம் திகதி அனுப்பப்பட்ட தகவல் கோரலுக்கமைய சரியான காலப்பகுதிக்கமைய தகவல்களை 08 பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகங்கள் மாத்திரமே வழங்கியுள்ளன. அவையாவன, காங்கேசன்துறை, முல்லைத்தீவு, வவுனியா, குளியாப்பிட்டி, களுத்துறை, கண்டி, மட்டக்களப்பு, தங்காலை போன்ற பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகங்களாவதுடன், இலங்கையில் எனைய 34 பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகங்கள் மற்றும் பொலிஸ்மா அதிபர் அலுவலகம் என்பன தகவல்களை வழங்குவதனை தவறவிட்டுள்ளனர்.

அதேபோல் தகவல்களை வழங்காத குறித்த 34 பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகங்களில் தகவல் கோரல் விண்ணப்பம் கிடைத்தமையை அம்பாறை, காலி, அநுராதபுரம், பதுளை பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகங்கள் மாத்திரமே தெரிவித்துள்ளன. ஏனைய அனைத்து பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகங்களும் 2016 ஆம் ஆண்டு 12 ஆம் இலக்க தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் 24(3) ஆம் உறுப்புரையின் பிரகாரம் தகவல் கோரல் படிவம் கிடைத்தமையை தகவல் அலுவலரால் அறிவித்தல் வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டுள்ள சட்டத்தை மீறியுள்ளன.

இவ்வகையில் தகவல்களை வழங்காத பகிரங்க அதிகார சபைகளுக்கு எதிராக தகவல் ஆணைக்குழுவுக்கு மேன்முறையீடு செய்த பின்னர் அதனை விசாரணை செய்வதற்கு 08 மாதகாலம் எடுத்துள்ளது. அங்கு வழங்கப்பட்ட தீர்ப்புக்கமைய கூடுதலான பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகங்கள் தகவல்களை வழங்கினாலும், நிக்கவெரட்டிய, அநுராதபரம், கொழும்பு, கொழும்பு தெற்கு போன்ற பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகங்கள் இதுவரைக்கும் தகவல்களை வழங்காததுடன், அம்பாறை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகம் தகவலை வழங்குவதற்கு 12 ரூபா கட்டணத்தை செலுத்துமாறு 2021.10.18 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் அறிவித்துள்ளது.

குறிப்பாக தகவலுக்கான உரிமைச் சட்டம் தொடர்பாக சட்டத்தின் கட்டளை இலக்கம் 17 இற்கமையவும், குறித்த 15(ஊ) மற்றும் (எ) உறுப்புரை மூலம் தெளிவாக குறிப்பிடப்படுகின்ற விடயமானது, கோரப்பட்டு வழங்கப்படாதுள்ள ஏதேனும் தகவல் காரணமாக பிரஜையிடமிருந்து அறவிடப்பட்ட கட்டணங்களை திருப்பிக் கொடுக்கும்படி பகிரங்க அதிகாரபைக்கு அல்லது ஏதேனும் இயைபான தகவல் அலுவலருக்குப் பணித்தலாகும். இதன் மூலம் வெளிப்படும் சில விடயங்கள் உள்ளன. அதாவது, பகிரங்க அதிகார சபைகளின் தகவல் அலுவலர்கள், மேன்முறையீட்டு அலுவலர்கள் சட்டத்திலுள்ள கட்டளைகள் தொடர்பில் சரியான தெளிவின்மையும், தகவல் ஆணைக்குழுவால் வழங்கப்படுகின்ற தீர்ப்புக்களை கவனத்திற கொள்ளாது சுலபமாக கருதுகின்ற நிலை நிலவுவதுமாகும்.

## ஐந்தாம் உறுப்புரையை தவறாகப் பயன்படுத்தல்

தகவல் அறிதல் சட்டத்தின் 05 ஆம் உறுப்புரையின் கீழ் வழங்க முடியாத தகவல்கள் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனாலும் குறித்த தகவல்களும் பொதுமக்களுடைய நலன்களை அடிப்படையாகக் கொண்டு 5(4)(1) உறுப்புரையின் கீழ் பிரஜைகளுக்குப் பெற்றுக்கொடுப்பதற்கு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. சட்டத்தில் அவ்வாறான ஏற்பாடுகள் இருப்பினும், கூடுதலான பகிரங்க அதிகாரசபைகள் சரியான வகையில் 05 ஆம் உறுப்புரையிலுள்ள விடயங்கள் தொடர்பாக கவனம் செலுத்தாமல், பிரஜைகள் கோரும் போது, அது ஐந்தாவது உறுப்புரைக்கமைவாக உள்ளதெனக் கூறி குறித்த தகவல்களை வழங்குவதை நிராகரிப்பதை காணக்கூடியதாகவுள்ளது.

அதன்படி மேற்குறிப்பிட்ட பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகங்களில் எம்பிலிப்பிட்டி, குருணாகல், பதுளை போன்ற பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகங்களில் கோரப்பட்ட தகவல்களை ஏனைய பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகங்கள் வழங்கியிருக்கும் பின்னணியிலேயே 05 ஆம் உறுப்புரைக்கமைவாக இருப்பதாகக் கூறித் தகவல்களை வழங்குவது நிராகரிக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் குறித்த தகவல்கள் 05 ஆம் உறுப்புரைக்குரியதல்ல எனக்கூறி தகவல் ஆணைக்குழு மூலம் வழங்கிய கட்டளையின் பின்னர் பகிரங்க அதிகாரசபைகள் தகவல்களை வழங்கியிருக்கின்றன.

அதேபோல், நாடளாவிய ரீதியில் 322 பிரதேச செயலகப் பிரிவுகளில் பிறப்புச் சான்றிதழ் பதிவு மற்றும் ஆவணத் திருத்தங்கள் தொடர்பான தகவல்களைக் கோரி ஒரே வினாக்கொத்தின் மூலம் தகவல் விண்ணப்பப்படிவத்தை சமர்ப்பிக்கப்படுவதுடன், அதில் 99 பிரதேச செயலகங்களால் தகவல் வழங்கும் போது மேலும் சில அது 05 அம் உறுப்புரைக்கமைவாக உள்ளதெனக் கூறி தகவல் வழங்குவதை நிராகரிப்பதன் மூலம் தெரியவருதாவது, குறித்த பகிரங்க அதிகாரசபைகள் மக்களுக்கு தகவல்களை வழங்கும் போது சட்டத்தின் ஏற்பாடுகளை சரியான வகையில் நடைமுறைப்படுத்தாதுடன், குறித்த ஏற்பாடுகளை தவறாகப் பயன்படுத்தியுள்ளதனையும் காணலாம்.

மேலும் லங்கா உப்புக் கம்பனியின் உப்புத் தயாரிப்புச் செயன்முறை தொடர்பாக தகவல் கோரிய போது, குறித்த கோரப்பட்ட தகவல்களில் அதிகமானவை 2016 ஆம் ஆண்டு 12 ஆம் இலக்க தகவலுக்கான உரிமைச் சட்டம் தொடர்பாக சட்டத்தின் 5.(1) (ஈ) உறுப்புரைக்கமைவானதெனக் கூறியும் ஏனைய வினாக்கள் தெளிவின்மையெனவும் கூறி தகவல் வழங்குவது நிராகரிக்கப்பட்டுள்ளது. இவ்வாறானதொரு பதிலை வழங்குவதற்கு லங்கா உப்புக் கம்பனிக்கு 10 மாதங்கள் எடுத்துள்ளன.

எவ்வாறாயினும், இலங்கை தகவல் அறிதல் உரிமை தொடர்பான சட்டத்தின் கீழ் 5.(4) (1) இன் பிரகாரம் பொதுமக்கள் நலன் எனும் விடயத்தை மேற்கோள்காட்டி இலங்கை தகவல் அறிதல் உரிமை தொடர்பான ஆணைக்குழுவுக்கு 2021 மே மாதம் 04 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட விடயங்களை எடுத்துக் கூறிய பின்னர், தகவல் கோரிய வினா இலக்கம் 1,2,13 தவிர்ந்த ஏனைய வினாக்களில் கோரப்பட்டிருந்த தகவல்களை 2021 செப்ரெம்பர் 22 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் வழங்குவதற்கு லங்கா உப்புக் கம்பனி நடவடிக்கை எடுத்துள்ளது. ஆனாலும், குறித்த கடிதத்திலும் 1,2 வினாக்களுக்கு தகவல் அறிதல் உரிமை தொடர்பான சட்டத்தின் 5.(1) இ உறுப்புரைக்கமைய உள்ளதெனக் கூறி தகவல் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், 13 ஆம் வினாவின் மூலம் கோரப்பட்ட உப்பு விற்பனை விலைமனுக் கோரலின் பிரதியொன்றை வழங்குவதற்கு லங்கா உப்புக் கம்பனியால் மறுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான பின்னணியில் 2021 செப்ரெம்பர் 24 ஆம் திகதி தகவல் அறிதல் உரிமை தொடர்பான ஆணைக்குழு மூலம் நடாத்தப்பட்ட முறைசார் மேன்முறையீட்டு விசாரணையின் போது வழங்கப்பட்ட கட்டளைகளில் குறிப்பிட்டவாறு, ‘‘சட்டத்தின் 5(4) உறுப்புரையில் இலங்கை தகவல் அறிதல் உரிமை தொடர்பான முறைமையின் கேந்திர நிலையமாகவுள்ளது. மேலும் இத்தகவல் கோரல் தொடர்பாக ஆணைக்குழுவின் கருத்தாக அமைவது, சட்டத்தின் 5(4) உறுப்புரைக்கமைய இத்தகவல்களை வெளிப்படுத்துகையின் மூலமாக நிறைவேற்றப்படுவது மேன்முறையாட்டாளரின் பிரத்தியேக தேவையல்ல என்பதுடன் பொதுமக்களின் நலன்களைப் பூர்த்தி செய்வது என்பதாகும். அப்படியானால், பகிரங்க நிறுவனம் உப்புத் தயாரிப்பு மற்றும் விற்பனையை பிரதானமாக மேற்கொள்ளும் 90% பங்குகள், ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்குரியதான நிறுவனமாக வெளிப்படைத்தன்மையான நிர்வாகத்திற்கு உள்ளாவதுடன், பிரிவு 1,2 பகுதிகளுக்குரிய தகவல்களை வெளிப்படைத்தன்மையான நிர்வாகத்திற்கு ஏற்புடையதாக அமைவதால், அவ்வாறான தகவல்களை கோருவதற்கு உரிமை உண்டு’’ என்பதாகும்.

ஐந்தாம் உறுப்புரையில் குறிப்பிடப்பட்டவாறு, ‘‘பொதுமக்கள் சார்ந்த நலன்களுக்கு மேற்படி தகவல்களை வெளியிடுவதால் ஏற்படும் பாதிப்புக்களை விட அதிகமான பாதிப்பு ஏற்படுமாயின் அவ்வாறான தகவலுக்கான கோரலை நிராகரிக்க முடியாது என்பதாகும்.’’

‘‘அதற்கமைய 1 ஆம் 2 ஆம் பிரிவுகளுக்கமைவான தகவல்கள், சட்டத்தின் பிரகாரம் வழங்க வேண்டிய தகவல்களாவதுடன், அது இக்கட்டளை கிடைத்து இரண்டு வாரங்களுக்குள் ஆணைக்குழுவுக்கு பிரதியுடன் கூடிய மேன்முறையீட்டுக்காக சமர்ப்பிக்குமாறு கட்டளையிடப்படும்.’’ என அக்கட்டளையில் குறிப்பிடப்பட்டுள்ளது. குறித்த கட்டளையின் 21 நாட்களுக்குப் பின்னர் லங்கா உப்புக் கம்பனியால் தகவல் வழங்கப்பட்டுள்ளது.

அதேபோல் மாத்தறை பொது மருத்துவமனையால் 2019 டிசெம்பர் மாதம் 04 ஆம் திகதி சிகிச்சைக் கழிவகற்றல் தொடர்பாக தகவல் கோரிய போது, அப்போது அது தொடர்பான விசாரணைகள் மற்றும் நீதிமன்ற நடவடிக்கைகள் இடம்பெறுகின்றதெனக் கூறி மாத்தறை பொது மருத்துவமனையால் 2019 டிசெம்பர் மாதம் 23 ஆம் திகதி குறித்த தகவல்களை வழங்குவது நிராகரிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக சுகாதார அமைச்சுக்கு 2019 திசெம்பர் 28 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட மேன்மறையீட்டுக்கு 2020 ஜனவரி 13 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் குறித்த விசாரணை முடிவடைந்த பின்னர் தகவல் வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

ஆயினும், 2016 ஆம் ஆண்டு 12 ஆம் இலக்க தகவலுக்கான உரிமைச் சட்டம்

தொடர்பாக சட்டத்தின் 5.1(ஏ)(i) மற்றும் (ii) (x) போன்ற உறுப்புரைகளுக்கமைய குறித்த தகவல்களை வழங்குவதற்கு மறுப்புத் தெரிவிக்கக்கூடிய, குறிப்பிட்ட பகிரங்க அதிகாரசபை மூலம் 2019 டிசெம்பர் 23 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனாலும் இதுதொடர்பாக இலங்கை தகவலுக்கான உரிமைச் சட்டம் தொடர்பாக சட்டத்தின் 5(4) (1) இன்கீழ் பொதுமக்கள் அக்கறை சார்ந்த விடயத்தை சுட்டிக்காட்டி இலங்கை தகவல் அறிதலுக்கான உரிமைகள் தொடர்பான ஆணைக்குழுவுக்கு 2020 ஜனவரி மாதம் 17 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட மேன்முறையீட்டின் பின்னர் நீண்ட விசாரணையின் பின்னர், 2020 திசெம்பர் 01 ஆம் திகதி மேன்முறையீட்டு இலக்கம் 2083/2020 இன் கீழ் குறித்த தகவல்களை, தகவல் கோருபவருக்கு வழங்குமாறு ஆணைக்குழு விடுத்த கட்டளையின் பின்னர் இரண்டு வாரங்களில் குறித்த பகிரங்க அதிகாரசபையால் தகவல் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

## மின்னஞ்சல் (ஈ–மெயில்) பாவனை குறைவடைதல்

குறிப்பாக இவற்றைத் தேடி ஆராயும் போது மின்னஞ்சல் மூலம் 650 இற்கு மேற்பட்ட தகவல் கோரல் விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட்டாலும், அவற்றில் 200 இற்கும் குறைவான பகிரங்க அதிகாரசபைகள் மாத்திரமே பதில் வழங்கியுள்ளது. விசேடமாக இதுபற்றி ஆராய்ந்து பார்க்கும் போது 322 பிரதேசச் செயலகங்கள் மற்றும் 362 சுகாதார வைத்தியப் பணிமனைகளுக்கான தகவல் கோரல் படிவம் சமர்ப்பிக்கப்பட்டாலும், அவற்றில் 120 பிரதேசச் செயலகங்களும் 133 சுகாதார வைத்திய பணிமனைகள் மாத்திரமே பதிலளித்துள்ளன.

அதேபோல் பகிரங்க அதிகார சபைகள் மின்னஞ்சல் பாவனை செய்யாததுடன், குறித்த அலுவலகர்கள் பணி இடமாற்றம் செய்யும் போது மின்னஞ்சல் முகவரி மாற்றமடைகின்றமையும் இத்தேடலின் போது தெரியவந்துள்ளது. மேலும் மின்னஞ்சல் மூலம் தகவல் கோரும் போது தகவல் கோருபவருக்கு மோசமான பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க நேரிட்டுள்ளது. இந்நிலைமையானது ஏனைய பகிரங்க அதிகார சபைகளிலும் காணக்கூடியதாகவுள்ள பொதுவான நிலைமையாகும்.

## தகவல் தேவைப்படும் விடயம் மற்றும் தனித்துவ அடையாளங்களை வினவுதல்

பிரஜை ஒருவர் தகவல் பெறுவதற்கு விண்ணப்பிக்கும் போது, தகவல் தேவைப்படும் விடயம் தொடர்பாக வினாவுகை நாடளாவிய ரீதியிலுள்ள அதிகமான பகிரங்க அதிகாரசபைகளிலுள்ள தகவல் அலுவலகர்கள், பெயர் குறித்துரைக்கப்பட்ட அலுவலர்களால் வினவப்படுகின்றது. இவ்வாறு தகவல் தேவைப்படும் காரணத்தை வினவுவதைப் போலவே தனித்துவ அடையாளத்தை தெளிவுபடுத்திக்கொள்வதற்கு அடையாள அட்டையின் பிரதியொன்றையும் கோருவது இக்கண்காணிப்பில் தெரியவந்த விடயமாகும்.

இவ்வகையில் பேராதனை போதனா மருத்துவமனையால் சிகிச்சைக் கழிவுகளை அகற்றல் தொடர்பான தகவல்களைக் கோரிய போது, குறித்த தகவல்களை வழங்குவதற்கு பிரஜாவுரிமையை உறுதிப்படுத்துவதற்கு தேசிய அடையாள அட்டையின் பிரதியொன்றை கேட்ட சந்தர்ப்பத்தில், அதுதொடர்பாக தகவல் சட்டத்தின் விதிகளுக்கமைய, பெயர் குறித்துரைக்கப்பட்ட அலுவலருக்கு சமர்ப்பிக்கப்பட்ட மேன்முறையீட்டின் பின்னரே

சுகாதார அமைச்சின் மேலதிக செயலாளர் (நிர்வாகம் II) அவர்கள் அடையாளத்தை உறுதிப்படுத்தி குறித்த தகவலைப் பெற்றுக்கொள்ளுமாறு தெரிவித்திருந்தார்.

இவ்வாறான பின்னணியில் தகவல் அறிதலுக்கான உரிமை தொடர்பான ஆணைக்குழுவின் மூலம் 71/2021 ஆம் இலக்க மேன்முறையீட்டை விசாரணை செய்த பின்னர் 2021 ஏப்ரல் மாதம் 20 ஆம் திகதி இக்கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளது. கட்டளையில் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளவாறு "ஆணைக்குழுவின் ஒழுங்குவிதிகளில் (கட்டணம், மேன்முறையீட்டு நடவடிக்கை முறைகள், வர்த்தமானி அறிவித்தல் 2004/66, 2017.02.03 இல் குறிப்பிட்டவாறான RTI 1 விண்ணப்பத்தின் பிரகாரம் தகவல் கோருபவர் இலங்கைப் பிரஜையா இல்லையா என்பதைக் குறிப்பிட வேண்டியதுடன், குறித்த படிவத்தில் ஆம் அல்லது இல்லை என அடையாளமிட வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் குடியுரிமையை உறுதிப்படுத்திக்கொள்வதற்காக தகவல் கோரும் நபருக்கு தெரிவிப்பதற்கு, மட்டுப்படுத்தப்பட்ட சந்தர்ப்பங்களில் நியாயமான காரணத்திற்காக பிரச்சினைகள் தோன்றுகின்ற போது மட்டுமே குடியுரிமையை வினவலாம். "அதேபோல் தகவல் கோருபவர் இலங்கைப் பிரஜை அல்ல என்பதை நடைமுறை ரீதியான விடயங்களின் அடிப்படையில் பகிரங்க அதிகாரசபைகள் சந்தேகம் ஏற்படும் சந்தர்ப்பம் தவிர்ந்த, நபரொருவர் தகவல் அறிதலுக்கான உரிமையின் அடிப்படையில் தகவல் கோரும் போது, குடியுரிமை தொடர்பான உறுதிப்படுத்தல் அவசியமற்றதாவதுடன், ஆணைக்குழு இக்கட்டளை மூலம் சுட்டிக்காட்டியுள்ளது. இக்கட்டளையின் பின்னர் குறித்த பகிரங்க அதிகார சபையான பேராதனை போதனா மருத்துவமனை அத்தகவல்களை வழங்கியுள்ளது.

பிரஜை ஒருவர் தகவல் கோரும் போது குறித்த தகவலைக் கோருவதற்கான காரணம் பற்றி அவரிடம் வினவுவது தகவல் சட்டத்திற்கு எதிரானது என தகவல் அறிதல் சட்டம் தொடர்பான ஆலோசகரும் சட்டத்தரணியுமான ஜகத் லியனாராச்சி அவர்கள் குறிப்பிட்டுக் கூறுகின்றார். அதேபோல் தேவையற்ற தெளிவுபடுத்தல்கள் தொடர்பான தேவை பற்றி தகவல் சட்டத்தில் எந்தவொரு இடத்திலும் குறிப்பிடப்படவில்லை எனவும், இலங்கைப் பிரஜையாக இருத்தல் மாத்திரமே கட்டாயமானதாகும். அதேபோல் குறித்த தகவல் கோருபவர் RTI 1 விண்ணப்பப்படிவத்தில் அவர் பிரஜை எனக் குறிப்பிட்டிருப்பின் அதனடிப்படையில் குறித்த தகவல் உத்தியோகத்தர் தகவலை வழங்க வேண்டியதுடன், ஏதேனுமொரு வகையில் இலங்கைப் பிரஜை இல்லையெனின், அவ்வாறு பிரஜை எனக் குறிப்பிடப்பட்டிருந்தால் அது இலங்கை குற்றவியல் சட்டத்திற்கமைய குற்றமெனவும் சட்டத்தரணி லியனாராச்சி அவர்கள் சுட்டிக்காட்டுகின்றார்.

சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய, குறித்தொதுக்கப்பட்ட தினத்தில் பதிலளிக்காமை, கூடுதலான சந்தர்ப்பங்களில் பதிலளிப்புக்கள் தாமதமாகின்றமையின் அடிப்படையில், கடந்த திகதியொன்றைக் குறிப்பிட்டு பதில் அனுப்பிய சந்தர்ப்பங்கள் கடித உறைகளின் திகதிகளை பரிசீலிக்கும் போது கண்டறியப்பட்ட விடயமாகும். அதேபோல் தகவல் விண்ணப்பப்படிவம் கிடைக்கப்பெற்றமையை அறிவித்தல், அனுப்பும் போதும் தகவல் வழங்கலை நிராகரிக்கும் சந்தர்ப்பங்களில் பெயர் குறித்துரைக்கப்பட்ட அலுவலர் யார் என்பதைக் குறிப்பிடுவது கட்டாயமாயிருப்பினும், கூடுதலான பிரதேச செயலகங்களிலும், ஏனைய பகிரங்க அதிகாரசபைகளிலும் குறித்த ஒழுங்குவிதிகளை மீறுவதால், இலங்கையில் தகவல் சட்டம் உருவாக்கப்பட்டு ஐந்து வருடங்கள் கடந்த நிலையிலும் பகிரங்க அதிகாரசபைகளிலுள்ள தகவல் அலுவலர்கள் தகவல் சட்டத்தின் ஏற்பாடுகளைப் பற்றி சரியான வகையில் அறிந்திருக்கமை அல்லது குறித்த ஒழுங்குவிதிகளை சரியான வகையில் மேற்கொள்ளமையும் இதற்கான காரணங்களாகும். அதேவேளை சரியான பொறிமுறைகளைத் தயாரிப்பதற்காக கொள்கை ரீதியான மாற்றங்களை மேற்கொள்வது ஜனநாயக அரசின் பொறுப்பாகவும் அமையும்.

## உயர் அதிகாரிகளிடம் அனுமதி பெறல்

தகவல் அறிதல் சட்டதிற்கமைய தகவல் கோரும் சந்தர்ப்பங்களில் தகவல்களை வழங்குவதற்கு முன்னர் தகவல் அலுவலர்களும், பெயர் குறித்துரைக்கப்பட்ட அலுவலர்களும் உயர் அதிகாரிகளிடம், அமைச்சுக்கள் மற்றும் திணைக்களத்தின் பிரதானிகளின் அனுமதி பெறல் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவது இவ் ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது. அது குறித்த பகிரங்க அதிகாரசபைகள் தகவல் அறிதல் சட்டத்தின் 30 ஆம் உறுப்புரையின் மூலம் தமக்கு வழங்கப்பட்டுள்ள சுதந்திரம் மற்றும் பொறுப்பு தொடர்பான அறிவின்மையுடனும் இன்னுமே முன்னரைப் போல உயர் அதிகாரிகளிடம் அனுமதி பெறும் பொறிமுறையைப் பின்பற்றுகின்ற நடைமுறை காணப்படுகின்றமை இதன் மூலமாக தெளிவாகின்றது. அது 2021 ஆம் ஆண்டு யூலை மாதம் பாடசாலைகளுக்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அதேபோல் நாட்டிலுள்ள பொதுமக்களின் தகவல் அறிதல் உரிமையை மேலும் நிலைநாட்டுவதற்காக குறித்த ஏற்புடைய அலுவலர்கள் தகவல் சட்டத்தின் ஏற்பாடுகள் தொடர்பாக சரியான வகையிலான தெளிவூட்டல் வழங்கப்பட வேண்டியதுடன், தகவல் சட்டத்தின் ஏற்பாடுகளை மீறுகின்ற பகிரங்க அதிகாரசபைகள் தகவல் அலுவலர்களுக்கு எதிராக சட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும். 20 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தின் மூலம் தகவல் அறிதல் உரிமை நீக்கப்படாததுடன், தகவல் ஆணைக்குழுவின் செயற்பாடுகளை வலுப்படுத்தி பிரஜைகளுக்கு தகவல்களை அணுகுவதற்குள்ள இயலுமையை விருத்தி செய்வதற்கு வழிவகுப்பதும் ஜனநாயக அரசின் பொறுப்பாகவும் உள்ளது.

## ஆணைக்குழுவின் கட்டளையை மீறினால் தண்டனை கிடைக்குமா?

இதற்காக இலங்கை தகவல் ஆணைக்குழுவில் எந்தவொரு சட்ட நடவடிக்கையையும் எடுக்காமை பிரஜை ஒருவரின் தகவல் அறியும் உரிமைக்கு பாரிய முட்டுக்கட்டையாக அமைந்துள்ளது. எமது நாட்டின் பிரஜைகளின் அடிப்படை உரிமையான தகவல் அறிதலுக்கான உரிமை இதன்மூலம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இது தொடர்பாக அல்பீனியாவின் தகவல் ஆணைக்குழுவிடம் வினவிய போது தெரியவருவதாவது, தகவல் அறிதல் உரிமை தொடர்பாக சட்டத்தின் 25 ஆம் உறுப்புரையின் கீழ் முறைப்பாட்டாளருக்கு நீதிமன்றத்தில் அல்லது பொது அதிகாரசபையில் மேன்முறையீடு செய்வதற்கான உரிமை காணப்படுவதாகவும், ஆணையாளரின் தீர்ப்பை வழங்கி குறித்த காலப்பகுதியில் பகிரங்க அதிகாரசபை நடவடிக்கை எடுக்காவிடின், ஆணையாளர் அலுவலகத்திற்கு நிர்வாக விசாரணையை மேற்கொள்ள முடிவதுடன், தகவல் உரிமை தொடர்பான ஏற்பாடுகளின் பிரகாரம் தடை விதிப்பதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும்.

இவ்வாறு இன்னுமொரு சட்டத்திற்கு மாத்திரம் மட்டுப்பட்டு செயற்படுவதால் இலங்கையிலுள்ள கூடுதலான பகிரங்க அதிகாரசபைகள் இன்னுமே மக்களுக்கு இலகுவாக வகையில் தகவல்களை அணுகக் கூடிய வகையில் தமது நிறுவனங்களின் தகவல் கட்டமைப்பை உருவாக்கவில்லை என்பதை, 2000 இற்கும் மேற்பட்ட தகவல் கோரல் விண்ணப்பங்களைச் சமர்ப்பித்து மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது.

ஒரு பிரஜை பகிரங்க அதிகாரசபை மூலம் காலத்திற்கேற்ப தமக்குத் தேவையான விடயங்களை மாத்திரமே கோருவார்கள். அதனால், 2016 ஆம் ஆண்டு 12 ஆம் இலக்க

தகவலுக்கான உரிமைச் சட்டத்தன் மூலம் 14 நாட்கள் தொடக்கம் 21 நாட்கள் வரையான காலம் தகவல் வழங்குவதற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. ஆனாலும், இந்தவகையில் பல மாதங்கள், பல வருடங்களாக தகவல் கோருபவர்களுக்கு தகவல்களை வழங்காமல் பல்வேறு காரணங்களைக் குறிப்பிட்டு கூடுதலான பகிரங்க அதிகாரசபைகள் செயற்படுவதால் பிரஜைகளின் தகவல் அறியும் உரிமையில் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

அதேபோல் தகவல் ஆணைக்குழு வழங்கிய தீர்மானத்தைக் கடைப்பிடிப்பதற்கு, தாமதமின்றி இயலுமான வகையில் நடவடிக்கை எடுத்தல் அனைத்து பகிரங்க அதிகாரசபைகளின் பொறுப்பாகும். அவ்வாறில்லாவிடின், சட்டத்தின் 39(4) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய ஆணைக்குழு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். குறித்த உறுப்புரைக்கமைய ஆணைக்குழுவின் தீர்மானத்தைக் கடைப்பிடிப்பதைத் தவிர்க்கும் அல்லது நிராகரிக்கும் ஒவ்வொரு நபரும் இச்சட்டத்தின் கீழ் குற்றமிழைத்தவராகக் கருதப்படுவதுடன், மேல்நீதிமன்ற நீதவானால் மேற்கொள்ளப்படும் வழக்கு விசாரணையின் பின்னர் குற்றவாளியெனத் தீர்ப்பு வழங்கும் போது ஐம்பதாயிரம் ரூபாய்களுக்கு அதிகரிக்காத தண்டப்பணம் அல்லது இரண்டு வருடங்களுக்கு அதிகரிக்காத சிறைத் தண்டனையோ குறித்த தண்டப்பணம் மற்றும் சிறைத் தண்டனை இரண்டுக்கும் குறித்த நபர் குற்றவாளியாதல் வேண்டும். ஆனாலும் தற்போது இவ் ஒழுங்குவிதிகளை மீறியுள்ள எந்தவொரு பகிரங்க அதிகாரசபைக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு அரசாங்கம் சட்ட ரீதியான மாற்றங்களை ஏற்படுத்தினாலும், கொள்கை ரீதியான மாற்றங்கள் ஏற்படாமையால் தகவல் ஆணைக்குழுவால் எதனையும் மேற்கொள்ள முடியாது போயுள்ளது. அதேபோல் அதற்காக சட்டத்தை நடைமுறைப்படுத்தும் போது பொறிமுறையொன்றைத் தயாரிப்பதற்கு ஆணைக்குழுவை வலுவூட்டுவதற்கு அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

- **ராஹூல் சமந்த ஹெட்டியாராச்சி**

---

***ராஹூல் சமந்த ஹெட்டிஆரச்சி*** *– தகவல் அறியும் சட்டத்தைப் பயன்படுத்தி ஊடகவியலாக்கத்தில் ஈடுபட்ட முன்னணி ஊடகவியலாளர். இதுவரை சுமார் 3200 தகவல் விண்ணப்பங்களை சமர்ப்பித்துள்ள அவர் அவற்றின் ஊடாக 2016ம் ஆண்டிலிருந்து இதுவரை கிட்டத்தட்ட 310 செய்திகளையும் சிறப்புக் கட்டுரைகளையும் வழங்கியுள்ளார். 2004ம் ஆண்டிலிருந்து ஊடகவியலாளராக பணியாற்றுகின்ற ராஹூல் வெகுசன ஊடகத்துறை முதுகலைப் பட்டதாரி மாணவர்.*

# ஹொரொவப்பொத்தானவில் பத்து யானைகள் பட்டினியால் உயிரிழந்துள்ளன

காட்டு யானைகளின் வசிப்பிடங்கள் இழக்கப்படுகின்றமையால் எஞ்சியுள்ள பாதுகாப்பு வனங்களில் வாழும் யானைகளுக்கு போதுமானளவு உணவின்மையே இலங்கையில் யானை – மனித மோதல்கள் அதிகரிப்பதற்கு அதிகமான தாக்கத்தை ஏற்படுத்தும் விடயமாக அமைந்துள்ளது.

இவ்விதத்தில் உணவைத் தேடிக் கிராமங்களுக்குள் நுழையும் காட்டு யானைகளால் இடம்பெறும் யானை – மனித மோதல்களுக்குத் தீர்வாக காட்டு யானைகளைப் பிடித்துத் தடுத்து வைத்திருக்கும் ஹொரொவப்பொத்தான யானைகள் பராமரிப்பு நிலையத்தில் உயிரிழந்த 16 காட்டு யானைகளில் 10 யானைகள் போசாக்கின்மையால் இறந்துள்ளன என்ற விடயம், தகவல் அறியும் சட்டத்தைப் பயன்படுத்தி வனசீவராசிகள் திணைக்களத்தின் மூலம் பெற்றுக்கொண்ட காட்டு யானைகளின் மரணப் பரிசோதனை அறிக்கைகளைப் பரிசீலிக்கும் போது தெரியவந்துள்ளது.

இவ்வகையில் ஹொரொவப்பொத்தான யானைகள் பராமரிப்பு நிலையத்திற்கு இலங்கையில் யானை-மனித மோதல்கள் இடம்பெறும் 13 மாவட்டங்களிலிருந்து காட்டு யானைகளைப் பிடித்துச் சென்று விட்ட போதிலும், தற்போதும் காட்டு யானைகள் உணவுத் தேடிக்கொண்டு, மனிதர்களால் பலவந்தமாக கையகப்படுத்தப்பட்டுள்ள தமது வாழ்விடங்களிலும் அதற்கு அப்பாற்பட்ட பிரதேசங்களுக்கும் இடம்பெயர்வதால் ஏற்படும் யானை – மனித மோதல்களால் காட்டு யானைகளின் உயிர்களும் மனிதர்களின் உயிர்களும் இழக்கப்படுவது வெகுவாக அதிகரித்த வண்ணமுள்ளது.

அதிகாரிகள் போலியான தீர்வுகளைக் காணும் யானை – மனித மோதல்களால் 2020 ஆம் ஆண்டில் மாத்திரம் 357 காட்டு யானைகளும் 205 மனித உயிர்களும் காவு கொள்ளப்பட்டுள்ளன. அதேபோல் 2021 யூலை 25 ஆம் திகதியாகும் போது அந்தவகையில் 205 காட்டு யானைகளும் 83 மனித உயிர்களும் இழக்கப்பட்டுள்ளமையை வனசீவராசிகள் திணைக்களம் உறுதி செய்துள்ளது. அது மேற்குறிப்பிட்ட கூற்றை உறுதிப்படுத்தும் வகையில் அமைந்துள்ள சிறந்த உதாரணமாகும்.

உணவைத் தேடி கிராமங்களுக்குள் நுழையும் காட்டு யானைகள் பல்வேறு மனித நடவடிக்கைகளால் உயிரிழக்கும் பின்னணியில் மேற்கொள்ள வேண்டியதாவது, யானைகளின் வாழ்விடங்கள், உணவு மற்றும் நீர் மூலங்களைப் பாதுகாப்பதுடன், சுற்றாடல் சமநிலையை உறுதிப்படுத்தல் போன்ற விஞ்ஞான ரீதியான முறைகளைப் பின்பற்ற வேண்டுமென, காட்டு யானைகள் தொடர்பான ஆய்வாளரான கலாநிதி புருதுவிராஜ் பர்னாந்து அவர்கள் சுட்டிக்காட்டுகின்றார். ஆனாலும் அதற்குப் பதிலாக காட்டு யானைகளைப் பிடித்து சரியான உணவு முறையற்ற இடங்களில் அடைத்து வைத்தல் போன்ற வெற்றியளிக்காத முறைமைகள் மூலம் காட்டு யானைகள் வெறுமனே உயிரிழந்து போகின்றன. அதற்குச் சிறந்த உதாரணமே ஹொரொவப்பொத்தான யானைகள் பராமரிப்பு நிலையமாகும்.

குழப்பமான நடத்தைகளும் மனித உயிர்களுக்குத் தீங்கு விளைவித்ததெனவும் கூறி நாட்டின் பல பகுதிகளிலும் இருக்கின்ற காட்டு யானைகளைப் பிடித்து ஹொரொவப்பொத்தான யானைகள் பராமரிப்பு நிலையத்தில் அடைத்து வைப்பது 2015 செப்ரெம்பர் மாதம் 03 ஆம் திகதி மாத்தளை மாவட்டத்தில் பிடிக்கப்பட்ட 35 வயதுடையதும் எட்டு அடி 06 அங்குல உயரங்கொண்டதுமான காட்டு யானை 2015 செப்ரெம்பர் 04 ஆம் திகதி அடைக்கப்பட்டதிலிருந்து ஆரம்பிக்கப்பட்டது. இறுதியாக 2021 பெப்ரவரி மாதம் ஒரு யானையை அங்கு கொண்டுசென்று விடப்பட்டுள்ளது. அதற்கமைய 64 காட்டுயானைகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக தகவல் அறிதல் சட்டத்தின் மூலம் வனசீவராசிகள் திணைக்களத்தின் 2021.01.13 ஆம் திகதி பெற்றுக்கொண்ட தகவல்கள் மூலம் தெரியவந்துள்ளது.

## அரசியல் அழுத்தங்கள்

“கிராமங்களுக்குள் பிரவேசிக்கும் காட்டு யானைகளைப் பிடித்துக்கொண்டு செல்லுமாறு அரசியல்வாதிகள் மற்றும் சமூகத்தவர்களின் அழுத்தங்கள் ஏற்பட்டுள்ளன. ஆரம்பகாலத்தில் இந்த யானைகள் வேறு வனசீவராசிகள் சரணாலயங்களில் கொண்டு விடப்பட்டன. அனாலும் இவ்வாறு கொண்டு சென்று விடப்படுகின்ற யானைகளுக்கு என்ன நடக்கின்றதென பார்ப்பதற்கு கதிரியக்க கழுத்துப்பட்டி அணிவித்தனர். அத்தரவுகளுக்கமைய குறித்த யானைகள் தாம் வாழ்ந்த பிரதேசங்களுக்கு மீண்டும் வருவதற்கு முனைகின்றமை தெரிய வந்தது. அவ்வாறு திரும்பி வரும்போது மனிதர்களுடன் மோதல்கள் அதிகமாக இடம்பெற்றிருக்கின்றன. ஏனெனில் யானைகள் தமது வாழ்விடத்திற்கு மிகவும் விருப்பம் கொண்டவையாகும். இதனால் யானைகள் மாத்திரமல்ல யானைகளையும் பிரச்சினைகளையும் இரண்டையும் மாற்றியமைத்தமையே இடம்பெற்றது. வனசீவராசிகள் திணைக்களம் யானைகள் பராமரிப்பு நிலையத்தை அதற்கானதொரு தீர்வாகவே உருவாக்கினர்” என வனசீவராசிகள் திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் நாயகம் கலாநிதி சுமித் பிலபிட்டிய அவர்கள் தெரிவித்தார்.

997 ஹெக்ரெயார்கள் என்ற (9.98 சதுர கிலோமீற்றர்கள்) சிறிய நிலப்பரப்பில் காட்டு யானைகள் அதிகளவில் இவ்வாறு அடைக்கப்பட்டமையால் அவற்றுக்குத் தேவையான உணவு கிடைக்காமையாலும் உணவின்றி வெறுமனே காட்டு யானைகள் இறக்கின்றமையை பல்வேறு சந்தர்ப்பங்களில் வெளிக்கொண்டு வந்தாலும் (httrs://www.lankavies.com/horowopothana) அதுதொடர்பாக வனசீவராசிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் சூரிய பண்டார அவர்களிடம் 2021 மார்ச் மாதம் 23 ஆம் திகதி வினவிய போது அவர் அதனை நிராகரித்துவிட்டார். அவர் குறிப்பிட்டுக் கூறியதாவது, “நாங்கள் இவ்விலங்குகளின் உடல் ஆரோக்கியம் பற்றித் தேடிப் பார்ததோம். அதில் பிரச்சினை

இல்லை. அதாவது உணவு இருப்பதாகவே இதனூடாக கூறப்படகிறது. தற்போது உணவு வழங்குவதை நிறுத்தியிருப்பதற்கு காரணம் அங்கு போதுமானளவு உணவு இருப்பதேயாகும்.'' என்கிறார்.

அவ்வாறான பின்னணியில் மேலதிக ஆராய்தலுக்காக தகவலுக்கான உரிமைச் சட்டத்திற்கமைய, விண்ணப்பத்தைக் கோரி வனசீவராசிகள் திணைக்களத்தின் மூலம் ஹொரொவப்பொத்தான யானைகள் பராமரிப்பு நிலையத்தில் உயிரிழந்த 16 யானைகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட மரணப் பரிசோதனை அறிக்கைகள் பெற்றுக்கொள்ளப்பட்டதுடன், குறித்த மரணப் பரிசோதனை அறிக்கைகளை பரிசீலிக்கும் போது குறித்த 16 யானைகளில் 10 யானைகள் உயிரிழந்திருப்பது போசாக்கின்மை (malnutrition) நிலைமையாலாகும். அதேபோல் மின்னல் தாக்கி 03 யானைகள் உயிரிழந்துள்ளதுடன், மேலும் 03 யானைகள் துப்பாச்சூட்டில் உயிரிழந்துள்ளன.

## காட்டு யானைகள் உயிரிழந்துள்ள விதம்

ஹொரொவப்பொத்தான யானைகள் பராமரிப்பு நிலையத்தை நிர்மாணிப்பதற்காக 2012.03.17 திகதிய 12/0151/549/001 இலக்க அமைச்சரவைப் பத்திரத்திற்கமைய 997 ஹெக்ரெயார் நிலப்பரப்பில் 345 மில்லியன் ரூபாய்கள் செலவிட்டு மேற்கொள்ளப்பட்ட இந்நிர்மாணிப்புக்கு சுற்றாடல் மதிப்பீட்டு அறிக்கை பெற்றுக்கொள்ள வேண்டியிருப்பினும், அவ்வாறானதொரு அறிக்கை பெறப்படாமை, 2018 நவம்பர் 01 ஆம் திகதி தொடக்கம் 2019 ஒக்ரோபர் 31 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் ஹொரொவப்பொத்தான யானைகள் பராமரிப்பு நிலையத்தில் 30 யானைகளுக்கு உணவு விநியோகிப்பதற்காக 26,133,700 ரூபாய்க்கான ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தாலும் விநியோகிக்கப்பட்டுள்ள உணவு வேளையின் தரமோ அல்லது யானைகள் இவற்றை உணவாக உட்கொள்ளுவதற்கான விருப்பம் உள்ளதா எனக் கவனத்தில் கொள்ளாமல் அதில் இடம்பெற்றுள்ள பாரியளவிலான மோசடிகள் பற்றி 2020 ஒக்ரோபர் மாதம் வெளியிடப்பட்டுள்ள கணக்காய்வாளர் நாயகத்தின் IEN/F/DWC/99/PR/11 இலக்கம் கொண்ட கணக்காய்வு அறிக்கை மூலம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அதேபோல் குறித்த கணக்காய்வு அறிக்கையின் பிரகாரம் உணவுப் பற்றாக்குறையால் 05 யானைகள் உயிரிழந்தாலும் ஹொரொவப்பொத்தான யானைகள் பராமரிப்பு நிலையத்தில் உயிரிழந்துள்ள காட்டு யானைகளின் மரணப்பரிசோதனை அறிக்கையைப் பரிசீலிக்கும் போது 2014 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரைக்கும் 09 காட்டு யானைகள் உணவுப்பற்றாக்குறையால் ஏற்பட்டுள்ள போசாக்கின்மையால் உயிரிழந்துள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

கடந்த 2015 ஆம் ஆண்டில் திறந்து வைக்கப்பட்ட ஹொரொவப்பொத்தான யானைகள் பராமரிப்பு நிலையத்திற்கு 06 வருடங்களில் 64 யானைகள் அங்கு தடுத்து வைப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் குறித்த காட்டு யானைகளில் 2021 ஆகஸ்ட் மாதம் 15 ஆம் திகதியாகும் போது 18 இற்கும் குறைவான காட்டு யானைகளே எஞ்சியுள்ளமையை பெயர் குறிப்பிட விரும்பாத அங்கு கடமையாற்றும் வனசீவராசிகள் திணைக்கள அலுவலர் ஒருவர் குறிப்பிட்டுக் கூறினார்.

தற்போது ஹொரொவப்பொத்தான யானைகள் பராமரிப்பு நிலைய்தில் 45 யானைகள் இருக்க வேண்டியிருந்தாலும், குறித்த யானைகள் தொடர்பாக வனசீவராசிகள் திணைக்களத்தில் குறிப்பிடத்தக்க தகவல் இல்லையென்பது, தகவல் அறியும் சட்டத்தின் மூலம், வனசீவராசிகள் திணைக்களத்தின் 2021 ஜனவரி மாதம் 13 ஆம் திகதி வழங்கிய தகவல்களின் பிரகாரம் தெரியவந்துள்ளது.

அதேபோல் தற்போது அங்கு வாழ்ந்து வரும் யானைகள் போசாக்கின்மையால் வாடுகின்றமையை பெயர் குறிப்பிட விரும்பாத வனசீவராசிகள் திணைக்கள அலுவலர் ஒருவர் தெரிவித்தார். இப்போசாக்கின்மைக்கானதொரு காரணமாக அமைவது என்னவெனில், 2019 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் பின்னர் அன்று தொடக்கம் இதுவரைக்கும் யானைகளுக்கு வெளியிலிருந்து வழங்கப்படும் சிறிய உணவுவேளை கூடக் கிடைக்காமையாகும். ‘‘உணவு வழங்கல் நிறுத்தப்பட்டிருப்பதற்கான காரணம் அங்கு போதியளவு உணவு இருக்கின்றமையாகும்.’’ என வனசீவராசிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திடம் 2021 மார்ச் மாதம் 23 ஆம் திகதி வினவிய போது கூறியிருந்தார்.

2018 நவம்பர் 01 ஆம் திகதி தொடக்கம் 2019 ஒக்ரோபர் 31 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் ஹொரொவப்பொத்தான யானைகள் பராமரிப்பு நிலையத்தில் 30 யானைகளுக்கான உணவு விநியோகத்திற்கு 26,133,700 ரூபாவிற்கான ஒப்பந்தம் வழங்கப்பட்டுள்ளது.

விநியோகிக்கப்பட்டுள்ள உணவு வேளையின் தரமோ அல்லது யானைகள் இவற்றை உணவாக உட்கொள்ளுவதற்கான விருப்பம் உள்ளதா என்ற விடயம் கவனத்தில் கொள்ளாமை அதற்கமைய தெளிவாகின்றது. அதுதொடர்பான போதியளவு கண்காணிப்பு மேற்கொள்ளப்படாமையும் குறித்த கணக்காய்வு அறிக்கையின் மூலம் தெரியவந்துள்ளது.

காட்டு யானைகளுக்கு உணவு விநியோகிப்பதற்காக விலைமனுக் கோரலைப் பெற்றுக்கொண்ட நிஸ்ஸங்க அவர்களிடம் 2021 மார்ச் மாதம் 23 ஆம் திகதி வினவிய போது, அவர் குறிப்பிட்டுக் கூறியதாவது, ‘‘நான் யானைகளுக்கு உணவு விநியோகித்தது, ஆலம் விழுதுகள் போன்றவையாகும். ஆனாலும் தற்போது அவை உணவாக உட்கொள்வதற்குப் பழக்கப்பட்டிருப்பதோ சோளம், வாழை போன்றவற்றையாகும். அதனால்தான் அவை இந்த உணவை உட்கொள்ளாதிருக்கலாம் எனத்தெரிவித்தார்.

அதேபோல் குறித்த காலப்பகுதியில் உயிரிழந்த காட்டு யானைகளின் மரணப்பரிசோதனை அறிக்கைகளைப் பரிசீலித்துப் பார்க்கும் போது, குறித்த காலப்பகுதியிலும் போசாக்கின்மையால் 02 யானைகள் உயிரிழந்துள்ளமை தெரியவந்துள்ளது.

ஹொரொவப்பொத்தான யானைகள் பராமரிப்பு நிலையத்தில் யானைகள் உயிரிழப்பது தொடர்பில் அண்மையில் பதிவாகிய சம்பவம் 2021.07.12 ஆம் திகதியாகும். 2018 யூன் 02 ஆம் திகதி புத்தளம் சீமெந்துத் தொழிற்சாலைப் பிரதேசத்தில் பிடிக்கப்பட்ட சுமார் 30 வயதுடைய 08 அடி 06 அங்குலம் அளவிலான உயரம் கொண்ட (8’’ 6’’) யானையாகும். குறித்த யானை ஹொரொவப்பொத்தான யானைகள் பராமரிப்பு நிலையத்திற்குக் கொண்டு வந்த பின்னர் போசாக்கின்மையால் வாடுகின்றமையை இதற்கு முன்னர் ‘‘அத’’ பத்திரிகை (https://www.ada.lk/breaking_news ஹொரொவப்பொத்தான யானைகள் பராமரிப்பு நிலையத்தில் யானைகளுக்கான உணவில் கொள்ளையடிப்பு 11-376934) மூலம் வெளிக்கொண்டு வரப்பட்டது. ஆனாலும் அவ்வாறானதொரு நிலைமை தொடர்பாக அதிகாரிகளின் கவனம் செலுத்தப்படாமையால் யானை பசியால் உயிரிழந்துள்ளது. குறித்த யானையின் மரணப்பரிசோதனையை மேற்கொண்டிருப்பது 2021.07.14 ஆம் திகதியாகும்.

அதேபோல் 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2020 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் ஹொரொவப்பொத்தான யானைகள் பராமரிப்பு நிலையத்தில் போசாக்கு நடவடிக்கைகளுக்காக 07 வருடங்களில் 80 இலட்சங்களுக்கும் அதிகமான தொகை (8,187,986.2 ரூபாய்) வழங்கப்பட்டிருந்த போதிலும், யானைகள் போசாக்கின்மையால் உயிரிழந்தமை மூலம் குறித்த நிதியொதுக்கீடு யானைகளின் போசாக்குக்குச் சரியான வகையில் பயன்படுத்தப்படவில்லை என்பது தெரிய வருகின்றது.

## பொருத்தமற்ற பிரதேசம்

எவ்வாறாயினும் காட்டு யானைகள் உணவின்றி உயிரிழந்த காலப்பகுதியில் Google Earth மூலம் பரிசீலனை செய்யும் போது குறித்த காலப்பகுதியில் அப்பிரதேசம் மிகவும் வரட்சியான காலப்பகுதியாக இருந்தமையைக் காணக்கூடியதாகவுள்ளது. அங்கிருந்த சிறிய குளங்கள் நான்கிலும் நீர் வற்றிப் போயிருந்தமையை அவதானிக்கக் கூடியதாகவிருந்தது.

"நான் வனசீவராசிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் என்ற வகையில் அங்கு சென்று பார்த்த போது, ஏன் இவ்வாறான இடமொன்றைத் தெரிவு செய்தார்கள் எனத் தோன்றியது. நாங்கள் மேற்கொண்ட ஆய்வின் பிரகாரம் ஆரம்ப, இரட்டை வனத்தொகுதியில் அதாவது உயர்ந்த மரங்கள் இருக்கின்றதும், கீழ்நில மரங்கள் குறைவான வனத்தொகுதியில் யானைகளின் அடர்த்தி ஒரு சதுர கிலோமீற்றருக்கு 0.2 ஆகவும், அதேபோல் பற்றைக்காடுகள் சேனை நிலங்கள் போன்ற பிரதேசங்களில் யானைகளின் அடர்த்தி ஒரு சதுர கிலோமீற்றருக்கு சுமார் 03 ஆகும். அதற்கமைய ஆரம்ப, இரட்டை வனாந்தரங்கள் யானைகளுக்குப் பொருத்தமான பிரதேசமாக அமையாது எனத் தெரியவருகின்றது. அதற்கான காரணம் உணவுத் தட்டுப்பாடாக இருக்கும். ஹொரொவப்பொத்தான யானைகள் பராமரிப்பு நிலையமும் ஆரம்ப, இரட்டை வனாந்தர இயல்புகள் காணப்படும் ஓர் இடமே". கலாநிதி சுமித் பிலபிட்டிய அவர்கள் சுட்டிக்காட்டினார்.

ஹொரொவப்பொத்தான பிரதேசவாசியான டப்ளிவ்.ஜே. அமரஜீவ மேற்படி விடயத்தினை உறுதிப்படுத்தினார். "யூலை மாதம் தொடக்கம் செப்டெம்பர் மாதம் வரையான காலப்பகுதியில் இங்கு மழையில்லை. அக்காலத்தில் பாரிய குளங்கள் நீர்த்தேக்கங்களில் கூட நீர் வற்றிவிடும். அப்படிப் பார்க்குப்போது ஹொரொவப்பொத்தான யானைகள் பராமரிப்பு நிலையத்தில் காணப்படும் சிறிய குளங்கள் கண்டிப்பாக வற்றிவிடும். விலங்குகளுக்கு அங்கு உணவின்றிப் போகும் போது எப்படியாவது அவை யானை வேலிகளைப் உடைத்துக் கொண்டு கிராமங்களுக்குள் புகுந்துவிடும். இல்லாவிட்டால் அதற்குள்ளேயே இறந்துவிட நேரிடும். அதற்குள்ளே விலங்குகளுக்கு என்ன நடக்கின்றதென எமக்குத் தெரியாது."

கலாநிதி சுமித் பிலபிட்டியவின் கருத்தின்படி காடுகளில் வாழ்கின்ற முதிர்ந்த யானையொன்று நாளொன்றுக்கு 20 தொடக்கம் 25 கிலோமீற்றர் வரையில் பயணிப்பதுடன், காடுகளிலுள்ள நடுத்தர வயதுடைய யானையொன்று நாளொன்றுக்கு 60 கிலோமீற்றர்கள் வரையில் பயணிக்கின்றது. ஆனாலும் ஹொரொவப்பொத்தான யானைகள் பராமரிப்பு நிலையத்தின் மொத்தப் பரப்பளவு 997 ஹெக்ரெயார்களாகும். (2466 ஏக்கர்களாகும்) அந்தளவுக்கு சிறியளவிலான நிலப்பரப்பாகும். இங்கு காட்டு யானைகளை அடைத்து வைப்பதன் மூலம் அவ்விலங்குகளின் இயற்கையான நடத்தைக் கோலங்கள் மற்றும் சுதந்திரமாக நடமாடுவதற்கான அவகாசம் முழுமையாக முடக்கப்பட்டுள்ளது.

## உணவின்றி உயிரிழந்த யானைகள்

காட்டு யானையொன்று நாளொன்றுக்கு 200 - 300 கிலோகிராம் உணவை உட்கொள்ள வேண்டுமென காட்டு யானைகள் தொடர்பான ஆராய்ச்சியாளரான கலாநிதி புருதுவிராஜ் பர்னாந்து அவர்கள் குறிப்பிடுகின்றார். இது இரட்டை வனாந்தரங்களின் பகுதியாவதால் தேவையானளவு உணவு இப்பராமரிப்பு நிலையத்தில் தாவரங்கள் மூலம் பெற்றுக்கொள்ள

முடியாத நிலைமையை கலாநிதி புருதுவிராஜ் அவர்கள் சுட்டிக்காட்டுகின்றார். அவ்வாறான பின்னணியில் வெளியிலிருந்து உணவு வழங்குவது கட்டாயமானதாகும். ஆனாலும் தற்போது அது நிறுத்தி வைக்கப்பட்டிருப்பதால் இங்குள்ள காட்டு யானைகள் உணவுப் பற்றாக்குறையுடன் வாழ்கின்றனவென பிரிதாகக் குறிப்பிட்டுக் கூறத் தேவையில்லை.

இவ்வாறு உயிரிழந்த காட்டு யானைகளின் மரணப்பரிசோதனை அறிக்கைளையும் புகைப்படங்களையும் பரிசீலனை செய்து பார்க்கும் போது காட்டு யானைகளின் தனித்துவ அடையாளங்கள் பற்றி ஒரு முடிவுக்கு வரமுடிவதுடன், அங்கு ஹொரொவப்பொத்தான யானைகள் பராமரிப்பு நிலையத்தில் ஒலகம்பிட்டிய எனும் இடத்தில் 2021 பெப்ரவரி 04 ஆம் திகதி உயிரிழந்த நிலையில் கண்டுபிடிக்கப்பட்ட யானை தொடர்பாக மரணப் பரிசோதனையானது, 2021 பெப்ரவரி 06 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்டதெனவும் குறித்த காட்டு யானை 2018 நவம்பர் மாதம் 25 ஆம் திகதி மஹியங்கனை மாபாகட பிரதேசத்தில் பிடிக்கப்பட்ட காட்டு யானைக்குரிய சமமான இயல்புகளைக் கொண்டிருந்தமையும் தெரியவந்துள்ளது.

2018 நவம்பர் மாதம் 25 ஆம் திகதி மஹியங்கனை மாபாகட பிரதேசத்தில் பிடிக்கப்பட்டபோது யானையின் உயரம் 8 அடியும் 9 அங்குலம் என்பதுடன், 35 – 45 வயதுடையதுமான 2021 பெப்ரவரி 06 ஆம் திகதி உயிரிழக்கும் போது 9 அடியும் 40 வயதுடையதுமாக இருந்தமை வனசீவராசிகள் திணைக்களத்தின் மூலம் பெறப்பட்ட தகவல்களின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டது.

அதேபோல் வனசீவராசிகள் திணைக்களத்தின் மூலம் தகவல் அறிதல் சட்டத்தின் கீழ் வழங்கிய தகவல்களுக்கமைய யானைகளின் உயரம் மற்றும் வயதும் பிடிக்கப்பட்டதும் உயிரிழந்ததுமான திகதி தொடர்பாகப் பெற்றுக்கொண்ட தரவுகள் பகுப்பாய்வின் போது போசாக்கின்மையால் உயிரிழந்த காட்டு யானைகள் சிலவற்றை அடையாளங் காண்பதற்கு முடிந்துள்ளது.

அத்துடன் 2015 ஆம் ஆண்டு செப்டெம்பர் 03 ஆம் திகதி மாத்தளை பலாபத்வல பிரதேசத்தில் பிடிக்கப்பட்ட காட்டு யானை 2015 செப்ரெம்பர் 16 ஆம் திகதி பின்னவல யானைகள் சரணாலயத்திலிருந்து கொண்டு செல்லப்பட்ட காட்டு யானை 2015.11.12 நிக்கவெரட்டிய வம்பட்டுவெவ பிரதேசத்தில் பிடிக்கப்பட்டு கொண்டுவந்து விடப்பட்ட காட்டு யானை, 2015 திசம்பர் 19 ஆம் திகதி தலாவ மொரகொட பிரதேசத்தில் பிடிக்கப்பட்ட காட்டு யானை 2016 நவம்பர் 17 ஆம் திகதி அநுராதபுரம் பூவரசங்குளம் பிரதேசத்தில் பிடிக்கப்பட்ட காட்டு யானை, 2016 நவம்பர் 25 ஆம் திகதி விலச்சிய மன்னார் சந்தியில் பிடிக்கப்பட்ட காட்டு யானை, 2017 ஏப்ரல் 17 ஆம் திகதி தனமல்வில மீனஸ்வெவ பிரதேசத்தில் பிடிக்கப்பட்ட காட்டு யானை, 2017 மே மாதம் 03 ஆம் திகதி சூரியவெவ திமுதுகம பிரதேசத்தில் பிடிக்கப்பட்ட காட்டு யானை, 2016 ஜனவரி மாதம் 23 ஆம் திகதி அநுராதபுரம் கட்டுகலியாவ பிரதேசத்தில் பிடிக்கப்பட்ட காட்டு யானை, 2016 ஆகஸ்ட் 11 ஆம் திகதி சூரியவெவ பிரதேசத்தில் பிடிக்கப்பட்ட காட்டு யானை, 2016 திசம்பர் 04 ஆம் திகதி அம்பாறை உஹன வீரகொட பிரதேசத்தில் பிடிக்கப்பட்ட காட்டு யானை உள்ளிட்ட காட்டு யானைகள் ஹொரொவப்பொத்தான யானைகள் பராமரிப்பு நிலையத்தில் உணவின்றி அல்லது வேறு காரணங்கள் உயிரிழந்த காட்டு யானைகளாகும்.

யானை - மனித மோதல் இடம்பெறும் பிரதேசத்தில் கூடுதலாகக் குழப்பமான யானைகளாக நடந்து கொண்டவை ஆண் யானைகளாவதுடன், அவை தனித்த யானைகளாகும். தனித்த யானைகளாகக் குறிப்பிடுவது உரிய வயதைக் கடந்த பின்னர் கூட்டத்திலிருந்து விரட்டப்பட்ட யானைகளாவதுடன், அங்கு குறித்த யானைக்கு வேறொரு கூட்டத்திற்கு இணைந்து கொள்வதற்கான சந்தர்ப்பம் இருத்தல் வேண்டும்.

ஆனாலும் காடழிப்பு மற்றும் முறைசாரா யானை வேலிகளால் வேறு கூட்டத்தில் இணைந்து கொள்ள முடியாத யானைகள் தனித்த யானைகளாக நடமாடும். குறித்த யானைகள் குழப்பமடையும் போது பிடிக்கப்பட்டு ஹொரொவப்பொத்தான யானைகள் பராமரிப்பு நிலையத்திற்கு கொண்டு சென்று விடுவதனையே இதுவரை செய்துள்ளனர்.

இதனால் ஹொரொவப்பொத்தான யானைகள் பராமரிப்பு நிலையத்தில் இவ்வாறு உயிரிழந்த அனைத்து யானைகளும் ஆண் யானைகளாக இருப்பது குறிப்பிடத்தக்க விடயமாகும். குறிப்பாக வன்முறையில் ஈடுபடும் யானை என்பது காட்டு யானைகளிடையே பலம்பொருந்திய பரம்பரை அலகுகளைக் கொண்ட சுறுசுறுப்பான யானைகளாவதுடன், அவ்வாறான விலங்குகளை இவ்வாறு அடைத்து வைப்பதால் பெண் யானைகளுடன் உடலுறவில் ஈடுபடுவதற்கான சந்தர்ப்பமும் அவற்றுக்கு இல்லாது போகின்றது. இது யானைகளின் விருத்திக்கு நேரடியாகப் பாதிப்பை ஏற்படுத்துவதுடன், பலம்பொருந்திய யானைகளின் பரம்பரையும் இழக்கப்படுவதற்கான நேரடியாகத் தாக்கத்தினையும் ஏற்படுத்துவதாக கலாநிதி புருதுவிராஜ் அவர்கள் சுட்டிக்காட்டுகின்றார்.

ஹொரொவப்பொத்தான யானைகள் பராமரிப்பு நிலையத்தில் போசாக்கின்மையால் காட்டு யானைகள் உயிரிழந்தமை தொடர்பாக வனசீவராசிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் சந்தன சூரிய பண்டார அவர்களிடம் வினவிய போது, தவறான உள்ளடக்கம் இருப்பதாகக் கூறினார். ''அவ்விலங்கின் அனைத்துப் பற்களும் தேய்வடைந்து இருந்தமையால் அதற்கு உணவு உட்கொள்ள முடியாமல் தான் உயிரிழந்துள்ளது. மாறாக உணவில்லாமல் அது இறக்கவில்லை. நாங்கள் யானைகளின் உடல் நிலையைக் கருத்தில் கொண்டுதான் உணவு வழங்குவதா இல்லையா என்பதனை தீர்மானிக்கின்றோம். அவ்வாறில்லாமல் வெறுமனே உணவு வழங்குவதில்லை. நாங்கள் அவதானிக்கும் போது நீங்கள் கூறியவாறு பலவீனமாக இருக்கவில்லை. இது விஞ்ஞான ரீதியான செயற்பாடாகும். வனசீவராசிகள் திணைக்களத்திற்கு அதனைச் சரியாக மேற்கொள்வதற்குத் தெரியும்.'' எனத் தெரிவித்தார்.

## பற்கள் தேய்வடைந்து யானைகளால் உணவு உட்கொள்ள இயலாமல் போகுமா?

வனசீவராசிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் சந்தன சூரியபண்டார அவர்கள் கூறுகின்ற வகையில் ஹொரொவப்பொத்தான யானைகள் பராமரிப்பு நிலையத்தில் உணவின்றி உயிரிழந்த காட்டு யானைகள் மரணமடைந்தமைக்கான காரணம் அந்த காட்டு யானைகளின் பற்தொகுதிகள் தேய்வடைந்து போனமையால் உணவு உட்கொள்ள முடியாமல் இறந்து போனதாகக் குறிப்பிடுகின்றார். ஆனாலும் மரணப்பரிசோதனை அறிக்கையின் பிரகாரம் உயிரிழந்த அனைத்து யானைகளும் 30 தொடக்கம் 40 வயதுக்குமிடையிலான யானைகளாகும்.

அங்கு இந்தளவுக் குறைந்த வயதில் இவ்வாறு யானைகளின் பற்கள் தேய்வடைந்து போவதால் உணவு உட்கொள்ள முடியாமல் யானைகள் இறக்கின்றனவா என்பது பற்றி கலாநிதி புருதுவிராஜ் பர்னாந்து அவர்களிடம் வினவியபோது, அவர் இவ்வாறானதொரு கருத்தைத் தெரிவித்தார்,

''யானைகளின் முதல் இரண்டு பற்களும் மிகவும் சிறியவை. ஆறாவது பற்கள் வரிசை மிகவும் பெரியது. முதல் பற்கள் இரண்டையும் பால்பற்களுக்கு ஒப்பிடலாம். அது ஒருசில மாதங்கள் மாத்திரமே இருக்கலாம். அடுத்த இரண்டு பற்களும் ஒரு வருடகாலம் இருக்கலாம். அடுத்த இரண்டு பற்களும் அதற்கும் அதிகமான காலம் இருக்கலாம். எது

எவ்வாறாயினும் விலங்கின் வாழ்க்கைக்காலம் முழுவதும் பற்கள் பயன்படுத்தப்படுகிறது. குறித்த பற்கள் தேய்வடையும் போது புற்கள் போன்றவற்றை உண்ணும் போது அதிகமாக தேய்வடையும். மரங்களின் கிளைகளை உண்ணும் போது பற்கள் தேய்வடைவது குறைவாகும். காரணம் புற்களில் சிலிக்கன் இருப்பதேயாகும். பொதுவாக காடுகளிலுள்ள யானைகள் 50 தொடக்கம் 60 வருடங்கள் வாழ்கின்றன. ஆனாலும் அனைத்துப் பற்களும் விழுவதற்கு 80 வருடங்களாவது ஒரு யானை வாழ வேண்டும். காடுகளில் அவ்வளவு காலம் யானைகள் வாழ்வதில்லை.

''அவ்வாறு வாழ்க்கைக் காலத்தில் சுமார் ஆறு பல் வரிசைகள் வளரும். குறித்த ஆறு பல் வரிசைகளையும் பயன்படுத்தி தேய்வடையும் வரைக்கும் யானை வாழ்ந்தால் வரைவிலக்கணப்படி உணவை சரியான வகையில் உட்கொள்ள முடியாததால் உணவின்றி இறக்கும் என நினைக்கலாம். ஆனாலும், தற்போது 70 வருடங்களைக் கடந்த யானைகளின் ஆறாவது பல் வரிசை இல்லாது போகவில்லை. நான் தற்போது சுமார் 30 வருடங்களாக யானைகள் தொடர்பாக ஆராய்ச்சிகளை மேற்கொண்டுள்ளேன். அதன் போது எங்களுக்கு இயற்கையாக உயிரிழந்த யானைகளின் இறுதிப் பல்வரிசை இல்லாத யானை ஒன்றுமே இதுவரையில் கிடைக்கவில்லை.''

ஹொரொவப்பொத்தான யானைகள் பராமரிப்பு நிலையத்தில் இவ்வாறு போசாக்கின்மையால் பட்டினியால் காட்டு யானைகள் உயிரிழக்கின்ற நிலையிலும் நாடளாவிய ரீதியில் பல்வேறு பாதுகாக்கப்பட்ட வனங்களில் காணப்படும் காட்டு யானைகள் அரசியல்வாதிகள் மற்றும் பல்வேறு அதிகாரிகளின் தேவைப்பாடுகளின் பேரில் இங்கு மீண்டும் மீண்டும் கொண்டு வந்து அடைப்பதற்கு வனசீவராசிகள் திணைக்களத்தின் உயரதிகாரிகள் நடவடிக்கை எடுப்பதன் மூலமும் குறித்த விலங்குகள் அடைக்கப்பட்டு பட்டினியால் உயிரிழக்க நேரிடுகின்றது. அவ்விதத்தில் அடைக்கச் சென்ற உடவளவை ரம்போ யானையை, ஹொரொவப்பொத்தான யானைகள் பராமரிப்பு நிலையத்தில் அடைப்பதற்கு எதிராக சூழலியலாளர்கள், சுற்றாடல் நேயமுடைய மக்களும் பிரதேசத்தின் சங்கைக்குரிய தேரர்களின் எதிர்ப்புப் போராட்டங்களால் இன்னுமே உடவளவை வனத்தில் வாழ்ந்து வருகின்றது.

இவ்வகையில் இன்னுமொரு காட்டு யானைகள் பராமரிப்பு நிலையத்தை லுனுகம்வெஹெர சரணாலயத்தில் நிர்மாணிப்பதற்கு தற்போது நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதுடன், அதன் மூலமும் இவ்விதத்திலேயே காட்டு யானைகள் உணவின்றி உயிரிழக்க நேரிடுமாயின், அது இலங்கையின் யானை வளத்தின் மீது தாக்கம் செலுத்தும் துரதிர்ஷ்டவசமான நிலையாக அமையாதா?

''மேலும் இவ்வாறானதொன்றை நிர்மாணிப்பதாயின் இங்கிருக்கின்ற குறைபாடுகளைக் கண்டறிந்து ஆராய்ந்து மேற்கொள்ளப்பட வேண்டும் என்பது எனது கருத்தாகும். மற்றைய விடயம் யாதெனில் யானைகள் பராமரிப்புக் நிலையம் தேவைப்படுவதற்கான காரணம் யானை – மனித மோதலுக்கு நாங்கள் சரியான வகையில் தீர்வு காணாமையேயாகும். ஆனாலும், புதிதாக யானைகள் பராமரிப்பு நிலையத்தை நிர்மாணிக்கும் போது குறித்த சுற்றாடல் தொகுதியை தற்போது பயன்படுத்தும் யானைகளுக்கு என்ன நடக்கும் என்பது பற்றி இதுவரையில் ஆராயப்படவில்லை. அதன் பின்னர் அந்த யானைகளும் கிராமங்களுக்குள் நுழையத் தொடங்குகும். அதனால் நாம் அதனையும் ஆராய வேண்டும்.'' என்பதை கலாநிதி சுமித் பிலபிட்டிய அவர்கள் எடுத்துக் கூறுகின்றார்.

- **ராஹுல் சமந்த ஹெட்டிஆரச்சி**

# சொத்துக்கள் பொறுப்புக்கள் சட்டத்தில் எதிர்பார்க்கப்படும் நோக்கங்கள் நிறைவேற்றப்படுமா ?

பொதுமக்களுடைய வரிப்பணத்தில் நிர்வகிக்கப்படுமொரு அரசாங்கத்தில் மக்களுக்காக சேவையாற்றுவதற்குள்ள அனைத்துத் தரப்பினரும் பொதுமக்களுக்குப் பொறுப்புக் கூறல் வேண்டும். ஜனநாயக சமூகத்தில் அவ்வகையில் இடம்பெற்றால் மாத்திரமே நோக்கங்கள் நிறைவேற்றப்படும்.

அதற்கமைய மக்களுடைய பணத்தில் சம்பளம் செலுத்தி பராமரிக்கும் ஆட்சியாளர்கள் (அரசியல்வாதிகள்) மற்றும் உயர் அதிகாரிகள், சட்ட ரீதியாக அவர்கள் தங்களுடைய சொத்துக்கள் பொறுப்புக்கள் தொடர்பாக பிரஜைகளுக்கு வெளிப்படுத்த வேண்டுமெனும் விடயம் சட்ட ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. அவ்வாறான நிலைமையில் சொத்துக்கள் பொறுப்புக்கள் வெளிப்படுத்தும் செயன்முறை மக்கள் மற்றும் அவர்களுக்கும் இடையேயான சமூக ஒப்பந்தத்தைப் பாதுகாப்பதாகக் கருத முடியும். எவ்வாறாயினும் இலங்கையில் இவ்வாறான சமூக ஒப்பந்தங்களைப் பாதுகாப்பதற்காக அரசியல்வாதிகள் முன்வராத நிலைமையைக் காணக்கூடியதாகவுள்ளதுடன், பொதுமக்களையும் ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்காக அவ்வாறான விடயங்களுக்காக தூண்டுதல் ஒப்பீட்டளவில் குறைந்தளவு மட்டத்தில் காணப்படுகின்றது.

இக்காரணத்தால் அரசியலில் ஊழல், மோசடி அதிகரிப்பதும் பொதுமக்களுடைய சொத்துக்களைச் சூறையாடி அரசியல்வாதிகள் மற்றும் அரசாங்கத்தின் உயர் அதிகாரிகள் செல்வந்தர்களாகி வருகின்றமையும் இடம்பெற்று வருகின்றது. அதனை ஒழிக்கும் ஆயுதமாக சொத்துக்கள் பொறுப்புக்கள் பிரகடனம் இருக்கின்றதெனக் கூறுவதில் எவ்வித தவறுமில்லை. கூடுதலான நாடுகளில் அரசியல்வாதிகளின் மற்றும் அரச உத்தியோகத்தர்களின் வருடாந்த சொத்துக்கள் பொறுப்புக்கள் பிரகடனம் இணையத்தளத்தின் மூலமாக வெளியிடப்படுவதுடன், எந்தவொரு பிரஜைக்கும் அதனைப் பார்வையிடுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கும் வாய்ப்புண்டு. எவ்வாறாயினும், இலங்கையில் இன்னும் சொத்துக்கள் பொறுப்புக்கள் பிரகடனத்தை இரகசிய ஆவணமாக பாதுகாத்துக் கொண்டு ஊழல், மோசடிகள் மற்றும் முறையற்ற வகையில் பணம் திரட்டுவது என்பன வெளிவருவதைத் தடுப்பதற்கு ஒருசில தரப்பினர் முயற்சித்து வருகின்றனர்.

## சொத்துக்களை வெளியிட வேண்டியவர்கள்

ஜனாதிபதி, பாராளுமன்ற உறுப்பினர்கள், நீதிபதிகள், அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் பதவி நிலை உத்தியோகத்தர்கள், மாகாணசபை உறுப்பினர்கள், உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள், பத்திரிகை உரிமையாளர்கள் மற்றும் செய்தி ஆசிரியர்கள் போன்றவர்கள் வருடாந்தம் தமது சொத்துக்கள் பொறுப்புக்களை வெளியிட வேண்டும்.

தேர்தலின் போது வேட்பாளர்களுடைய சொத்துக்கள் பொறுப்புக்கள் பிரகடனத்தை சமர்ப்பிக்குமாறு கூறப்பட்டாலும், அவற்றின் போலித்தன்மையை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு இலங்கையில் வலுவானதும் பலம் வாய்ந்ததுமான சட்டம் இல்லை. அதேபோல் மக்கள் பிரதிநிதிகளின் சொத்துக்கள் வருடாந்தம் பரிசீலனை செய்யப்படுவதுமில்லை.

ஜனாதிபதித் தேர்தலின் போது ஜனாதிபதி பதவிக்கான வேட்பாளர்களின் சொத்துக்கள் பிரகடனத்தை வழங்கும் சட்டம் விதிக்கப்பட்டுள்ளது. ஆனாலும் வேட்பாளர்களுக்கு அவர்களுடைய சொத்துப் பிரகடனத்தை வழங்குவதற்கு தேர்தல் ஆணைக்குழுவுக்கு மூன்று மாதகால அவகாசம் வழங்கப்பட்டிருப்பதால் அதனை தாமதிப்பதற்கு அவர்களுக்கு வாய்ப்புண்டு. எனவே ஜனாதிபதி வேட்பாளர்களின் சொத்துப் பிரகடனத்தை பொறுப்பளிப்பது என்பது அடையாள ரீதியான செயற்பாடு மாத்திரமேயாகும்.

அனைத்துப் பாராளுமன்ற உறுப்பினர்களும் சொத்துக்கள் பொறுப்புக்களை பிரகடனப்படுத்த வேண்டுமென்ற சட்டம் காணப்பட்டாலும், பதிவாகிய வகையில் ஒரு சில பாராளுமன்ற உறுப்பினர்கள் மாத்திரமே சொத்துப் பிரகடனங்களை வழங்குவதுடன், அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களும் அதனைச் சரியான வகையில் மேற்கொள்வதில்லை.

## பாராளுமன்ற உறுப்பினர்களின் சொத்துக்கள் பொறுப்புக்கள்

சொத்துப் பிரகடனத்தைக் கோருவது பாராளுமன்ற சபாநாயகருக்கு சமர்ப்பிக்க வேண்டியதுடன், 750 ரூபா செலுத்தல் காசோலையுடன் குறித்த பாராளுமன்ற உறுப்பினரின் சொத்துக்கள் பொறுப்புக்கள் பிரகடனத்தை கோருகின்ற கடிதத்தை பாராளுமன்ற சபாநாயகருக்கு தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். பின்னர் பாராளுமன்றத்தால் குறித்த சொத்துக்கள் பிரகடனம் பெற்றுக்கொடுக்கப்படும்.

இதன்மூலம் குறித்த பாராளுமன்ற உறுப்பினர் மற்றும் அவருடைய துணைவர் அல்லது துணைவி, பிள்ளைகளின் பெயர்களில் காணப்படும் சொத்துக்கள் தொடர்பான தகவல்கள், அவர்களை அதனை ஈட்டிய விதம் தொடர்பான விபரங்களுடன் சொத்துக்கள் விபரம், வங்கிக் கணக்கு, கொள்வனவு செய்யப்பட்டுள்ள பங்குகள், கொள்வனவு செய்யப்பட்டுள்ள பிணைமுறிகள் - பெறுமதியுடன் கூடிய கடன்கள் மற்றும் வரவுப்பற்று, வாகனங்கள் மற்றும் தங்காபரணங்கள் போன்றவற்றின் விபரங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

பொதுவாக பாராளுமன்ற உறுப்பினர் பதவிப்பிரமாணம் செய்வதற்கு முன்னர் தமது சொத்துக்கள் பொறுப்புக்கள் பிரகடனத்தை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டியதுடன், அதிலிருந்து வருடாந்தம் சொத்துக்கள் பொறுப்புக்கள் பிரகடனத்தை இற்றைப்படுத்தல் வேண்டும்.

இத்தகவல்களைப் பரிசீலனை செய்து அவை உண்மைத்தன்மையற்றவை எனின் இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் ஆணையாளருக்கோ அல்லது உள்நாட்டு இறைவரித்திணைக்களத்தின் ஆணையாளர் நாயகத்திற்கு முறைப்பாடு செய்வதற்கான வாய்ப்புண்டு. அப்போது அதிகாரிகள் அதுதொடர்பான விசாரணைகளை மேற்கொள்ள வேண்டியதுடன், எவ்வாறாயினும் நடைமுறை ரீதியாக இவ்வாறான விடயங்கள் இடம்பெறுவதில்லை. 1975 சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் பிரகடனச் சட்டத்திற்கமைய விண்ணப்பித்துப் பெற்றுக் கொள்ளும் சொத்துக்கள் பொறுப்புக்கள் தொடர்பான தகவல்களை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்வது தடை செய்யப்பட்டுள்ளது. அவ்வாறு செய்தால் ஒரு வருட மறியல் தண்டனை அல்லது 1,000 ரூபா தண்டப்பணம் அறவிடமுடியுமென சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## சொத்துக்களை மறைத்தல்

இலங்கையில் மாத்திரமல்லாமல் கூடுதலான நாடுகளில் சில அரசியல்வாதிகள் தமது சொத்துக்களை மறைப்பதற்கு முயற்சிக்கின்றார்கள் என அதிகமானவர்கள் குற்றங் கூறுகின்ற விடயமாகும். தாம் ஈட்டிய சொத்துக்களை தமது குடும்ப அங்கத்தவர்கள் அல்லது வேறொருவரின் பெயரில் வைத்திருத்தல் சொத்துக்களை மறைக்கும் ஒரு முறையாகும். வெளிநாட்டு வங்கிக் கணக்குகளில் பணத்தை மறைத்து வைத்திருத்தல் வேறு நாடுகளில் சொத்துக்களை மதைத்து வைப்பதனை மேற்கொள்கின்றனர். இவை அதற்கான பிரபல உதாரணங்கள் சிலவாகும்.

தமது முழுமையான சொத்துக்களை வெளியிடாத குற்றத்திற்காக ''இஸ்லாமாபாத்'' இல் ஊழலுக்கு எதிரான நீதிமன்றத்தால் பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் நவாஷ் செரீப்புக்கு ஏழு வருடகால சிறைத்தண்டனை வழங்கப்பட்டது. ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அவர்கள் எட்டு வருடங்களாக செலுத்தாத வரித்தொகையை ''நியூயோர்க்'' நகரத்தின் குறித்த அதிகாரிகளுக்கு செலுத்த வேண்டுமென அமெரிக்காவின் நீதிபதி ஒருமுறை கட்டளையிட்டிருந்தார்.

ட்ரம்ப் ஜனாதிபதி பதவியில் இருக்கும் போது ''வரிச்சலுகையை'' அனுபவிப்பதாக அவரது சட்டத்தரணியால் முன்வைக்கப்பட்ட வாதத்தை நீதிமன்றம் நிராகரித்திருந்தது. அதேபோல் பனாமா ஆவணம் வெளிவந்த பின்னர் முன்னாள் அரச தலைவர்களின் பெயர்கள் வெளிவந்தமையும் அவர்கள் மறைத்து வைத்திருந்த சொத்துக்கள் தொடர்பான வெளிப்படுத்தல்கள் அவற்றில் சிலவாகும்.

## தகவல் அறிதல் சட்டப் பயன்பாடு

சொத்துக்கள் பொறுப்புக்கள் சட்டத்தின் மூலம் ஒவ்வொரு பாராளுமன்ற உறுப்பினர்களதும் சொத்துக்கள் பொறுப்புக்கள் பிரகடனம் வேறு வேறாகப் பெற்றுக் கொள்ள வேண்டியதுடன், பெயர்பட்டியல் வழங்கப்படுவதில்லை. அதனால் பாராளுமன்றத்திடம் தகவல் கோருதல் சமர்ப்பித்து குறித்த வருடத்திலான சொத்துக்கள் பொறுப்புக்கள் பிரகடனத்தை வழங்கிய பாராளுமன்ற உறுப்பினர்களின் பெயர்ப் பட்டியலைக் கோரினாலும், அது பாராளுமன்றத்தால் நிராகரிக்கப்பட்டுள்ளது. இதுதொடர்பாக தகவல் அறிதல் உரிமை தொடர்பாக ஆணைக்குழுவுக்கு மேன்முறையீடு செய்த பின்னர் ஆணைக்குழுவால்

மேற்கொள்ளப்பட்ட நீண்ட விசாரணையின் பின்னர் குறித்த தகவல்களை வழங்குமாறு பாராளுமன்றத்திற்கு கட்டளை பிறப்பிக்கப்பட்டது. (சாமர சம்பத் ஏ. இலங்கை பாராளுமன்றம் *RTIC 719/2018*)

அதேபோல் சொத்துக்கள் பொறுப்புக்கள் பிரகடனத்தை வெளியிடும் 1975 சட்டத்தின் பிரகாரம் தமது சொத்துக்கள் பொறுப்புக்கள் பிரகடனத்தை சபாநாயகருக்கு பொறுப்பளித்த பாராளுமன்ற உறுப்பினர்களின் பெயர் பட்டியலை வெளியிடும் போது பாராளுமன்ற உறுப்பினர் சிறப்புரிமைகள் எந்தவகையிலும் ஏற்புடையதாக அமையாததுடன், மக்கள் பிரதிநிதிகளின் பொறுப்புக் கூறல் மற்றும் வெளிப்படைத்தன்மை தொடர்பாகக் காணப்படும் தேவையின் பிரகாரம் கோரப்பட்டுள்ள தகவல்களை மக்களுக்கு மிகவும் உயர்வான முக்கியத்துவத்துடன் கூடிய தகவல் எனக் குறிப்பிட்டு தகவல் ஆணைக்குழு குறிப்பிட்டு கட்டளை வழங்கியிருந்தது.

அதேபோல் கோரப்பட்டுள்ள தகவல்கள் மக்கள் பிரதிநிதிகளால் தமது சட்டரீதியான பொறுப்புக்களை நிறைவேற்றுவதுடன், இத்தகவல்கள் தொடர்பாக இந்தளவுக்கு இரகசியத்தன்மையை எதற்காக பேண வேண்டுமென ஆணைக்குழுவு கருத்திலெடுக்க வேண்டிய பிரச்சினையாக எழுந்துள்ளதாகவும் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

## பரிந்துரைகள்

தேர்தல்களின் போது வேட்பாளர்களுக்கு செலவிடக்கூடிய பணத்தொகை தொடர்பான சட்டமொன்று வகுக்கப்படல் வேண்டும். அவ்வாறான கலந்துரையாடல் இடம்பெற்றாலும் இதுவரை அவ்வாறானதொரு சட்டம் கொண்டுவரப்படவில்லை. தேர்தலில் போட்டியிடுவதற்கு முன்வரும் வேட்பாளர்களுக்கான ஒழுக்கவிதிக்கோவையொன்று தயாரிக்கப்படுவதன் முக்கியத்துவம் பற்றியும், சொத்துக்கள் பொறுப்புக்கள் பிரகடனத்தை வெளியிடாத தேர்தல் வேட்பாளர்களின் பிரஜாவுரிமையை இரத்துச் செய்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டுமெனவும், தேர்தல் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் மஹிந்த தேசப்பிரிய அவர்கள் ஒருமுறை குறிப்பிட்டுக் கூறியுள்ளார். அவ்வாறான சட்டங்களை வகுப்பதற்கு அரசாங்கம் ஆர்வம் காட்ட வேண்டும்.

இலங்கையின் அரசியல் வரலாற்றில் முதற்தடவையாக பல்வேறு கட்சிகளுக்குரிய ஏழு பாராளுமன்ற உறுப்பினர்கள் தமது சொத்துக்கள் பொறுப்புக்களை வெளிப்படுத்தியுள்ளனர். தாரக பாலசூரிய, வாசுதேவ நாணயக்கார, எம்.ஏ.சுமந்திரன், விதுர விக்கிரமநாயக்க, எரான் விக்கிரமரத்ன, ரஞ்சன் ராமநாயக்க மற்றும் சயிட் அலிசாஹிர் மௌலான போன்ற பாராளுமன்ற உறுப்பினர்கள் 2017/2018 வருடங்களில் சொத்துக்கள் பொறுப்புக்களை அவ்வாறு வெளிப்படுத்தியிருந்தனர். 225 பாராளுமன்ற உறுப்பினர்களில் ஏனைய அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களும் இவ்வாறு சொத்துக்கள் பொறுப்புக்களை வெளியிடுவதற்குத் தூண்டுவிக்க வேண்டும்.

சொத்துக்கள் பொறுப்புக்கள் பிரகடனத்தைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் அவற்றை வெளிப்படுத்துவதற்கு மேலும் பொதுமக்கள் மற்றும் சிவில் சமூக அமைப்புக்கள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியதுடன், அதற்காக தகவல் அறிதல் சட்டத்தைப் பயன்படுத்துவதற்கு முனைதல்.

சொத்துக்கள் பொறுப்புக்கள் தகவல்களை வெளியிடுவதற்கு அரசாங்கம் தலையிட்டு பொதுவான இணையத்தளமொன்றை உருவாக்கி அதன்மூலம் தகவல்களை

பிரசித்தப்படுத்துதல். அதற்காக வெளிநாடுகளின் அனுபவங்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

தகவல் சட்டம் நடைமுறைக்கு வந்து நான்கு வருடங்கள் சென்றாலும் பகிரங்க அதிகார சபைகளிலுள்ள ஒருசில தகவல் அலுவலர்கள் தகவல்களை வழங்குவதற்கு முற்போக்காக நடந்து கொள்ளாததுடன், அதற்கு மனப்பாங்கு ரீதியான மாற்றம் தேவையாகும்.

தகவலுக்கான உரிமை தொடர்பான ஆணைக்குழுவின் ஒழுங்குவிதிகளில் 2017.02.03 ஆம் திகதிய 2004/66 இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் தகவல்கள் தொடர்பான அனைத்துத் தெளிவுபடுத்தல்களும் வெளியிடப்பட்டுள்ளதுடன், பகிரங்க அதிகாரசபைகள் தம்மிடமுள்ள, பொறுப்பிலுள்ள அல்லது நிர்வாகத்திடமுள்ள மூன்று விதமான தகவல்களை நியாயமான முயற்சியெடுத்து வழங்க முடியுமாயின், அத்தகவல்களை வழங்க வேண்டுமெனக் குறிப்பிடப்படுவதுடன், தகவல் அலுவலர்கள் இவ்விடயத்தை மறந்துள்ளனர். குறித்த குறைபாடுகளைத் தவிர்க்கும் வகையில் அதுதொடர்பாக நடவடிக்கை எடுத்தல்.

சொத்துக்கள் பொறுப்புக்களை வெளியிடுவதற்கு இயலுமான வகையில் சமகாலத்திற்குப் பொருத்தமான வகையில் 1975 சொத்துக்கள் பொறுப்புக்கள் பிரகடனச் சட்டத்தை திருத்தம் செய்தல்.

தகவல் கோரும் உரிமை மக்களுக்குரிய முக்கிய உரிமை எனவும் அரச அலுவலர்கள் அதற்குப் பொறுப்புக் கூற வேண்டியதுடன், குறித்த விடயங்களை சமூகமயப்படுத்தல் வேண்டும்.

- **சாமர சம்பத்**

## இணைப்பு

- சொத்துக்கள் பிரகடனம் திரட்டப்பட்டுள்ள பாராளுமன்ற உறுப்பினர்களின் பட்டியல்

சாமர சம்பத் ஏ. இலங்கை பாராளுமன்றம் *RTIC 719/2018* (தற்போது இலங்கை பாராளுமன்றத்தால் மேன்முறையாட்டு நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்யப்பட்டுள்ளது)

கட்டளை:http://www.rticommission.lk/web/index.php?option=com_content&view=article&id=2226:app-no-719-2018&catid=68&lang=68&lang=si&itemid=101

***சாமர சம்பத் :*** *'அத' பத்திரிகையின் ஊடகவியலாளர். தகவல் அறியும் சட்டத்தின் ஊடாகப் பெற்றுக் கொண்ட தகவல்களைப் பயன்படுத்தி செய்தி மற்றும் பல சிறப்புக் கட்டுரைகளைப் பிரசுரித்திருக்கின்றார். தகவல் அறியும் உரிமையைப் பற்றி மக்களை அறிவூட்டும் நிகழ்ச்சிகளிலும் செயலமர்வுகளிலும் வளவாளராகவும் செயற்படுகின்றார். வெகுசன ஊடகப் பட்டதாரியான சாமர, கொழும்பு பல்கலைக் கழகத்தில் மனித உரிமைகள் தொடர்பில் முதுகலைப் பட்டதாரியாவார்.*

# நாடு பூராகவுமுள்ள 200 குப்பை மேடுகள்

## தீர்வுகள் மந்தநிலையில் இருப்பது ஏன்?

இலங்கை இன்னுமே கழிவு முகாமைத்துவத்தை சரியான வகையில் மேற்கொள்ளவில்லை. அவ்வாறு மேற்கொள்ளாமைக்கான காரணம் பொதுமக்களுக்கும் ஆட்சியாளருக்கும் ஏற்புடையாவதுடன், சரியான கழிவு முகாமைத்துவத்தை மேற்கொள்ள முடியுமாயின், கழிவு என்பது பெரும் பிரச்சினையல்ல அதனை வருமானம் ஈட்டிக் கொள்ளும் வளமாக்கிக் கொள்ள முடியும்.

குறிப்பாக, இலங்கையில் சதுப்பு நிலங்களைச் சுற்றியும், நீர்த்தேக்கங்களைச் சுற்றியும் அதிகளவில் கழிவுகள் கொட்டப்படுவதனைக் காணக்கூடியதாகவுள்ளதுடன், தற்போது இலங்கை பூராகவும் 200 இற்கும் அதிகமான குப்பை மேடுகள் தோன்றியுள்ளன. இக்குப்பை மேடுகளை இல்லாது செய்வதற்குப் பதிலாக நாளுக்கு நாள் அவை அதிகரித்த வண்ணமிருப்பது கவலைக்குரிய விடயமாகும்.

முத்துராஜவெல சதுப்பு நிலத்தில் செழிப்பாக வளர்ந்துள்ள கண்டல் தாவரச் சுற்றாடலாகிய கடோல்கலே பிரதேசத்தில் குப்பை மேடொன்று தீப்பற்றியமை அதிகளவில் பேசப்பட்ட ஒரு சம்பவமாகும். இக்குப்பை மேடு தீப்பற்றியமையால் கட்டுநாயக்கா அதிவேக நெடுஞ்சாலை ஒரு நாளுக்கு மூடப்பட வேண்டிய நிலை ஏற்பட்டது. கட்டுநாயக்க சீதுவ நகர சபையால் கழிவுகள் இடப்படுகின்ற அந்த இடத்திலேயே இவ்வாறு தீப்பற்றியது. இது தொடர்பாக தகவல்களை ஆராயும் போது தெரியவருவதாவது, கட்டுநாயக்க சீதுவ நகர சபையால் நாளாந்தம் சேகரிக்கப்படும் கழிவுகளை இடுவதற்கு இதுவரை ஒரு காணி இன்மையால், வாடகை அடிப்படையில் பெறப்பட்ட பிலபிட்டிய வயல் எனும் பெயரிலான காணியில் கழிவுகள் கொட்டப்படுகின்றன. கட்டுநாயக்க கொழும்பு அதிவேக நெடுஞ்சாலைக்கு அருகாமையிலும் முத்துராஜவெல சதுப்பு நிலத்தை அண்மித்ததாக அமைந்துள்ள காணியொன்றை இதற்காகப் பயன்படுத்துவதுடன், இக்காணி முகாமைத்துவப்படுத்தாமல் கழிவுகளை அகற்றுவதற்கு பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

குப்பை மேடு தீப்பற்றிய பின்னர் அதன் விபரங்களை, தகவல் அறிதல் சட்டத்தைப் பயன்படுத்திப் பெற்றுக் கொண்டதுடன், அத்தகவல்களின் பிரகாரம் இக்கட்டுரை வரையப்படுகின்றது.

பொதுவாக மாதமொன்றுக்கு கட்டுநாயக்க சீதுவ நகர சபை எல்லைக்குள் இவ்விடத்தில் 30-35 தொன் குப்பைகளை கொட்டுகின்றனர். ஒரு சில சந்தர்ப்பங்களில் அதன் அளவு அதிகரிக்கும் சந்தர்ப்பமும் உள்ளது.

## வேறுபிரித்து வழங்கப்படும் கழிவுகள் மீண்டும் ஒன்றாக

கழிவுகளை வேறுபிரித்து வழங்குவதற்காக பொதுமக்களை ஈடுபடுத்துவதற்கு உள்ளூராட்சி மன்றங்கள் பல்வேறு சந்தர்ப்பங்களில் பல்வேறு விதமாக நடவடிக்கைகளை எடுத்துள்ளதுடன், அதற்கான உள்நாட்டு வெளிநாட்டுப் பயிற்சி செயலமர்வுகளில் உறுப்பினர்களும் அதிகாரிகளும் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். மத்திய அரசாங்கத்தால் இதுதொடர்பான பல கருத்திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதுடன், அதற்காக உள்நாட்டு வெளிநாட்டுப் பயிற்சிகள் பலவும் வழங்கப்பட்டுள்ளன. அதேபோல் சரியானதொரு கழிவு முகாமைத்துவக் கொள்கையை தயாரிப்பதற்கு ஒரு சில நாடுகள் இலங்கைக்கு நிதி அனுசரணைகளைக் கூட வழங்கியிருக்கின்றன. இவ்வாறான நிலைமையில் கழிவுகளை வேறுபிரித்து அகற்றும் பணிகள் ஒரு சில பிரதேசங்களில் சரியாக இடம்பெற்ற போதிலும் பெரும்பாலான பிரதேசங்களில் இன்னும் அப்பணிகள் சரியான வகையில் இடம்பெறுவதில்லை. வேறுபிரித்து கழிவுகளை அகற்றும் போது அதற்கான மாற்று வழியைப் பின்பற்ற முடிந்தாலும், கழிவுகளை வேறுபிரிக்காமல் இடும்போது அனைத்துக் கழிவுகளையும் சேகரித்து குப்பை மேட்டில் கொட்டப்படுகின்றது. அதன் மூலம் குப்பை மேடுகள் உருவாவது மாத்திரமல்ல பல தீங்கான பல விளைவுகளும் ஏற்படுகின்றது.

கழிவகற்றும் கொள்கைக்கமைய உணவுக்கழிவுகள், பொலித்தீன், கடதாசி, கண்ணாடி, இலத்திரனியல் உபகரணங்கள் போன்றவாறு கழிவுகளை வேறுபிரிக்குமாறு உள்ளூராட்சி மன்றங்களால் பொதுமக்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. சில வேளைகளில் பொதுமக்கள் அதனைப் பின்பற்றி வேறுபிரித்து நகர சபைக்கு வழங்கினாலும், குறித்த கழிவுகள் அனைத்தும் மீண்டும் வேறுபிரிக்கப்படாமல் இவ்விடத்தில் அகற்றப்படுவதை அவதானிக்க முடிகிறது. அதேபோல் குப்பைமேட்டுக்கு அருகில் குப்பைகள் படிப்படியாக அதிகரிக்கும் போது குப்பைகளை தீயிட்டு கொளுத்தும் சந்தர்ப்பங்களும் பதிவாகியுள்ளன.

## பணம் செலுத்தி கழிவுகளை அகற்றல்

கழிவுகளை அகற்றும் செயன்முறைக்காக மாதமொன்றுக்கு 46 இலட்சத்திற்கும் அதிகமான தொகையை கட்டுநாயக்க சீதுவ நகர சபையால் செலவிடப்படுவதாக நகர சபையின் தகவல் உத்தியோகத்தர் வழங்கிய தகவல்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. கழிவுகளை சேகரிப்பதற்கான வாகனங்கள் மற்றும் தொழிலாளர் சம்பளம் அதேபோல் கழிவகற்றும் இடத்திற்கான வாடகை போன்றன உள்ளடங்குகின்றது. கழிவகற்றலுக்காக இவ்வாறு நகரசபை செலவிடுவது பொதுமக்களின் பணத்தையாகும். குறித்த பணத்திற்கு நியாயத்தை வழங்குவதாயின் பொதுமக்களின் பணத்தை செலவிடும் போது மக்கள் திருப்தியடையக் கூடிய வகையில் இடம்பெறாமை கவலைக்குரிய விடயமாகவுள்ளது. சரியான கழிவகற்றலுக்காக இத்தொகையைப் பயன்படுத்தும் போது சுற்றாடலில் குப்பை மேடுகள் தோன்றுவது குறைவடைவதுடன் சுத்தமான சூழல் மற்றும் கழிவுகளற்ற சுற்றாடலை உருவாக்கிக் கொள்வதற்கான சந்தர்ப்பம் இன்னும் உள்ளது.

கட்டுநாயக்க சீதுவ நகர சபை கடந்த 10 வருடங்களில் கழிவகற்றல் செயன்முறைக்காக செலவிட்டுள்ள தொகை கீழ்வருமாறு:

| ஆண்டு | செலவிடப்பட்ட தொகை |
|---|---|
| 2010 | 22,515,650 |
| 2011 | 24,540,260 |
| 2012 | 28,450,838 |
| 2013 | 35,377,748 |
| 2014 | 33,753,168 |
| 2015 | 42,079,581 |
| 2016 | 31,702,807 |
| 2017 | 45,214,426 |
| 2018 | 43,319,551 |
| 2019 | 46,505,348 |

இதற்கான செலவானது படிப்படியாக அதிகரித்துள்ளமையையும் தெளிவாக காணக்கூடியதாகவுள்ளது.

எமது நாட்டில் கழிவு முகாமைத்துவப் பணிகள் உள்ளூராட்சி மன்றங்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன், அதற்காக அவர்களைப் பயிற்றுவிப்பதற்காக உள்நாட்டு வெளிநாட்டுப் பயிற்சிகள் பலவும் கடந்த 10 ஆண்டுகளில் நடாத்தப்பட்டுள்ளது. குறித்த பயிற்சி செயலமர்வுகளுக்காக உள்ளூராட்சி மன்றங்களிலிருந்து அதிகளவானோர் கலந்து கொண்டிருந்தாலும், நடைமுறை ரீதியாக அவற்றில் சொற்ப அளவிலேயே செயற்படுத்தப்பட்டுள்ளமை தகவல் அறியும் சட்டத்தின் மூலமாக தேடி ஆராயும் போது தெரியவந்துள்ளது.

முத்துராஜவெல கடோல் கெலே பிரதேசத்திற்கு அருகில் அமைந்துள்ள இக்காணிக்கு கழிவுகளை கொட்டுவதால் சுற்றாடல் பாதிப்பு ஏற்படுவதாக சூழலியலாளர்கள் தொடர்ந்து தெரிவித்து வந்த போதிலும், கட்டுநாயக்க சீதுவ நகர சபைத் தவிசாளர் இக்கழிவகற்றல் தொடர்பாக இவ்வாறனதொரு கருத்தையே கூறுகின்றார்.

‘‘நாங்கள் கழிவுகளை கொட்டுகின்ற இக்காணி எமக்குச் சொந்தமானதல்ல. முத்துராஜவெல வன ஒதுக்கம் எதுவென சூழலியலாளர்களுக்குத் தெரியாது. இக்காணியை பிலபிட்டிய கும்புர என்றுதான் கூறுகின்றனர். சீதுவ நகர சபை கடந்த 20 வருடங்களாக இவ்விடத்திலேயே கழிவுகளை கொட்டி வருகிறது. இது தனியார் காணியாக இருந்ததொன்றாகும். 05 ஏக்கர்களுக்கு அதிகமான காணிகளை அரசாங்கத்திற்கு கையகப்படுத்தலின் கீழ் எல்.ஆர்.சி இன் கீழ் கொண்டுவரப்பட்ட ஒரு காணியே இது’’

எனத் தவிசாளர் அவர்கள் கூறுகின்றார். எவ்வாறாயினும் இவ்வாறான கூருணர்வு மிக்க சுற்றாடல் தொகுதிக்கு அண்மையில் காணப்படும் காணிகள் கழிவகற்றல் நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்துவது உள்நோக்கத்துடனேயே என்பதுடன் அது காணிகள் கொள்ளையிடப்படுவதன் மற்றுமொரு வடிவமெனவும் சூழலியலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

## கூட்டுப் பசளை தயாரிப்பு

கழிவுகளைப் பயன்படுத்தி சேதனப் பசளை இல்லாவிட்டால் கூட்டுப்பசளைத் தயாரிப்பு தொடர்பாக இக்காலப்பகுதியில் பேசப்பட்டு வருவதுடன், ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் இயற்கை வளங்கள் தொடர்பான பேராசிரியர் திருமதி மெத்திகா விதானகே அவர்கள் இது தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கையில்:

இலங்கையில் குப்பை மேடுகள் பற்றி நான் ஆய்வுகளை மேற்கொள்கின்றேன். இலங்கையில் தற்போது 260 இற்கும் அதிகமான குப்பை மேடுகள் காணப்படுகின்றன. இவை அனைத்தும் இருப்பது நீர்மூலங்களுக்கு அண்மையிலேயாகும். இக்குப்பை மேடுகளிலிருந்து கூட்டுப்பசளை தயாரிக்கின்றனர். ஆனாலும் இக்கூட்டுப்பசளைகளில் பார உலோகங்கள் காணப்படுகின்றன. குப்பை மேடுகளுக்கு அருகில் காணப்படுகின்ற நீர் மூலங்களைப் பரிசோதிக்கும் போது இந்த பார உலோகப் பொருட்கள் இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. அதனால் பசளை எனக் கூறி முற்றுமுழுதாக கூட்டுப்பசளையை இடுவதும் தீங்கு விளைவிக்கும். அதனை தீவிரமாகக் கொள்ள வேண்டாம். கூட்டுப்பசளையை ஓரளவுக்குப் பயன்படுத்தலாம். எவ்வாறாயினும் குப்பை மேடுகளுக்கு அருகில் காணப்படுகின்ற நீர்த்தேக்கங்களிலுள்ள நீரைப் பரிசோதிக்கும் போது அவற்றில் பார உலோகப் பொருட்கள் கலந்திருக்கின்றன எனக் கூற முடியும்.

சரியான கழிவு முகாமைத்துவக் கொள்கையைக் கடைப்பிடிப்பதாயின் இப்பிரச்சினையானது உண்மையாக மிக இலகுவில் தீர்வு காணக் கூடியதொரு பிரச்சினையாகும். கழிவுகளை வருமானமாக மாற்றி அவற்றின் மூலம் இலாபமீட்டும் நாடுகள் பல உலகில் உள்ளன. அந்நாடுகளை முன்மாதிரியாகக் கொண்டு இலங்கையும் தற்போது பல கருத்திட்டங்களை மேற்கொண்டுள்ளதுடன், அவற்றில் சில வெற்றியடைந்தும் உள்ளன. அதனால் கழிவுகளை அகற்றுவதற்கு சரியான கொள்கைகளை அறிமுகப்படுத்தி தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதும், கழிவகற்றல் செயற்பாட்டினை சரியான வகையில் மேற்கொள்வதற்கான சட்ட ஒழுங்குகளை அறிமுகப்படுத்த வேண்டுமென்பதும் இவ்விடயங்களை ஆராயும் போது தெரியவருகின்றது. சரியான கழிவு முகாமைத்துவ வேலைத்திட்டத்தைக் கடைப்பிடிப்பதற்குப் பதிலாக பொதுமக்களுடைய பணத்தை வீண்விரயம் செய்யும், அதேபோல் சுற்றாடலுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் இவ்வாறான குப்பை மேடுகள் இலங்கையில் இன்னும் அதிகளவில் உள்ளது. ஆயினும், இவையனைத்துக்கும் சரியான வேலைத்திட்டம் சமகாலத்திலோ அல்லது எதிர்காலத்திலோ மேற்கொள்ளாவிட்டால் எதிர்கால சந்ததியினர் வாழ்வதற்கான சூழல் இருக்காது.

- **சாமர சம்பத்**

# மூநிலை மின்சாரத்திற்கு பணம் செலுத்தி குப்பி விளக்கொளியில் வாழ்தல்

## உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் காணி ஏல விற்பனையாளர்களின் மோசடி வியாபாரம் தொடர்பான ஆராய்வு

"மூநிலை(Three Phase) மின்சாரம், குழாய் நீர் வசதிகளுடன், இரண்டு நிமிடங்களில் நகரத்திற்கு செல்லக் கூடிய, பிரபல பாடசாலைகள், அகலமான வீதிகளுடனான காணி.."

"விளம்பரங்களிலும் சுவரொட்டிகளிலும் அவ்வாறுதான் இருந்தது. அதனால்தான் நாங்கள் காணிகளை வாங்கினோம். ஆனாலும் இன்று நாங்கள் குப்பி விளக்கில்தான் வாழ்கின்றோம். ஒன்லைனா; இரவில் வெளிச்சம் இல்லாததால் எமது பிள்ளைகள் தாய்மாருடனே இருக்கின்றார்கள்."

பல வருடங்களாக மின்சாரம் இல்லாமல் வாழ்கின்ற ஒரு தாயின் அவலக்குரல் நீண்டு செல்கின்றது.

காணிகளைப் பிரித்து விற்பனை செய்பவர்கள், வாடிக்கையாளர்களைக் கவர்ந்திழுக்கும் வகையில் பல்வேறு விளம்பர முறைகளைக் கையாண்டு, தந்திரோபாயமான முறையில் காணிகளை விற்பனை செய்து வருகின்றனர். வாடிக்கையாளர்களின் தேவைகளை அடிப்படையாகக் கொண்டு வண்ணமயமான துண்டுப்பிரசுரங்கள், பதாகைகள், சுவரொட்டிகள் மூலம் விளம்பரங்களை மேற்கொண்ட விற்பனையாளர்கள், சமூக ஊடகங்களையும் பயன்படுத்தி மேலும் தந்திரோபாயமான முறையிலும் கவர்ச்சிகரமான வகையிலும் தமது விளம்பர நடவடிக்கைகளை மேம்படுத்தியுள்ளனர்.

இலங்கையில் பிரபலம் வாய்ந்த சொத்துக்கள் விற்பனையாளர்களிடம் காணிகளை வாங்கி குடியேறும் மக்கள் விளம்பரங்களில் கூறப்பட்ட "மூநிலை மின்சாரம், நீர் போன்ற அடிப்படை வசதிகளைப் பெற்றுக்கொள்ளும் போது பல்வேறு பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கின்றனர். அதில் முக்கியமான பிரச்சினை மின்சாரமாகும். மேலும் குழாய் நீர் தொடர்பான பிரச்சினைகள், விற்பனை செய்வதற்குரிய நிபந்தனைகளுக்கமைய வீதிகளில் சரியான அகலமின்மை, பொதுப் பயன்பாட்டுக்காக காணி ஒதுக்கப்படாமை போன்ற பிரச்சினைகளுக்கும் வாடிக்கையாளர்கள் முகங்கொடுக்கின்றனர்.

குடியமர்வதற்கு காணியொன்றைத் தெரிவு செய்யும் போது மின்சாரம், நீர் போன்றவற்றை எந்தவொரு கொள்வனவாளரும் கவனம் செலுத்தினாலும், மிகவும் சூட்சுமமான முறையில் மின்சாரத்தை வழங்காமல் காணியை விற்பனை செய்வதில் ஒருசில மோசடி வர்த்தகர்கள் திறமை வாய்ந்தவர்களாக காணப்படுகின்றனர்.

காணி விற்பனையின் போது பின்பற்ற வேண்டிய நிபந்தனைகள், சட்ட ஒழுங்குவிதிகள் பல காணப்பட்டாலும் ஒரு சிலருக்கு அவை எதுவுமே ஏற்புடையதாக இல்லாமல் இருப்பது எப்படி? இக்காணி விற்பனைக்கு பரிந்துரைகளை வழங்கும் உள்ளூராட்சி மன்றங்களுக்கு ஒப்படைக்கப்பட்ட பொறுப்புக்களை நிறைவேற்றத் தவறுகின்றமையைப் பற்றிக் கூறுவது என்ன? இந்த ஆய்வு அதனைப் பற்றியதாகும்.

## அத்தியாவசிய நிபந்தனைகளை மீறுதல்

காணிகளைப் பிரித்து விற்பனை செய்யும் போது பல்வேறு நிறுவனங்களின் பரிந்துரைகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும். குறித்த நிறுவனங்களில் உள்ளூராட்சி மன்றங்களே முன்னோடியானதாகும். ஆவணங்களில் அவ்வாறிருப்பினும், ஒரு சில உள்ளூராட்சி மன்றங்கள் அத்தியாவசிய ஆவணங்கள் மற்றும் பரிந்துரைகளின்றி விற்பனையாளர்களுக்கு விரும்பிய வகையில் தமது விற்பனையை மேற்கொள்வதற்கு இடமளிப்பதற்கு விரும்புகின்றன. அது பல்வேறுபட்ட அதிசயமான விடயங்களின் விளைவுகளாகும். மின்சாரம் தொடர்பான அத்தியாவசிய ஆவணங்கள் தொடர்பான தடையைத் தாண்டுவது விற்பனையாளர்களின் குறிக்கோளாக இருப்பதுடன், முதன்மையான இலக்காகவும் உள்ளது. அதேபோல் காணியை வாங்குபவர்களுக்கு மிகவும் அதிகமான அழுத்தங்களையும் சிரமங்களையும் ஏற்படுத்துகின்ற பெரும் தடைக்கல்லாகவும் உள்ளது.

பீ. சமரசேகர என்பவர் 2016 ஆம் ஆண்டு வெல்லவ பிரதேசத்தில் ஒனல்டா எனும் சொத்துக்கள் விற்பனைக் கம்பனியிடம் காணியொன்றை வாங்கி ஏற்பட்ட சிரமங்கள் தொடர்பாக நீதிமன்ற நடவடிக்கைகளுக்குச் சென்றவராவார்.

மொத்தமாகப் பணத்தைச் செலுத்திக் காணியை வாங்கினாலும், வாக்குறுதியின் பிரகாரம் காணிக்கு கிடைக்க வேண்டிய மின்சாரம் அவருக்குக் கிடைக்கவில்லை. இறுதியில் மின்சாரம் உள்ளிட்ட வசதிகளைப் பெறுவதற்கு நீதிமன்றத்திற்குச் செல்ல வேண்டி நேரிட்டதாக அவர் கூறுகின்றார். இரண்டு வருடங்கள் அவர் வாழ்ந்த வாடகை வீட்டுக்கான வாடகையைச் செலுத்துமாறு குறித்த கம்பனிக்கு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

## ஏமாற்றத்திற்குள்ளாகும் வேதனை

2013 ஆம் ஆண்டு தொடக்கம் எட்டு வருடங்களுக்கும் அதிகமாக மின்சாரம் இல்லாமல் விற்பனை செய்யப்பட்ட காணிகளில் குப்பி விளக்குகளுடன் வாழ்ந்து வந்த ஒரு சிலர் பல வருடங்களாக அழுத்தங்களுக்குள்ளாகி அரைகுறையாக நிர்மாணித்த வீடுகளைக் கைவிட்டுச் சென்றுள்ளதாக திருமதி அனோமா சமன் குமாரி அவர்கள் கூறுகின்றார். எட்டு வருடங்களாக பிள்ளைகளுடன் வாழும் துயரத்தை அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"எமது பிள்ளைகள் ஒன்லைனில் கற்பதை விடுத்து, மின்சாரம் இல்லாமல்

படிப்பதற்குக் கூட வசதியில்லை. பிள்ளைகள் தாய்மாருடன் இருக்கின்றனர். நாங்கள் குப்பி விளக்குகளுடன் இவ்வீடுகளில் துன்பப்படுகின்றோம். இவர்கள் மின்சாரம் வழங்குவதாகத் தான் விளம்பரப்படுத்தினார்கள். அவ்வாறு கூறிய துண்டுப்பிரசுரங்களும் எங்களிடம் உள்ளன. ஆனாலும் இப்போது அவர்களுடைய தொலைபேசி இலக்கங்களோ இயங்குவதில்லை.

2013 ஆம் ஆண்டில் “Wayamba Property Developers” எனும் நிறுவனம் முப்பத்தெட்டுக் காணித் துண்டுகளுக்கு மின்சார சபைக்கு செலுத்த வேண்டிய கட்டணத்தை செலுத்தாமல் விற்பனை செய்துள்ளனர். அவ்வாறு இருக்கும் போது உள்ளூராட்சி மன்றமான இப்பாகமுவ பிரதேச சபையால் குறித்த சட்ட ஏற்பாடுகளைக் கருத்தில் கொள்ளாமல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

‘‘வின்றோஸ்’’ எனும் பெயரிலான கம்பனியிடம் காணி கொள்வனவு செய்த குருநாகல் பிரதேசத்தில் வசிக்கும் சீ.தென்னக்கோன் எனும் பெண்மணி இவ்வாறு தெரிவித்தார்.

‘‘2017 ஆம் ஆண்டில் விற்பனை செய்யப்பட்ட காணிகளில் ஒரு காணித்துண்டை விலைக்கு வாங்கினேன். அக்காணிக்கு 2021 ஆம் ஆண்டு வரையில் மின்சாரம் வழங்கப்படவில்லை. நாங்கள் 2020 ஆம் ஆண்டு யூன் மாதம் மின்சாரத்தை பெற்றுக்கொள்வதற்காக மின்சார சபைக்கு விண்ணப்பித்தோம். விற்பனை செய்த கம்பனி மின்சார சபைக்கு விண்ணப்பத்தை சமர்ப்பிக்காததால் மின்சாரம் வழங்க முடியாதென மாகாண மின்சார பொறியிலாளர் அலுவலகத்தில் கூறினார்கள். பிரதேச மின்சார சபை அலுவலகம் மற்றும் மாகாண அலுவலகமும் மூன்று தடவைகள் அளவை செய்தனர். மின்சாரம் வழங்காமையை கம்பனிக்கு கதைத்த பின்னர் Generater ஒன்றை வழங்கி செலவுக்குப் பணமும் கொடுத்தனர். அதில் எமக்கு சந்தேகமாக இருந்தமையால், அது தொடர்பாக ஆராய்ந்து பார்த்தோம்.’’ என அவர் கூறினார்.

காணிகளைப் பிரித்து விற்பனை செய்யும் போது வாடிக்கையாளர்களின் நலனுக்காக மேற்கொள்ள வேண்டிய விதிகளை மீறிச் செயற்படுவதற்கு உள்ளூராட்சி மன்றங்கள் வர்த்தகர்களுக்கு இடமளித்திருக்கின்றன என்பதனையே இவ்வனைத்து அனுபவங்கள் மூலமாக அறியக் கூடியதாகவுள்ளது.

## சட்டப் புத்தகத்தில் இவ்வாறுதான் உள்ளது

காணிகளைப் பிரித்து விற்பனை செய்யும் போது அனுமதி வழங்கும் சட்டம் மற்றும் முறைமைகள் தொடர்பாக உள்ளூராட்சி மன்ற ஆணையாளர் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களின் தகவல்களை தகவல் அறிதல் சட்டத்தின் பிரகாரம் ஆராய்ந்து பார்த்தோம்.

2015.01.20 ஆம் திகதிய மற்றும் 1898/28 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் துணை விதிகளுக்கமைய, துண்டுகளாக பிரிப்பதற்கு முன்மொழியப்பட்டுள்ள காணியானது 02 ஹெக்ரெயார் தொடக்கம் 10 ஹெக்ரெயார் வரைக்குமான காணியின் அபிவிருத்தித் திட்டத்திற்கான அனுமதியைப் பெறுதலானது மாகாண செயற்பாட்டுக் குழுவின் எழுத்து மூலமான உடன்பாட்டுடன் மேற்கொள்ளுதல் வேண்டும்.

குறித்த குழுவானது, மாகாண விடயத்திற்குப் பொறுப்பான செயலாளர், உள்ளூராட்சி ஆணையாளர், பிரதி பிரதம செயலாளர், மாகாணக் காணி ஆணையாளர், சுற்றாடல் அதிகார சபையின் பணிப்பாளர், மாகாண வீடமைப்பு ஆணையாளர் ஆகியோரைக்

கொண்டமைந்ததாகும். அவ்வாறு அங்கீகாரம் பெறும் காணி விற்பனை நிறுவனங்கள் தமது ஆரம்பப் பதிவுக்கு ஐந்து இலட்சம் ரூபாய் நிதியை உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகத்திற்குச் செலுத்திப் பதிவு செய்து கொள்ள வேண்டும்.

80 பேர்ச்சர்ஸ் தொடக்கம் நான்கு ஹெக்ரெயார்கள் வரைக்குமான காணி அல்லது அதன் ஒரு பகுதியை துண்டுகளாகப் பிரிக்கும் போது, குறித்த அபிவிருத்தித் திட்டத்தை ஏற்புடைய உள்ளூராட்சி மன்றத்தின் வீடுகள் மற்றும் நிலையான சொத்துக்கள் அபிவிருத்திக் குழுவுக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

அதன்போது இரண்டு ஹெக்ரெயார் அல்லது அதற்கு மேலதிகமான காணியொன்றை துண்டுகளாகப் பிரிக்கும் போது சுற்றாடல் பாதிப்பு இல்லையென்ற சுற்றாடல் அதிகாரசபையிடமிருந்து பெற்றுக்கொண்ட அறிக்கை இருத்தல் வேண்டும். முன்மொழியப்பட்டுள்ள காணி வயல் காணி எனின், கமநல சேவைகள் ஆணையாளரின் அனுமதியைப் பெற்றிருத்தல் வேண்டும். கடலோரப் பிரதேசமாயின் 1981 ஆம் ஆண்டு 57 ஆம் இலக்க கடலோரப் பாதுகாப்பு சட்டத்தின் கீழ் குறித்த திணைக்களப் பணிப்பாளரின் அங்கீகாரம் பெறப்படல் வேண்டும்.

காணி மீட்பு மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தின் பரிந்துரை காணப்பட வேண்டும். முன்மொழியப்பட்டுள்ள காணியில் குழாய் நீர் வசதிகள் இல்லாவிடின் குடிநீர் வசதிகளைப் பெற்றுக் கொள்ளக் கூடியதான நீர் வழங்கல் அதிகாரசபையின் பரிந்துரையைப் பெற்றிருத்தல் வேண்டும்.

முன்மொழியப்பட்ட காணி பாதுகாக்கப்பட்ட வனத்திற்கோ அல்லது சுற்றாடல் கூருணர்வு பிரதேசத்திற்கோ அருகாமையில் அமைந்திருப்பின், அரச அல்லது மாகாண சபை நிறுவனங்கள் மூலம் பெற்றுக்கொள்ளப்படும் பரிந்துரை இருத்தல் வேண்டும். அவ்வாறு பரிந்துரைகளைப் பெற்று பதிவு செய்யப்படும் காணி குறித்த உள்ளூராட்சி மன்றத்தின் கண்காணிப்பின் கீழ் அபிவிருத்தி செய்யப்பட்டு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். அவ்வாறு அபிவிருத்தி செய்யும் போது அப்பரிந்துரைகளுக்கமைய இடம்பெறுகின்றமை தொடர்பில் தொழிநுட்ப உத்தியோகத்தர்கள் கண்காணித்தல் வேண்டும்.

1929/45 ஆம் இலக்க 2015 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் 9.5 உறுப்புரைக்கமைய, துண்டுகளாகப் பிரிக்கப்படும் அனைத்துக் காணிகளுக்கும் மூநிலை (Three Phase) மின்சாரத்தைப் பெற்றுக்கொள்ளக் கூடிய வகையில் துண்டுகளாக்கப்பட்ட அனைத்து காணிக்குச் செல்கின்ற வீதிகளிலும் மூநிலை (Three Phase) மின்சார இணைப்பு வசதிகள் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும்'' எனும் உறுப்புரைக்கமைய காணி அபிவிருத்தி செய்யும் போது குறித்த கருத்திட்டத்திற்கான மின்சார சபையின் மதிப்பீட்டுத் தொகையைச் செலுத்திய பற்றுச்சீட்டுடன் அபிவிருத்திக் கருத்திட்ட அறிக்கையை உள்ளூராட்சி மன்றத்திற்கு சமர்ப்பித்தல் வேண்டும். அவ்வாறு சகல பரிந்துரைகளுக்கமைய முழுமையாக தயாரிக்கப்பட்ட கருத்திட்டத்திற்கு துண்டுகளாக்கி விற்பனை செய்வதற்கான இறுதி அங்கீகாரம் அந்தந்தப் பிரதேசங்களுக்குரிய உள்ளூ ராட்சி மன்றங்களால் வழங்கப்படும்.

சட்ட ரீதியான அனுமதியைப் பெறுவதற்கு துண்டுகளாகப் பிரிக்கும் காணிகளுக்கான நீர், மின்சாரம் உள்ளிட்ட வசதிகள் விற்பனையாளர்களால் வழங்கப்படல் வேண்டும். காணிகளைத் துண்டுகளாகப் பிரிப்பதற்கு முன்னர் நில அளவையாளரின் திட்ட வரைபடத்தை சமர்ப்பித்தல் வேண்டும். குறித்த திட்ட வரைபடத்திற்கமைய காணிகள் துண்டுகளாக்கப்படுகின்றனவா என்பதைக் கண்காணித்து தொழிநுட்ப

உத்தியோகத்தர்கள் அறிக்கை சமர்ப்பித்தல் வேண்டும். அது தொடர்பான விடயங்கள் 1317 ஆம் இலக்க 2003.11.28 ஆம் திகதிய துணை விதிகள் மற்றும் 2014.10.01 ஆம் திகதிய 1882/22 இலக்க திருத்தப்பட்ட துணை விதிகளிலும் 1978 ஆம் ஆண்டு 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின் கீழும் உள்வாங்கப்பட்டுள்ளது.

இந்நிபந்தனைகளைப் புறக்கணித்து காணிகளைத் துண்டுகளாக்கி விற்பனை செய்யும் ஒருசில விற்பனையாளர்களால் சிரமத்துக்குள்ளாகும் காணிக் கொள்வனவாளர்கள் பற்றி மின்சார சபையின் மாகாண மின்சார பொறியிலாளர் அலுவலகத்திற்குக் கிடைத்துள்ள விண்ணப்பங்களின் எண்ணிக்கைகளைக் கொண்டு உறுதிப்படுத்திக் கொள்ள முடியும்.

காணிகளைப் பிரித்து துண்டுகளாக்கி விற்பனை செய்யும் போது குறித்த உள்ளூ ராட்சி நிறுவனத்திற்கு பொதுக்காணியொன்று ஒதுக்கிக் கொடுக்கப்படல் வேண்டும். ஒரு ஹெக்ரெயாருக்கு அதிகமான காணியின் (10%) வீதம் குறித்த உள்ளூராட்சி மன்றத்திற்கு வழங்கப்படல் வேண்டுமென சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

காணிகளைத் துண்டுகாளாக்குதல் அல்லது அபிவிருத்தி செய்தல் தொடர்பாக உள்ளூ ராட்சி மன்றங்கள் தீர்மானம் எடுப்பதற்காக ''நிரந்தர வீடமைப்பு அபிவிருத்திக் குழு'' உருவாக்கப்படல் வேண்டும். உள்ளூராட்சி மன்றத்தின் தவிசாளர், செயலாளர் உள்ளிட்ட உத்தியோகத்தர்கள் இக்குழுவில் அங்கத்துவம் வகிப்பர்.

## வேலியால் புகுந்து செல்பவர்கள்

அவ்வாறிருப்பினும் காணிகளைப் பிரித்து துண்டுகளாக்கி விற்பனை செய்பவர்கள் குறித்த சட்ட திட்டங்களை மீறி தமது விற்பனையை மேற்கொள்வதற்காக 05 ஏக்கர்களுக்கும் குறைந்த பிரிவுகளாக்கி பல தடவைகளில் ஒரே காணியை துண்டுகளாக்கி விற்பனை செய்கின்றார்கள். அவ்வாறான சந்தர்ப்பங்களில் பொதுக் காணியொன்றை ஒதுக்காதிருத்தல், மின்சாரத்திற்குக் கட்டணம் செலுத்தி பற்றுச்சீட்டை வழங்காதிருத்தல், நீர் வழங்கலுக்காகப் பொதுக்கிணறை மாத்திரம் அமைத்தல் போன்றவாறு சட்டத்துள் நுழைந்து செயற்படுவதற்கு விற்பனையாளர்கள் தூண்டப்படுகின்றனர். அவ்வாறிருக்கும் போது பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் மற்றும் நிறுவனத்தின் பிரதானிகள் அமைதியாக இருப்பதாகப் பொதுமக்கள் குற்றஞ் சுமத்துகின்றனர்.

அந்தந்த காலப்பகுதியிலுள்ள உள்ளூராட்சி மன்றங்களின் அதிகாரிகள் மற்றும் காணி விற்பனையாளர்களின் தான்தோன்றித்தனமான செயற்பாடுகள் காரணமாக பல வருடங்களுக்குப் பின்னரும் பொதுமக்களின் பிரச்சினைகளுக்கு பொதுமக்களின் பணத்தை செலவிட்டே அரசாங்கம் தலையிட வேண்டியுள்ளது.

காணி விற்பனை நிறுவனங்கள் இந்த பிரச்சினை தொடர்பில் காட்டும் பதிலளிப்புக்கள் பலதரப்பட்டவை.

Winrose நிறுவனத்தின் முகாமையாளரான என். குமார அவர்கள் தமது பிரச்சனைகளுடன் கூடிய காணி தொடர்பாக இவ்வாறு கருத்துத் தெரிவித்தார்.

''எமது நிறுவனத்தில் பொதுவாக அவ்வாறான விடயங்கள் இடம்பெறுவதில்லை. ஆனாலும் ஏதோவொரு சூழ்நிலையில் தாங்கள் கூறும் காணிக்கு மின்சாரத்தை வழங்குவதில் தாமதம் ஏற்பட்டிருக்கின்றது. அது எங்களுடைய தவறல்ல.

மின்சார சபையால் மின்சாரம் வழங்குவதற்கு தாமதம் ஏற்படுவது தூண்கள் மற்றும் மின்பரிமாற்றிகளின் பற்றாக்குறையாலாகும். அடுத்தது அவர்கள் அடிக்கடி சட்டத்தை மாற்றுகின்றார்கள். ஆனாலும் பிரதேச மின்சார பொறியியலாளர் அலுவலகத்தின் மூலம் தான் மின்சாரம் வழங்கப்பட வேண்டும். தற்போது இரண்டு மூன்று மாதங்களில் மாற்றப்பட்ட சட்டத்திற்கமைய மாகாண அலுவலகத்தின் மூலம் தான் மின்சார இணைப்பு வழங்கப்படுகின்றது. நாங்கள் மின்சார சபைக்கு 2020ஆம் ஆண்டு செப்ரெம்பர் - ஒக்டோபர் மாதங்களில் விண்ணப்பித்துள்ளோம். எனினும் 2021 மார்ச் மாதம் சுமார் 25 இலட்ச ரூபாய்களை செலுத்தியுள்ளோம்.''

## மின்சாரம் இல்லாமல் போகும் விதம்

அவர் குறிப்பிடும் காணியை விற்பனை செய்வதற்கான நில அளவை 2017 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டாலும், மின்சார சபைக்குரிய தொகையை 2021 ஆம் ஆண்டிலேயே செலுத்தியிருக்கின்றனர். அது காணிக் கொள்வனவாளரின் தலையீட்டாலும், அதனைத் தேடி ஆராய்ந்தமையாலுமாகும். அக்காலப்பகுதியில் அவர்கள் காணிகளை முழுமையாக விற்பனை செய்து முடித்து விட்டனர். காணி அபிவிருத்தி செய்யும் போது மின்சார சபைக்கு விண்ணப்பப் படிவத்தை சமர்ப்பித்து குறித்த தொகையைச் செலுத்த வேண்டியிருப்பினும், நான்கு வருடங்களாக குறித்த தொகை செலுத்தாமல் இருத்தல் மற்றும் அவர்களுக்கு காணியை விற்பனை செய்வதற்கான அனுமதி எவ்வாறு கிடைத்ததென வினவினாலும் அதற்கு திட்டவட்டமான பதிலை வழங்குவதற்கு அவரால் முடியாமல் போயுள்ளது. மேலும் விற்பனையாளர்கள் சிலருடன் கதைப்பதற்கு முயற்சி எடுத்தாலும் அவர்களுடைய தொலைபேசி இலக்கத்தை மாற்றியிருப்பதால் அவர்களுடன் தொடர்பு கொள்ள முடியாமல் போனது.

இது தொடர்பாக மின்சார சபையின் தலைவர் விஜித ஹேரத் அவர்கள் குறிப்பிட்டதாவது, விற்பனையாளர்களின் இப்பிரச்சினைக்கு தலையிடுவது சிறந்ததொரு விடயம் எனத் தெரிவித்தார். நாடு பூராகவும் இவ்வாறான மோசடிகள் இடம்பெறுவதாகவும், அவர்கள் மேற்கொள்ளும் கருத்திட்டங்களுக்கு விண்ணப்பப்படிவத்தையும் மதிப்பீட்டையும் மின்சார சபையிடமிருந்து பெற்றுக்கொள்வது கட்டாயமானதெனத் தலைவர் அவர்கள் தெரிவித்தார். அவ்வாறில்லாமல் விற்பனையாளர்கள் மக்களுக்குக் காணிகளை விற்பனை செய்த பின்னர் அவர்களுக்கு மின்சாரம் வழங்குவதற்கான முறையொன்று இல்லையெனவும் தலைவர் தெரிவித்தார். மின்கம்பங்கள் மற்றும் மின்பரிமாற்றிகள் போன்றனவற்றின் பற்றாக்குறை எதுவுமே இல்லையென்பதையும் விசேடமாக தெரிவித்தார்.

பிரச்சினைகளுடன் கூடிய காணிகளில் மின்சாரத்திற்கு விண்ணப்பிக்கப்பட்ட விண்ணப்பங்கள் அதிகளவில் மின்சார சபைக்குக் கிடைத்தாலும், குறித்த கருத்திட்டங்களுக்காக விற்பனையாளர்கள் கட்டணம் செலுத்தாமையால் மின்சாரம் வழங்க முடியாதெனவும், அதுதொடர்பாக அமைச்சரிடமும் பிரதிப் பொதுமுகாமையாளரிடமும் மேலும் உறுதிப்படுத்திக் கொள்ள முடியுமெனவும் தலைவர் அவர்கள் கூறினார்.

அதற்கமைய, மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சின் செயலாளர் வசந்தா பெரேரா அவர்களிடம் வினவினோம்.

''காணிகளைத் துண்டுகளாக்கி விற்பனை செய்யும் போது குறித்த கருத்திட்டத்தின் செலவு அந்தந்த வர்த்தகர்கள் மின்சார சபைக்குச் செலுத்த வேண்டும். ஆனாலும்

குறித்த சட்டங்களை மீறி ஒருசில வர்த்தகர்கள் காணிகளை விற்பனை செய்துவிட்டு ஒதுங்கிவிடுகின்றனர். மின்சார சபைக்கு கட்டணத்தை செலுத்தாமல் விடுவதால் எமக்கு மின்சாரத்தை வழங்குவதற்கான முறையொன்றில்லை'' என செயலாளர் அவர்கள் குறிப்பிட்டுக் கூறினார்.

விற்பனையாளர்களுக்கு அனுமதி வழங்கும் உள்ளூராட்சி நிறுவனங்களின் தவிசாளர்கள் சிலருடன் கதைக்கும் போது, தமக்கு முன்பிருந்த தவிசாளர்கள் தவறிழைத்து இருப்பதுடன், நம்பிக்கையின் அடிப்படையில் காணி அபிவிருத்தி செய்வதற்கு அனுமதி வழங்குவதாகவும் கூறினார்கள்.

## காணிகள் பற்றிய தகவல்கள் இல்லை

இப்பாகமுவ பிரதேசத்தில் விற்பனை செய்யப்பட்ட காணித்துண்டுகள் பலவற்றில் இவ்வாறான பிரச்சினைகள் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. குறித்த பிரதேசத்தின் கொள்வனவாளர் ஒருவரால் மின்சாரத்தைப் பெறுவதற்கு மின்சார சபைக்கு அனுப்பப்பட்ட வேண்டுகோள் கடிதத்திற்கு மின்சார சபை, 2013 ஆம் ஆண்டில் விற்பனை செய்யப்பட்ட காணிக்குரிய பதினான்கு இலட்சத்திற்கும் அதிகமான தொகையை மதிப்பீடு செய்திருக்கும் போது அவர்கள் அத்தொகையைச் செலுத்தாமல் புறக்கணித்திருப்பதால் குறித்த முப்பத்தெட்டுக் காணித் துண்டுகளுக்குமான மின்சாரத்தை வழங்க முடியாதெனப் பதிலளித்துள்ளது.

குருநாகல் பிரதேசத்தில் துண்டுகளாக்கப்பட்டுள்ள காணிகள் தொடர்பாக எந்தவொரு அரச நிறுவனத்திடமும் புள்ளிவிபரங்கள் இல்லையென்பதை, உள்ளூராட்சி திணைக்களம் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களின் பிரதானிகள் வாயிலாக அறியக் கிடைத்தது. அது தொடர்பாக குருநாகல் பிரதேச சபை தவிசாளர், அசல நிமந்த விக்ரமசிங்க அவர்களிடம் வினவிய போது, விற்பனையாளர்கள் மீதான நம்பிக்கையின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுவதாக கூறினார். ஆனாலும் வெளி மாவட்டங்களில் இருந்து வருகை தரும் விற்பனையாளர்கள் காணிகளை விற்பனை செய்துவிட்டு தப்பியோடுவதால் அவ்வாறான பிரச்சினைகள் ஏற்படுகின்றன. ''சில காணிகளுக்கு அனுமதி வழங்குவதற்கு மின்சார சபையின் பற்றுச்சீட்டு இல்லாத சந்தர்ப்பங்களில் நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டு சத்தியக் கடதாசியொன்றைப் பெற்றுக் கொண்டு விற்பனை செய்வதற்கு அனுமதி வழங்குகின்றோம். அவ்வாறானவர்கள் குறித்த தொகையை செலுத்தாமையால் இப்பிரச்சினைகள் ஏற்படுகின்றன.''

மாவத்தகம பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் சனத் மீகொல்ல அவர்கள் குறிப்பிடும் போது, காணி விற்பனையின் போது அதிகமாக மோசடி செய்வது பிரதேச சபைகளின் தவிசாளர் மற்றும் தொழிநுட்ப உத்தியோகத்தர் எனக் கூறினார். ''அவர்கள் சட்ட திட்டங்களிலுள்ள நிபந்தனைகளை மீறி பணம் சம்பாதிப்பது மாத்திரமல்லாமல், காணித் துண்டுகளையும் பெற்றுக்கொள்கின்றனர். இது மாபெரும் மோசடியாகும்.

## உள்ளூராட்சி மன்றங்களின் பொறுப்பு

உள்ளூராட்சி மன்றங்கள் மீது குற்றஞ் சுமத்தப்படுவது பற்றி உள்ளூராட்சி திணைக்களத்தின் ஆணையாளர் ஐ. எம். ஐ இலங்ககோன் அவர்களிடம் நாம் வினவினோம்.

‘‘காணிகளை துண்டுகளாகப் பிரித்து விற்பனை செய்யும் போது உள்ளூராட்சி திணைக்களத்தின் குழுவுக்கு சமர்ப்பிக்கப்பட்டு நிறுவனங்கள் சிலவற்றின் பரிந்துரைகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும். அவ்வாறு பெற்றுக்கொண்டு செயற்படும் எந்தவொரு விற்பனைக் கம்பனிக்கும் பிரச்சினைகள் ஏற்படுவதில்லை. அதேபோல் வாடிக்கையாளர்களுக்கும் எந்தவொரு பிரச்சினையும் ஏற்படுவதில்லை.

ஏதேனுமொரு காணிக் கொள்வனவாளர் அவ்வாறான பிரச்சினைகளுக்கு முகங் கொடுப்பாராயின், குறித்த தவறை உள்ளூராட்சி நிறுவனமே பொறுப்பேற்க வேண்டும். ஒருசில உள்ளூராட்சி மன்றத்தால் தடை செய்யப்பட்ட காணி விற்பனைக் கம்பனிகள் பற்றிய தகவல்கள் எம்மிடமுள்ளது. ஆனாலும் எந்தளவு விற்பனைகளை செய்கின்றார் என்பது பற்றிய தகவல்கள் எம்மிடமில்லை.

மார்ச் மாதம் குருநாகல் பிரதேச சபைக் கூட்டத்தில், காணி விற்பனையால் சபைக்குக் கிடைக்கும் பொதுக்காணிகள் எவ்வளவு இருக்கின்றது என்பது பற்றி திட்டவட்டமான புள்ளிவிபரங்கள் இல்லையென்பது உறுதிப்படுத்தப்பட்டது. (2021.03.29 பிரதேச சபை அறிக்கை)

## ஏமாறுவதற்கு முன்னர்

வாடிக்கையாளர் ஒருவர் காணியொன்றைக் கொள்வனவு செய்யும் போது, குறித்த விற்பனைக் கம்பனி உள்ளூராட்சித் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்ட நிறுவனமா, குறித்த உள்ளூராட்சி நிறுவனத்தில் பரிந்துரைகளைப் பெற்றுக் கொண்டுள்ளதா? குறித்த பரிந்துரைகளுக்கமைய காணி அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளதா? போன்ற விடயங்கள் தொடர்பாக வாடிக்கையாளர்கள் அறிந்திருத்தல் வேண்டும். அதுதொடர்பாக ஏற்படும் பிரச்சினைகள் தொடர்பாக பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபைக்கும் பாவனையாளர் பயன்பாட்டு திணைக்களத்திற்கும் முறைப்பாடு செய்ய முடியும் என்பதுடன், நீதிமன்ற நடவடிக்கை மேற்கொள்ளவும் முடிவதுடன், மனித உரிமை ஆணைக்குழுவுக்கும் முறைப்பாடு செய்யக்கூடிய இயலுமையும் உண்டு.

ஆனாலும் இதுவரை இவை வெளிக்கொண்டு வரப்படாமைக்கான காரணம், காணிகளுக்கான மின்சாரம் மற்றும் நீர் வழங்கல் அந்தந்த நிறுவனங்களால் வழங்கப்பட வேண்டுமென்ற எண்ணம் சமூகமயப்பட்டிருப்பதாலேயாகும். ஆனாலும் விற்பனை நிறுவனமொன்று காணி விற்பனை செய்யும் போது குறித்த நிறுவனங்களில் பெற வேண்டிய பரிந்துரைகளை மூடிமறைத்து, சொத்து விற்பனையாளர்கள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களின் பிரதானிகள் தேவையற்ற நன்மைகளைப் பெறுவதால் வாடிக்கையாளர்கள் பல வருடகாலமாக அழுத்தங்களுக்கு உள்ளாகியுள்ளனர். குறித்த இருதரப்பினரும் பல இலட்சக்கணக்கான பணத்தை திரட்டும் போது வாடிக்கையாளர்களுக்கு தமது பணத்தொகையில் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு இயலாமல் போவது கவலைக்குரிய விடயமாகும். அதேபோல் எந்தவொருவரும் தமக்கு நன்மையளிக்கும்

விதத்தில் எந்தவொரு விதத்திலும் (இலத்திரனியல், அச்சு, சமூக ஊடகங்கள், துண்டுப்பிரசுரங்கள்) மூலம் ஏதேனுமொன்றை விளம்பரப்படுத்தி மக்களை ஏமாற்றும் வகையிலான விளம்பர முறைகள் சமூகத்தில் காணப்படுகின்றன.

விற்பனைக் காணிகளில் காணியொன்றை வாங்கி வாழ்வதற்கும் வீடொன்றை அமைப்பதற்கும் சிந்திக்கும் பலர் செல்வந்தர்கள் அல்லர் மாறாக மிகவும் கடினப்பட்டு வாழ்க்கை நடாத்தும் சாதாரண மக்களாவர். தொடர்ச்சியாக இடம்பெறுகின்ற ஏமாற்றங்கள் மற்றும் சுரண்டல்களிலிருந்து அவர்களைப் பாதுகாப்பது அரசின் பொறுப்பாகும்.

- **சாந்தினி திசாநாயக்க**

---

***சாந்தனி திசாநாயக்க:*** *பிரச்சனைகளை அறிக்கையிடப்படுவதைப் போன்றே தீர்வுகளைத் தேடுவதிலும் ஆர்வம் காட்டுகின்ற ஊடகவியலாளர். தகவலறியும் சட்டத்தின் ஊடாகப் பெற்றுக் கொண்ட தகவல்கள் கட்டுரைகள் மற்றும் பல சிறப்புக் கட்டுரைகள் இது தொடர்பில் பயன்படுத்தப்பட்டுள்ளன. 10 வருடங்களுக்கு மேலாக ஊடகத் துறையில் ஈடுபட்டுள்ள சாந்தனி, 2016ம் ஆண்டு ஜனாதிபதி விருது மற்றும் 2021ம் ஆண்டு, வனிதாபிமானி விருது வழங்கும் விழா என்பவற்றில் பாராட்டுக்கு உரித்தாகியுள்ளார்.*

# சுன்னாகம் தபால் நிலையம்

## அரைகுறை கட்டடத்தினுள்ளே பதுங்கியிருக்கும் ஊழல்;

நல்லாட்சி அரசின் காலத்தில் வடக்கு - கிழக்கு மாகாணங்களுக்கு குறிப்பாக யாழ்ப்பாண மாவட்டத்துக்கு அதிகளவான நிதி ஒதுக்கப்பட்டது. காற்றுள்ளபோதே தூற்றிக் கொள் என்பது போல அந்தச் சந்தர்ப்பத்தை பயன்படுத்தி யாழ்ப்பாணத்தில் பெரும்பாலான அபிவிருத்திச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன. இன்றும் அவை பெயர் சொல்லும் கட்டடங்களாக எழுந்து நின்று மக்களுக்குச் சேவைகளை வழங்கிக் கொண்டிருக்கின்றன.

தேசிய ஒருமைப்பாடு, அரச கரும மொழிகள், சமூகமேம்பாடு மற்றும் இந்து சமய விவகார அமைச்சு ஊடாக, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தனின் முன்மொழிவுக்கு அமைவாக, சுன்னாகம் தபால் நிலையம் மற்றும் தபால் அதிபர் தங்குமிடம் அமைக்க 25 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டது. திட்டம் 2019ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 10ஆம் திகதி முடிவுறுத்தப்பட்டு மக்களிடம் கையளிக்கப்பட்டிருக்கவேண்டும். ஆனால் இன்று வரையில் அந்தக் கட்டடம் கட்டி முடிக்கப்படவுமில்லை. மக்கள் அதன் ஊடாகச் சேவை பெறவும் இல்லை.

யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தின் தவறான - குளறுபடியான நிர்வாக நடவடிக்கைகளால் அரசின் நிதி வீணடிக்கப்பட்டு இழப்புச் செய்யப்பட்டுள்ளது. தற்போதைய பொருளாதார நெருக்கடிகளுக்கு இவ்வாறான நடவடிக்கைகளும் காரணமாக அமைகின்றன. அதேவேளை கோத்தாபய ராஜபக்ச ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்ட பின்னர் பல திணைக்களங்கள் இராணுவமயமாகின. சிறப்பான - நேர்மையான - ஊழற்ற - விரைவான நிர்வாக நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கே அவ்வாறு மேற்கொள்வதாகச் சொல்லப்பட்டன. அரசின் அந்த நோக்கை தலைகீழாக்கும் வகையில் யாழ்ப்பாண மாவட்டச் செயலர், திட்டமிடல் பணிப்பாளர், திட்டத்தைப் பொறுப்பேற்ற ஒப்பந்தகாரர் ஆகியோர் செயற்பட்டுள்ளனர்.

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தைப் பயன்படுத்தி யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்திடமிருந்து நீண்ட இழுபறியின் பின்னர் மேற்படி விவகாரம் தொடர்பான ஆவணங்கள் பெற்றுக் கொள்ளப்பட்டன. தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் ஊடாக பல பொய்யான தகவல்களும் வழங்கப்பட்டுள்ளன.

அத்துடன் மாவட்ட உள்ளகக் கணக்காய்வாளர், தேசியக் கணக்காய்வு அலுவலகம் என்பனவற்றுள் பல தகவல்களை ஒழித்துள்ளமையையும் கண்டுபிடித்துள்ளது. தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் ஊடாக வழங்கப்பட்ட தகவல்களுக்கும், கணக்காய்வுக்கு சமர்ப்பித்த தகவல்களுக்கும் இடையிலேயே முரண்பாடுகள் காணப்படுகின்றன.

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் ஊடாக ஜூலை மாதம் 2ஆம் திகதி, மேற்படி திட்டம் தொடர்பான பல்வேறு விடயங்களைக் கோரி, விண்ணப்பம் அனுப்பப்பட்டது. தகவல் அலுவலரால் உரிய காலத்துக்குள் பதில் வழங்கப்படவில்லை. இதனால் மேன்முறையீடு ஓகஸ்ட் மாதம் 3ஆம் திகதி மேற்கொள்ளப்பட்டது. இதன் பின்னர் ஓகஸ்ட் மாதம் 6 ஆம் திகதி பதில் வழங்கப்பட்டது.

## இரு கோவைகள்

மேற்படி திட்டம் தொடர்பில் எத்தனை கோவைகள் கையாளப்படுகின்றன? அதன் ஆரம்பத் திகதி ? முடிவுறுத்திய திகதி? கோவைகளின் பக்க எண்ணிக்கை ? கோவையைக் கையாண்ட அலுவலர்களின் விவரங்கள் கோரப்பட்டிருந்தன.

அதற்கான பதிலில் மாவட்டச் செயலகம் இரண்டு கோவைகள் பேணப்படுவதாகத் தெரிவித்திருந்தது.

முதலாவது கோவை JF/DPS/MNIROL/POB/VI/02/2019 என்றும் அது 22ஆம் திகதி ஜூலை மாதம் 2019ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு 2019ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 26ஆம் திகதி முடிவுறுத்தியதாகவும் 283 பக்கங்கள் காணப்படுவதாகவும் தெரிவித்திருந்தது.

இரண்டாவது கோவை JF/DPS/MNIROL/POB/VI/02/2020 என்றும் அது 25ஆம் திகதி ஜூலை மாதம் 2020ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு இன்னமும் முடிவுறுத்தப்படவில்லை என்றும், 10 பக்கங்கள் காணப்படுவதாகவும் தெரிவித்திருந்தது.

ஆனால் மாவட்டச் செயலகம் தெரிவித்ததைப்போன்று JF/DPS/MNIROL/POB/VI/02/2020 என்ற கோவை பேணப்படவில்லை. அவ்வாறானதோர் கோவை இல்லாமலேயே, அவ்வாறு ஓர் கோவை இருப்பதாக மாவட்டச் செயலகம் பதிலளித்துள்ளது.

இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்ட 2019ஆம் ஆண்டு நல்லாட்சி அரசு ஆட்சியில் இருந்தது. அந்த அரசின் காலத்திலேயே தேசிய ஒருமைப்பாடு, அரச கரும மொழிகள், சமூக மேம்பாடு மற்றும் இந்து சமய விவகார அமைச்சு இருந்தது. அந்த அமைச்சின் ஒவ்வொரு விடயதானத்தினதும் ஆங்கிலச் சொல்லின் முதல் எழுத்துக்களின் குறியீடாகவே MNIROL என்ற சொல் கோவைகளில் பயன்படுத்தப்பட்டது. 2019ஆம் ஆண்டு நவம்பர் மாதம் ஆட்சி மாற்றம் இடம்பெற்ற பின்னர் மேற்படி அமைச்சு இல்லாமல் செய்யப்பட்டது. நீதி அமைச்சின் கீழ் மேற்படி விடயதானங்கள் கொண்டு வரப்பட்டன. புதிய அரசு அமைக்கப்பட்ட பின்னரும் இல்லாத ஓர் அமைச்சின் பெயர் குறியீடு MNIROL இரண்டாவது கோவைக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

மண்டையில் இருந்த கொண்டையை மறந்ததைப் போன்று இல்லாத ஓர் கோவையை இருப்பதாகக் காண்பிக்க முயன்றவர்கள், அதன் பெயரை மாற்றாமல் விட்டு விட்டனர்.

முதலாவது கோவையின் முடிவுறுத்தல் திகதி 26.12.2019 என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இரண்டாவது கோவையின் ஆரம்பத் திகதி 25.07.2020 என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அப்படியாயின் இந்த இடைப்பட்ட காலத்தில் எந்தவொரு நடவடிக்கைகளும்

இடம்பெறவில்லையா என்ற கேள்வி எழுவது இயல்பானதே.

இடைப்பட்ட காலத்திலும் கடிதப் பரிமாற்றங்கள் இடம்பெற்றுள்ளன. அதனை மற்றொரு தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் ஊடாக பெறப்பட்ட ஆவணம் உறுதி செய்கின்றது.

மாவட்டச் செயலகம் வழங்கிய தகவலுக்கு அமைவாக இரண்டு கோவைகளினதும் குறிப்பிதழ்கள் (minutes sheet) தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் ஊடாகக் கோரப்பட்டது. அதில் வழங்கப்பட்ட தகவலுக்கு அமைவாக 31.12.2019ஆம் திகதி ஓர் குறிப்பு எழுதப்பட்டுள்ளது.

மேலும், குறிப்பிதழ்கள் 21.08.2019 தொடக்கம் 24.12.2020 வரை ஒரே தாளில் உள்ளமையால், இரண்டாவது கோவை உள்ளது என்று மாவட்டச் செயலகம் வழங்கிய தகவல் பொய்யானது என்பது அம்பலமாகின்றது.

உள்ளகக் கணக்காளரின் ஐயாவினா 8 இல், 11.02.2020 அன்று கட்டடங்கள் திணைக்கள பிரதம பொறியியலாளர் அனுப்பிய கடிதத்தின் அவதானிப்பு குறிப்பிடப்பட்டுள்ளது. அப்படியானால் அந்தக் கடிதம் கணக்காய்வுக் குழுவினரால் பார்வையிடப்பட்டிருக்கவேண்டும். தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் ஊடாக வழங்கிய பதிலில், முதலாவது கோவையின் முடிவுறுத் திகதியான 26.12.2019 இற்கும் இரண்டாவது கோவையின் ஆரம்பத் திகதியான 25.07.2020 இற்கும் இடையில் எந்தவொரு கோவையும் பேணப்படவில்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அப்படியாயின் கணக்காளர் 11.02.2020 திகதிய கடிதத்தை எந்தக் கோவையில் பார்வையிட்டார்? அவ்வாறு ஓர் கோவை இருப்பின் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் ஊடாக அதனை வழங்காமல் விட்டது ஏன்?

உள்ளக கணக்காய்வாளரின் ஆய்வு நடவடிக்கைகளிலேயோ அல்லது தேசியக் கணக்காய்வு அலுவலகத்தின் ஆய்வு நடவடிக்கைகளிலேயோ எங்கும் இரண்டாவது கோவை இருப்பதாகத் தெரிவிக்கப்படவில்லை. அது பற்றிய எந்தக் குறிப்பும் இடப்படவில்லை. ஆனால் யாழ்ப்பாண மாவட்டச் செயலர் க.மகேசன், கணக்காய்வு அத்தியட்சகருக்கு 15.05.2021 அன்று அனுப்பிய கடிதத்தில், ஒரே கோவையில் அதிக ஆவணங்கள் கோப்பிடப்பட்டிருந்தமையால் 2ஆம் கோவை தயாரிக்கப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்.

2ஆம் கோவை உண்மையில் தயாரிக்கப்பட்டிருந்தால் அது ஏன் கணக்காய்வு நடவடிக்கைகளுக்கு சமர்பிக்கப்படாமல் மறைக்கப்பட்டது? கோவையை கணக்காய் விலிருந்து மறைப்பது குற்றம் என்பது தெரிந்தும் அதனை மறைத்திருப்பாரா?

## ஒப்பந்தத்தை முடிவுறுத்தல்

30.12.2019 திகதி வரை நிறைவுபெற்ற வேலைக்கான கொடுப்பனவு வழங்குவதில் ஏற்பட்ட தாமதத்தால் 31.08.2020 அன்று ஒப்பந்தக்காரருடன் பரஸ்பர ஒப்பந்த முடிவுறுத்தல் மேற்கொள்ளப்பட்டது என்று யாழ்ப்பாண மாவட்டச் செயலருக்காக பிரதம கணக்காளர், பிரதான உள்ளகக் கணக்காய்வாளருக்கு எழுதிய பதிலில் குறிப்பிட்டுள்ளார்.

ஒப்பந்த நடைமுறைகளில் நிர்மான கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையின் (சீடா) ஒழுங்கு விதிகளே பின்பற்றப்படுகின்றன.

அதன் பிரகாரம் ஒப்பந்தத்தை வழங்கியவர் ஒப்பந்தத்தை முடிவுறுத்தலாம். ஒப்பந்தகாரர் முடிவுறுத்தி இழப்பீடு கோரலாம். பரஸ்பர ஒப்பந்த முடிவுறுத்தலை மேற்கொள்ளலாம்.

பரஸ்பர முடிவுறுத்தலை மேற்கொள்ளும் போது இரு தரப்பிலும் பிரச்சினைகள் இருந்து

இரண்டு தரப்பும் சேர்ந்து அதன் சூழலுக்கு அமைவாகவே அதனை முடிவுறுத்திக் கொள்ள முடியும்.

ஆனால் 10.12.2019 ஆம் ஆண்டு ஒப்பந்தம் முடிவுறுத்தப்பட்டிருக்கவேண்டியபோதும் கால நீடிப்பு 30.12.2019 வரையில் வழங்கப்பட்டுள்ளது. அதன் பின்னரே பரஸ்பர ஒப்பந்த முடிவுறுத்தல் மேற்கொள்ளப்பட்டது. ஒப்பந்த வழங்குனரான மாவட்டச் செயலகத்தால், ஒப்பந்தகாரருக்கு சார்பாக இங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இவ்வாறு மாவட்டச் செயலகம் நடந்து கொண்டதன் நோக்கம் என்ன? அரசுக்கு நிதி இழப்பீட்டை ஏற்படுத்தியமைக்கு காரணம் என்ன?

நிதி கொடுப்பனவு வழங்குவதில் கால தாமதம் என்று மாவட்டச் செயலர் குறிப்பிட்டிருந்தாலும், 2020ஆம் ஆண்டு கட்டுநிதி முழுமையாக விடுவிக்கப்பட்டிருந்தது. ஒப்பந்த சரத்துக்கு அமைவாக ஒப்பந்தகாரர் செயற்பட்டிருந்தால் கட்டடம் கட்டி முடிக்கப்பட்டிருக்கும். அல்லாவிடின் ஒப்பந்தகாரரிடம் இழப்பீட்டை பெற்று திட்டத்தை வெற்றிகரமாக முடித்திருக்கலாம். இவ்வாறான வழிமுறைகள் இருந்தும் அவை எதனையும் மாவட்டச் செயலர் அணுகாததன் ஊடாக, இந்தத் திட்டத்தை வேண்டுமென்றே தோற்கடிக்க அவர் முயன்றமை புலனாகிறது.

## முரணான தகவல்கள் – அம்பலமாகும் உண்மைகள்

மாவட்டச் செயலக திட்டமிடல் பணிப்பாளரால் 18.12.2020ஆம் திகதிய கடிதத்தின் ஊடாக, மேற்படி வேலைத் திட்டம் ‘முடிவுறுத்தப்படவேண்டியுள்ளதாகவும்‘ எனவே செய்யப்பட வேண்டிய வேலைகளின் பெறுமதியை பரிந்துரைத்து தருமாறு யாழ்ப்பாண கட்டடங்கள் திணைக்கள பிரதம பொறியியலாளருக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. ஆனால், 31.08.2020ஆம் திகதி பரஸ்பர ஒப்பந்த முடிவுறுத்தல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மாவட்டச் செயலர் குறிப்பிட்டுள்ளார்.

உண்மையில் 31.08.2020ஆம் திகதி பரஸ்பர ஒப்பந்தம் முடிவுறுத்தல் மேற்கொள்ளப்பட்டிருந்தால், அதிலிருந்து 4 மாதங்களின் பின்னர் அதாவது 18.12.2020ஆம் திகதி ஒப்பந்தம் ‘முடிவுறுத்தப்படவேண்டியுள்ளது‘ என்ற வாசகத்துடன் திட்டமிடல் பணிப்பாளரால் கடிதம் எப்படி அனுப்பப்பட்டிருக்க முடியும்?

தேசிய கணக்காய்வுத் திணைக்களம் இதனை அவதானிப்புக்கு உட்படுத்தியிருந்தபோதும் இதற்கு மாவட்டச் செயலர் பதில் எதையும் வழங்கவில்லை.

இதன் ஊடாக, இந்த ஒப்பந்தம் 31.08.2020ஆம் திகதியில் முடிவுறுத்தப்பட்டதாக காட்டப்பட்டது பொய்யென்பது நிரூபணமாகின்றது.

இதனை மேலும் உறுதிப்படுத்தும் வகையில் மற்றொரு விடயத்தையும் தேசிய கணக்காய்வுத் திணைக்களம் தனது அவதானிப்பில் குறிப்பிட்டுள்ளது.

16.12.2020ஆம் திகதி மாவட்டச் செயலக திட்டமிடல் பணிப்பாளர், வேலைத் திட்டம் முடிவுறுத்தப்பட்ட பின்னர் ஒப்பந்தகாரரால் செய்து முடிக்கப்படாத வேலைக்கு அறவீடு செய்ய வேண்டி உள்ளதாகவும் அதற்கான அறவீட்டு வீதம் குறிப்பிட்ட கேள்வி ஆவணத்தை வழங்குமாறு பெறுகை அலகு கணக்காளருக்கு கடிதம் அனுப்பியுள்ளார். மாவட்டச் செயலர் குறிப்பிட்டதைப்போன்று 31.08.2020 அன்று ஒப்பந்தம் முடிவுறுத்தப்பட்டிருந்தால், அதன் பின்னர் சுமார் 4 மாதங்கள் கழித்து திட்டமிடல் பணிப்பாளர் இவ்வாறான ஓர் கடிதத்தை வரைந்திருக்கவேண்டியதில்லையே.

இவையிரண்டும், மாவட்டச் செயலர் குறிப்பிட்டதைப்போன்று 31.08.2020ஆம் திகதி ஒப்பந்தம் முடிவுறுத்தப்படவில்லை என்பதையே எடுத்துக்காட்டுகின்றது.

### அரசுக்கு இழப்பு

31.08.2020 அன்று ஒப்பந்தம் முடிவுறுத்தப்படும்போது வழங்கப்பட்ட இறுதிக் கொடுப்பனவுச் சிட்டையில் அறவீட்டு கழிப்பனவு செய்யப்படவில்லை. மேற்படி திகதியில் ஒப்பந்தம் முடிவுறுத்தப்படவில்லை என்பது மேலேயுள்ள விடயங்களில் தெளிவாகப் புலனாகின்றமையாலும், 16.12.2020ஆம் திகதிய கடிதம் மூலம் அறவீட்டு வீதத்தை கழிப்பனவு செய்வதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளபோதும் அது அறவிடப்படாததன் ஊடாக, ஒப்பந்தகாரருக்கு பக்கச் சார்பாக அவரது நலன் மேலோங்கும் வகையில் மாவட்டச் செயலர் செயற்பட்டுள்ளார்.

## திட்டமிட்ட தவறு

ஒப்பந்தம் கால நீடிப்புச் செய்யப்பட்ட 31.12.2019ஆம் திகதிக்குப் பின்னர் ஒப்பந்தகாரர், கட்டடங்கள் திணைக்களம் என்பனவற்றால் வழங்கப்பட்ட சகல ஆவணங்களிலும் திகதி முத்திரை இடப்படவில்லை. இது தொடர்பில் உள்ளக கணக்காய்வாளர், தேசிய கணக்காய்வுத் திணைக்களம் என்பன சுட்டிக்காட்டியுள்ளன. இவ்வாறு ஒவ்வொரு தடவையும் திகதி முத்திரை இடப்படாமைக்கு ‘தவறுதலாக அது நேர்ந்து விட்டது‘ என்று மாவட்டச் செயலர் பதிலளித்துள்ளார். ஒரு முறை தவறு நேரலாம். ஆனால் தொடர்ச்சியாக ஒரே தவறு நேர்ந்தால், அது திட்டமிட்ட நடவடிக்கைதான் என்பது வெள்ளிடைமடை.

இதேவேளை இந்த திட்டநடவடிக்கையின்போது பரிமாறப்பட்ட கடிதங்களின் பிரதிகளை தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் ஊடாகக் கோரியபோது 5 கடிதங்கள் வழங்கப்பட்டுள்ளன. 5 கடிதங்களிலும் திகதிகள் குறிப்பிடப்பட்டுள்ளன. அத்துடன் நிர்வாக திகதி முத்திரையும் இடப்பட்டுள்ளது.

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் ஊடாக வழங்கிய கிகதி முத்திரையிடப்பட்ட கடிதங்களை கணக்காய்விலிருந்து மாவட்டச் செயலகம் மறைத்துள்ளது. அல்லது திகதி முத்திரையிடப்படாத கடிதங்களை கணக்காய்வுக்கு சமர்ப்பித்து, தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் ஊடாக வழங்காமல் மறைத்துள்ளது.

ஏதோ ஓர் வகையில் மாவட்டச் செயலகம் மறைப்புச் செய்துள்ளமை புலனாகின்றது. இதன் ஊடாக ஓர் மோசடி நடவடிக்கை இடம்பெற்றுள்ளது தெரியவருகின்றது.

## இழப்புக்கள்

யாழ்ப்பாண மாவட்டச் செயலகம் ஒப்பந்தகாரரை காப்பாற்றுவதற்காகவே முயற்சித்தது. அதன் காரணமாக அவரிடமிருந்து காலதாமதக் கட்டணம், தண்ட அறவீடு என்பன முதலில் அறவிடப்படவில்லை. கணக்காய்வு நடவடிக்கையின் போது இவற்றுக்கு காரணமாக பரஸ்பர ஒப்பந்த முடிவுறுத்தல் கூறப்படுகின்றது.

உண்மையில் இந்த ஒப்பந்தகாரரைப் பயன்படுத்தி ஒதுக்கீடே இல்லாத வேலைகளை மாவட்டச் செயலகம் முன்னெடுத்திருந்தது. மாவட்டச் செயலரின் ஓய்வு விடுதி, மேலதிக மாவட்டச் செயலரின் அலுவலக அறை, மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு இணைத்

தலைவரின் அறை என்பன இந்த ஒப்பந்தகாரரால் மேற்கொள்ளப்பட்டது. சுன்னாகம் தபால் நிலைய வேலைகளை மேற்கொள்ளவேண்டிய அதே காலப் பகுதியில், அந்த வேலைகளை மேற்கொள்ளாமல் ஒப்பந்தகாரர் இவற்றை நிறைவு செய்து கொடுத்தார். அந்த நன்றிக் கடனுக்காகவோ என்னவோ ஒப்பந்தகாரரைக் காப்பாற்றி அரசுக்கு நிதி இழப்பை மாவட்டச் செயலர் ஏற்படுத்தியுள்ளார்.

ஒப்பந்த உடன்படிக்கையின் நிபந்தனைகளுக்கு அமைவாக ஒப்பந்தத்தை நிறைவு செய்யாமையால் 1.68 மில்லியன் ரூபா ஒப்பந்தகாரரிடமிருந்து அறவிடப்பட்டிருக்கவேண்டும். இந்தத் தொகை ஒப்பந்தம் முடிவுறுத்தப்படும்போது அறவிடப்படவில்லை. கணக்காய்வுத் திணைக்களம் இதனைச் சுட்டிக்காட்டியபோது பரஸ்பர ஒப்பந்த முடிவுறுத்தல் மேற்கொண்டமையால் அதனை அறவிடவில்லை என்று மாவட்டச் செயலர் பதிலளித்திருந்தார்.

ஆனால், திடீரென இந்த ஆண்டு செப்ரெம்பர் மாதம் அந்தப் பணத்தை மாவட்டச் செயலர் அறவிட்டுள்ளார். மாவட்டச் செயலர் அந்தப் பணத்தை அறவிட்டமையால், பரஸ்பர ஒப்பந்த முடிவுறுத்தல் என்று மாவட்டச் செயலர் முன்னர் கூறியமை பொய்யானது அல்லது ஒப்பந்தகாரரை காப்பாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பதை அவரது இப்போதைய நடவடிக்கை உறுதிப்படுத்தியுள்ளது.

ஒப்பந்தத்தின் பிரகாரம் வேலை நிறைவு செய்யப்படாமைக்கான தண்டன அறவீடு 1.16 மில்லியன் ரூபா ஒப்பந்தகாரரிடமிருந்து இன்று வரை அறவிடப்படவில்லை. இது அரசுக்கு மாவட்டச் செயலரால் ஏற்படுத்தப்பட்டுள்ள இழப்பாகும்.

ஒப்பந்தத்தின் பிரகாரம் வேலை நிறைவு செய்யப்படாமையால், செயற்பாட்டு பிணைமுறியை மாவட்டச் செயலகம் வருமானமாக்க நடவடிக்கை எடுத்திருக்கவேண்டும். ஆனால் அவ்வாறு மாவட்டச் செயலகம் செயற்படாமல் 0.84 மில்லியன் ரூபாவை அரசுக்கு இழப்பு ஏற்படுத்தியுள்ளது.

அதனை விட செயற்பாட்டு பிணை முறி ஒப்பந்த முடிவுத்திகதியிலிருந்து 28 நாள்களுக்கு வலுவாக இருக்கவேண்டும் என்று ஒப்பந்தத்தில் சொல்லப்பட்டுள்ளது. 30.07.2020 அன்று செயற்பாட்டு பிணை முறி காலாவதியாகியிருந்தது. இதன் அடிப்படையிலேயே மாவட்டச் செயலகம் ஒப்பந்தத்தை முடிவுறுத்தியிருக்க முடியும். அதற்கான முழுமையான அதிகாரம் ஒப்பந்த வழங்குனரான மாவட்டச் செயலரிடமிருந்தும், அவர் அதனைச் செய்யவில்லை.

செயற்பாட்டு பிணைமுறி காலாவதியானதன் அடிப்படையில் ஒப்பந்தத்தை முடிவுறுத்தியிருந்தால், பரஸ்பர ஒப்பந்த முடிவுறுத்தலுக்குச் சென்றிருக்கவேண்டியதில்லை என்பதுடன் ஆரம்பத்திலேயே காலதாமதக் கட்டணம், வேலை நிறைவு செய்யாமைக்கான தண்ட அறவீடு என்பவற்றைப் பெற்று, தபால் நிலையக் கட்டடத்தின் எஞ்சிய பணிகளை பூர்த்தி செய்திருக்க முடியும்.

30.07.2020 அன்று செயற்பாட்டு பிணை முறி காலாவதியாகியிருந்தது தெரிந்தும், 31.08.2020 அன்று ஒப்பந்தம் முடிவுறுத்தப்படும்போது ஒப்பந்தகாரருக்கான கொடுப்பனவு சிபாரிசு செய்யப்பட்டு மாவட்டச் செயலகத்தால் வழங்கப்பட்டுள்ளது. இது அரசுக்கு திட்டமிட்ட ரீதியில் நிதி இழப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது என்பதை நிரூபிக்கின்றது.

ஒப்பந்தக்காரர் மேற்கொண்ட வேலைகளுக்காக 12.21 மில்லியன் ரூபா நிதி வழங்கப்பட்டுள்ளது. அத்துடன் அவரிடமிருந்து அறவிடவேண்டிய எஞ்சிய நிதிகளையும் சேர்த்தால் 16.8 மில்லியன் ரூபா வரையில் அரசுக்கு நிதி இழப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

நிதி இழப்பு மாத்திரம் இல்லாமல், அந்தக் கட்டடம் முழுமைப்படுத்தி மக்கள்

பாவனைக்கு கையளிக்கப்படாததன் ஊடாக சேவையிழப்பும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த இழப்புக்களுக்கு பொறுப்புக்கூற வைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா?

இதேவேளை சுன்னாகத்தில் அமைக்கப்பட்டு அரைகுறையிலுள்ள மேற்படி கட்டடத்தை மீண்டும் ஓர் ஒப்பந்தகாரரிடம் வழங்கி மீள அமைப்பதற்கு அரசுக்கு இதனை விட அதிகளவு பணம் தேவை. இதனால் மீண்டும் ஓர் இழப்பு அரசுக்கு ஏற்படப்போகின்றது. நாட்டின் தற்போதைய நிதி நிலைமையில் அபிவிருத்தித் திட்டங்களுக்கு பணம் ஒதுக்கப்படாது என்று அறிவிக்கப்பட்டுள்ளமையால், கட்டடம் இதே அரைகுறை நிலைமையில் பாவனையற்று நீண்ட காலத்துக்கு இருக்கப்போகின்றது. இதனால் ஏற்படும் சேதங்களையும் சேர்த்தே இழப்பாக மதிப்பிடவேண்டும்.

மாவட்டச் செயலர், 2019ஆம் ஆண்டு ஆட்சி மாற்றத்தால் மேற்படி திட்டத்துக்குரிய கட்டுநிதி விடுவிக்கப்படாமல் போகலாம் என்ற தவறான முன்கற்பிதம் காரணமாகவே ஒப்பந்தத்தை முடிவுறுத்தப்பட்டுள்ளது. இதன் ஊடாக ஆட்சியாளர்களுக்கு களங்கம் ஏற்படும் சிந்தனையுடன் மாவட்டச் செயலர் செயற்பட்டுள்ளார் என்பதும் புலனாகின்றது.

தேசிய கணக்காய்வுத் திணைக்களத்துக்கான மாவட்டச் செயலரின் பதிலில், ஒப்பந்தகாரரால் இரண்டாம் கட்டக் கொடுப்பனவுக்கு அதிகமான வேலைகள் முடிவுறுத்தப்பட்டிருந்தபோதும், குறைவான பணமே வழங்கப்பட்டதாகக் குறிப்பிட்டுள்ளார். எந்தவொரு ஒப்பந்தகாரரும் முடிவுறுத்தப்பட்ட வேலையை விட அதிகளவு தொகையைக் குறிப்பிட்டே பணத்தை பெற்றுக் கொள்ள முயற்சிப்பார்கள் என்பது சிறுபிள்ளைக்கும் தெரிந்த ஒன்று. அதனை விட அவ்வாறு பெரு மனது படைத்த ஒப்பந்தகாரராக இருந்தால், அடுத்த ஆண்டு எஞ்சிய நிதி வரும் என்ற நம்பிக்கையில் மிகுதி வேலைகளையும் முடித்திருக்கலாமே?

## கொடுப்பனவு

ஒப்பந்தகாரருக்கு வழங்கப்பட்ட கொடுப்பனவு தொடர்பில் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் ஊடாகக் கேட்டபோது முற்பணம் மற்றும் 3 கட்டக் கொடுப்பனவு வழங்கப்பட்டதாக பதிலளிக்கப்பட்டது. ஆனால் தேசிய கணக்காய்வுத் திணைக்களம் 4 கட்டக் கொடுப்பனவு வழங்கப்பட்டதாகக் கூறியுள்ளது. அப்படியாயின் எது உண்மை?

## குறிப்புத் தாள் முறைகேடு

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் ஊடாக வழங்கப்பட்ட பதிலில் மேற்படி விடயங்களுக்காக இரண்டு கோவைகள் பேணப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. அந்தக் கோவைகளின் குறிப்புத்தாள் கோரப்பட்டதற்கு அதுவும் வழங்கப்பட்டது. அது எந்தெந்த கோவைக்குரியது என்று தனித்து அடையாளப்படுத்தப்படவில்லை.

இந்த விடயதானத்தை கையாண்ட உத்தியோகத்தர்களின் விவரத்தைக் கோரியபோது 3 பேரின் பெயர்கள் மாவட்டச் செயலகத்தால் வழங்கப்பட்டது. ஆனால் குறிப்புத்தாளில் 6 வித்தியாசமான கையெழுத்துக்கள் காணப்படுகின்றன. அப்படியாயின் தகவல் உரிமைச் சட்டத்தின் ஊடாக, கோவையைக் கையாண்ட உத்தியோகத்தர்களின் விவரங்கள் வழங்கப்படும்போது மறைக்கப்பட்டனவா? அல்லது குறிப்புத்தாளில் உள்ள கையெழுத்துக்கள் போலியானவையா? இதில் எது உண்மை?

இதனை விட தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் ஊடாக கேட்கப்பட்டபோது வழங்கப்பட்ட குறிப்புத்தாளில் ஓர் விடயம் நீக்கப்பட்டே வழங்கப்பட்டது. மேற்படி குறிப்புத்தாளில் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன என்ற குறிப்பு 30.12.2020 அன்று புதிய குறிப்புத்தாளில் எழுதப்பட்டிருந்தபோதும் அந்த விடயம் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் ஊடாக வழங்கப்படவில்லை.

## முறைமை தவறு

தேசிய கணக்காய்வு அலுவலகம், உள்ளகக் கணக்காய்வாளர் ஆகியோர் ஒப்பந்தம் வழங்கப்பட்ட முறைமையிலும் தவறு இருக்கின்றது என்று சுட்டிக்காட்டிய பின்னரும் இதுவரை அது தொடர்பில் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

ஒப்பந்தகாரரிடமிருந்து பிரதியுபகாரத்தைப் பெற்றுக் கொள்ளும் நோக்கில் அரசுக்கு திட்டமிட்டு இழப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளமை புலனாகின்றது. அதனை விட சுன்னாகம் பகுதி மக்களுக்கு சேவை பெறுவதற்கான இழப்பும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இவ்வாறு ஓர் மோசடியை மேற்கொண்டமைக்காக இதுவரை எவரும் தண்டிக்கப்படவில்லை. இந்த நிலையில் இது தொடர்பில் இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவுக்கு முறைப்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளது. அது தொடர்பான விசாரணைகள் ஆரம்பமாகியுள்ளது.

அரச ஊழியர் ஒருவர், கோவை ஒன்றை சேதப்படுத்துதல், மாற்றுதல் என்பன மிகப் பாரதூரமான குற்றமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இங்கு அவை இரண்டும் மேற்கொள்ளப்பட்டுள்ளமை ஆதாரபூர்வமாக நிரூபனமாகியுள்ளது. இனியாவது நடவடிக்கை எடுக்கப்படுமா?

அதேவேளை மாவட்டச் செயலக அலுவலர் ஒருவரால் பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சுக்கு மேற்படி விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இதனையடுத்து அது தொடர்பான விசாரணைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

## சட்ட ஏற்பாடுகளின் தேவை

அரச அலுவலர்களுக்கான தாபன விதிக் கோவை காணப்படுகின்றது. அதில் இழைக்கப்படும் தவறுகளுக்கு தண்டனைகளும் குறிப்பிடப்பட்டுள்ளன. அவ்வாறு இருந்தபோதும், யாழ்ப்பாண மாவட்டச் செயலர் க.மகேசன், திட்டமிடல் பணிப்பாளர் திருமதி நிக்லாஸ் பிள்ளை ஆகியோர், அலுவலக் கோவையில் மாற்றங்களை மேற்கொண்டுள்ளனர். தவறுகளுக்கான தண்டனை உரிய காலத்தில் கிடைப்பதற்கு போதுமானதாக - வலுவானதாக தாபன விதிக் கோவை காணப்படவில்லை. இதனைவிட இவ்வாறான ஓர் முறைகேட்டை அல்லது கிரிமினல் குற்றத்தை மேற்கொண்டமைக்கு எதிராக கிரிமினல் வழக்கு முன்னெடுப்பதற்கு ஏதுவான சட்ட ஏற்பாடுகள் இல்லாமை. (பொதுநலன் கருதி முறைப்பாடுகள் மேற்கொள்வதற்கான வசதியீனங்கள்)

அதிகாரிகளுக்கான ஆக உச்சபட்ச தண்டனை என்பது இடமாற்றம் என்பதாகி விட்டதால், அதிகாரிகள் தவறுகளை திரும்பத் திரும்பச் செய்கின்றனர்.

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் ஊடாக பொய்யான தகவல்களை அதிகாரிகள்

வழங்குவதும் அவர்களுக்கு எதிரான நடவடிக்கைகள் ஏதும் சட்டத்தின்பால் இல்லாமல் இருக்கின்றமையும் அவர்கள் அதனை மீண்டும் செய்வதற்கும் வழிவகுக்கின்றது.

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் ஊடாக பொய்யான தகவல்களை வழங்கும் அதிகாரிகளுக்கு கடுமையான தண்டனை வழங்கப்படுவதன் ஊடாகவே, தகவல் அறியும் உரிமைச் சட்டத்தை கொண்டு வந்த நோக்கத்தை எதிர்காலத்திலாவது நிறைவேற்றிக் கொள்ள முடியும்.

சாதாரண பிரஜை ஒருவரால் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் ஊடாக வழங்கப்படும் தகவல் உண்மையானதாக அல்லது பொய்யானதா என்பதைக் கண்டறிவதே கடினம்.

ஒப்பந்தங்களைப் பொறுப்பேற்போர் நிதி இழப்பை ஏற்படுத்துவது அல்லது வேலைகளை உரிய காலத்தில் முடிக்காமைக்கு எதிராக சுயாதீன தரப்பு ஒன்று ஊடாக கடுமையான நடவடிக்கை எடுப்பதற்கான சட்டங்கள் இல்லாமையால், ஒப்பந்தகாரர்கள் தங்கள் சக்திக்கு மீறி ஒப்பந்தங்களைப் பெற்று அனைத்தையும் உரிய காலத்தில் ஒப்பேற்றாமல் நிதி விரயம் செய்கின்றனர்.

ஒப்பந்தகாரர்கள் அரச அதிகாரிகளுக்கு வழங்கும் சலுகைகளை இல்லாமல் செய்வதற்கு கடுமையான சட்ட ஏற்பாடுகள் தேவை. அதிகாரிகள் நன்கொடை அல்லது இலவசமாக ஓர் சேவையைப் பெற்றுக் கொள்வது கூட லஞ்சம் என்ற வரையறையின் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

- ***திலீப் அமுதன்*** uprintdileep@gmail.com

---

***குணாலன் திலீப் அமுதன் :*** *யாழ்ப்பாணத்தில் வெளியாகும் உதயன் பத்திரிகையின் பிரதிச் செய்தி ஆசிரியராவர். 12 வருடங்களாக முழுநேர ஊடகவியலில் ஈடுபட்டிருக்கின்ற அமுதன், தகவல் அறியும் சட்டம் நிறைவேற்றப்பட்ட பின்னர், அதனை ஒரு கருவியாகப் பயன்படுத்தி ஊடகவியலாளராவர். இதுவரை 750க்கும் மேற்பட்ட தகவல் விண்ணப்பங்களை சமர்ப்பித்துள்ள அவர், அதன் வாயிலாக பல கட்டுரைகளையும் வழங்கியுள்ளார்.*

முரண்பாடுகளுக்கான காரணம் வர்த்தமானியில் குறைபாடுகள்

# சுருக்கு வலையால் அடைக்கப்பட்ட சிறுகடல் மீன்பிடித் தொழிலாளர்கள்

சுற்றி அடைக்கப்படும் விசேட வலைகளுள் அடங்கும் பேர்சின் வலை எனப்படம் சுருக்கு வலையானது உலகளாவிய ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட வினைத்திறனான வலையாகும். அது 1996 ஆம் ஆண்டு 02 ஆம் இலக்க கடற்றொழில் மற்றும் நீரியல்வள அபிவிருத்திச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட மீன்பிடி முறையாக இருந்த போதிலும், இம்மீன்பிடி முறைமையானது எமது நாட்டின் கடல் வலயத்திற்குப் பொருத்தமற்றதென தெரியவருவது, சுமார் 35 வருட காலமாக அதற்கு எதிராக சிறுகடல் மீன்பிடித் தொழிலாளர்கள் தெரிவிக்கும் எதிர்ப்புக்கள் நாளாந்தம் அதிகரித்த வருவதனாலாகும்.

இந்நாட்டின் கடற் பிரதேசத்தில் மீன்பிடி அறுவடையை வினைத்திறனாக மேற்கொள்வதற்காக இம்மீன்பிடி முறையை அறிமுகப்படுத்தி அதற்கு ஏற்புடையதான கட்டளைகள் விதிக்கப்பட்டிருந்த போதிலும், 1995 பெப்ரவரி 20 ஆம் திகதிய 859/3 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் மூலமாக திருத்தப்பட்ட 1986 (சுருக்குவலை) பேர்சின் வலை தொடர்பான கட்டளைகள் குறிப்பிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டளைகளில் காணப்படும் ஒருசில குறைபாடுகள் சுருக்குவலை தொழிலாளர்கள் மற்றும் சிறுகடல் மீன்பிடித் தொழிலாளர்களுக்கும் இடையே தொடர்ச்சியாக இடம்பெறும் முரண்பாடுகளுக்கு காரணமாக அமைந்துள்ளது. இந்நிலைமையில் திருகோணமலை கடற் பிரதேசத்தில் சுருக்குவலை வீசுபர்களுடன் ஏற்பட்ட முரண்பாடுகள் காரணமாக கடந்த 05 வருடங்களில் சிறுகடல் மீன்பிடித் தொழிலாளர்கள் இருவர் காணாமல் போயுள்ளனர்.

திருகோணமலை, யாழ்ப்பாணம் மற்றும் மன்னார் போன்ற மாவட்டங்களில் சுருக்குவலை தொழிலாளர்கள் மற்றும் சிறுகடல் மீன்பிடித் தொழிலாளர்களுக்கிடையேயான முரண்பாடுகள் தொடர்ந்து அதிகரித்து வரும் நிலைமையை காணக்கூடியதாகவுள்ளது. அது அப்பிரதேசத்தில் காணப்படும் பூகோள இயல்புகளைப் பயன்படுத்தி கடற்றொழில் திணைக்களத்தால் வகைப்படுத்தப்பட்டுள்ள கடற்கலன்கள் ஆறினையும் பயன்படுத்தி அங்கீகரிக்கப்பட்டுள்ள 17 மீன்பிடி முறைகளையும் பயன்படுத்தி மீன்பிடிக்கும் நடவடிக்கைகளில் கடற்றொழிலாளர்கள் ஈடுபடுகின்ற காரணத்தினாலாகும்.

## முரண்பாடுகள் மற்றும் உயிராபத்துக்களை ஏற்படுத்தும் விபத்துக்கள்

இதனால் குறித்த பிரதேசங்களில் சுருக்குவலை மீன்பிடித் தொழிலாளர்கள் மற்றும் சிறுகடல் மீன்பிடித் தொழிலாளர்களுக்கும் இடையில் தொடர்ச்சியான மோதல்கள் ஏற்படுகின்றது. சுருக்கு வலை தொழிலாளர்கள் அனுமதிப்பத்திர நிபந்தனைகளை மீறி ஏழு கடல்மைல்களுக்குள் மீன்பிடித்தல், சிறிய துளைகளைக் கொண்ட வலைகளைப் பயன்படுத்தி இரண்டு மணித்தியாலயங்களில் 2000 கிலோ கிராம்களுக்கும் அதிகமான மீன் அறுவடையை சந்தைக்கு விநியோகிப்பதால் விலை குறைவடைகின்றமையும், ஐந்து மணித்தியாலயங்களாக கடலில் மீன்பிடிக்கும் சிறுகடல் மீன்பிடித் தொழிலாளர்கள் சந்தைக்குக் கொண்டு வரும் 10 கிலோ கிராம் மீன்களுக்கு நியாயமான விலை கிடைக்கமைமையுமே இம்மோதலுக்கு முக்கிய காரணமாக அமைகின்றது. கடற்றொழிலாளர்களுக்கிடையில் ஏற்படும் மோதல்களாலும், வளர்ச்சியடையாத மீன்கள் கூட சுருக்குவலை வீசிப் பிடிக்கப்படுவதால், மீன் குறைவடைவதால் சிறுகடல் மீன்பிடித் தொழிலாளர்களின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்து தொழிற்றுறையும் சிதைந்து போகும் நிலைக்கு தள்ளப்பட்டிருப்பதையும் கடற்றொழிலாளர் சங்கங்கள் பலவும் சுட்டிக்காட்டியுள்ளன.

கடந்த மாதம் டைனமைற் கையில் வெடித்தமையால் குச்சவெளி பிரதேசத்தில் மீன்பிடித் தொழிலாளர் ஒருவர் உயிரிழந்துள்ளார். டைனமைற் கையில் வெடித்தமையால் மணிக்கட்டுக்குக் கீழ் கைகளை இழந்த மூன்று கடற்றொழிலாளர்களும் உள்ளனர். அதேபோல் பலவந்தமாக மீன்களைப் பெற்றுக் கொள்வதால் ஏற்பட்ட மோதல்கள் காரணமாக தலைமையகப் பொலிஸ் மற்றும் துறைமுகப் பொலிஸ் நிலையத்திலும் பத்து முறைப்பாடுகளுக்கும் அதிகமாகக் காணப்படுவதாகவும், கடலுக்கு அதிக பாதிப்பை ஏற்படுத்துவது, குச்சவெளி, கின்னியா மற்றும் புடவைக்கட்டு பிரதேசத்திலுள்ள சுருக்கு வலைத் தொழிலாளர்களே என்பதையும் திருகோணமலை மாவட்ட கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசத் தலைவர் பியல் ஹேமசிரி அவர்கள் சுட்டிக்காட்டுகின்றார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், சுருக்குவலை அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொண்டு குறித்த நிபந்தனைகளை மீறி, சிறிய துளைகளைக் கொண்ட வலைகளைப் பயன்படுத்தி மீன்பிடித்தல், டைனமைற் பாவனை போன்றவற்றால் வடக்குக் கிழக்கு கடல் பிரதேசம் மோசமாகப் பாதிப்படைந்துள்ளதெனவும் குறிப்பிட்டுக் கூறியுள்ளார்.

‘‘செப்ரெம்பர் மாதம் வளர்ச்சியடையாத லின்னா மீன்களை பெருமளவில் பிடித்துவந்து 2000 கிலோகிராம்களுக்கும் அதிகமான இறந்த மீன்களை மீண்டும் கடலில் போடுவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளனர். காரணம் 20 ரூபாவுக்குக் கூட மீன்களைக் கொள்வனவு செய்ய யாரும் இல்லை என்பதாகும். டைனமைற் போட்டுப் பிடிக்கின்ற மீன்களை எவரும் வாங்குவதில்லை. இதனை இப்பிரதேசத்திலுள்ள அதிகாரிகள் அறிவார்கள், ஆனாலும் கண்டும் காணாதது போல உள்ளனர். நாங்கள் அன்றாடம் செவிட்டு யானைகளுக்கு வீணை வாசிக்கின்றோம்.’’

## 1392 பேர் சட்டத்தை மீறியுள்ளனர்

பேர்சீன் வலை (சுருக்குவலை) கட்டளைகள் வர்த்தமானி அறிவித்தலின் ஒழுங்குவிதிகளுக்கமைய வழங்கப்பட்டுள்ள அனுமதிப்பத்திர நிபந்தனைகளை மீறுகின்றமையால், கடற்படையினர் மற்றும் மீன்பிடி அலுவலர்களுடன் இணைந்து 2019

ஆம் ஆண்டில் 587 சுருக்குவலை மீன்பிடித் தொழிலாளர்களைக் கைது செய்துள்ளதுடன், 2020 ஆம் ஆண்டில் 504 பேரும், 2021 யூலை மாதம் வரையில் 301 பேரையும் கைது செய்து 330 வழக்குகள் தொடரப்பட்டு 13 மில்லியன் ரூபாய்களுக்கும் அதிகமான தண்டப்பணத்தை அறவிட்டுள்ளமை தகவல் அறிதல் சட்டத்தின் மூலம் மேற்கொண்ட ஆய்வில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

வழக்குகளில் குற்றவாளிகளாக அடையாளங் காணப்பட்ட சுருக்குவலை மீன்பிடித் தொழிலாளர்களுக்குச் சொந்தமான 107 சட்டவிரோத மீன்பிடி உபகரணங்களும் அரசுடமையாக்கப்பட்டுள்ளது. அதற்கமைய சிறுகடல் மீன்பிடித் தொழிலாளர்களுடன் முரண்பாடுகளை ஏற்படுத்திக் கொண்டு சுருக்குவலை மீன்பிடியாளர்கள் பெருங்கடலுக்கு இம்மீன்பிடி முறை மூலம் எந்தளவுக்குப் பாதிப்பை ஏற்படுத்துகின்றனர் என்பதைக் காணக்கூடியதாகவுள்ளது.

சுருக்குவலை மீன்பிடிக்கு அனுமதிப்பத்திரத்தைப் பெறும் மீன்பிடித் தொழிலாளர்கள் மீன்பிடிக்கும் போது நிபந்தனைகளை மீறுவதும், டைனமைற் பாவனையாலும் கடற்பிரதேசத்திற்கு பெரும் அச்சுறுத்தலாகவுள்ள சுருக்குவலை எமது நாட்டு கரையோரக் கடலுக்கு பொருத்தமற்றதென கடற்றொழில் அமைச்சர் அவர்களால் தயாரிக்கப்பட்ட 1987 ஜனவரி மாதம் 437/46 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிடப்பட்ட 1986 (சுருக்குவலை) பேர்சீன் வலை தொடர்பான கட்டளைகள் தொடரினை ஆராய்கின்ற போது தெளிவாகக் காணக்கூடியதாகவுள்ளது.

## வர்த்தமானி அறிவித்தலின் குறைபாடுகள்

அதில் 13 ஆவது கட்டளையில் குறிப்பிடப்பட்டுள்ள, எந்தவொரு நபராலும் 3/8 அங்குலத்திற்குக் குறைவான கண்துளைகளைக் கொண்ட சுருக்குவலை பயன்படுத்த முடியாது என்ற விடயம் முழுமையாக மாற்றியமைக்கப்படுதல் வேண்டும். கடற்றொழில் திணைக்களத்தினால் அனைத்து உதவிப் பணிப்பாளர்களுக்கும் 2021 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டுள்ள 01/.2011 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் கீழ் ஒளிக்கீற்று அல்லாத சுருக்குவலையைப் பயன்படுத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டதுடன், அதற்கமைய அமைச்சால் மேற்கொள்ளப்பட்ட கொள்கை ரீதியான தீர்மானத்தின் கீழ் கடற்றொழில் திணைக்களத்தினால் சுருக்கு வலைக்கான கண்துளைகளின் அளவு 1 1/2 அங்குலத்தை விடவும் அதிகமாக இருத்தல் வேண்டுமெனக் குறிப்பிட்டு அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டாலும், வர்த்தமானியில் குறிப்பிட்டவாறு எந்தவொருவரும் குறித்த கண்துளைகளுடன் கூடிய வலைக்கான அனுமதிப்பத்திரத்திற்கு விண்ணப்பித்தால் அதனை நீதிமன்றத்தில் சவாலுக்குட்படுவதை தடுக்க முடியாமல் இருப்பதற்கான காரணம் குறைபாடுகளுடன் கூடிய வர்த்தமானி அறிவித்தல் திருத்தப்படாமையாலாகும்.

வடக்குக் கடற் பிரதேசத்தில் 10 கடல்மைல்கள் கரையோரப் பிரதேசத்தில் வலை போட்டு ஏழு கடல்மைல்கள் மேற்கு, கிழக்கு மற்றும் தெற்கு கடற் பிரதேசங்களில் இவ்வாறு வலையிடலும், இம்மீன்பிடி முறையும் தடை செய்யப்பட்டமைக்கான காரணம், இம்மீன்பிடி முறை கரையோரக் கடல் பிரதேசத்தில் வாழும் மீன்களுக்கு மிகவும் பாதிப்பை ஏற்படுத்துவதாலும், அதிகளவில் மீன்கள் ஒரே தடவையில் சந்தைக்கு வருவதால் விலை குறைவடைந்து சிறுகடல் மீன்பிடித் தொழிலாளர்களின் பொருளாதாரம் பாதிக்கப்படுவதனாலாகும். ஆனாலும் இக்கட்டளையை மீறி ஒருசில கடற்றொழிலாளர்கள் சட்டவிரோத மீன்பிடித்தலுக்கு தூண்டப்படுவதற்கான பிரதான காரணமாக அமைவது, காலத்திற்குக் காலம் கடற்றொழில் அமைச்சர்கள் கட்டளைகளை மாற்றியமைத்து

வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டமையாகும்.

1996 நவம்பர் 07 ஆம் திகதிய 948/25 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிடப்பட்ட மீன்பிடிக் கட்டளைகள் தொடருக்கமைய எமது நாட்டு கடற்றொழிலாளர்களுக்கு மீன்பிடித்தலுக்கு அனுமதி கிடைக்கும் மீன்பிடி முறைகளுக்காக கடற்றொழிலாளர் திணைக்களத்தினூடாக அனைத்து கடற்றொழிலாளர்களும் அனுமதிப்பத்திரம் பெறுதல் வேண்டும். 2011 மார்ச் மாதம் 23 ஆம் திகதிய 1698/13 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிடப்பட்ட 2001 ஆம் ஆண்டின் கடற்றொழில் (கட்டணம் இரத்துச் செய்யும்) கட்டளைகள் காரணமாக 1986 ஆம் ஆண்டு சுருக்குவலைக் கட்டளைகள் தொடரின் 05 ஆம் விதி வலுவிழக்கச் செய்யப்பட்டமையால் கட்டணமின்றி சுருக்குவலை அனுமதிப்பத்திரங்களை வரையறையின்றி பெற்றுக்கொள்வதற்கு கடற்றொழிலாளர்களைத் தூண்டும் நிலைமை ஏற்படுவதற்கு மறைமுகமாக தாக்கம் செலுத்தியிருக்கின்றமை தெரியவந்துள்ளது.

இதன் காரணமாக சிறுகடல் மீன்பிடித் தொழிற்துறையினுள் பல சிக்கல்கள் தோன்றியுள்ளமை தகவல் அறிதல் சட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. தகவல் கோரல் விண்ணப்பங்கள் சிலவற்றை சமர்ப்பித்து கடற்றொழில் மற்றும் நீரியல்வள அபிவிருத்தி திணைக்களத்திலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்கள் மற்றும் பேர்சீன் கட்டளைகள் தொடர்பாக கற்றாராய்ந்ததன் மூலம் வர்த்தமானி அறிவித்தல்களில் காணப்படும் குறைபாடுகள் காரணமாக கடற்றொழில் பரிசோதகர்கள், பொலிஸார் மற்றும் கடற்படை அதிகாரிகள் மேலதிக நேரத்தை பெருங்கடலைப் பாதுகாப்பதற்கும், கடற்றொழிலாளர்களுக்கிடையே நிலவுகின்ற பிரச்சினைகள் மற்றும் மோதல்களைத் தீர்ப்பதற்கு செலவிடுவதற்கும் நேரிட்டுள்ளமையை தெரியவந்துள்ளது.

## சட்டத்தின் தவறுகள்

அதேபோல் அதிகமான கடற்றொழிலாளர் சங்கங்கள், சட்டவிரோத சுருக்கு வலை போடுவதற்கு பிரதிவாதிகளாக நியமிக்கப்பட்டவர்கள் கடற்றொழில் பரிசோதகர்கள் மற்றும் கடற்படையினரேயாவர். அவர்கள் முழுமையாகக் குற்றஞ்சுமத்துவது, கடற்படையின் ரோந்துப் பணிகளில் ஈடுபடும் அதிகாரிகள் இலஞ்சத்திற்கு அடிபணிந்து தடை செய்யப்பட்ட மீன்பிடி உபகரணங்களைப் பயன்படுத்தும் சுருக்குவலை மீனிபிடித் தொழிலாளர்களைக் காப்பாற்றுவதாகக் குற்றஞ்சுமத்துகின்றனர். அதேபோல் கடற்றொழில் அலுவலர்கள் தடை செய்யப்பட்ட மீன்பிடி முறைகள் மேற்கொள்ளப்படவில்லையென நீதிமன்றத்தில் சுருக்குவலை மீன்பிடித் தொழிலாளர்களுக்கு சார்பான வகையில் விடயங்களை சமர்ப்பிப்பதாக கடற்றொழிலாளர் சங்கங்கள் அடிக்கடி முன்வைக்கும் குற்றச்சாட்டுகளாகும்.

1987 ஜனவரி மாதம் 19 ஆம் திகதிய 437/46 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்டுள்ள 1986 (சுருக்குவலை) பேர்சீன் வலைக் கட்டளைகள் தொடரின் மூன்றாவது கட்டளையைத் திருத்தியமைத்து 1995 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 20 ஆம் திகதிய 859/3 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல், இரவு விளக்கு ஒளிக்கீற்றுக்களுடன் கூடிய சுருக்குவலையைப் பயன்படுத்தும் அனுமதிப்பத்திரம் இல்லாதவர்களைத் தடை செய்து வெளியிடப்பட்டது. அதேபோல் அனுமதிப்பத்திரமின்றி எந்தவொருவரும் விளக்குக் கவர்ச்சியுடன் அல்லது இல்லாமலோ சுருக்கு வலையோ அல்லது சுருக்கு அலகொன்றை தன்னகத்தே வைத்திருக்கக் கூடாததுடன்,

அனுமதிப்பத்திரமின்றி எந்தவொருவரும் மேல்விளக்கோ அல்லது சுருக்கு வலையைப் பயன்படுத்தும் வகையிலான ஏனைய உபகரணங்களை வைத்திருக்கக் கூடாதெனவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வாறு இலகுபடுத்தியமையால் அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக்கொள்ளும் ஒருசில கடற்றொழிலாளர்கள் இரவு விளக்கு ஒளிக்கீற்றைப் பயன்படுத்தியும் பகல் வேளைகளில் சுருக்குவலையை இட்டு மீன்வளத்தை அழிப்பது மிகவும் கவலைக்குரிய விடயமாகவுள்ளது. இரவு வேளைகளில் சுருக்கு வலையை இடுவதற்கு கொள்கை அடிப்படையில் தற்போது அனுமதிப்பத்திரம் வழங்கப்படாவிடினும், அவ்வாறு வழங்கப்பட முடியுமென வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டிருப்பதனூடாக, இரவு விளக்குடன் கூடிய சுருக்கு வலைப் பயன்பாட்டுக்கு சட்டரீதியான ஏற்பு கிடைத்துள்ளது.

## அதிகாரிகள் மீதான குற்றச்சாட்டுக்கள்

அதன் காரணத்தால் கடற்றொழிலாளி ஒருவர் அனுமதிப்பத்திரம் கோரும் போது கடற்றொழில் திணைக்கள அலுவலர் அனுமதிப்பத்திரத்தை வழங்குவதற்கு கடப்பட்டுள்ளார். எனவே, அனுமதிப்பத்திரம் வழங்கும் பணிகள் கடற்றொழில் அதிகாரிகளால் மேற்கொள்ளப்படுகின்ற அதேவேளை 2019 ஆம் ஆண்டாகும் போது கடற்றொழில் திணைக்களத்தால் திருகோணமலை மாவட்டத்தில் மாத்திரம் 203 சுருக்கு வலைக்கான அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. அவற்றில் அதிகமான அனுமதிப்பத்திரங்கள் கிண்ணியா கடற்றொழில் பரிசோதகர் பிரிவில் வழங்கப்பட்டுள்ளதுடன், 57 அனுமதிப்பத்திரங்கள் அங்கு வழங்கப்பட்டுள்ளன. இரண்டாவதாக குச்சவெளி கடற்றொழில் பரிசோதகர் பிரிவில் வழங்கப்பட்டுள்ளதுடன், 44 அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. அனுமதிப்பத்திர நிபந்தனைகளை மீறி சட்டவிரோதமாக சுருக்குவலை இடுபவர்கள் அதிகமாக கைது செய்யப்பட்டுள்ளதும் இவ்விரு கடற்றொழில் பரிசோதகர் பிரிவுகளிலாகும்.

சுருக்கு வலைக்காரர்களால் சிறுகடல் மீன்பிடித் தொழிலாளர்களுக்கு ஏற்பட்டுள்ள கவலைக்குரிய நிலைமையைப் பற்றிக் கூறும் திருகோணமலை வரையறுக்கப்பட்ட குடாஓயா தூண்டில் மீன்பிடிக் கூட்டுறவு சங்கங்களின் தலைவரான அறுபத்தொரு வயதுடைய ஏ.எச். சுனில் டி சில்வா :

''சுருக்கு வலைக்காரர்கள் வலையை இடுவதற்கு முன்னர் டைனமைற் அடிக்கின்றனர். சுழியோடிகளைப் பயன்படுத்தி பவளக் கற்பாறைகளில் மீன்கள் இருக்கின்றனவா எனப் பார்த்துவிட்டுத்தான் நிலத்திற்கு படுகின்றவகையில் டைனமைற் அடிக்கின்றார்கள். அதன்பின்னர் வலையைச் சுற்றுகின்றனர். இறந்த மீன்களை தாங்கிகளைப் போட்டு எடுக்கின்றனர். எடுக்க முடியாத மீன்கள் அடியில் சென்றுவிடுகின்றன. அவை கடலுக்கும் இல்லை தரைக்கும் இல்லை. டைனமைற் போடுவதால் பவளக்கற்பாறைகள் தூளாகி அவற்றைச் சுற்றியுள்ள மீன்கள் இறந்து மீன்முட்டைகள் அழிவடைந்து கடலுக்குப் பெரும் அழிவு ஏற்படுகின்றது. சில வேளைகளில் கடற்படை ரோந்து அணியினர் கண்டும் காணாதது போல இருக்கின்றனர். இதுதொடர்பாக கிழக்கு மாகாண கடற்படை ரோந்து நடவடிக்கை இணைப்பாளர் அவர்களைத் தொடர்பு கொண்டு 100 இற்கும் மேற்பட்ட தடவைகள் கூறியுள்ளோம். 40 வருடங்கள் தொழில் புரிந்து வரும் எங்களுக்கு கடலில் எஞ்சியிருப்பது சேறும் நீருமாகும். ஐந்து கிலோ மீன்களைக் கூடப் பிடிக்க முடியாத நிலையே ஏற்பட்டுள்ளது''.

சுருக்குவலைப் பயன்பாட்டுக்குக் கட்டளைகள் பிறப்பிக்கப்பட்டாலும், ஒவ்வொரு

மாவட்டத்திற்கும் வழங்கப்பட வேண்டிய அனுமதிப்பத்திரங்களின் எண்ணிக்கையை திட்டவட்டமாகக் குறிப்பிடாததால் அதனை கடற்றொழில் அமைச்சர் அவர்கள் தீர்மானிப்பதாக வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிட்டிருப்பதாலும், ஒவ்வொரு காலப்பகுதியில் கடற்றொழில் அமைச்சர்களின் விருப்பின் பிரகாரம் அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படுவதே இந்நிலைமையைக் கட்டுப்படுத்த முடியாமல் போவதற்கான காரணமாக அமைகின்றது.

## குற்றச்சாட்டுகளுக்கான அதிகாரிகளின் பதில்கள்

சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக வினவிய போது பதிலளித்த மீன்பிடி மற்றும் நீரியல் வள அபிவிருத்தித் திணைக்களத்தின் திருகோணமலை மாவட்ட உதவிப் பணிப்பாளர் அனில் சேனாரத்ன அவர்கள், கடலில் சுற்றி வளைப்புக்களை மேற்கொள்வதற்கு தமது அலுவலர்களுக்குத் தேவையான வசதிகள் இல்லாவிடினும், கடற்படையினருடன் இணைந்து அனுமதிப்பத்திர நிபந்தனைகளை மீறி சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபடும் சுருக்குவலைக்காரர்களைப் பிடிப்பதற்கு தொடர்ச்சியாக நடவடிக்கை எடுப்பதாகக் கூறினார்.

"நாங்கள் எப்போதுமே சிறுகடல் மீன்பிடித் தொழிலைப் பாதுகாப்பதற்காக, சட்டவிரோத உபகரணங்களை கடலிலிருந்து அகற்றுவதற்கும் உயர்ந்தபட்சம் செயற்படுகின்றோம். ஒவ்வொரு வருடமும் 50 இற்கு மேற்பட்ட அரசவுடமையாக்கல்கள் இடம்பெறுகின்றன. இது வெறுமனே இரண்டு தொழில்களுக்கிடையிலான பிரச்சினையல்ல, மாறாக இத்தொழில் துறைக்குள்ளேயே இடம்பெறும் பிரச்சினையாகும். ஒரு சில கடற்றொழிலாளர்கள் சட்ட விரோத உபகரணங்களைப் பயன்படுத்துகின்றனர். இன்னொரு பகுதியினர் அதற்கெதிராக போராடுகின்றனர். கடற்றொழிலாளர்கள் குற்றஞ்சுமத்திக் கொண்டிருக்காமல் இந்நிலைமையை கட்டுப்படுத்துவதற்கு ஒத்துழைப்பு நல்க வேண்டும்."

கடற்றொழிலாளர்களைப் பிளவுபடுத்தும் பெருங்கடலுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் இம்மீன்பிடி முறைக்கு அனுமதி வழங்கும் குறைபாடுகளுடன் கூடிய வர்த்தமானி அறிவித்தலை நிவர்த்தி செய்யாமல் சுற்றறிக்கைகள் மற்றும் கொள்கைத் தீர்மானங்கள் மூலம் சுருக்குவலைக்கு தொடர்ந்தும் அனுமதி வழங்குவதால், சிறுகடல் மீன்பிடித் தொழிலாளர்களின் எதிர்காலத்தைப் பாதுகாக்க முடியாதென திருகோணமலை மாவட்ட கடற்றொழிலாளர் சமாசத்தின் தலைவர் பிரியந்த மெலவென்னகொட தெரிவிக்கின்றார்.

"இந்த வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தவறுகளை நிவர்த்தி செய்வதற்கு அமைச்சர் நடவடிக்கை மேற்கொண்டால் கடற்றொழிலாளர்களிடையே எழுகின்ற பிணக்குகளுக்குத் தீர்வு கண்டு கடலை ஐக்கியமான ஒரு இடமாக மாற்ற முடியும். காலத்திற்குக் காலம் வருகின்ற அமைச்சர்கள் வர்த்தமானி அறிவித்தலை வெளியிடும் போது, ஏனைய வர்த்தமானி அறிவித்தல்களுக்கு ஏதேனும் தாக்கம் ஏற்படுகின்றதா? எனக் கவனிப்பதில்லை. அதுதான் இப்பிரச்சினைக்கு காரணமாக அமைகின்றது."

## கண்துடைப்புக்குப் பதிலாக நிரந்தரத் தீர்வு

இப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக 1995 பெப்ரவரி 20 ஆம் திகதிய 859/3 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் திருத்தப்பட்ட 1987 ஜனவரி 19 ஆம் திகதிய

437/46 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டவாறான 1986 பேர்சீன் (சுருக்குவலை) கட்டளைத் தொடரில் ஒருசில உறுப்புரைகளை மாற்றியமைத்து புதிய உறுப்புரைகளை உள்வாங்க வேண்டியுள்ளமை தெரியவருகின்றது.

அதற்கமைய, குறித்த கட்டளைத் தொடரின் ஐந்தாம் உறுப்புரையில் குறிப்பிட்டுள்ள அனுமதிப்பத்திரத்திற்காக 20,000 ரூபா கட்டணம் அறவிடப்பட வேண்டுமென்பது, சமகாலத்திற்குப் பொருந்தும் வகையில் ஒரு இலட்சம் ரூபாயோ அல்லது அதற்கு மேலதிகமாக அதிகரித்தல் வேண்டும். அதேபோல் 1698:.13 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் திருத்தப்பட்ட 2001 கடற்றொழில் (கட்டணம் இரத்துச் செய்தல்) கட்டளையை சுருக்கு வலைகளுக்கு வலுவற்றதாக்கி சுருக்குவலைக்கான கட்டளைகள் வர்த்தமானியில் வெளியிடப்படல் வேண்டும். அப்போது சுருக்குவலை அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக் கொள்வது ஓரளவுக்கேனும் கட்டுப்படுத்தப்பட்டு கடற்றொழிலாளர்களுக்கிடையே பிரச்சினைகளைத் தடுக்கப்பட்டு, இம்மீன்பிடி முறையும் பாதுகாக்கப்பட்டு, கடலும் ஐக்கியமான ஒரு இடமாக மாறும் எனச் சிந்திக்கலாம்.

அதேபோல் 13 ஆம் உறுப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ள வலைகளின் கண்துளைகள் 1 1/2 அங்குலமாகக் குறிப்பிடுவதும் இரவு விளக்கு ஒளிக்கீற்றுடன் கூடிய வலைப் பயன்பாட்டை முற்றுமுழுதாகத் தடை செய்தலும், அனுமதிப்பத்திரம் பெற்றவர்களோ அல்லது குறித்த கடற்கலன், கடற்கலனில் பயணிப்போர் நிபந்தனைகளை மீறினால் அல்லது ஏதேனும் சட்டவிரோத செயற்பாடுகளில் ஈடுபட்டால், குறித்த அனுமதிப்பத்திரத்தை இரத்துச் செய்து அவ் உபகரணங்கள் அரசவுடமையாக்கப்படல் வேண்டும். அனுமதிப்பத்திரத்துடன் கூடிய கடற்கலனில் பயணிக்கும் கடற்றொழிலாளர் குழுவினர் ஒரே குழுவைச் சார்ந்தவர்களாக இருக்க வேண்டியதுடன், வலைகள், இயந்திரம் மற்றும் கடற்கலன் ஒருவருடையதாயிருத்தல் வேண்டுமென கட்டளையிடப்படல் வேண்டும். மாவட்டமொன்றுக்கு வழங்கப்படும் அனுமதிப்பத்திரங்களின் எண்ணிக்கை திட்டவட்டமாகத் தீர்மானித்து வர்த்தமானியில் வெளியிடப்படுமாயின், எமது நாட்டு சிறுகடல் மீன்பிடித் தொழிலாளர்களின் பொருளாதார விடயங்களுக்கு தீர்வு கண்டு கடற்றொழிலாளர்களின் பிரச்சினைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க முடியும். ஆனாலும் பொறுப்புக் கூறவேண்டிய எவருமே இதுவரை அதுதொடர்பாகக் கவனம் செலுத்தமாலும் அதற்கு நடவடிக்கை எடுக்காமலிருப்பதும் கவலைக்குரிய விடயமாகவுள்ளது.

- **லக்மால் கே. பதுகே**
  திருகோணமலை

***லக்மால் கே.பதுகே:*** *ஒரு தசாப்தத்தை அண்மித்த காலமாக அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்களில் சுயாதீன ஊடகவியலாளராகப் பணியாற்றுகின்றார். தகவல் அறியும் சட்டத்தின் ஆய்வு ரீதியான ஊடகவியலாக்கத்தை தகுந்த முறையில் பாவிக்கின்ற ஊடகவியலாளர். ஊடக ஊழியர்களின் தொழிற்சங்க சம்மேளனத்தின் நிறைவேற்று உறுப்பினராகவும் ஊடகவியலாளர்களின் தேசிய அமைப்பின் தேசிய ஏற்பாட்டாளராகும் திருகோணமலை மாவட்ட வெகுசன ஊடக அமைப்பின் தலைவராகவும் பணியாற்றுகின்றார்கள்.*

# சுனிலின் மரணம் தொடர்பில் உண்மையைத் தேடித் தந்த தகவல் சட்டம்

கண்டி பிலிமத்தலாவை தந்துரே எனும் விலாசத்தில் வதியும் சுனில் ஜயதிஸ்ஸ இரண்டு பிள்ளைகளின் தந்தையாவார். உழைத்து வாழவெண்டுமென்ற சிறந்த பழக்கத்தைக் கொண்டிருந்த அவர் கண்டியிலுள்ள பிரபல ஹோட்டல் ஒன்றில் கணக்காளராக பணியாற்றி தமது பிள்ளைகளையும் குடும்பத்தையும் பேணி வந்தார். தமது இருபத்தி இரண்டு வருட சேவைக்கு விடைகொடுத்த அவர் தமக்கென ஒரு தொழிலாக கேடரிங் சேவை ஒன்றினை ஆரம்பித்து பேணிச் சென்ற அதேவேளை அதனை வெற்றிகரமாக மேற்கொள்வதற்கு அடிப்படையாக அமைந்த விடயம் மிக சுவையாக சமைப்பதில் மாத்திரமன்றி அர்ப்பணிப்புடன் அதனை மேற்கொள்வதற்கு ஆர்வமிக்கவராக விளங்கியமையும் காரணமாகும். சிறிது காலமாக ஹெர்னியா எனப்படும் குடலிறக்க நோயினால் அவதியுற்ற சுனிலுக்கு தமது தொழிலின் போது இந்த நோய் தடையாக அமையக் காரணம் பாரம் சுமப்பதில் ஏற்படுகின்ற அசௌகரிய நிலைமையேயாகும். எனவே தனது இந்நோய்க்கு சிகிச்சையளிக்கும் பொருட்டு கண்டி வைத்தியசாலையில் சத்திர சிகிச்சை ஒன்றினை மேற்கொள்வதற்காக வைத்தியர் ஒருவரை சந்தித்து அவரது பரிந்துரையின் படி 2016 ஆம் ஆண்டு 27 ஆம் திகதி வைத்தியசாலையில் அனுமதிக்கப்படுகிறார். அதற்கு இரண்டு நாட்களுக்குப் பிறகு அவரது சத்திர சிகிச்சையை மேற்கொண்ட வைத்தியர்கள் மறுதினம் வைத்தியசாலையில் இருந்து வெளியேறுவதற்கு பரிந்துரைத்த போதிலும் சுனில் அவ்வாறு வீட்டுக்கு செல்லாமல், தன்னால் தாங்கிக் கொள்ள முடியாத வேதனைக்குத் தீர்வொன்றினை பெற்றுத் தருமாறு வைத்தியர்களிடம் மன்றாடி நின்றார்.

## வைத்தியர்களின் கரிசனையின்மை

‘‘கணவர் வைத்தியசாலையில் அனுமதிப்பதற்காக செல்லும் போது நன்றாகவே நடந்து சென்றார். கணவர் தனியாக சவரம் செய்து கொண்டு குளித்துவிட்டே சென்றார். அவர் வைத்தியசாலைக்கு செல்வதற்கு முதல் நாள் திருமண நிகழ்வொன்றுக்காக சுமார் இருநூறு பேருக்கு உணவு சமைத்தார். ஹெர்னியா ஆபரேஷன் என்பது மிகச் சிறிய ஒரு ஆபரேஷனாகும். அதனை செய்து விட்டு மறுநாள் வீட்டுக்கு செல்ல முடியுமென

வைத்தியர்களும் தெரிவித்தனர். அறுவைச் சிகிச்சையின் பின்னர் கணவரை வார்ட்டுக்கு அழைத்து வந்தனர். சுயநினைவு திரும்பியதும் அவர் வயிற்று வலியால் அவதியுறத் தொடங்கினார். நான் வைத்தியரிடம் சென்று, ஐயோ சற்று பாருங்கள் என்று கூறினேன்.

''சத்திர சிகிச்சை செய்தால் அப்படித்தான், ஆணொருவர் அல்லவா? பொறுத்திருக்கச் சொல்லுங்கள், இல்லையென்றால் சூப்பி ஒன்றை வாயில் வையுங்கள். என்று வைத்தியர் என்னைத் திட்டினார்.'' திருமதி ஜே.ஜே. ஜெஸ்மின் அவ்வாறு தெரிவித்தர்.

சத்திரசிகிச்சையின் பின்னர் வைத்தியசாலையில் இருந்து வெளியேறுமாறு அறிவிக்கப்பட்டிருந்த சுனில், வைத்தியர்களால் சத்திரசிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டது 2016 ஜூலை 01 ஆம் திகதியாகும். அதன் பின்னர் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்ட அவர் 06 ஆம் திகதி நிரந்தரமாக இவ்வுலகை விட்டுப் பிரிந்து சென்றார், மனைவி ஜெஸ்மின் மற்றும் மூன்று பிள்ளைகளையும் இவ்வுலகில் தனிமைப்படுத்திவிட்டு. நான்றாகப் பேசி நகைச்சுவையாக உரையாடியவாறு ஹெர்னியா சத்திர சிகிச்சையை மேற்கொள்வதற்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட தனது கணவரின் மரணமானது வைத்தியர்களின் தவறினால் இடம்பெற்றது என்ற குற்றச்சாட்டினை முன்வைத்ததோடு இது தொடர்பான பொலிஸ் விசாரணை ஆரம்பிக்கப்பட்டது. மரண விசாரணையை கண்டி வைத்தியசாலையில் மேற்கொள்வதற்கு முதலில் தனது எதிர்ப்பினை தெரிவித்த அவர் சட்ட வைத்திய அதிகாரியின் மூலமாக நீதி நிலைநாட்டப்படும் என்ற நம்பிக்கை ஏற்பட்டதன் பின்னரே தனது விருப்பத்தினைத் தெரிவித்துள்ளார். அதன்போது மரணத்திற்கான உறுதியான காரணமெதுவும் அறிவிக்கப்படாது திறந்த தீர்ப்பொன்று வழங்கப்பட்டு சுனிலின் உடற்பாகங்கள் கூடுதல் விசாரணைகளுக்காக அரச இரசாயண பகுப்பாய்வாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டமையானது ஜெஸ்மினின் சந்தேகத்தினை மேலும் அதிகரிப்பதற்கு ஏதுவாகியது.

## வைத்திய அறிக்கைகளை மூடி மறைத்தல்

''வைத்தியர்களின் தவறின் காரணமாகவே எனது கணவர் எதிர்பாராத வகையில் மரணமடைந்தார். வேறொரு நபருக்கும் இந்த நிலைமை ஏற்படாதிருக்க வேண்டுமெனில், நான் அதற்காகப் போராட வேண்டுமென சிந்தித்தேன். அதற்காக கணவரின் மருத்துவ சிகிச்சை அறிக்கைகள் தொடர்பான தகவல்கள் எனக்கு அவசியமாகவிருந்தது. ஆனால் அவற்றைப் பெறுவதோ கடினமான ஒரு விடயமாக காணப்பட்டது. என்னை அலைக்கழித்து தகவல்களை மூடி மறைக்கும் பணியினையே வைத்தியசாலை அதிகாரிகள் மேற்கொண்டனர். இப்படியானதொரு சந்தர்ப்பத்தில் தான் எனக்கு கண்டியிலுள்ள மனித உரிமைகள் அலுவலகத்தினூடாக தகவல் சட்டம் பற்றி அறியக் கிடைத்தது. தகவல் சட்டம் இல்லையெனில், எனது கணவரின் மரணத்திற்கான நீதியை நிலைநாட்ட நான் முன்னெடுத்த போராட்டத்தினை இடையில் நிறுத்த வேண்டியிருக்கும்'' ஜெஸ்மின் தெரிவித்தார்.

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட தினத்திலிருந்து மரண விசாரணை இடம்பெற்ற காலப்பகுதி வரையில் தமது கணவருக்கு வைத்தியசாலையில் வழங்கப்பட்ட சிகிச்சை உட்பட மேற்கொள்ளப்பட்ட பரிசோதனை அறிக்கைகள் தொடர்பிலான சகல தகவல்களும் தற்போது ஜெஸ்மின் வசமுள்ளது. அவற்றைப் பெற்றுக்கொள்வதற்கு அவர் நடாத்திய போராட்டம் மிக இலகுவானதாக அமையவில்லை. அதைப் பற்றி அவர் இவ்வாறு விபரிக்கின்றார்.

‘‘கணவரின் மரணம் தொடர்பில் எழுந்த சந்தேகத்தின் காணரமாக நான் அவரது வைத்திய அறிக்கைகளை தருமாறு வைத்தியசாலை தரப்பினரிடம் கேட்டேன். கண்டி வைத்தியசாலையின் சட்ட வைத்திய அதிகாரியை சந்தித்த போது அவர் தெரிவித்ததாவது, சகல அறிக்கைகளும் வைத்தியசாலையால் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன பொலிஸார் சம்பவம் தொடர்பில் நீதிமன்றத்திற்கு அறிக்கையிட்டிருந்தனர். பிறகு நான் மோஷன் ஒன்றினை சமர்ப்பித்து ஆவணக் கோப்பை பெற்றுக் கொண்டேன். அதில் எந்தவொரு அறிக்கையும் இருக்கவில்லை. எனக்கு கிடைத்ததோ வெறும் வெற்று ஆவணமே. எனது கணவர் ஆயுள் காப்புறுதி ஒன்றினையும் பெற்றிருந்தார். அந்த காப்புறுதி பணத்தைப் பெறுவதற்குக் கூட எந்தவொரு அறிக்கையையும் வைத்தியசாலையால் எனக்கு பெற்றுத் தரவில்லை. இந்த அறிக்கைகளைப் பெறுவதற்கு வைத்தியசாலையில் ஓர் இடம் உள்ளது. அங்கு சென்று கேட்கும் போதெல்லாம், அவை அனைத்தும் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்றே கூறப்பட்டது. அதன் போது நான் பதிவாளரை சந்திப்பதற்கு நீதிமன்றத்திற்கு செல்வேன். அந்த இடத்தில் அப்படி எதுவும் அனுப்பவில்லை என்று கூறுவார்கள். மீண்டும் வைத்தியசாலைக்குச் சென்று விசாரிக்கின்ற போது, பதிவாளர் ஆவணக் கோப்பினைப் பெற்றுக் கொண்டு கையொப்பமிட்டு முத்திரை பதித்த பத்திரத்தினைக் காண்பிப்பார்கள். நீங்கள் அறிக்கைகளை பெற்றுக் கொண்டதாக வைத்தியசாலையால் முத்திரை பதித்து கடிதம் ஒன்றினையும் வழங்கியுள்ளார்கள். நான் மீண்டும் நீதிமன்றத்திற்கு சென்று பதிவாளரிடம் கூறுவேன் ‘ஜயந்த என்றவொரு நபரே வைத்தியசாலையில் இருந்து அவற்றைக் கொண்டு வந்து நீதிமன்றில் ஒப்படைப்பார். அவரிடம் கேளுங்கள், யாரிடம் ஒப்படைத்தீர்கள் என்று’ பதிவாளர் அலுவலகத்தினால் எனக்கு கூறினார்கள். நான் ஜயந்தவை வைத்தியசாலைக்குச் சென்று தேடியபோது அப்படி ஒருவர் இல்லை என்று தெரிவித்தனர். இவ்வாறு ஒரு வருடத்திற்கும் அதிகமாக அங்கும் இங்கும் அலைக்கழித்தனர். ஒரு மரணம் சம்பவித்து இரண்டு வருடங்கள் செல்வதற்குள் மாவட்ட நீதிமன்றத்தில் நட்ட ஈட்டுக்கான வழக்கினை தாக்கல் செய்யவில்லையெனில், அதன் பின்னர் அதற்கு சந்தர்ப்பம் கிடைக்காது. வழக்கினைத் தாக்கல் செய்வதற்கு எனக்கிருந்ததோ ஆறு மாதங்கள் மத்திரமே. நான் கண்டியிலுள்ள மனித உரிமைகள் அலுவலகத்தின் அருட்தந்தை நந்தன மனதுங்க அவர்களைத் தேடிச் சென்று எனது வேதனைகளை தெரிவித்தேன். அங்கு எனக்கு கிடைத்த வழிகாட்டல் மூலமாக நான் எனது கணவரின் மருத்துவ அறிக்கைகள் உட்பட சகல ஆவணங்களையும் தகவல் சட்டத்தின் வாயிலாகக் கோரி வைத்தியசாலையின் பணிப்பாளருக்கு கடிதம் ஒன்றினை சமர்ப்பித்தேன்.

## தகவல் விண்ணப்பம்

தகவல் சட்டத்தின் கீழ் தகவல் கேட்கப்பட்ட போதிலும் அதற்கு சரியான கவனத்தினைச் செலுத்தாது தகவல் வழங்காதிருப்பதற்கு முயற்சித்த சந்தர்ப்பங்களும் உள்ளன. அந்த சந்தர்ப்பங்களிலும் மீண்டும் மீண்டும் பின்னே துரத்திச் செல்ல வேண்டிய நிலைமை ஏற்பட்டது. அதற்காக சட்டத்தினூடாகவே வலுவான கட்டமைப்பு கட்டியெழுப்பப்பட்டுள்ளது. இறுதியாக தகவலுக்கான உரிமை ஆணைக்குழுவில் மேன்முறையீடு செய்வதற்கான வாய்ப்பும் உள்ளது. அது தொடர்பான வழிகாட்டலையும் மனித உரிமைகள் அலுவலகம் திருமதி ஜெஸ்மின் அவர்களுக்கு வழங்கியிருந்தது.

‘‘கண்டி வைத்தியசாலையின் வாட்டு இலக்கம் 18 கட்டில் தொடரிலக்கம் 101577 இன் கீழ் சிகிச்சை பெற்ற சுனில் ஜயதிஸ்ஸ என்ற நபர் தொடர்பில் மேற்கொள்ளப்பட்டிருந்த

இரண்டு சத்திர சிகிச்சைகள் தொடர்பிலான அறிக்கைகள் உட்பட கசல மருத்துவ அறிக்கைகளினதும் அதற்குரியதான ஸ்கேன் பரிசோதனைகள் மற்றும் ஏனைய பரிசோதனைகளுக்குரியதான அறிக்கைகளையும் அவரை பரிசோதித்த விசேட வைத்திய நிபுனர்கள் தொடர்பிலான விபரங்கள் மற்றும் தகவல்களையும் நான் தகவல் சட்டத்தின் மூலமாக கேட்டிருந்தேன். ஆனாலும் அவை உரிய காலப்பகுதிக்குள் கிடைக்கவில்லை. பிறகு தகவலுக்கான உரிமை ஆணைக்குழுவில் மேன்முறையீட்டை சமர்ப்பித்தேன். அந்த மேன்முறையீடு அவர்களுக்கு கிடைத்தது எனத் தெரிவித்து இரண்டு நாட்களுக்கு பிறகு நான் கோரியிருந்த தகவல்களுள் 99% வைத்தியசாலையினால் எனக்கு பெற்றுக் கொடுக்கப்பட்டது. தகவலுக்கான உரிமை ஆணைக்குழுவினால் குறித்த தகவல்கள் வழங்கப்படாமை தொடர்பில் விசாரணை செய்வதற்காக திகதி அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் அவ்வாறு அங்கு செல்வதற்கான தேவை ஏற்படவுமில்லை.

கண்டி மனித உரிமைகள் அலுவலகம் இந்த விடயத்தில் திருமதி ஜெஸ்மின் அவர்களுக்கு வழிகாட்டல் ரீதியான ஒத்துழைப்பு நல்கிய நிறுவனமாகும். அங்கு கடமையாற்றும் சுரேன் டீ. பெரேரா அவர்கள் இவ்வாறு தெரிவித்தார்.

## தகவல் இல்லையெனில் வழக்கும் இல்லை

மருத்துவ அறிக்கைகள் யாவும் கிடைக்கப்பெற்ற பிறகு நாம் வைத்தியர் ஒருவரிடம் அவை அனைத்தையும் சமர்ப்பித்து மீண்டும் பரிசோதித்துக் கொண்டதன் பின்னர் மேல் நீதிமன்றத்தில் வழக்கினைத் தாக்கல் செய்தோம். இந்த ஆவணங்கள் இல்லாமல் வழக்கினைத் தாக்கல் செய்யும் இயலுமை இருக்கவில்லை. உண்மையாக இது தகவல் சட்டத்தினால் நாம் பெற்ற பாரிய வெற்றியாகவே கூற வேண்டும். வைத்தியசாலையில் என்ன நடந்தது என்று எமக்கு தெரியாது. இவ்வாறு கிடைத்த தகவல்கள் மூலமாகவே சுனிலுக்கு வைத்தியசாலையில் என்ன நடந்தது என்ற விடயத்தினை நாம் புரிந்து கொள்வதற்கான சந்தர்ப்பம் கிடைக்கின்றது. சுனில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட தினத்திலிருந்து மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகள், சத்திரசிகிச்சை மற்றும் பரிசோதனைகளுக்குரியதான அறிக்கைகள் தொகுதியொன்று எமக்கு இதனூடாகக் கிடைத்தது. எமது நாட்டில் தற்போது பயன்பாட்டிலுள்ள அதிகமான சட்டங்கள் காலனித்துவ காலப்பகுதியில் உருவாக்கப்பட்டவையாகும். இவற்றுள் அதிகமான சட்டங்கள் எங்களைக் கட்டுப்படுத்தவே பயன்படுத்தப்படுகின்றன. தகவல் சட்டம் என்பது மக்களுக்காக உருவாக்கப்பட்ட ஒரு சட்டம் என்று கூறுவது மிகப் பொருந்தும். எமது இறையாண்மை அதிகாரத்தினையே அரசியல்வாதிகள் பாராளுமன்றத்திற்குச் சென்று நடைமுறைப்படுத்துகின்றனர். அரசியல்வாதிகள் உட்பட அரச பொறிமுறை இதனை சரியாக நடைமுறைப்படுத்துகின்றனரா? என்று ஆராய்ந்து பார்ப்பதற்கு எமக்கிருக்கின்ற சட்ட ரீதியான உரிமையாக தகவல் சட்டத்தினை சுட்டிக்காட்ட முடியும்''.

இந்த சமூகம் வைத்தியர்களை கடவுளர்களாக மதிக்கின்றது. நாம் நோயுற்றுள்ள போது அவர்கள் எமக்கு வாழ்வளிப்பதால் அவ்வாறு மதிக்கப்படுகின்றனர். எனினும் கவனமின்மை மற்றும் இடம்பெறுகின்ற தவறுகள் காரணமாக வைத்தியர்களாலேயே நோயாளி ஒருவர் மரணத்தை அடையும் சந்தர்ப்பங்களும் காணப்படுகின்றன. இந்நாட்டின் வைத்தியசாலைக் கட்டமைப்பில் அவ்வாறான மரணங்கள் இடம்பெறுவதில்லையென எம்மால் கூற முடியாது. வைத்தியசாலையில் மரணமொன்று இடம்பெறுகின்ற போது அது தொடர்பான உண்மையை அறியும் பொருட்டு தகவல்களை நாம் பெற வேண்டியிருப்பதோ

வைத்தியர்களிடமேயாகும். அதன் போது தொழிற்றுறை நண்பர்களை பாதுகாப்பதற்கு வைத்தியர்கள் செயற்படுவார்களென மக்கள் மத்தியில் நியாயமான சந்தேகமொன்று நிலவுகின்றது. சுனிலின் மரணம் தொடர்பிலான சம்பவத்திலும் அவ்வாறானதொரு பின்னணி இருப்பதாக அவரது மனைவி மற்றும் பிள்ளைகளுக்கு நியாயமான சந்தேகம் ஏற்படக் காரணம், வைத்தியசாலை அதிகாரிகள் தொடர்ச்சியாக வைத்திய அறிக்கைகளை பெற்றுக் கொடுக்காமையேயாகும். தகவல் அறிவதற்கான உரிமைச் சட்டம் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லையெனில், சுனிலின் மனைவிக்கு நீதிமன்றத்தில் சிவில் வழக்கினை தாக்கல் செய்வதற்கிருந்த சந்தர்ப்பம் கிடைக்காது போயிருக்கலாம்.

‘‘எனது கணவர் இறந்த பிறகு எனது மூன்று பிள்ளைகளுடன் நான் சொல்லெனாத் துன்பங்களை அனுபவித்தேன். ஒருவரது பிரிவு இன்னுமொருவரது வாழ்க்கையை முழுவதுமாக வீழ்ச்சியுற வைப்பதற்கு ஏதுவாக அமைய முடியும். எனவே நாம் எப்போதும் வாழ்க்கையின் பெறுமதியை உணர்ந்து செயற்படுதல் வேண்டும். இப்படியான சம்பவங்கள்இனிமேல் இடம்பெறுவதனை தடுப்பதே எனது தேவையாக இருந்தது. கணவரின் மரணம் தொடர்பான வழக்கு விசாரணை எதிர்வரும் மார்ச் மாதம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது. தகவல் சட்டம் பற்றி கண்டி மனித உரிமைகள் அலுவலகத்தினால் அறியக் கிடைக்காதிருந்தால் என்னால் எனது கணவருக்கு நீதியை நிலைநாட்ட ஒருபோதும் முடியாமல் போயிருக்கும்’’. சுனிலின் மனைவி ஜெஸ்மின் தெரிவித்தார்.

- *அசேல குருலுவன்ச*

---

***அசேல குருலுவன்ச:*** *லேக் ஹவுஸ் நிறுவனத்தின் கண்டிப் பிரதேச பதிப்பாசிரியர். சுமார் 22 வருட காலமாக ஊடகத் துறையில் செயற்திறனுடன் ஈடுபட்டுள்ள அவர் சிறப்புக் கட்டுரை எழுத்தாளராக தனித்துவமான பணியை மேற்கொள்கின்றார். ஊடகப் பயிற்றுவிப்பாளராகவும், பணியாற்றுகின்ற அவர் மோதல் அறிக்கையிடல் தொடர்பில் கற்பதற்காக அமெரிக்க தூதரகத்தினால் வழங்கப்பட்ட சுற்றுப் பயணத்தில் 2019ல் கலந்து கொண்டார்.*

# மலையகப் பெருந்தோட்ட வீடமைப்புக் கருத்திட்டங்கள் பல கைவிடப்பட்டுள்ளன

## முடித்து வைக்கப் பணம் ஒதுக்கப்படவில்லை

மலையகப் பெருந்தோட்டங்களில் முன்னெடுக்கப்பட்ட இந்திய வீட்டுத்திட்டங்கள் மற்றும் முன்னாள் மலைநாட்டு புதிய கிராமங்கள் உட்கட்டமைப்பு அமைச்சினால் முன்னெடுக்கப்பட்ட தனிவீட்டுத்திட்டங்கள் தொடர்பில் தொடர்ச்சியாக சர்ச்சைக்குரிய கருத்துக்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. கடந்த அரசாங்கத்தில் முன்னெடுக்கப்பட்ட பல அபிவிருத்தி திட்டங்கள் தற்போதைய அரசாங்கத்தில் முன்னெடுக்கப்படாமலும் கைவிடப்பட்ட நிலையிலும் இருப்பது கவலைக்குரியதாகும்.

அந்தவகையில் மஸ்கெலியா பிரவுன்சிவிக், எமலினா தோட்டத்தில் 2017 ஆம் ஆண்டு மலைநாட்டு புதிய கிராமங்கள் உட்கட்டமைப்பு மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சினால் முன்னெடுக்கப்பட்ட தனிவீட்டுத் திட்டம் தற்போது கைவிடப்பட்டுள்ள நிலையில் காணப்படுகின்றது. முன்னாள் அமைச்சர் பழனி திகாம்பரம் தேர்தலில் வெற்றிபெற்றவுடன் மஸ்கெலியா பிரதேச மக்களுக்கு வழங்கிய தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்காக 2017 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் சூறாவளி சுற்றுப்பயணத்தை மேற்கொண்டு பல்வேறு அபிவிருத்தி திட்டங்களை ஆரம்பித்து வைத்திருந்தார்.

இதன்போது குடிநீர், பாதைகள், மைதானங்கள், வீடமைப்புத் திட்டங்களுக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வுகள் ஆரம்பிக்கப்பட்டன. காட்மோர் தோட்டத்தில் லார்ச்பீல்ட், மொக்கா கீழ் பிரிவு, லங்கா டிவிசன், கெஸ்கீபன் டிவிசன், எமலினா டிவிசன், புளும்பீல்ட் டிவிசன், குயின்ஸ்லேண்ட் டிவிசன், மஸ்கெலியா சண்முகநாதர தேவஸ்தான கலாசார மண்டபம், கங்கேவத்தை, லக்சபான சென் அன்றூஸ் கீழ்ப்பிரிவு, லக்ஸபான டிவிசன், நயின்சா தோட்டம் ஆகியன உட்பட 15 பகுதிகளில் வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

இவற்றில் மஸ்கெலியா எமலினா தோட்டத்தில் இயற்கை அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட 18 குடும்பங்களுக்கான தனி வீடுகள் அமைக்கும் திட்டமும் ஒன்றாகும். குறித்த திட்டம் 2017 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு 2018 ஆம் ஆண்டு நிறைவு செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் 2021 ஆம் ஆண்டு வரையான 4 வருடகால

நிறைவிலும் குறித்த திட்டத்தை நிறைவு செய்வதற்கு எவ்வித நடவடிக்கையும் முன்னாள் அமைச்சர் பழனி திகாம்பரத்தினாலும் தற்போதைய இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமானினாலும் எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை.

இவ்விடயம் தொடர்பாக தோட்ட வீடமைப்பு மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சிடம் தகவல் அறியும் உரிமைச்சட்டத்தின் ஊடாக முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளுக்கு அமைவாக பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களின் அடிப்படையில், இயற்கை அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட எமலினா தோட்டத்திலுள்ள 18 குடும்பங்களுக்காக தனி வீட்டுத்திட்டத்தினை முன்னெடுப்பதற்காக பிரவுன்ஸ்விக் தோட்ட முகாமையாளரால் வழங்கப்பட்ட 5E இலக்கமுடைய தோட்ட காணியில் 10 வீடுகளை மாத்திரம் கட்டுவதற்கு தேசிய கட்டிட ஆராய்ச்சி நிலையம் அனுமதி வழங்கியுள்ளது. எனினும் குறித்த பகுதியில் 18 வீடுகளை கட்டுவதற்கு அமைச்சினால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அவ்வாறெனின் இவற்றின் மூலம் இடம்பெறும் அனர்த்தங்களுக்கு யார் பொறுப்பேற்பது?

அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட எமலினா தோட்டத்தில் வசிக்கும் 18 குடும்பங்களுக்காகவே குறித்த வீட்டுத்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ள நிலையில் தேசிய கட்டிட ஆராய்ச்சி நிலையத்தின் அறிவுறுத்தல்களை மீறி செயற்படுவது நியாயமானதா? இதேவேளை பூண்டுலோயா டன்சினன் பகுதியில் இந்திய அரசாங்கத்தின் நிதியுதவியில் நிர்மாணிக்கப்பட்ட இந்திய தனி வீட்டுத்திட்டமானது, அண்மையில் மலையகப் பகுதிகளில் ஏற்பட்ட சீரற்ற காலநிலையின் காரணமாக பாரிய பாதிப்பினை எதிர்கொண்டுள்ளன. எனவே இதுவரை மலையகத்தில் அமைக்கப்பட்டுள்ள வீட்டுத்திட்டங்களின் தேசிய கட்டிட ஆராய்ச்சி நிலையத்தின் அனுமதி தொடர்பில் ஆராய வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. எனினும் இவை தொடர்பாக தேசிய கட்டிட ஆராய்ச்சி நிலையத்துக்கு தகவல் அறியும் உரிமைச்சட்டத்தின் மூலம் 2020.09.15 திகதி தகவல் கோரிக்கை முன்வைக்கப்பட்ட நிலையிலும் தகவல் வழங்கப்படுவது தொடர்ந்தும் தாமதிக்கப்பட்டு வருகின்றது.

பெருந்தோட்டக் காணிகள் அரசாங்கம் மற்றும் பெருந்தோட்ட கம்பனிகளுக்குச் சொந்தமானவையாக இருப்பதால் தனிவீட்டுத்திட்டத்தினை பூர்த்திசெய்வதற்கு காணிகளை பெற்றுக்கொள்வதில் பாரிய சிக்கல் காணப்படுகின்றது. தோட்ட நிர்வாகங்களினால் வழங்கப்படும் பெரும்பாலான காணிகள் விளைச்சல் குறைவான பகுதியாக காணப்பட்டாலும் தற்போதைய குடியிருப்பு தொகுதிகளில் இருந்து வெகுதூரத்தில் காணப்படுகின்றன. இதனால் அவற்றுக் புதிதாக உட்கட்டமைப்பு வசதிகளை முன்னெடுக்க வேண்டிய தேவை காணப்படுகின்றது. பெருந்தோட்டங்களில் முன்னெடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்ட வீட்டுத்திட்டங்களில் பெரும்பாலானவை காணி பிரச்சினைகளினால் இழுபறியினை எதிர்கொண்டுள்ளனர். எனவே வீட்டுத்திட்டங்களுக்கு காணிகளை வழங்கும் பொறுப்பு தோட்ட நிர்வாகத்திடம் காணப்படுவதால் அனுமதிக்கப்படும் நிலங்களிலேயே வீடுகளை அமைக்க வேண்டிய தேவை காணப்படுகின்றது.

அதேவேளை தேசிய கட்டிட ஆராய்ச்சி நிலையத்தினால் வழங்கப்பட்ட அறிக்கையினை தகவல் அறியும் உரிமைச்சட்டத்தின் மூலம் கோரிய போதும் தெளிவான பிரதி வழங்கப்படவில்லை. இதனால் அவற்றில் இருக்கும் மேலதிக குறைபாடுகள் தொடர்பில் எம்மால் அறிய முடியாதுள்ளது. எமலினா தோட்ட தனி வீடமைப்புத் திட்டத்துக்காக ஒரு வீட்டுக்கு ஒரு மில்லியன் ரூபா என்ற அடிப்படையில் 18 வீடுகளுக்கு 18 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இவற்றுக்கும் மேலதிகமாக குடிநீர் திட்டத்துக்காக 2,375,047.64 ரூபாவும் மின்சார இணைப்புக்காக 763,055.12 ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மின்சார இணைப்புக்கான கட்டணம் செலுத்தப்பட்டுள்ள நிலையிலும் இணைப்புகள் இன்னும் வழங்கப்படவில்லை. அதேவேளை தனிவீட்டுத்திட்டம் முழுமை பெற்றால் மாத்திரமே இணைப்புகள் வழங்கப்படும் சாத்தியம் இருக்கின்றது. 18 வீடுகளுக்காக ஒதுக்கப்பட்ட 18 மில்லியன் ரூபாவும் முழுமையாக செலவு செய்யப்படவில்லை. மேலதிக நிதிக்கு என்ன நடந்தது என்பது தெரியவில்லை.

அத்துடன் பாதை அபிவிருத்திக்கான நிதி ஒதுக்கப்படவில்லை. பெருந்தோட்ட பகுதிகளில் முன்னெடுக்கப்படும் பிரதான குறைபாடுகளாக உட்கட்டமைப்பு வசதிகள் காணப்படுகின்றன. வீடுகள் மாத்திரம் அமைத்து கொடுக்கப்பட்டாலும் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகள் முன்னெடுக்கப்படுவது இல்லை. இதனால் தனி வீட்டுத்திட்டங்களிலும் மக்கள் குறைபாடுகளுடன் வாழ வேண்டிய நிர்பந்தம் காணப்படுகின்றது. சிலர் தனிவீடுகள் வழங்கப்பட்டாலும் உட்கட்டமைப்பு வசதிகள் இல்லாமையினால் அங்கு சென்று வசிப்பதும் இல்லை.

எமலினா தோட்ட தனி வீட்டுத் திட்டத்தினை 2017 ஆம் ஆண்டு ஆரம்பித்து 2018 ஆம் ஆண்டு நிறைவு செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் 4 வருடங்கள் கடந்துள்ள நிலையிலும் வீட்டுத்திட்டம் இன்னும் பூர்த்தி செய்யப்படவில்லை. குறித்த வீட்டுத்திட்டத்தினை நிறைவு செய்வதற்கு தோட்ட வீடமைப்பு மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சினால் மேலதிக நிதி ஒதுக்கீடுகள் நிதி அமைச்சிடம் கோரப்பட்டுள்ள நிலையிலும் அவை இன்னும் வழங்கப்படவில்லை. மேலதிக நிதி ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டால் வீட்டுத்திட்டம் நிறைவுசெய்யப்படுமென தெரிவிக்கப்பட்டுள்ளது. 2022 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தில் மலையகத்தில் வீடுகளை அமைப்பதற்கு 500 மில்லியன் ரூபா ஒதுக்குவதாக முன்மொழிவு மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஏற்கனவே அமைச்சினால் ஆரம்பிக்கப்பட்டு தற்போது கைவிடப்பட்டுள்ள நிலையிலுள்ள வீடுகளுக்கு தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதற்கான நிதி ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்படவில்லை. எனினும் கடந்த காலங்களிலும் மலையகத்தில் வீடுகளை அமைப்பதற்காக வரவு – செலவுத் திட்டத்தில் முன்மொழியப்பட்ட விடயங்கள் எவையும் நிறைவேற்றப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

நாட்டில் தற்போதுள்ள நிதி நெருக்கடிகள் காரணமாக புதிய அபிவிருத்திகளை மேற்கொள்வது மற்றும் முன்னெடுக்கப்பட்டுள்ள அபிவிருத்திகளை பிற்போடுவது போன்ற நடைமுறைகளை பின்பற்றுவதற்கு நிதி அமைச்சு தீர்மானித்துள்ளது. இதனால் தனி வீட்டுத்திட்டத்தினை நிறைவு செய்வதற்கு மேலதிக நிதி ஒதுக்கப்படுவதில் சந்தேகம் எழுந்துள்ளது. எமலினா வீட்டுத்திட்டத்தில் 13 வீடுகளுக்கான சுவர்கள் எழுப்பப்பட்டுள்ள நிலையில் 5 வீடுகளுக்கு சுவர் எழுப்பும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் இவை 4 வருடங்களுக்கு முன்னர் இடம்பெற்ற பணியாகும். தற்போது அங்கு எவ்வித அபிவிருத்திகளும் மேற்கொள்ளப்படவில்லை. இதேவேளை மேலதிக நிதி ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்படாமையினாலேயே வீட்டுத்திட்டம் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இயற்கை அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட எமலினா தோட்டத்தின் 18 குடும்பங்களுக்கே இவ்வீட்டுத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. வீட்டுத்திட்டத்துக்கான பயனாளிகள் தொடர்பில் பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியமும் தோட்ட முகாமைத்துவமுமே தீர்மானங்களை மேற்கொண்டுள்ளன. தற்போது வீட்டுத்திட்டம்

நிறைவு பெறாமையினால் 18 குடும்பங்களும் மீண்டும் அபாயகரமான குடியிருப்புகளிலேயே வாழ நிர்பந்திக்கப்பட்டுள்ளன. இதனால் அவர்கள் மீண்டும் அனர்த்தத்தினை எதிர்கொள்ள வேண்டிய வாய்ப்பு காணப்படுகின்றது.

முன்னாள் மலைநாட்டு புதிய கிராமங்கள் உட்கட்டமைப்பு மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சின் நிதி ஒதுக்கீடுகளின் மூலம் முன்னெடுக்கப்பட்ட தனி வீட்டுத்திட்டங்கள் பல இன்று கைவிடப்பட்ட நிலையிலேயே இருக்கின்றன. மேலதிக நிதி ஒதுக்கீடுகள் இல்லாமை, ஒப்பந்ததாரர்களுக்கு ஒப்பந்த தொகை வழங்கப்படாமை மற்றும் ஒப்பந்ததாரர்களினால் முழுமையான அபிவிருத்தி திட்டங்கள் முன்னெடுக்கப்படாமை போன்ற பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளன. அமைச்சினால் முன்னெடுக்கப்பட்ட வீட்டுத்திட்டங்களுக்கான மேலதிக நிதியினை கடந்த அரசாங்கத்திலேயே பெற்று நிறைவு செய்வதற்கான வாய்ப்புகள் அதிகம் காணப்பட்டன. ஆனால் இந்திய வீட்டுத்திட்டங்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டளவுக்கு அமைச்சினால் முன்னெடுக்கப்பட்ட தனி வீடுகள் தொடர்பில் கவனம் செலுத்தப்படவில்லை.

இந்திய வீட்டுத்திட்டங்கள் கட்டிட அளவில் முழுமை பெற்றமைக்கு அங்கீகரிக்கப்பட்ட மற்றும் சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிறுவனங்களுக்கு ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டமை பிரதான காரணமாகும். ஆனால் அமைச்சினால் வழங்கப்பட்ட ஒப்பந்ததாரர்கள் அமைச்சின் தனிப்பட்ட பிரதிநிதிகள் மற்றும் நெருக்கமானவர்களுக்கு வழங்கப்பட்டமையினால் அவை முழுமையாக பூரணப்படுத்தப்படவில்லை. தற்போதும் அமைச்சினால் முன்னெடுக்கப்பட்ட வீட்டத்திட்டங்கள் தொடர்பில் எவ்வித முன் ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்படவில்லை. புதிய அரசாங்கம் ஏற்படுத்தப்பட்டு இரு வருடங்கள் கடக்கின்ற நிலையிலும் தற்போதே சுமார் 1300 இந்திய வீட்டுத்திட்டங்களுக்கு உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டு இருக்கின்றன.

மேலதிகமாக சுமார் 12,500 இந்திய வீட்டுத்திட்டங்கள் மற்றும் அமைச்சினால் முன்னெடுக்கப்பட்டுள்ள தனி வீட்டுத்திட்டங்கள் மீண்டும் முன்னெடுக்கப்பட்டு உட்கட்டமைப்பு வசதிகள் பூர்த்தி செய்யப்பட்டு பயனாளிகளுக்கு கையளிக்கப்படுவதற்கு எத்தனை வருடங்கள் செல்லும் என்பது தெரியவில்லை. அதற்குள் எத்தனை லயன்கள் இயற்கை அனர்த்தங்களுக்கு உள்ளாகி பாதிக்கப்படும் என்பதும் தெரியவில்லை. மலையகப் பெருந்தோட்டங்களுக்காக தற்போது முன்னெடுக்கப்படும் தனி வீட்டுத்திட்டங்கள் மிகவும் சொற்பளவானவையே. முழு பெருந்தோட்ட மக்களும் தனி வீடுகளை பெற்றுக்கொள்வதற்கு இன்னும் 50 வருடங்கள் ஆகலாம். இல்லை முடியாமலே போகலாம்.

தோட்ட வீடமைப்பு மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சின் 2020 ஆம் ஆண்டுக்கான செயலாற்றுகை அறிக்கையின்படி, பெருந்தோட்டங்களில் 39,799 தனி வீடுகள் மாத்திரமே (2020.12.31) அமைக்கப்பட்டுள்ளன. 29,567 இரட்டை வீடுகளும் 73,130 தனி தொடர் லயன் வீடுகளும் 68,628 இரட்டை தொடர் லயன் வீடுகளும் 1637 மாடி தொடர் லயன் வீடுகளும் 15,480 தற்காலிக குடில்களும் காணப்படுகின்றன. எனவே தற்போதை நிலையில் பெருந்தோட்ட மக்களுக்கு சுமார் 186,805 தனி வீடுகளுக்கான தேவை காணப்படுகின்றது. ஆனால் 2022 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்ட முன்மொழிவின் மூலம் சுமார் 500 வீடுகளை மாத்திரமே முன்னெடுக்க முடியும். இந்நிலைமையில் 2050 ஆம் ஆண்டில் கூட பெருந்தோட்ட மக்களுக்கான தனிவீட்டு கனவு நனவாகுமா? என்பது கேள்வியாகவே இருக்கின்றது.

இதேவேளை இந்திய அரசாங்கத்தின் நிதியுதவியில் நிர்மாணிக்கப்பட்ட டிக்கோயா கிளங்கன் வைத்தியசாலையினை திறந்து வைக்கும் நிகழ்வுக்கு இந்திய பிரதமர் நரேந்திர மோடி வருகைத்தந்த போது மலையக பெருந்தோட்ட மக்களுக்கு மேலதிகமாக 10,000 தனி வீடுகளை அமைப்பதற்கான ஆணையை வழங்கியிருந்தார். 4000 வீடுகளை அமைக்கும் நடவடிக்கையில் ஏற்பட்ட சிக்கல்களை தீர்ப்பதற்கே ஆறு வருடங்கள் கடந்துள்ள நிலையில் 10,000 வீடுகள் அமைக்கும் பணிகள் இன்னும் ஆரம்பிக்கப்படவேயில்லை. இந்திய அரசாங்கம் வழங்கிய 10,000 வீடுகளில் 2021 ஆம் ஆண்டு 3025 வீடுகளும் 2022 ஆம் ஆண்டு 3944 வீடுகளும் 2023 ஆம் ஆண்டு 2531 வீடுகளும் என மொத்தமாக 9500 வீடுகள் நிறைவுசெய்யப்பட்டு பயனாளிகளுக்கு கையளிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது. இவற்றில் மேலதிகமாகவுள்ள 500 வீடுகள் தொடர்பில் எவ்வித தகவல்களும் வழங்கப்படவில்லை. 500 வீடுகளுக்கு என்ன நடக்கும் என்பதும் தெரியவில்லை.

இந்திய அரசாங்கம் தனி வீடுகளை நன்கொடையாக வழங்காவிட்டால் பெருந்தோட்ட மக்கள் தனி வீடுகளை பெற்றுக்கொள்வது பாரிய அளவில் சாத்தியமாக இருக்காது. காரணம், பெருந்தோட்ட மக்களுக்காக ஒதுக்கப்படும் அமைச்சினால் பாரிய எண்ணிக்கையிலான தனி வீட்டுத்திட்டங்கள் முன்னெடுக்கப்படுவதில்லை. அவ்வாறு முன்னெடுக்கப்படும் தனி வீட்டுத்திட்டங்களும் அடுத்து அமையும் அரசாங்கத்தினால் கைவிடப்படுகின்றன. எனவே வீட்டுத்திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டிவிட்டு விளம்பரம் கொடுப்பதை விடுத்து அவற்றை நிறைவு செய்து பயனாளிகளுக்கு கையளிப்பதே நடைமுறைக்கு உகந்தது.

- **கே. பிரசன்னா**

---

***கே. பிரசன்னா :*** *தினக்குரல் பத்திரிகையின் ஊடகவியலாளர். பேராதனைப் பல்கலைக் கழகத்தின் பட்டதாரியாவார். பத்து வருடங்களாக வெகுசன ஊடகவியலில் ஈடுபட்டுள்ள அவர் ஊழலுக்கெதிரான வெகுசன ஊடகவியலாக்கத்திற்கு தகவல் உரிமையைப் பயன்படுத்துவது தொடர்பில் விசேட ஆர்வம் காட்டுபவர். 2018 வெகுசனத் திறமைகளுக்கான விருது வழங்கும் விழாவில் தகவல் உரிமையைப் பயன்படுத்தி மேற்கொண்ட சிறந்த அறிக்கையிடலுக்கான விருதுக்குப் பாத்திரமான அவர், 2019ல் வெகுசன ஊடக அமைச்சினால் நடத்தப்பட்ட பிரசைகள் அபிமன் விழாவில் சுவுஜ பிரஜா உரிமைக்கான விருதினைப் பெற்றார்.*

# சித்திரவதைக்கு எதிரான சட்டம் பெயரளவில் மாத்திரமா ?

**இரண்டு வருடங்களில் 800 முறைப்பாடுகள் சட்டமா அதிபரால் 07 வழக்குகள் மாத்திரமே தாக்கல் செய்யப்பட்டுள்ளன.**

ஒருவரை சித்திரவதைக்கு உட்படுத்துவதால் அவருடைய மனித உரிமைகள் மீறப்படுவது முழு மனித வரலாற்றிலுமே காணக்கூடியதாகவுள்ளது. புராதன இலங்கையில் காணப்பட்ட முப்பத்திரண்டு சித்திரவதை வகைகள் பற்றிக் குறிப்பிடப்படுகின்றது. அக்காலத்தில் அரசர்களால் சித்திரவதைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளதுடன், அவை சட்ட ரீதியாகவும் கருதப்பட்டது. ஆனாலும் அவை மிகவும் கொடூரமான மனிதநேயமற்ற செயலாவதுடன், இழிவான முறையில் நடைமுறைப்படுத்தப்பட்டும் உள்ளன. சிங்கள அரசர் காலத்தில் வழங்கப்பட்டுள்ள சித்திரவதைகள் தொடர்பாக ரொபர்ட் நொக்ஸ் அவர்கள் தனது ''எதா ஹெல திவ'' (அன்றைய இலங்கைத் தீவு) எனும் நூலில் குறிப்பிட்டுள்ளார். முற்காலத்தில் இலங்கையில் இடம்பெற்ற சித்திரவதைகளைத் தடுப்பதற்காக உருவாக்கப்பட்டிருந்த சட்ட ஏற்பாடுகள் 'டெம் கட்டுரைகள்' மற்றும் ''கல்வெட்டு'' ஆவணங்களிலும் குறிப்பிடப்பட்டுள்ளன. ஆனாலும் இவை முறைசார்ந்த வகையில் ஆங்கிலேயர்களாலேயே தயாரிக்கப்பட்டுள்ளன. 1815 ஆம் ஆண்டு ஆங்கிலேயர்கள் மற்றும் கண்டிய பிரபுக்களாலும் கைச்சாத்திடப்பட்ட ''கண்டிய ஒப்பந்தத்தின்'' 6 ஆம் உறுப்புரையில் ''உடல் உறுப்புக்களை துண்டித்தல் போன்ற பலவிதமான உடல் ரீதியான சித்திரவதைகளை ஒழிப்பதற்கும் தடை செய்வதற்கும் சபை நடவடிக்கை எடுத்துள்ளது.'' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இது வரலாற்றுக் கதையாகும். சமகாலத்தில் இலங்கையில் பெருகிவருவதும் மூடி மறைக்கப்படுவதுமான சித்திரவதைகள் தொடர்பான கதைகள் பலவற்றைக் கேட்கவும் பார்க்கவும் முடிகின்றது. கூடுதலாக பொலிசாருடன் தொடர்புடையவையே கேட்கக் கிடைக்கின்றது. சிறைச்சாலைகளிலும், பாடசாலைகளிலும் சித்திரவதைகள் தொடர்பாக தினசரி கேட்கக் கூடியதாகவுள்ளது.

## 20 வருடகால முன்னேற்றம் இதுவா?

இலங்கையில் இரண்டாயிரம் ஆண்டு தொடக்கம் சித்திரவதைச் சட்டத்திற்கு ஏற்ப மேல் நீதிமன்றங்களில் வழக்கு விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், அன்றிலிருந்து

சித்திரவதைகளுக்கு ஆளாகியவர்களுக்கு நியாயம் கிட்டியுள்ளதா என தேடி ஆராய்வதற்கு தலையீட்டாளராக கண்டி மனித உரிமைகள் அலுவலகம் முன்வந்துள்ளது. அதன் பணிப்பாளர் அருட்தந்தை மனதுங்க அவர்களின் தலைமையில் அவ் அலுவலகத்தின் செயற்பாட்டாளர் திருமதி. லுசில் அபேகோன் அவர்களால் குறித்த தகவல்கள் தேடி ஆராயப்பட்டிருந்தது. அவர் கூறியதாவது, 1994 ஆம் ஆண்டு 22 ஆம் இலக்க சித்திரவதைகள் சட்டம் பொதுமக்களின் நலனுக்காக சட்டமாக்கப்பட்ட போதிலும், அதன் மூலம் பொதுமக்களின் மனித உரிமைகள் பாதுகாக்கப்படவில்லை எனத் தெரிவித்தார்.

"எதேனுமொரு சட்டக் கட்டமைப்பை நாட்டில் நிறுவிய பின்னர் அவை அரச கொள்கைளில் உள்வாங்கப்பட வேண்டும். கொள்கை ரீதியான தீர்மானங்களின் அடிப்படையில் பொதுமக்களுக்கு நன்மைகள் கிடைக்க வேண்டும். ஆனாலும் இரண்டாயிரம் ஆண்டிலிருந்து இரண்டாயிரத்து இருபத்தோரம் ஆண்டு வரை சித்திரவதைக்கு ஆளாகியவர்களுக்கு சட்டமா அதிபர் அலுவலகத்தின் தலையீடுகளால் நியாயம் கிடைக்கவில்லை. மனித உரிமைகள் அலுவலகத்திற்குக் கிடைத்த முறைப்பாடுகளையும் மற்றும் சட்டமா அதிபர் திணைக்களத்தின் தகவல்களையும் ஒப்பிடும் போது இது மிகவும் தெளிவாகப் புலப்படுகின்றது."

உடலியல் தண்டனைகள், கையால் அடித்தல், நிர்வாணமாக்கி அடித்தல் போன்ற சித்திரவதைகள், சட்டத்தை நடைமுறைப்படுத்தும் பாதுகாப்பு பிரிவினரால் மெற்கொள்ளப்படுவது இரகசியமானதொன்றல்ல. அவற்றில் அதிகமானவை வெளிக்கொண்டு வரப்படுவதில்லை. பொலிஸ் காவலில் இருந்து சித்திரவதைகளுக்கு உள்ளாகி உயிரிழந்தவர்கள் தொடர்பாக மேற்குறிப்பிட்ட காலப்பகுதியில் ஊடகங்கள் வாயிலாக வெளியான சம்பவங்கள் உள்ளன. ஆனாலும், எந்தவொரு நபரும் அதற்கு எதிராக மீண்டும் பொலிஸ்மா அதிபருக்கோ அல்லது விசேட புலனாய்வுப் பிரிவுக்கோ முறைப்பாடுகளைச் சமர்ப்பித்து நீதி கேட்டுப் போராடவில்லை. சந்தேக நபர்கள் அல்லது சிறையில் அடைக்கப்பட்டு தடுப்புக் காவலில் உள்ளவர்களிடமிருந்து தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்காக அரச அலுவலர்கள் அவர்களை சித்திரவதைக்குள்ளாக்குவது இரகசியமான விடயமல்ல. ஆனாலும் சித்திரவதைக்கு உள்ளாகின்றவர்கள் அதற்கு எதிராகக் குரல் கொடுப்பதற்கு முயற்சிப்பதோ நடவடிக்கை எடுப்பதோ இல்லை.

அவ்வாறு சித்திரவதைகளுக்கு ஆளாகின்ற நபர்கள் தங்களின் தன்னம்பிக்கையை குறுக்கிக் கொள்கின்றனர். மனச்சோர்வு எனும் விரக்திக்கு ஆளாகின்றனர். சோர்வடைவதால் சமூகத்தில் மற்றவர்களுடன் தொடர்புகளைப் பேணுவதில்லை.

தங்களுடைய வாழ்க்கையை இழக்கும் நிலைக்குத் தள்ளப்படும் இயல்பைக் காணக் கூடியதாகவுள்ளது.

## சட்டத்தில் விரிவான பாதுகாப்பு

பொலிசுக்கு எதிராக இதுதொடர்பாக நாளாந்தம் அதிகரிக்கும் விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டாலும், சித்திரவதைக்கு ஆளாகுபவர்கள் இவ் அநீதிக்கு எதிராக நியாயம் கேட்டு சட்டத்தை நாடுவதில்லை. அதற்கு முக்கிய காரணமாக அமைவது பொதுமக்களுக்கு சித்திரவதைகள் தொடர்பான சட்டத்தின் பிரகாரம் தமக்குக் கிடைக்கும் பாதுகாப்புப் பற்றிய அறிவின்மையாக இருக்கலாம்.

சித்திரவதைக்கு உள்ளாவது மிகவும் பெறுமதியான வாழ்க்கை என்பதால் அவ்வுயிரைப் பாதுகாப்பதற்கும், சித்திரவதைகளைத் தடுக்கும் சமூகத்தைக் கட்டியெழுப்பவதற்காக

செயலாற்றுவதற்கும் பொதுமக்களுக்கு உரிமையுண்டு. அவ்வாறே சித்திரவதைகளை மேற்கொள்பவர்களுக்கு எதிராக சட்டத்தை நடைமுறைப்படுத்தக் கூடிய சூழல் இலங்கையில் காணப்படுகின்றது. சித்திரவதைக்கு ஆளாகின்றவர்களுக்கு அதற்கு எதிராகவும், அவ்வாறான செயற்பாடுகளை கண்டிக்கத்தக்க வகையில் அமைவதுடன், சட்டத்தின் பிரகாரம் தடை செய்வதற்கும், வழக்குத் தொடர்வதற்கும், இழப்பீடுகளைப் பெற்றுக் கொள்வதற்கும் தேவையான சட்ட அதிகாரங்கள் இருக்கின்றது. அதற்காக சர்வதேச சாசனங்களுக்கு இலங்கை உடன்பாடு தெரிவித்துள்ளது.

மேலும், இலங்கையின் அரசியல் அமைப்பில் காணப்படும் உறுப்புரைக்கமைய 1978 ஆம் ஆண்டு அரசியல் அமைப்பின் அடிப்படை மனித உரிமைகள் தொடர்பாக குறித்துரைக்கப்பட்டுள்ள 03 ஆம் அத்தியாயத்தின் 11 ஆம் உறுப்புரையின் பிரகாரம் ''ஆளெவரும் சித்திரவதைக்கு, அல்லது கொடூரமான மனிதாபிமானமற்ற அல்லது இழிவான நடத்தைகளுக்கு அல்லது தண்டனைக்கு உட்படுத்தலாகாது.'' எனக் கூறுகின்றது.

17 ஆம் அத்தியாயத்தின் பிரகாரம் அவ்வாறான சித்திரவதைகள் அரசின் ஆட்சித்துறை நடவடிக்கையால் அல்லது நிருவாக நடவடிக்கையால் மீறப்பட்டுள்ளமையை பாதிக்கப்பட்டவருக்கு அல்லது அவருடைய சட்டத்தரணி மூலமாக ஒரு மாதத்திற்குள் உயர் நீதிமன்றத்திற்கு முறைப்பாட்டை விண்ணப்பித்துப் பரிகாரம் பெற்றுக்கொள்ளலாம். (126 ஆம் உறுப்புரை). இவ்வாறு 11 ஆம் அத்தியாயத்தின் பிரகாரம் எந்தவொரு மட்டுப்பாடுகளுக்கும் உட்படுத்தலாகாது. அதன்மூலமும் சித்திரவதை நிறுத்தப்பட்டுள்ளது.

பொலிஸ் கட்டளைச் சட்டத்தின் பிரகாரம், கைது செய்யப்படும் சந்தேக நபர்கள் சித்திரவதைக்கு உள்ளாவதைத் தடுப்பதற்காக நடவடிக்கை எடுப்பதற்கான இயலுமை உண்டு. அதாவது, பொலிஸ் திணைக்களத்தின் ஒழுங்குவிதிகள் மூலம் தடுப்புக் காவலில் உள்ளவர்களுக்கு கவனிக்கத்தக்க வகையிலும், துணைச் சேவைகள் கட்டளைகள் மூலமும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது, தடுப்புக் காவலில் உள்ளவர்களை தொடர்ச்சியாக கண்காணித்துக் கொள்ள வேண்டுமெனவும், அவர்களின் சுகாதார நிலைமைகள் தொடர்பாக் கவனித்தல் வேண்டுமெனவும் குறிப்பிடப்பட்டும் உள்ளது.

அதேபோல், 1996 ஆம் ஆண்டு 21 ஆம் இலக்க இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் சித்திரவதைகள் இடம்பெற்ற அல்லது இடம்பெறுவதற்கான அண்மித்த நிலைமை தொடர்பாக விசாரணை மேற்கொண்டு பரிந்துரைகளை வழங்குவதற்கு அதிகாரம் உண்டு. இச்சட்டத்தின் கீழ் எந்தவொரு நபரும், பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் அல்லது அவசரகால ஒழுங்குவிதிகளின் கீழ் கைது செய்யப்படும் போது குறித்த நபர்களின் தடுப்புக்காவல் இடங்களை மாற்றம் செய்யும் போது 48 மணித்தியாலயங்களுக்குள் இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவுக்கு அறிவித்தல் வேண்டுமென 28 ஆம் உறுப்புரை மூலம் அதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

எந்தவொரு நபரும் சித்திரவதைக்கு ஆளாகினால் அதற்கு எதிராக செயற்படுவதற்கு தேவையான சட்டக் கட்டமைப்பு இவ்வாறு காணப்பட்டாலும், அது தொடர்பாக பொதுமக்களுக்கு தெளிவில்லை. தற்போது தேவையாக அமைவது, இது தொடர்பாக நாட்டிலுள்ள மக்களைத் தெளிவூட்டுவதாகும். அப்பொறுப்பு எங்களிடம் இருந்தாலும், சித்திரவதைகளை மேற்கொள்பவர்கள் அரச அதிகாரிகளாகையால், அவர்கள் தொடர்பான தகவல்களை அரச நிறுவனங்களில் இருந்தே பெற்றுக்கொள்ள வேண்டியிருப்பதால், தகவல்களைத் திரட்டுவதில் பெரும் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

## தகவல் கோரப்பட்ட போது வெளிவந்த விடயங்கள்

இவ்வாறான பிரச்சினைகளின் போது தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கான ஒரே முறையாக அமைவது தகவல் அறிதல் சட்டத்தின் கீழ் தகவல் அலுவலர் மூலம் தகவலைக் கோருவதாகும். அவ்வுரிமையை முன்னிறுத்தி குறித்த தகவல்களைக் கோரி சட்டமா அதிபர் அலுவலகத்திற்கு விண்ணப்பமொன்றைச் சமர்ப்பித்து 2016 ஆம் ஆண்டு 12 ஆம் இலக்க தகவல் அறிதல் சட்டத்தின் கீழ் கோரிய தகவல்களுக்கமைய சட்டமா அதிபர் திணைக்களத்தின் மூலம் RI/29/2021 ஆம் இலக்க தகவல்களை சட்டமா அதிபர் சார்பாக தகவல் அலுவலர் பதில் அனுப்பியுள்ளார்.

அதில் குறிப்பிடப்படுவதாவது, 1994 ஆம் ஆண்டு 22 ஆம் இலக்க சித்திரவதைகள் சட்டத்தின் கீழ் இதுவரை தொடரப்பட்டுள்ள வழக்குகளின் எண்ணிக்கையை வழங்குவதற்கு சட்டமா அதிபர் அலுவலகத்திலுள்ள தரவுகள் போதியளவில் இல்லையெனக் குறிப்பிடப்பட்டிருந்தது. 1994 ஆம் ஆண்டு 22 ஆம் இலக்க சித்திரவதைகள் சட்டத்தின் கீழ் இறுதியான குற்றப்பத்திரிகை 2021 ஆம் ஆண்டில் தொடரப்பட்டுள்ளதெனக் குறிப்பிடப்பட்டுள்ளதுடன், 2017 ஆம் ஆண்டில் நான்கு குற்றப் பத்திரிகை தொடரப்பட்டுள்ளது. 2018 ஆம் ஆண்டில் இரண்டு குற்றப்பத்திரிகைகளும், 2019 ஆம் ஆண்டில் ஒரு குற்றப்பத்திரிகையும், 2020 ஆம் ஆண்டில் ஒரு குற்றப்பத்திரிகையும் தொடரப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டு அனுப்பியுள்ளார்.

ஆனாலும், மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்குக் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளுக்கமைய 2018 ஆண்டறிக்கையையும் 2019 ஆண்டறிக்கையையும் கவனத்தில் கொள்ளும் போது இந்நிறுவனங்களுக்கிடையே பெரும் இடைவெளியைக் காணக்கூடியதாகவுள்ளது. சித்திரகைக்கு உள்ளாக்குதல் தொடர்பான முறைப்பாடுகள் 2018 இல் நானூற்றுத் தொண்ணூற்ற மூன்றும், 2019 இல் நானூறும் மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்குக் கிடைக்கப்பெற்றதாக ஆண்டறிக்கையில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அது அவ்வாறிருக்கும் போது, சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு கிடைக்கப்பெற்றதாகக் கூறப்படும் 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட குற்றப்பத்திரகை இரண்டு மற்றும் ஒன்று மாத்திரம் என்பது உண்மையான தகவலா என்பது சந்தேகத்திற்குரியதென்பதை எவருக்கும் புரிந்துகொள்ளக் கூடிய விடயமாகும்.

## பொதுமக்களின் அறிவின்மை

இது தொடர்பாக மனித உரிமைகள் அலுவலகத்தின் சட்டத்தரணி சுரேன் டீ. பெரேரா அவர்கள் கூறியதாவது, இவ் இடைவெளிக்குப் பல காரணங்கள் இருப்பதாகக் கூறினார்.

‘‘நபரொருவர் பொலிஸ் நிலையத்தில் சித்திரவதைகளுக்கு உள்ளாகும் போது தனக்கு இடம்பெற்ற துன்புறுத்தல்கள் தொடர்பாக முறைப்பாடுகளை மேற்கொள்வதற்கு பொலிஸ் நிலையத்திற்குச் செல்ல வேண்டும். அப்போது அதிகாரிகள் முறைப்பாட்டைப் பதிவு செய்யும் போதும், அவற்றை மீண்டும் விசாரணை செய்யும் போதும் முரண்பாடுகள் காணப்படும். நாங்கள் சட்டத்தின் பாதுகாப்பை நாடிச் சென்றாலும் சட்டத்தை நடைமுறைப்படுத்தல் மற்றும் சட்டத்தின் அடிப்படை தொடர்பான அறிவில்லாமலேயே அது இடம்பெறுகின்றது.

அவற்றை முறைப்பாட்டாளருக்கு தெரியாமலேயே மறைத்துச் செல்வதில் பொலிசார் கைங்கரியமானவர்கள்.

இவ்வாறான முறைப்பாடுகளை பொலிஸ்மா அதிபருக்கு அல்லது விசேட குற்றப்புலனாய்வுப் பிரிவுக்கு அதுதொடர்பாக கொழும்புக்குச் சென்று நடவடிக்கைகளை மேற்கொள்பவர்கள் குறைவாகும். தற்போது தடுப்புக் காவலில் இருக்கும் போது அல்லது பொலிஸ் தடுப்புக் காவலில் இருந்து ஆயுதங்களைக் காண்பிக்கச் செல்லும் போது உயிரிழப்பவர்களின் எண்ணிக்கை தொடர்பாக வருடாந்த தரவுகளைப் பார்க்கும் போது உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை எவ்வளவாக இருக்கும்? அதற்கு சரியான வகையில் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டால் மேல் நீதிமன்றத்தின் ஊடாக வழக்கு விசாரணை செய்யப்பட்டு பொலிஸ் உத்தியோகத்தர்கள் குறித்த மரணம் தொடர்பான விடயங்களை சமர்ப்பித்தல் வேண்டும். அப்போது ஏதேனும் தீங்கு இழைக்கப்பட்டிருந்தால் உயிரிழந்த நபருக்கு ஏதேனும் நியாயம் கிடைப்பதற்கு வாய்ப்புண்டு. ஆனாலும், தற்போது நீதவான் நீதிமன்றிலேயே வழக்கை விசாரணை செய்து முடிவுறுத்தப்படுகின்றது.''

அரச அலுவலர் ஏதேனுமொரு சந்தர்ப்பத்தில் நபரொருவருக்கு ஏதேனும் துன்புறுத்தலை மேற்கொண்டால், குறித்த அலுவலருக்கு எதிராக சட்டத்தை நாடுவதற்கு எந்தவொரு நபருக்கும் இயலுமை உள்ளதென்பதை இதுதொடர்பாக சமூகத்தில் உரையாடலை ஏற்படுத்த வேண்டுமெனவும் மேலும் வலியுறுத்தினார்.

இது தொடர்பாக மனித உரிமைகள் அலுவலகத்தின் செல்வி. லூசில் அபேகோன் அவர்கள் கூறியதாவது, பொதுவாக மக்களுக்கு தங்களுடைய உரிமையைப் பாதுகாப்பதற்கோ அல்லது நீதியை நிலைநாட்டும் பொறிமுறையை நடைமுறைப்படுத்துதல் தொடர்பாக விரிவான சமூக விழிப்புணர்வை மேற்கொள்ள வேண்டுமெனத் தெரிவித்தார். அவர் மேலும் இவ்வாறு கூறினார்,

## "மௌனமாக இருக்கக் கூடாது"

''மட்டக்களப்பு முல்லைத்தீவு போன்ற பிரதேசங்களில் பொலிசாரின் தாக்குதலுக்குள்ளாகி காயங்களுக்குள்ளானவர்கள் தொடர்பான தகவல்கள் மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு கிடைத்துள்ளது. அதுமட்டுமல்ல, மாதத்தில் ஐம்பதுக்கும் மேற்பட்டவர்கள் சித்திரவதைகளுக்குள்ளாகியதாக முறைப்பாடுகள் கிடைக்கின்றன. இவர்கள் தொடர்பாக தொடர்ச்சியாக சட்டத்தின் முன் முறையிடுவதற்கும், சட்டப் பாதுகாப்பை பெறுவதற்குள்ள பின்னணி பிரச்சினைகள் நிறைந்ததெனச் சுட்டிக்காட்டுகின்றார். ஒருவர் குற்றம் செய்தால் அதற்குத் தண்டனை கிடைக்க வேண்டும். ஆனாலும் தண்டனை கிடைப்பதற்கு முறைப்பாடுகள் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டும். இதுவரை அவ்வாறான கொள்கை ரீதியான விடயங்கள் எதுவும் இடம்பெறவில்லை.

நாட்டில் சட்டம் மக்களுக்காகவே இயற்றப்படுகின்றது. ஆனாலும் மக்கள் இச்சட்டம் தொடர்பாக அறியாமல் இருப்பின், அவ்வாறான சட்டத்தின் நடைமுறை ரீதியான நியாயமானதும் மக்கள் நேயமும் இல்லை. பொலிஸ்மா அதிபர் அல்லது விசேட குற்றப்புலனாய்வுப் பிரிவு அலுவலர்கள் சித்திரவதைக்குள்ளானவர்களின் முறைப்பாடுகளை விசாரணை செய்வது எவ்வாறு? அதற்குப் பின்பற்றப்படும் பொறிமுறை என்ன? அவர்கள் இதற்காக நேரடியாக தலையிடாவிட்டால் வேறு மாற்றுவழிகள் உண்டா? தங்களுடைய உத்தியோகத்தர்களின் செயற்பாடுகள் தொடர்பாக விசாரணையொன்றை நடாத்தும்

போது அவர்கள் சுயாதீனமாக அதனை மேற்கொள்கின்றார்களா என்ற பல கேள்விகள் எங்களிடமுள்ளது. இவற்றைப் பற்றிய தகவல்களை அறிந்து கொள்ள வேண்டும்.

அதற்கு ஏற்புடைய தகவல்களை திரட்டும் போது தான் எங்களுக்கு சட்டமா அதிபரிடம் இதுதொடர்பாக விசாரிப்பதற்கு நேர்ந்தது. சட்டமா அதிபர் திணைக்களத்திடமுள்ள தகவல்கள் மற்றும் மனித உரிமைகள் அலுவலகத்திடமுள்ள தகவல்களுக்கும் இடையே காணப்படும் முரணான தன்மையுடன் மக்களுக்கு கிடைக்கும் நீதி என்னவென்பதை வினவ வேண்டியுள்ளது. இது மௌனம் காப்பதற்குரிய சந்தர்ப்பம் இல்லையென்பதைக் கூற வேண்டும். இவ்வாறான பின்னணியில் சித்திரவதைகளற்ற இலங்கை என்பது எமக்குக் கனவு மாத்திரமா? எனக் கேட்க நேரிடும்.''

- **சமந்தி உபேக்ஷா வீரசேகர**

***சமந்தி வீரசேக்கர :*** *திவயின பத்திரிகையின் ஆசிரியர் குழு உறுப்பினர். 1988ம் ஆண்டிலிருந்து ஊடகவியலில் ஈடுபட்டுள்ள அவர், லக்பிம பத்திரிகை, கந்துரட்ட வானொலி சேவை மற்றும் லேக் ஹவுஸ் ஆகிய நிறுவனங்களிலும் ஊடகவியலாளராகப் பணியாற்றியுள்ளார். ஆய்வு ரீதியான ஊடகவியலாக்கத்திற்காக தகவல் அறியும் சட்டத்தைப் பயன்படுத்தியுள்ள அவர் இந்திய பத்திரிகையாளர் சங்கத்தின் அழைப்பின் பேரில் இந்தியாவிலும் மியன்மாரிலும் பெண்கள் ஒத்துழைப்புக்காக மியன்மாரில் சுற்றுப் பயணங்களில் ஈடுபட்டுள்ளார்.*

# சுற்றாடல் செயல்வாதத்தின்போது தகவல் அறியும் உரிமையின் அண்மைக்காலப் பதிவு

பெரும்பாலும், பல்வேறு காரணிகளால் கருத்து வேறுபாடான தலைப்புகள் மற்றும் கூருணர்வு மிக்க விடயங்கள் தொடர்பான தகவல்களைப் பெற்றுக்கொள்ள விரும்பும் நபர்களுக்கு அவ்வாறான தகவல்களைத் தேடுதல் என்பது சிரமமான கருமமாக இருக்கலாம். யாராவதொரு ஊடகவியலாளர், ஏதாவது மதத்தைச் சேர்ந்த ஒருவர், சட்டத்துக்கு அமைவாக செயற்படும் ஒரு நபர் அல்லது ஒரு பிரபலமான நபர் போன்ற விடயங்களை கவனத்தில் கொள்ளாது அத் தகவல்களை குறித்த தகவல் மூலங்களிலிருந்து பெற்றுக்கொள்ள முனையும் போது சிக்கல்களுக்கு முகங்கொடுக்க வேண்டியுள்ளது.

பெரும்பாலான சந்தர்ப்பங்களில் பல ஆண்டுகளாக சட்டத்தை மீறுதல் மற்றும் சர்ச்சைக்குரிய செயற்பாடுகளில் ஈடுபடுதல் தொடர்பில் பொறுப்புள்ள நபர்களை அவர்கள் கைது செய்து சிறையில் அடைக்கக்கூடிய வகையிலான கூருணர்வு மிக்க தகவல்கள் மறைக்கப்படுகின்றன.

இருந்த போதிலும், அவ்வாறான விடயங்களினுள், 2016 ஆம் ஆண்டில் தகவல் அறியும் உரிமைச் சட்டம் அமுல்படுத்தப்பட்ட பின்னரே அணுக வேண்டியிருந்தது. அதன் பின்னர்தான் அவ்வாறான தகவல்களை பெற்றுக் கொள்ளும் நிலை ஏற்பட்டது. அவ்வாறு இடம்பெற்றிருக்காவிட்டால் அவ்வாறான தகவல்கள் ஒருபோதும் வெளிப்படுத்தப்படாத தகவல்களாக இருந்திருக்கும். RTI எனப் பொதுவாக அழைக்கப்படும் தகவல் அறியும் உரிமை சட்டத்தின் மூலம் RTI இணையத்தளத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தேவையான செயன்முறைகளைப் பின்பற்றுவதன் மூலம் எந்தவொரு அரச நிறுவனங்களில் இருந்தும் தகவல்களைப் பெறுவதற்கான இயலுமை அந் நபருக்கு கிடைத்துள்ளது.

சில ஆண்டுகளுக்கு முன்னர் அவர்களிடம் இருக்காத வசதிகளைக் கூடுதலாகப் பாவிக்கும் நபர்களின் எண்ணிக்கை தகவல் அறியும் சட்டத்தின் (RTI) முக்கியத்துவத்தை மேலும் அதிகரித்துள்ளது. அண்மைக் காலத்திலிருந்து நாட்டில் சுற்றாடல் பிரச்சினைகள் அதிகரித்த நிலையில் குறுகிய காலத்தில் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குத் தேவையான தகவல்களைப் பெறுவதற்கு RTI வசதி மக்களுக்குப் பேருதவியாக அமைந்துள்ளது.

தகவல் அறியும் உரிமைச் சட்ட வரைபு 2004 ஆம் ஆண்டில் அமைச்சரவையால் அங்கீகரிக்கப்பட்டு, அதன் பின்னர் அது பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. அன்று அந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டு இருந்தால் தகவல் அறியும் சட்டம் அமுலிலுள்ள தெற்காசியாவின் முதலாவது நாடாக இலங்கை இருந்திருக்கும். இருப்பினும் சட்டம் விவாதத்துக்கு எடுக்கப்பட முன்னர் அப்போதிருந்த ஜனாதிபதியால் பாராளுமன்றம் கலைக்கப்பட்டது. அதன் காரணமாக தகவல் அறியும் உரிமைச் சட்ட வரைபு இயற்கையாகவே மரணித்தது.

RTI இணையத்தளம் என்பது தகவல் அறியும் உரிமையைப் பாவிக்கும் சந்தர்ப்பத்தில் பல்வேறு தலைப்புகள் மற்றும் தகவல் அறியும் உரிமை ஆணைக்குழுவுக்கு செய்யப்படும் மேன்முறையீடுகள் தொடர்பாக வழங்கப்பட்ட உத்தரவுகள் போன்றவற்றை உள்ளடக்கிய தகவல்களைத் தேடும் ஒருவர் மிகவும் பரந்த தகவல்களை பெற்றுக்கொள்ளக்கூடிய மற்றும் பயனுள்ள இணையத்தளமாகும்.

அவ்வாறான சில மேன்முறையீடுகளில் **"எஸ். மதனகுமார் எதிர் வவுனியா வடக்குப் பிரதேசச் செயலாளர்** (9)" தொடர்பான மேன்முறையீட்டில் 2019.06.10 ஆம் திகதி தகவல் அறியும் உரிமை விண்ணப்பத்தை அனுப்பி, நெடுங்கேணி பிரதேச செயலாளர் 2019 ஆம் ஆண்டில் மாதிரிக் கிராமத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டு இருந்த வவுனியா, அரச தமிழ்க் கலவன் பாடசாலைக்கு அருகில் (எல்லைக் கல் அமைக்கப்பட்டிருந்த) அரச காடுகள் தொடர்பான சில தகவல்களை வழங்குமாறு கோரப்பட்டிருந்தது.

அந்தத் தகவல் கோரிக்கை தொடர்பாக அரச நிறுவனத்திலிருந்து கிடைத்த பதில் தொடர்பில் திருப்தியடையாத நிலையில், மேல்முறையீட்டாளர் தகவல் அறியும் உரிமை ஆணைக்குழுவுக்கு (இலங்கை தகவல் அறியும் உரிமை ஆணைக்குழு) மேன்முறையீட்டைச் சமர்ப்பித்தார். அந்த மேன்முறையீடு தொடர்பான விசாரணையின் போது தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் 3 (1) பிரிவின் கீழ் எதிர்பார்க்கப்பட்ட வகையில் கோரப்பட்ட தகவல்கள் தொடர்புடைய அரச நிறுவனத்தின் "உடைமையில், பொறுப்பில் அல்லது கட்டுப்பாட்டில்" இருக்கவில்லை என நிரூபிக்கப்பட்டது. அதற்கமைய அரச நிறுவனத்தின் தீர்மானம் உறுதி செய்யப்பட்டதுடன், மேன்முறையீடு முடிவுறுத்தப்பட்டது.

அதன் போது அடிப்படையாக மேன்முறையீட்டுத் தரப்பு திருப்தியடையாத பதில் கிடைக்கும் சந்தர்ப்பத்தில் அதனை கைவிடலாகாது என்பதுடன், இலங்கைத் தகவல் அறியும் உரிமை ஆணைக்குழு ஊடாக திருப்தியான பதில் கிடைக்கும் வரை அவரது மேன்முறையீட்டை தொடர்ச்சியாக முன்னெடுத்தார்.

**"சீ. ஜயநந்த எதிர் புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகம்** (19)" எனும் பிறிதொரு மேன்முறையீடு தொடர்பான தரப்பினரால் 2019.01.15 ஆம் திகதி தகவல் அறியும் உரிமை கோரிக்கை மூலம் மாத்தறை பிரதேச செயலகத்தின் அகழ்வு பொறியியலாளர் மூலம் நிலையப் பொறுப்பு அலுவலரின் கடிதத்துக்கு அமைய காலி, வக்வெல்ல வீதியில் உள்ள இடத்தை பரிசீலனை செய்தது தொடர்பில் நகர சபைக்கு வழங்கப்பட்ட ஆலோசனைகள் மற்றும் உத்தரவுகள் தொடர்பான தகவல்களைக் கோரியிருந்தார். அரச நிறுவனம் உரிய காலத்தினுள் மேன்முறையீட்டுக்குப் பதில் வழங்கத் தவறியதன் காரணமாக, அவர் இலங்கைத் தகவல் அறியும் உரிமை ஆணைக்குழுவுக்கு மேன்முறையீட்டை சமர்ப்பித்தார். மேன்முறையீட்டு விசாரணையின் போது கோரப்பட்டு இருந்த தகவல்கள் குறித்த அரச நிறுவனத்தினால் வழங்கப்பட்டிருந்தமை காரணமாகவும், அது தொடர்பில் மேன்முறையீட்டுத் தரப்பினர் திருப்தியடைந்தமை காரணமாகவும் இலங்கைத் தகவல்

அறியும் உரிமை ஆணைக்குழு அந்த மேன்முறையீட்டை முடிவுறுத்த நடவடிக்கை எடுத்தது.

மேன்முறையீட்டாளரால் செய்யப்பட்ட ஆரம்ப கோரிக்கைக்கு பதில் வழங்காதிருக்கும் தீர்மானத்தை அந்த அரச நிறுவனம் ஆரம்பத்தில் மேற்கொண்டிருந்த போதிலும், இலங்கைத் தகவல் அறியும் உரிமை ஆணைக்குழுவுக்கு மேன்முறையீடு சமர்ப்பித்த நிலையில் அதற்கு கீழ்ப்படிந்தமை இந்தச் சம்பவத்தின் போது ஏனைய நிலைமைகளை விடவும் வேறுபட்ட விடயமாக அமைந்திருந்தது. அதன் மூலம் எந்தவொரு காரணத்தினாலும் தகவல்கள் மறைக்கப்படும் சந்தர்ப்பங்கள் தொடர்பில் இலங்கைத் தகவல் அறியும் உரிமை ஆணைக்குழு செயற்படுவது வெளிப்படுகிறது.

**"என்.டபிள்யூ.சீ.பி. லங்கா எதிர் புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகம்** (29)" எனும் மேன்முறையீட்டு தரப்பினரால் 2018.09.27 ஆம் திகதிய தகவல் கோரிக்கை விண்ணப்பம் ஊடாக கம்பஹா மாவட்டத்தில் செய்யப்பட்ட அகழ்வின் விளைவாக (தகவல் கோரிக்கை மூலம் அடையாளம் காணப்பட்ட வகையில்) ஏற்பட்ட பாரிய அனர்த்தம் தொடர்பாக சுற்றாடல் மற்றும் மஹாவலி அபிவிருத்தி அமைச்சின் கீழ் மேற்கொள்ளப்பட்ட விசாரணை அறிக்கை, இறுதித் தீர்மானம் (இருப்பின்) மற்றும் தொடர்புடைய தகவல்கள் கோரப்பட்டிருந்தது. தகவல் அலுவலர் மற்றும் பெயர் குறிப்பிடப்பட்ட அலுவலர் அந்தத் தகவல் கோரிக்கைக்குப் பதிலளிக்கத் தவறியமை காரணமாகக் குறித்த தரப்பினரால் தகவல் அறியும் உரிமை ஆணைக்குழுவுக்கு மேன்முறையீடு செய்யப்பட்டது. கோரப்பட்ட தகவல்கள் மூன்றாம் தரப்புக்கு உரியது என முதலாவது மேன்முறையீட்டு விசாரணையின் போது அரச நிறுவனம் ஆட்சேபனை தெரிவித்த போது, அந்தத் தகவல்களை வழங்குவதற்கு அல்லது நிராகரிப்பதற்கு 29 ஆம் பிரிவில் காட்டப்பட்டுள்ள மூன்றாம் தரப்பு செயல் ஒழுங்குவிதியைப் பின்பற்றுமாறு ஆணைக்குழு அரச நிறுவனத்துக்கு உத்தரவிட்டது.

இலங்கைத் தகவல் அறியும் உரிமை ஆணைக்குழுவுக்கு சமர்ப்பிக்கப்படும் மேன்முறையீடு தொடர்பான சம்பவத்துடன் எந்தத் தரப்புடன் தொடர்புடையதாக இருந்தாலும், இலங்கைத் தகவல் அறியும் உரிமை ஆணைக்குழுவின் தலையீடு ஓரளவு குறிப்பிட்ட காலப்பகுதியினுள் குறித்த பிரச்சினையை தீர்ப்பதற்கு உதவும் என்பது இந்த சம்பவத்தின் மூலம் வெளிப்படுத்தப்படுகிறது.

**"டீ.டீ.ஜே.எல். பிரியலால் எதிர் புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகம்** (39)" எனும் மேன்முறையீட்டின் போது, 2019.01.15 ஆம் திகதி தகவல் கோரும் விண்ணப்பம் ஊடாக அருகிலுள்ள நீர்ப் பாதைக்கு (தகவல் விண்ணப்பத்தில் அடையாளம் காணப்பட்டுள்ள வகையில்) பாரிய சுற்றாடல் அனர்த்தத்தை ஏற்படுத்தியுள்ள மணல் அகழ்வு மற்றும் ஏற்றிச் செல்வதனை அங்கீகரித்தல் மற்றும் அது தொடர்பான உரிமம் வழங்குதல் தொடர்பான தகவல்கள் கோரப்பட்டிருந்தது. தகவல் அலுவலர் மற்றும் பெயர் குறிப்பிடப்பட்ட அலுவலர் அந்தத் தகவல் கோரிக்கைக்குப் பதிலளிக்கத் தவறியமை காரணமாக, தகவல் அறியும் உரிமை ஆணைக்குழுவில் நடைபெற்ற மேன்முறையீட்டு விசாரணையின் போது குறித்த அரச நிறுவனம் முதலாவது விடயம் தொடர்பான தகவல்கள் வழங்கப்பட்டுள்ளது எனவும், இரண்டாவது விடயம் தொடர்பான தகவல்களை அந்த நிறுவனத்தின் இணையத்தளத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம் எனவும் தெரியவந்தது. தகவல்கள் வழங்கப்பட்டமை காரணமாக மேன்முறையீடு முடிவுறுத்தப்பட்டது.

இது தொடர்பில் இலங்கை தகவல் அறியும் உரிமை ஆணைக்குழுவை அணுகிய

போதிலும், குறித்த மேன்முறையீட்டுத் தரப்பினர் அறியாத வகையில் அந்தத் தகவல்கள் வழங்கப்பட்டமை தொடர்பான சம்பவமாகும். இந்த மேன்முறையீட்டின் போது இலங்கைத் தகவல் அறியும் உரிமை ஆணைக்குழவின் தலையீடு மேன்முறையீட்டுத் தரப்புக்குத் தேவையான தகவல்களை வழங்கிப் பிரச்சினையை தீர்ப்பதற்கு உதவியுள்ளது.

சுற்றாடல் தொடர்பான பிறிதொரு பிரச்சினையில் மேன்முறையீட்டாளர் 2018.05.23 ஆம் திகதி தகவல் கோரிக்கை மூலம் கஹல்ல சரணாலயம் மற்றும் லுணுகம்வெஹர சுற்றியல் பிரதேசங்களில் அமுல்படுத்தப்படும் அகழி / அணை முறையின் தொழில்நுட்ப முறைமை தொடர்பான பராமரிப்பு மற்றும் செலவுகளின் குறைபாடு உள்ளிட்ட சில தகவல்கள் கோரப்பட்டிருந்தன. குறித்த அரச நிறுவனத்தினால் வழங்கப்பட்ட பதில் தொடர்பில் திருப்தியடையாத மேன்முறையீட்டுத் தரப்பு தகவல் அறியும் உரிமை ஆணைக்குழுவுக்கு மேன்முறையீடு செய்தது. அந்த மேன்முறையீட்டு விசாரணையின் போது, கோரப்பட்ட தகவல்கள் முன்னர் குறிப்பிடப்பட்ட மேன்முறையீட்டாளருக்கு அந்த அரச நிறுவனத்தினால் வழங்கப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டதுடன், அந்த மேன்முறையீடு முடிவுறுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.

அரச நிறுவனத்தினால் வழங்கப்படும் பதில்கள் தொடர்பில் மேன்முறையீட்டுத் தரப்பு திருப்தியடையாத சந்தர்ப்பத்தில் குறித்த தகவல்களை வழங்குவதற்காக இலங்கைத் தகவல் அறியும் உரிமை ஆணைக்குழுவையும் பாவிக்கலாம். இந்த வழக்கின் போது குறித்த பதில் உண்மையானதாக இருக்கலாம் என்ற போதிலும் வழங்கப்பட்ட பதில்கள் தொடர்பில் மேன்முறையிட்டாளர் திருப்தியடையவில்லை என்பது தெளிவானதாகும். இருந்த போதிலும்,இது தொடர்பில் ஆராய்ந்து பார்க்குமாறு மேன்முறையீட்டாளரால் இலங்கைத் தகவல் அறியும் உரிமை ஆணைக்குழுவுக்கு சமர்ப்பிக்கப்பட்டது. இருப்பினும், வழங்கப்பட்ட பதிலை இலங்கைத் தகவல் அறியும் உரிமை ஆணைக்குழு ஏற்றுக்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டது.

**ராஹுல் சமந்த ஹெட்டியாராச்சி எதிர் வனஜீவராசிகள் பாதுகாவல் திணைக்களம்** (59) மேன்முறையீட்டாளரால் 2019.07.24 ஆம் திகதி தகவல் கோரிக்கை மூலம் தெற்கு அதிவேக வீதியில் மாத்தறையிலிருந்து அம்பாந்தோட்டை வரையான மற்றும் மத்தள வரை எத்தனை யானைக் கடவைகள் அடையாளம் காணப்பட்டுள்ளன என்பது தொடர்பான தகவல்கள் கோரப்பட்டிருந்தது. மேலும், உத்தேச அம்பாந்தோட்டை காட்டு யானை முகாமைத்துவ வன ஒதுக்குக்காக 2015 ஆம் ஆண்டில் எவ்வளவு காணி ஒதுக்கப்பட்டிருந்தது ? மற்றும் அது தொடர்பான அவ்வாறான ஏனைய தகவல்கள் கோரப்பட்டிருந்தது. தகவல் அலுவலர் மற்றும் பெயர் குறிப்பிடப்பட்ட அலுவலர் குறித்த காலத்தினுள் மேன்முறையீட்டு கோரிக்கைக்கு பதிலளிக்கத் தவறியமை காரணமாக மேன்முறையீட்டாளரால் இலங்கைத் தகவல் அறியும் உரிமை ஆணைக்குழுவுக்கு மேன்முறையீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டது. அந்த மேன்முறையீட்டு விசாரணையின் போது தமது உடைமையில், பொறுப்பில் அல்லது கட்டுப்பாட்டில் உள்ள தகவல்களை மேன்முறையீட்டாளருக்கு வழங்குமாறு இலங்கைத் தகவல் அறியும் உரிமை ஆணைக்குழுவால் அரச நிறுவனத்துக்கு உத்தரவிடப்பட்டது. இலங்கைத் தகவல் அறியும் உரிமை ஆணைக்குழுவின் ஆலோசனைகளுக்கு உட்பட்டு மேன்முறையீடு முடிவுறுத்தப்பட்டது.

தெற்கு அதிவேக வீதி ஊடாக எவ்வளவு யானைக் கடவைகள் உள்ளன என்பது மற்றும் உத்தேச அம்பாந்தோட்டை காட்டு யானை முகாமைத்துவ வன ஒதுக்கீட்டுக்காக 2015 ஆம் ஆண்டில் எவ்வளவு காணி ஒதுக்கப்பட்டிருந்தது என்பது தொடர்பான கோரிக்கை விடுக்கப்பட்ட இந்த சந்தர்ப்பத்திலும், சுற்றாடலுடன் தொடர்புடைய அபிவிருத்தி

செயற்பாடுகளின் போது கூட குறித்த தகவல்களை பெறுவதற்காக இலங்கைத் தகவல் அறியும் உரிமை ஆணைக்குழுவை பாவிக்கலாம்.

இலங்கை தகவல் அறியும் உரிமை ஆணைக்குழுவுக்கு மேன்முறையீடு சமரப்பிக்கப்பட்ட ஏனைய சந்தர்ப்பங்களில் ஒன்றான அசேல நிரோக்ஷன் தர்மதாஸ எதிர் மாகாணச் சுற்றாடல் அதிகார சபை (வடமேல் மாகாணம்) (68) 2018.12.24 ஆம் திகதிய தகவல் கோரிக்கை மூலம் குருகொடவத்த இரண்டாம் பகுதியில் (உடுகொடகம) இப்பாகமுவ பிரதேச சபை அதிகார பிரதேசத்தில் குருகொடவத்த, உடுகொடகம, நிக்கதமுபொத்த எல்லையைக் கொண்ட புஸ்ஸல்ல இறைச்சி உற்பத்தியாளர்கள் (தனியார்) கம்பனியால் கோழிப் பண்ணையை நிர்மாணிப்பதற்காக மாகாண சுற்றாடல் அதிகார சபையிடமிருந்து குறித்த அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்ததா என கோரிக்கை விடப்பட்டிருந்தது.

தலைமை அலுவலகம் - பெலவத்த, பத்தரமுல்ல மற்றும் அது தொடர்பான ஏனைய தகவல்கள் கோரப்பட்டிருந்தது. குறித்த அரச நிறுவனத்தின் பதிலில் திருப்தியடையாத மேன்முறையீட்டுத் தரப்பு இலங்கைத் தகவல் அறியும் உரிமை ஆணைக்குழுவுக்கு மேன்முறையீடு செய்ய நடவடிக்கை எடுத்தது. மேன்முறையீட்டு விசாரணையின் போது அரச நிறுவனத்தினால் மேன்முறைப்பாட்டாளர் கோரிய தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டது. அதற்கமைய இலங்கைத் தகவல் அறியும் உரிமை ஆணைக்குழு அரச நிறுவனத்தின் தீர்மானத்தை உறுதி செய்து மேன்முறையீடு முடிவுறுத்தப்பட்டது.

**மேன்முறையீட்டாளர் எதிர் MAERSK Lanka (Pvt)** மேன்முறையீட்டின் போது சமுத்திரச் சுற்றாடல் பாதுகாப்பு அதிகார சபையின் (MEPA) பெயரிடப்பட்ட அலுவலருக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது. தகவல் கோரிக்கை 2020.01.24 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டது. தகவல் அலுவலர் 2020.02.11 ஆம் திகதி அதற்கான பதிலை வழங்கினார். முதலாவது மேன்முறையீடு 2020.02.21 ஆம் திகதி பெயர் குறிப்பிட்ட அலுவலருக்கு சமர்ப்பிக்கப்பட்டது. அதற்குப் பெயர் குறிப்பிட்ட அலுவலர் பதில் வழங்காமை காரணமாக இலங்கைத் தகவல் அறியும் உரிமை ஆணைக்குழுவுக்கு மேன்முறையீடு செய்யப்பட்டது. (திகதி குறிப்பிடப்படவில்லை.) மேற்குறித்த திகதியில் தகவல் அலுவலருக்கு சமர்ப்பிக்கப்பட்ட கோரிக்கை மூலம் மேன்முறையீட்டாளர் பின்வரும் தகவல்களை கோரியிருந்தார். மேன்முறையீட்டுத் தரப்பினரால் இணைப்பு யு (தகவல் கோரிக்கை இணைக்கப்பட்டுள்ளது.) குறிப்பிடப்பட்டுள்ள கப்பல் தொடர்பாக 2015 ஜனவரி 1 ஆம் திகதியிலிருந்து 2019 டிசம்பர் 31 ஆம் திகதி வரை மசகு எண்ணை அகற்றப்பட்டமை தொடர்பான எதிர்மனுதாரரான அரச நிறுவனத்தினால் வழங்கப்பட்ட கடன் பத்திரம் மற்றும் 2015 ஜனவரி 1 ஆம் திகதியிலிருந்து 2019 டிசம்பர் 31 ஆம் திகதி வரை குறித்த எதிர்மனுதாரரான அரச நிறுவனத்தினால் வழங்கப்பட்ட மசகு எண்ணை தரவுப் பத்திரம் தொடர்பான தகவல்கள் கோரப்பட்டிருந்தது.

தகவல் அலுவலரால் 2020.02.11 ஆம் திகதி அந்தத் தகவல் கோரிக்கைக்குப் பதில் வழங்கி, மேன்முறையீட்டாளரால் கோரப்பட்ட தகவல்கள் சட்டத்தின் 5 (1) (ஏ) பிரிவின் கீழ் வழங்காமல் நிராகரிக்கப்படுவதாக சுட்டிக்காட்டப்பட்டது. மேன்முறையீட்டுத் தரப்பினரால் பெயர் குறிப்பிடப்பட்ட அலுவலருக்கு மேன்முறையீடு சமர்ப்பிக்கப்பட்டது. தரப்பினர்களுக்கு இடையில் மேற்கொள்ளப்பட்ட கலந்துரையாடலின் பின்னர், குறித்த அரச நிறுவனத்தின் பொது முகாமையாளர் / பிரதம நிறைவேற்று அலுவலர் 2020.03.13 ஆம் திகதி மேன்முறையீட்டுத் தரப்புக்கு எழுத்து மூல அறிவிப்பின் மூலம் குறித்த மேன்முறையீட்டாளரால் MAERSK கப்பல்களிலிருந்து கழிவு அகற்றப்படுதல் தொடர்பாக ஷானிக்கா மரைன் கம்பனியால் வழங்கப்பட்ட மசகு எண்ணை தரவு அறிக்கை

வழங்கப்படுவதாக இருந்தால் மேன்முறையீட்டு தரப்பினரால் கோரப்பட்டுள்ள தகவல்கள் வழங்கப்பட வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டது.

மேன்முறையீட்டாளரால் கோரப்படும் தகவல்களை அரச நிறுவனத்தினால் உடைமையில் வைத்திருப்பதற்கு சட்ட ரீதியான கடப்பாடு இருப்பதாகவும், இலங்கைத் தகவல் அறியும் சட்டத்தின் கீழ் தகவல் கோரும் போது மேன்முறையீட்டுத் தரப்பினர் அரச நிறுவனத்துக்கு ஆவணங்களை வழங்கும் முன் நிபந்தனைகளுக்கு உட்பட வேண்டிய தேவைப்பாடு தோன்றவில்லை எனவும் 2020.04.10 ஆம் திகதி இலங்கைத் தகவல் அறியும் உரிமை ஆணைக்குழுவினால் இந்த எழுத்துமூல பதில் வழங்கி சுட்டிக்காட்டப்பட்டது.

மேலும், சுற்றாடல் மற்றும் வனஜீவராசிகள் வள அமைச்சினால் 2020.03.03 ஆம் திகதி அரச நிறுவனத்தின் தவிசாளருக்கு மேன்முறையீட்டாளரின் கோரிக்கை தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுக்குமாறு கடிதம் எழுதப்பட்டு, அதன் பிரதி சுற்றாடல் மற்றும் வனசீவராசிகள் அமைச்சுக்கு எழுத்து மூலம் அனுப்பப்பட்டுள்ளது. ஆணைக்குழுவுக்கு அனுப்பப்பட்ட திகதி குறிப்பிடப்படாத மேன்முறையீட்டின் மூலம், மேன்முறையீட்டாளரால் ஏனைய விடயங்களில் மேன்முறையீட்டாளரால் கோரப்பட்டிருந்த தகவல்கள் சட்டத்தின் 5 (1) (ஏ) பிரிவில் அடங்கியுள்ள விலக்களிக்கப்பட்ட விடயப் பரப்பில் உள்ளடங்கவில்லை எனவும், “இலங்கையின் கரையோர சுற்றாடல் கட்டமைப்புக்குத் தாக்கம் ஏற்படாத வகையில் கப்பல்களிலிருந்து அகற்றப்பட்ட கழிவுகள் உரிய வகையில் அகற்றப்படுதலை உறுதி செய்வதற்கு சட்டத்தின் மூலம் குறித்த அரச நிறுவனம் கடப்பாட்டை கொண்டிருப்பதாகவும், கப்பல் கம்பனிகள் சூழவுள்ள சுற்றாடலுக்கு ஏற்படுத்தப்படக்கூடிய தாக்கத்தை குறைப்பதற்காக அமுலிலுள்ள மற்றும் தேவையான எந்தவொரு நடவடிக்கையையும் மேற்கொள்வதற்கு வாய்ப்பு வழங்கப்பட்டதன் காரணமாகவும் அந்த நிலை பொது மக்கள் மீது தாக்கம் செலுத்தும் விடயமாகும் எனும் வரையறைக்குள் இருப்பதாக தெரிவிக்கப்பட்டிருந்தது.

இலங்கைத் தகவல் அறியும் உரிமை ஆணைக்குழுவின் கீழ் 249/2018 இலக்க ஏ.பீ. ஸ்டெம்போ எதிர் மத்திய சுற்றாடல் அதிகார சபை எனும் மேன்முறையீடு.

சிறிய அளவிலான நீர்மின் உற்பத்தி நிலையம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட விசாரணை அறிக்கை தொடர்பாக மேன்முறையீட்டாளர் தகவல் கோரியிருந்தார். அந்தத் தகவல் நீதிமன்றத்தில் விசாரணை நடைபெறும் வழக்குத் தொடர்பானது எனும் அடிப்படையில் குறித்த அரச நிறுவனத்தினால் அவ்வாறான தகவல் வழங்குதல் நிராகரிக்கப்பட்டது. மேன்முறையீட்டு விசாரணையின் போது நீதிமன்றத்தில் வழக்கு விசாரணை இடம்பெறுகிறது என்பதற்காக மட்டும் கோரப்படும் தகவல்கள் நிராகரிப்பதற்கான ஏற்பாடுகள் சட்டத்தின் 5 (1) (ஏ) பிரிவில் உள்ளடங்கவில்லை என ஆணைக்குழு குறிப்பிட்டது. அதன் காரணமாக தகவல்களை வெளிப்படுத்துவதனை விடவும் பொது மக்களின் தேவைகளின் பாரதூரமான தன்மை கூடுதலானது எனின் அதன்போது தொடர்புடைய தகவல்களை வழங்க வேண்டியது கட்டாயமானது எனவும், அதனால் அந்தத் தகவல்களை பகிரங்கப்படுத்துமாறும் குறித்த அரச நிறுவனத்துக்கு ஆணைக்குழு உத்தரவிட்டது.

துறைமுக நகரத் திட்டத்துக்காக நாட்டின் இயற்கை ஒதுக்கீட்டுப் பிரதேசங்களிலிருந்து கருங்கல் மற்றும் மணல் பெருமளவில் அகழ்வு செய்யப்பட்டதனால் போட் சிற்றித் திட்டம், கடல் வளங்கள் மற்றும் கடல்வாழ் உயிரினங்களுக்கு ஏற்படும் அழிவு, கடலரிப்பு மற்றும் இருக்கும் பவளப்பாறைகளுக்கு ஏற்படும் பாதிப்புத் தொடர்பாக சூழலியளாளர்களின் மனக்கவலைக்கு காரணமான இன்னொரு விடயமாகும்.

சுற்றாடல் சட்டங்களுக்கு ஏற்புடையது என்பது காட்டப்படாமல் இந்தத் திட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளதாக சூழலியலாளர்களுக்கு மனக்கவலை ஏற்பட்டதுடன், செல்வந்தர்கள் மற்றும் பிரபலமானவர்கள் உல்லாசமாக கடைகளுக்கு செல்லக்கூடிய செல்வந்த வலயத்தை நிறுவுதலே அரசின் பிரதான நோக்கமாக உள்ளது.

நாட்டிலுள்ள மீனவர்கள் முகங்கொடுக்கும் பிரச்சினைகள் மற்றும் மீன் இனப் பெருக்கப் பிரதேசங்களில் இடம்பெறும் தாக்கத்தை கருத்தில் எடுக்காமல் இந்தத் திட்டம் முன்னெடுக்கப்பட்டால் பெரும் பாதிப்பு ஏற்படலாம். சூழலியலாளர்களால் முன்வைக்கப்படும் இந்தப் பிரச்சினைகளைக் கருத்தில் கொள்ளாமல் இலங்கை அரசினால் சீன அரசின் அனுசரணை பெறும் CHEC Port City Colombo (Pvt) Ltd உடன் உடன்படிக்கை செய்து முன்னெடுக்கப்பட்டது.

சுற்றாடல் அழிவு தொடர்பாக நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்ட போதிலும், இலங்கை அரசு மற்றும் சீன அரசு ஆகியவற்றுக்கு இடையிலான உடன்படிக்கை பகிரங்கப்படுத்தப்படவில்லை.

இருந்த போதிலும், தகவல் அறியும் உரிமை ஆணைக்குழுவுக்கு மேன்முறையீடு சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் உடன்படிக்கையைக் கோரிய தரப்புக்கு அந்த உடன்படிக்கை வழங்கப்பட்டது. இலங்கை அரசு மற்றும் சீன அரசு ஆகியவற்றுக்கு இடையிலான உடன்படிக்கை வெளித் தரப்புக்கு வழங்கப்பட்ட முதலாவது சந்தர்ப்பமாக இது பதிவாகியுள்ளது.

**எம்.எப்.ஏ. மன்சூர் எதிர் பெருநகர மற்றும் மேல் மேற்கு அபிவிருத்தி அமைச்சு** இந்தத் தகவல் கோரிக்கைக்குக் காரணமாக அமைந்தது. அதன் போது 2018.11.15 ஆம் திகதிய தகவல் கோரிக்கைக்கு அமைய மேன்முறையீட்டுத் தரப்பினரால் பின்வரும் விடயங்கள் தொடர்பான புதிய கொழும்பு சர்வதேச நிதி நகரத்தை அபிவிருத்தி செய்வதற்காக பெருநகர மற்றும் மேற்கு அபிவிருத்தி அமைச்சின் செயலாளர், நகர அபிவிருத்தி அதிகார சபை மற்றும் CHEC Port City Colombo (Pvt) Ltd ஆகிய தரப்பினரால் கையொப்பம் இடப்பட்ட அனைத்து உப ஆவணங்கள் மற்றும் இணைப்புகளுடன் முத்தரப்பு உடன்படிக்கையின் பிரதிகள். 2014 செப்ரெம்பர் 16 ஆம் திகதி அரச மற்றும் / அல்லது அதன் பிரதிநிதிகளால் துறைமுக நகரத்தை நிர்மாணிப்பதற்காக கையொப்பம் இடப்பட்ட உடன்படிக்கை மற்றும் 2015 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் உத்தேச கொழும்புத் துறைமுக நகர அபிவிருத்தி திட்டத்தின் குறைநிரப்பு சுற்றாடல் தாக்க மதிப்பீடுகளில் காட்டப்பட்டுள்ள அனைத்து சுற்றாடல் மேற்பார்வை அறிக்கைகளின் பிரதிகள் கோரப்பட்டிருந்தன.

குறித்த தகவல் அலுவலரால் அந்தக் கோரிக்கைக்குப் பதில் வழங்கப்படாமை காரணமாக, மேன்முறைப்பாட்டாளரால் 2018.12.05 ஆம் திகதி பெயர் குறிப்பிடப்பட்ட அலுவலருக்கு மேன்முறையீடு சமர்ப்பிக்கப்பட்டது. நகர அபிவிருத்தி அதிகார சபையின் சட்ட சேவை பணிப்பாளரால் தெரிவிக்கப்பட்டுள்ள வகையில் உடன்படிக்கையின் இரகசியப் பிரிவுகள் காரணமாக முத்தரப்பு உடன்படிக்கையை வெளிப்படுத்த முடியாது எனக் குறித்த பெயர் குறிப்பிடப்பட்ட அலுவலரால் 2018.12.21 ஆம் திகதி சுட்டிக்காட்டப்பட்டது. (2018.12.14 ஆம் திகதிய கடிதம் 05 என குறிப்பிடப்பட்டுள்ளது.) மேலே குறிப்பிடப்பட்ட முத்தரப்பு உடன்படிக்கைக்கு (42 ஆவது பிரிவு) அமைய கடுமையான இரகசியமான பிரிவுகள் இருப்பதாகவும், அதன் காரணமாக 2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க தகவல் அறியும் உரிமை சட்டத்தின் 29 (2) (இ) பிரிவுக்கு அமைய அந்தத் தகவல் கோரிக்கை நிராகரிக்கப்படுவதாகவும் நகர அபிவிருத்தி அதிகார சபையின் சட்டச் சேவைப் பணிப்பாளரின் கடிதம் மூலம் குறிப்பிடப்பட்டிருந்தது.

மேலும் சட்டத்தின் 5 ஆவது பிரிவுக்கு அமைய அரசு, பொருளாதார அல்லது நிதிக் கொள்கையை மாற்றுவதற்கு அல்லது முன்னெடுப்பதற்கு இறுதித் தீர்மானம் எட்டப்பட்டிருக்காத வெளிநாட்டு உடன்படிக்கைகளை செய்தல் தொடர்பான தகவல்களை வெளியிடுதல் இலங்கையின் பொருளாதார அல்லது நிதிக் கொள்கைகள் மற்றும் அரசாங்கத்தை மாற்றுதல் அல்லது இயக்குதல் போன்ற ரீதியிலான விடயங்கள் தொடர்பில் பாரதூரமான பாதிப்பு ஏற்படுத்துவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், கோரப்படும் ஏனைய ஆவணங்களைப் பரிசீலிப்பதற்காகத் துறைமுக நகர அபிவிருத்தித் திட்டத்தின் திட்டப் பணிப்பாளரைத் தொடர்பு கொள்ளுமாறு அதன்போது குறித்த அரச நிறுவனத்தினால் மேன்முறையீட்டாளருக்கு சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இலங்கை காணி நிரப்பல் மற்றும் அபிவிருத்திக் கூட்டுத் தாபனத்தின் (SLLRDC) தகவல் அலுவலரை தொடர்பு கொள்ளுமாறு மேன்முறையீட்டாளருக்கு உத்தரவிடப்பட்டது. இந்தப் பதிலில் திருப்தியடையாத மேன்முறையீட்டாளர் 2019.01.14 ஆம் திகதி தகவல் அறியும் ஆணைக்குழுவுக்கு மேன்முறைப்பீட்டை சமர்ப்பித்தார்.

மேன்முறையீட்டாளர் மற்றும் அரச நிறுவனம் ஆகிய இரு தரப்பினரும் இந்த மேன்முறையிட்டு விசாரணைக்கு சமூகமளித்தனர். 500 மில்லியன் அமெரிக்க டொலரை மட்டும் முதலீடு செய்த சீன அரசுக்கு ஒப்பீடாக இலங்கையால் போட் சிற்றித் திட்டத்தின் மூலதனமாக 4 பில்லியன் அமெரிக்க டொலர் முதலீடு செய்யப்பட்டுள்ளது எனவும், அதனை விடவும் விற்பனை செய்யக்கூடிய தொகையை குறைவாக பெற்றுள்ளதாகவும் கோரப்பட்டுள்ள தகவலை வெளிப்படுத்த வேண்டிய பாரதூரமான பொது மக்களின் தேவை இருப்பதாகவும் மேன்முறையீட்டாளர் தெரிவித்திருந்தார்.

திட்டத்தின் தாக்கம் தொடர்பாக தகுதிவாய்ந்த சுயாதீன ஆலோசனைகள் பெறப்பட்டதற்கான சான்றுகள் இல்லை எனவும், திட்டம் தொடர்பில் சட்ட ரீதியான மேற்பார்வை மேற்கொள்ளப்படவில்லை எனவும், திட்டம் தொடர்பில் 2015 ஆம் ஆண்டிலிருந்த உண்மையான நிலை தொடர்பான போதுமான புரிதலை வழங்காத தகவல்களை குறை நிரப்பு சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை பொது மக்களுக்கு வழங்கப்பட்டதாக மேலும் குறிப்பிடப்பட்டது.

சில சட்ட ரீதியான தேவைப்பாடுகளைக் கருத்தில் கொள்ளாமல் உரிய சட்ட ரீதியான உடன்பாடு இன்றி திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது எனவும், ஒப்பந்தத்தின் உண்மையான தன்மையை உறுதி செய்வதற்காகத் தகவல்களைக் கோருவதாக மேன்முறையீட்டாளர் தெரிவித்தார். இந்த விடயம் தொடர்பாக போதுமானளவு பொது மக்களின் தேவை இருப்பதாகவும் குறிப்பிட்ட ஆணைக்குழு, இந்த சூழமைவில் அதன் தன்மை தொடர்பாக குறித்த அரச நிறுவனத்திடம் விசாரணை மேற்கொண்டது.

அரச நிறுவனத்தினால் 2018.11.21 ஆம் திகதி பெயர் குறிப்பிட்ட அலுவலரின் பதில் மீண்டும் குறிப்பிடப்பட்டதுடன், ஒப்பந்தம் பாதுகாக்கபட வேண்டிய கடுமையான வணிக நம்பிக்கை இருப்பதாகத் தெரிவித்து தகவல் கோரிக்கை நிராகரிக்கப்பட்டது எனவும், நம்பகத்தன்மைத் தொடர்பு இருப்பதாக தெரிவிக்கப்பட்டது எனவும், அதனை வெளிப்படுத்துவதனைத் தடுக்க வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டது. 2019.06.24 ஆம் திகதிய கடிதத்திலும் இந்த விடயம் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் அரச நிறுவனத்தினால் மேலும் தெரிவிக்கப்பட்டது. தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் 5 (1) (ஏ) பிரிவுக்குரியது என கருதப்பட்டு, சட்டத்தின் 29 ஆவது பிரிவின் கீழும், அதற்கு அமைவாகவும் தகவல்களை வெளியிடுவதற்காக மூன்றாம் தரப்பினரின் சம்மதம் கோரப்பட்டதா என்பது

தொடர்பாகவும் அரச நிறுவனத்திடம் விசாரிக்கப்பட்டது. அதற்குப் பதில் வழங்கிய அரச நிறுவனம், உடன்படிக்கையின் ஒரு தரப்பு (நகர அபிவிருத்தி அதிகார சபை) தகவல்களை வெளியிடலாகாது என தெரிவித்ததாகச் சுட்டிக்காட்டியது.

நகர அபிவிருத்தி அதிகார சபையின் பதிலில் பாவிக்கப்பட்ட சொற்பதம் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் 29 ஆம் பிரிவுக்கு அமைவானதல்ல எனவும், மூன்றாம் தரப்பு தகவலை வெளியிடுவதற்கு சம்மதம் தெரிவித்தல் தொடர்பான கருத்துடன் உடன்படுதல் அல்லது உடன்படாதிருத்தலைக் கருத்தில் கொள்ளாமல் அரச நிறுவனம் தமது தீர்மானத்தை எட்ட வேண்டும் என ஆணைக்குழு தெரிவித்தது.

2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க தகவல் அறியும் உரிமை சட்டத்தின் 5 (1) (ஈ) பிரிவை அமுல்படுத்துவதற்கு உடன்படிக்கையில் உள்ள இரகசியத் தன்மை தொடர்பான பிரிவிற்கமைய செயற்படவில்லை என அரச நிறுவனத்தின் கவனம் ஈர்க்கப்பட்டது. அந்த விலக்களிப்புக்கு ஏற்புடையதாக்குவதற்கு தகவல் வழங்கும் மூன்றாம் தரப்பின் போட்டி ரீதியான தேவைப்பாடுகளுக்கு எவ்வாறு பாதிப்பு ஏற்படும் என்பதனை அரச நிறுவனம் வெளிப்படுத்த வேண்டும்.

தகவல் அறியும் உரிமை ஆணைக்குழு தலையீடு செய்துள்ள மேற்குறித்த சந்தர்ப்பங்கள் தொடர்பில் பார்க்கும் போது மேன்முறையீட்டாளர்களுக்கு ஓரளவு நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது என்பது மிகவும் தெளிவானதாகும். தகவல் அறியும் உரிமை கோரிக்கை விடுக்கப்படும் போது பல்வேறு விதமான பிரச்சினைகள் ஏற்பட்ட போதிலும், இந்த அனைத்து சம்பவங்களுக்கும் இலங்கைத் தகவல் அறியும் உரிமை ஆணைக்குழுவினால் எடுக்கப்பட்ட தீர்மானங்களுக்கு அமைய தகவல்கள் வழங்கப்பட்டிருப்பது மிகவும் தெளிவான சாதகமான போக்கைக் காட்டுகிறது.

உடன்படிக்கையில் கையொப்பமிட்ட இரண்டு தரப்புகளைத் தவிர வேறு எவருக்கும் உடன்படிக்கை தொடர்பான தகவல்கள் வெளிப்படுத்தப்படாமை தொடர்பில் துறைமுக நகரத் திட்டம் புறநடையாக அமைகிறது. இருப்பினும் இந்த விசேடமான நிலையில் கூட தீர்வைப் பெறுவதற்கும், மேன்முறையீட்டாளர் கோரிய வகையில் ஆவணங்களை வழங்குவதற்கும் தகவல் அறியும் உரிமை உதவியுள்ளது.

கம்பனியா, தனிநபரா என்பதனை கருத்தில் எடுக்காமல் எந்தவொரு நபராலும், எந்தவொரு நபர் தொடர்பிலும் தகவல் அறியும் உரிமையைப் பாவிக்கலாம். சில ஊடகவியலாளர்கள் தமது ஆய்வு ரீதியான கட்டுரைகளுக்குத் தேவையான தகவல்களைப் பெறுவதற்குத் தகவல் அறியும் உரிமையையும் பாவித்துள்ளனர். சுற்றாடல் அனர்த்தங்களை அறிக்கை செய்யும் ஊடகவியலாளர்கள் தகவல் அறியும் உரிமையைப் பாவித்து சர்ச்சைக்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதில் வெற்றி பெற்றனர் என்பதுடன், அவ்வாறான உரிமை இருக்காவிட்டால் அவ்வாறான தகவல்கள் ஒருபோதும் மக்கள் அறியாத வகையில் மறைத்து வைக்கப்பட்டிருக்கும்.

எமது அயல் நாடான இந்தியாவும் சுற்றாடல் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பான பல வழக்குகளை தீர்ப்பதற்கு தகவல் அறியும் உரிமையைப் பாவித்தல் தொடர்பில் பிரபலமடைந்த நாடாகும். நாட்டில் சுற்றாடல் சார்ந்த பிரச்சினைகள் அதிகரித்த போது சூழலியலாளர்கள் மற்றும் சில சந்தர்ப்பங்களில் ஊடகவியலாளர்கள் கூட தேவையான தகவல்களை (சில வேளைகளில் சர்ச்சைக்குரிய) பெற்றுக்கொள்ளுதல் சிரமமானதாகும். இருப்பினும் அவ்வாறான சந்தர்ப்பங்களில் தகவல் அறியும் உரிமையைப் பாவிக்கலாம் என்பதனை அவர்களில் சிலர் மட்டுமே அறிந்துள்ளனர். பயங்கரமான நிலையில்

பெரும்பாலானோருக்கு உதவி வழங்கக்கூடிய இந்த பயனுள்ள மற்றும் வினைத்திறனான வசதியை இதுவரை பாவிக்காத பெருமளவானோர் இன்றும் உள்ளனர்.

நீண்ட காலமாக தமது வாழ்க்கையை இலகுபடுத்துவதற்காக தகவல் அறியும் உரிமையைப் பாவிக்கும் முறை தொடர்பாக பொது மக்கள் நன்றாக தெரிந்துகொள்ள வேண்டும். உங்களுக்குத் தேவையான சந்தர்ப்பங்களில் தகவல்களை அறிந்து கொள்வதற்காக இலங்கைத் தகவல் அறியும் உரிமை ஆணைக்குழுவின் இணையத்தளத்தைப் பார்வையிடுதல் அந்த உரிமையை பாவிக்கும் முறை தொடர்பாக தெரிந்து கொள்வதற்கான ஒரு வழியாகும். இருந்த போதிலும், சிலருக்கு இணையத்தளம் தொடர்பான போதுமான அறிவு இருக்காமை அல்லது எவ்வாறு இணையதளத்தைப் பாவிப்பது என அறிந்திருக்காமை மற்றும் தேவையான சந்தர்ப்பங்களில் தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழான விண்ணப்பத்தை எவ்வாறு அனுப்புவது போன்ற விடயங்கள் தொடர்பாக போதுமான தெளிவு இல்லாதிருப்பதும் கருத்தில் கொள்ள வேண்டிய காரணிகளாகும்.

- **ரிசித்ரா மெண்டிஸ்**

***ரிசித்ரா மெண்டிஸ் :*** *2009 வரை சண்டே லீடர் பத்திரிகையில் பணியாற்றினர். உத்தியோகபூர்வ கடமைகளுக்காக சிங்கப்பூர் மலேசியா ஆகிய நாடுகளுக்கு விஜயம் செய்துள்ளனர். அச்சு ஊடகங்களுக்காக பல்வேறு தலையங்கங்களில் கட்டுரை வரைந்துள்ளார். இப்பெண்மணி சுற்றாடல், சமூக நீதி, விலங்குகளின் நலன்புரி என்பன பற்றி கட்டுரைகளை வரைந்துள்ளார்.*

# அத்தியாயம் 3

## வானொலி அலைவரிசை நிகழ்ச்சித் தொடர் – தகவல் அறிவதற்கான உரிமையை அடைந்து கொள்ளும் முகமாக வசதியளிக்கும் குறிக்கோளுடன் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தினால் அவசர அழைப்பு அலகொன்று தாபிக்கப்பட்டு அவ்வலகினூடாக மக்களை தெளிவுபடுத்தல் – 2021

**தகவல் அறிவதற்கான உரிமையை அடிப்படை உரிமையாக மேம்படுத்துவது தொடர்பில் நடாத்தப்பட்ட வானொலி அலைவரிசை நிகழ்ச்சித்திட்டத்தின் சாராம்சம்**

| வானொலி நிகழ்ச்சித்திட்டத்தின் வாயிலாக கவனம் செலுத்தப்பட்ட துறைகள் | கவனம் செலுத்தப்பட்ட அடிப்படை விடயங்கள் |
|---|---|
| தகவல் அறிவதற்கான உரிமைச் சட்டம் தொடர்பிலான சட்டங்கள் பற்றிய தெளிவினை அதிகரித்தல் மற்றும் தகவலைப் பெற அணுகுவதற்கான அடிப்படை உரிமையை செயற்படுத்தும் நடைமுறை | பகிரங்க நிறுவனங்களின் தீர்மானங்கள் பற்றிய தகவல்களை வெளிப்படுத்துவதற்கு தகவல் அறிவதற்கான உரிமை தொடர்பிலான சட்டத்தினை பயன்படுத்த முடியுமென்பதுடன், ஊழலுக்கெதிராக நடவடிக்கை எடுத்தல் மற்றும் நல்லாட்சியை மேம்படுத்துவதன் மூலமாக இலங்கையின் பிரஜைகளுக்கு முழுமையானதாக பொது வாழ்வில் ஈடுபடுவதற்கான இயலுமை கிடைக்கின்றது. |
| வேறு வகையில் வெளிப்படுத்தப்படாதிருந்த தகவல் அறிவதற்கான சட்டம் இல்லாதிருந்தால் ஒருபோதும் வெளிக்கொண்டு வந்திருக்க முடியாதிருந்த தகவல்களை மேற்படி சட்டத்தின் மூலமாக அணுகல்.<br><br>தகவல் அறிவதற்கான உரிமைச் சட்டத்தினைப் பயன்படுத்தி 2011 ஆம் ஆண்டில் சுதந்திர வர்த்தக வலயத்தில் ரொஷேன் சானக்க கொலை செய்யப்பட்டமை தொடர்பிலான மஹானாம திலகரத்ன அறிக்கையை பெற்றுக் கொள்ள முடிந்தமை<br><br>2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க இலக்ரோனிக் கொடுக்கல் வாங்கல் சட்டத்திற்கமைவாக இலத்திரனியல் ஆவணங்களின் தரவுகள் மற்றும் தகவல் பரிமாற்றத்தினை மேற்கொள்ளல் மற்றும் ஏனைய தொடர்பாடல்களை அடையாளம் காணல் மற்றும் இலகுபடுத்தலை அறிந்து கொள்ளல். | தகவல்கள் இல்லாத காரணத்தினால் அநீதிக்கு முகம் கொடுக்க வேண்டிய அச்சுறுத்தலை முகாமைத்துவம் செய்து கொள்வதற்கும் உரிய நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு அவசியமான தகவல்களைப் பெற அணுகுவதற்கும் தகவல் அறிவதற்கான சட்டத்தினால் சந்தர்ப்பம் கிடைக்கின்றது.<br><br>தகவல் அறிவதற்கான சட்டத்தின் கீழ் தகவல்களைக் கோருவதற்காக இலத்திரணியல் முறைமைகளைக் கையாளக்கூடிய இயலுமை.<br><br>இணையவழி மூலமாக தகவல் கோருகின்ற போது பதிலளிக்கின்ற பகிரங்க நிறுவனங்கள் தகவலறியும் உரிமைச் சட்டம் தொடர்பான தரவுத் தகவல்களை வெளிப்படுத்தவதற்காக செயற்பாட்டு ரீதியான நடவடிக்கைகளை மேற்கொள்ளாமை.<br><br>சுதந்திர வர்த்தக வலயத்தில் பணிபுரியும் பணியாளர்களின் தொழிலாளர் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான உரிய தகவல்களை அணுகுவதற்கு மற்றும் பெற்றுக்கொள்வதற்கும் தகவல் சட்டத்தினை பயன்படுத்துதல். |

| | |
|---|---|
| தகவல் அறிவதற்கான உரிமைச் சட்டம் தொடர்பில் மக்களது தெளிவின்மை.<br><br>தகவல் அறிவதற்கான உரிமைச் சட்டம் வாயிலாக தகவல்களை அணுகுவதற்கு மற்றும் பெறுவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ள சகல படிமுறைகளையும் பின்பற்றாமை.<br><br>அடிப்படைத் தகவல்கள் கோரல் தொடர்பில் உரிய தகவல்களை வெளிப்படுத்துவதற்கு பகிரங்க நிறுவனங்களின் அதிகாரிகள் காட்டும் தயக்கத்தின் பாதகமான அழுத்தங்கள். | தகவல் அறிவதற்கான உரிமைச் சட்டத்தின் (தகவலைப் பெற அணுகுதலுக்கான மறுப்பு) 5 ஆவது உறுப்புரையின் ஏற்பாடுகளை தவறாக புரிந்து கொள்ளல் மற்றும் தவறாக பயன்படுத்துதல் உட்பட சில பகிரங்க நிறுவனங்களால் தகவல்களின் "இரகசியத்தன்மையை" பாதுகாப்பதென்ற வேரூன்றிப் போயுள்ள கலாசாரத்தினைக் கையாளுதல் மற்றும் அதன் காரணமாக பிரஜைகளின் தகவல் கோரல் வேண்டுகோள் மறுக்கப்படல்.<br><br>பிரஜைகளின் தகவல் அணுகுதலை உறுதிப்படுத்துவதற்காக "தகவலறியும் உரிமைச் சட்டம் தொடர்பான தரவுத் தகவல்களை வெளிப்படுத்துதல்" என்ற கோட்பாட்டின் அடிப்படையில் அதற்கு மதிப்பளித்து நாஉல பிரதேச செயலகத்தினால்[1] புதிதாக தாபிக்கப்பட்ட தகவல்களை பெற்றுக் கொடுக்கும் முறைமை |
| நுவரெலியா மாவட்டத்தின் விவசாயத்துறை தொடர்பான பிரச்சினைகளின் உண்மைத்தன்மையினை தகவல் அறிவதற்கான உரிமைச் சட்டத்தின் மூலமாக பெற்றுக் கொண்ட உத்தியோகபூர்வத் தரவுகள் மற்றும் தகவல்களின் அடிப்படையில் தெளிவுபடுத்திக் கொள்ளல்.<br><br>தகவல் அறிவதற்கான உரிமைச் சட்டத்தினைப் பயன்படுத்தி கிடைக்கின்ற சாட்சியங்களை அடிப்படையாகக் கொண்ட தகவல்களின் மீது மாத்திரம் பகிரங்க நிறுவனங்கள் மேற்கொள்ளும் தீர்மானங்களை சவாலுக்குட்படுத்த அவசியமான தீர்மானங்களை மேற்கொள்ளல் மற்றும் வாதங்களை கட்டியெழுப்பலும். | ஊடகவியலாளர்களினால் தகவல் சட்டம் ஆராயப்படல் மற்றும் ஊடகங்கள் வாயிலாக மிக முக்கியமான பிரச்சினைகள் ஆராயப்படுகின்ற போது முழுமையான மற்றும் விரிவான தெளிவினைப் பெற்றுக்கொள்ள முடிகின்றமை மற்றும் அத்தகவல்களை பொதுச் சமூகத்தில் பகிரக்கூடிய சந்தர்ப்பத்தின் முக்கியத்துவம்.<br><br>தகவல் அறிவதற்கான உரிமைச் சட்டம் பயன்மிக்க வகையில் பயன்படுத்தப்படுவதனை ஊக்குவித்தல் மற்றும் தகவல் அறிவதற்கான உரிமைச் சட்டத்தின் வாயிலாக பெறப்பட்ட தகவல்களை பகிரங்கப்படுத்துவதற்கான கருவியாக ஊடகத்தின் முக்கியத்துவம் தொடர்பிலும் தகவல் அறிதலை அடிப்படை உரிமையாக பயன்படுத்த முடியுமென்ற நம்பிக்கையை கட்டியெழுப்ப ஏனைய தரப்பினரை ஊக்கப்படுத்துதலும். |


1 http://naula.ds.gov.lk/index.php/en/about-us/overview.html

| | |
|---|---|
| பிரஜைகளின் வாழ்க்கை மற்றும் வாழ்வாதாரம் தொடர்பிலான அரச தீர்மானங்கள் பற்றிய தகவல்களை அணுகுவதற்காக தகவல் அறிவதற்கான சட்டத்தினை உபாயமார்க்கமாக பயன்படுத்தக்கூடிய சிறந்த கையாளுகைகளை வெளிக்கொணரல்<br><br>காணி உரிமை, கழிவகற்றல் தொடர்பிலான விடயங்கள், பிரதேச அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் வரவு செலவுத்திட்ட ஒதுக்கீடுகளின் பயன்பாடுகள் பற்றிய தகவல்களைப் பெறுவதற்கான வசதிகளின்றி பல வருடங்களாக அடக்கி வைக்கப்பட்டிருந்த மக்களுக்கு அவசியமாகும் முக்கியமான தகவல்களை பெறுவதற்காக தகவல் அறிவதற்கான உரிமைச் சட்டத்தினை பயன்படுத்தக்கூடிய நிலைமை ஏற்பட்டிருத்தல். | தகவல் அறிவதற்கான உரிமை தொடர்பில் சட்டத்தினூடாக தகவல்களைப் பெறுவதற்கு, அநீதிக்கு எதிராக குரல் எழுப்புவதற்கு, தீர்மானங்களை மேற்கொள்வதற்காக அழுத்தம் கொடுத்தல், பொதுச் சமூகத்தில் இடம்பெறுகின்ற அநீதிகளை வெளிக் கொணர்வதற்கு சில தரப்பினர் தகவல் அறிவதற்கான உரிமைச் சட்டத்தின் வாயிலாக பெற்றுக் கொண்ட ஆற்றலின் பிரதிபலனாக சில சமூக இயக்கங்கள் உருவாகியுள்ளமை. உதா : பானம்பத்துவ பாதுகாப்பு மக்கள் இயக்கத்தினால் மேற்கொண்ட நடவடிக்கைகள் - இந்த மக்கள் இயக்கமானது தகவல் அறிவதற்கான சட்டத்தின் விளைவாக உருவாக்கப்பட்ட ஒரு அமைப்பாகும்.<br><br>தகவல் அறிவதற்கான உரிமைச் சட்டத்தினை பயனுள்ள வகையில் பயன்படுத்துவது தொடர்பில் கவனம் செலுத்த வேண்டிய ஓர் விடயமாக, பெரும்பாலான பிரஜைகள் தகவல்களைப் பெறுவதற்காக உரிய அல்லது சரியான பகிரங்க நிறுவனத்திடம் தகவல் அறிவதற்கான உரிமை தொடர்பான விண்ணப்பத்தினை சமர்ப்பிக்காமை மிக நீண்ட காலதாமதத்திற்கோ அல்லது தகவல் கிடைக்காமைக்கோ ஏதுவாகியுள்ள நிலைமை.<br><br>தகவல் சட்டத்தின் பயன்பாட்டினை மேம்படுத்துவதற்காக பிரதேச, மாகாண மற்றும் தேசிய மட்டத்தில் மக்களது தெளிவினை ஏற்படுத்துவதற்கான முயற்சிகள் மென்மேலும் வலுப்படுத்தப்பட வேண்டியதன் முக்கியத்துவம். |
| பகிரங்க நிறுவனங்களின் பாதகமான தீர்மானங்களை சவாலுக்குட்படுத்தவும் பிரஜைகள் செயற்றிறன்மிக்க வகையில் அரச நிர்வாக செயற்பாட்டில் பங்கெடுக்கக் கூடிய வகையிலான அதிகாரத்தினை பெற்றுத்தரும் கருவியாகவும் தகவல் அறிவதற்கான உரிமைச் சட்டத்தினை பயன்படுத்துதல் மற்றும் அதனூடாக அரச அலுவலர்களை கேள்விக்குட்படுத்தும் வாய்ப்பு உருவாதல். | தகவல் அறிவதற்கான உரிமைச் சட்டத்தினை செயற்றிறன்மிக்க வகையில் பயன்படுத்துவதனூடாக அரச துறையில் நிலவும் ஊழலை கட்டுப்படுத்த முடிகின்றமை.<br><br>தீர்மானம் மேற்கொள்பவர்களின் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக் கூறலை உறுதிப்படுத்துவதற்காக பிரஜைகள் தகவல்களை பயன்படுத்த முடியுமென்பதுடன் பொறுப்பற்ற வகையில் செயற்படும் சந்தர்ப்பங்களில் அவர்களை பொறுப்புக் கூற வைப்பதற்கு உட்படுத்தும் முகமாக தகவல் அறிவதற்கான உரிமைச் சட்டத்தினை பயன்படுத்த முடியும்.<br><br>பகிரங்க நிறுவனங்களில் தகவல்களின் இரகசியத்தன்மை பாதுகாக்கப்பட வேண்டுமென்ற, சமூகத்தில் வேரூன்றிப் போயுள்ள மனப்பாங்குகள் காணப்படுவதற்கு பதிலாக அரச அதிகாரிகளால் “தகவலறியும் உரிமைச் சட்டம் தொடர்பான தரவுத் தகவல்களை வெளிப்படுத்துதல்” எனும் கோட்பாட்டிற்கு மதிப்பளிக்கும் கலாசாரத்தினைக் கட்டியெழுப்புதல். |


| | |
|---|---|
| பிரதானமாக நுண்நிதிக் கடன் வலையில் சிக்குண்டுள்ள பெண்கள் உட்பட சமூகத்தினர் முகம் கொடுக்கின்ற இன்னல்கள் அசௌகரியங்கள் தொடர்பிலான விடயங்களை வெளிப்படுத்துவதற்காக தகவலறியும் உரிமைச் சட்டத்தினை செயற்றிறன்மிக்க வகையில் பயன்படுத்துதல். | ஒழுங்குறுத்தப்படாத நுண்நிதிச் சேவையை வழங்கும் தரப்பினரால் ஏற்படுத்தப்படுகின்ற தீங்கான அழுத்தங்கள் மற்றும் நுண்நிதிக் கடன் வழங்கும் திட்டங்கள் வாயிலாக கிராமிய மக்கள் சுரண்டப்படுவது உச்ச கட்டத்தில் உள்ளமை தொடர்பில் கலந்துரையாடலை ஏற்படுத்தும் நோக்கில் தகவலறியும் உரிமைச் சட்டத்தினை பயன்படுத்துவதன் தேவைப்பாடு அத்துடன் அவ்வாறான ஒழுங்குபடுத்தல்களுக்கு உட்படாத நிறுவனங்களின் செயற்பாடு தொடர்பிலான சட்டரீதியான நிலைமை மற்றும் இலங்கை மத்திய வங்கியின் செயற்றிறனற்ற கண்காணிப்பு தொடர்பில் நம்பிக்கையான தகவல்களை அணுகுவதற்கு இயலாத நிலைமை காரணமாக இவ்வாறான சமூக பிரச்சினைகளை தீர்ப்பதற்கு அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்ளாமையின் விளைவாக ஏற்படுகின்ற பாதிப்புகள்.<br><br>வருமானம் குறைந்த மக்களது முயற்சியாண்மை அபிவிருத்தியின் பொருட்டு நிதியுதவிகளை வழங்குதல் என்ற உள்நோக்கத்துடன் ஏழை மக்களை சுரண்டுவதற்காக மக்களது மொழி உரிமையை மீறுகின்ற வகையில் நுண்நிதிக் கடன்களை வழங்குகின்ற போது அநீதியான வகையிலான நிபந்தனைகளை உள்ளடக்கிய ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்ட ஒப்பந்தங்களைப் பயன்படுத்துவது தொடர்பான நிலைமை. |

| | |
|---|---|
| அரச அலுவலர்களுக்கு தகவல் அறிவதற்கான சட்டத்தின் நோக்கம் குறித்த தெளிவின்மை மற்றும் தகவல் அறிவதற்கான கோரல்களுக்கு பதலளிக்கின்ற போது இடம்பெறுகின்ற அநாவசிய காலதாமதங்கள் | பெரும்பாலான பகிரங்க நிறுவனங்களின் தகவல் அதிகாரிகளுக்கு அனுப்பப்படுகின்ற தகவல் கோரல்களுக்கான தகவல் வெளிப்படுத்தல்கள் மறுக்கப்படுகின்ற நிலைமை மற்றும் தகவல்களை வழங்குகின்ற போது இடம்பெறுகின்ற காலதாமதங்கள் பற்றிய அனுபவங்கள் காரணமாக தகவலறியும் உரிமைச் சட்டத்தினை பயன்படுத்துவதற்கு பின்வாங்குதல்.<br><br>தகவல் சட்டம் பற்றிய முறையான பயிற்சி இல்லாமை மற்றும் பிரஜைகளின் தகவல் கோரல்களை முகாமைத்துவம் செய்வது எவ்வாறென்பது தொடர்பில் பகிரங்க நிறுவனங்களின் அதிகாரிகளுக்கு முறையாக திட்டமிடப்பட்ட தெளிவூட்டல் நிகழ்ச்சிகள் மற்றும் பிரஜைகளின் வாழ்க்கையிலும் வாழ்வாதாரத்திலும் தாக்கத்தினை ஏற்படுத்துகின்ற தகவல்கள் தொடர்பில் 'இரகசியத்தன்மை' பாதுகாக்கப்படல் என்ற அநாவசிய கையாளுகை தொடர்பில் ஆளமாக வேரூன்றிப் போயுள்ள மனப்பாங்கில் மாற்றம் அவசியம் என்ற விடயம்.<br><br>"தகவலறியும் உரிமைச் சட்டம் தொடர்பான தரவுத் தகவல்களை வெளிப்படுத்துதல்" எனும் கோட்பாட்டினை எற்றுக் கொள்ளாத காரணத்தினால் தகவல் அறியும் சட்டத்தின் கீழ் பகிரங்க நிறுவனங்களின் அதிகாரிகளுக்கு ஆகக் குறைந்தது தகவலுக்கான கோரல் கிடைக்கப்பெற்ற சந்தர்ப்பத்திலேனும் தகவலைப் பெற்றுக் கொடுக்கும் நடைமுறையை பின்பற்றுவதற்கான வழிகாட்டல்கள் வழங்கப்பட்டுள்ள போதிலும், அரச அதிகாரிகள் செயற்படுகின்ற விதம் பெரும்பாலும் தகவலை அறிவதற்காக செயற்படுகின்ற பிரஜைகளை குறித்த தகவலைப் பெற்றுக் கொள்வதற்காக தகவலுக்கான உரிமை ஆணைக்குழுவினை நாடுவதற்கு ஏதுவாகியுள்ளது. |
| தகவல் அறிவதற்கான சட்டத்தின் குறிக்கோள்களை யதார்த்தமாக்கிக் கொள்வதற்காக வலுவான கொள்கை வரைவு மற்றும் நடைமுறைப்படுத்துவதற்கான உபாயமார்க்கம் அவசியம் என்ற மக்களின் அசைக்க முடியாத நிலைப்பாடு. | பல தசாப்த காலமாக தகவலைப் பெறுவதற்கும் அதிகாரிகளிடம் வினவுவதற்கும் பிரஜைகளுக்கு உரிமையில்லாதிருந்த ஒரு சூழ்நிலையில், அரசியலமைப்பின் அடிப்படை உரிமைகளுள் உள்ளடக்கப்பட்ட ஓர் அங்கமாக தகவல் அறிவதற்கான உரிமைச் சட்டம் அறிமுகப்படுத்தப்பட்டமை ஓர் விசேட சந்தர்ப்பமாகும்.<br><br>தகவல் அறிவதற்கான உரிமைச் சட்டத்தினை நடைமுறைப்படுத்துகின்ற போது எழுகின்ற சவால்கள் மற்றும் பிரச்சினைகளுக்கு கொள்கை ரீதியானதும் நடைமுறைச் சாத்தியமானதுமான விடயங்களுக்கு பொருத்தமான பதில் நடவடிக்கைகளை மேற்கொள்வது அத்தியாவசியமான விடயமாக அமைவதோடு, அதனடிப்படையில் ஊழலுக்கெதிராக போராடுதல் மற்றும் பொறுப்புக் கூறல் அத்துடன் நல்லாட்சியை மேம்படுத்துவதன் மூலமாக பொது மக்கள் தமது வாழ்க்கையில் பூரணத்துவமாக பங்கேற்பதற்கு பிரஜைகளுக்கு வாய்ப்பு கிடைக்கின்றமையின் முக்கியத்துவம். |

## தகவல் அறிவதற்கான உரிமையை வெற்றிகொள்ளும் பொருட்டு வசதியளிப்பினை வழங்கும் குறிக்கோளுடன் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தினால் தாபிக்கப்பட்ட அவசர அழைப்பு அலகின் 2021 ஆம் ஆண்டில் விடயங்களை விசாரணை செய்தல் தொடர்பான நிலைமை



**மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் RTI துரித அழைப்பு இலக்கத்திற்கு கிடைக்கப்பெற்ற விசாரணைகள் மாவட்ட அடிப்படையில் – மொத்த விசாரணைகளின் எண்ணிக்கை 332**



ISBN 978-624-5914-18-0